பேராசிரியர்

ந. சுப்பு ரெட்டியாரின் பன்முகம்

இரா. காமராசு

பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் பன்முகம்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில், பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

நாகார்ஜுன மலைச்சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. (பட உதவி: நேஷனல் மியூசியம், புது தில்லி)

பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் பன்முகம்

(நூற்றாண்டு உரையரங்கக் கட்டுரைகள்)

தொகுப்பாசிரியர்

இரா. காமராசு

சாகித்திய அகாதெமி

Peraasiriyar Na. Subbureddyarin Panmugham - Centenary Symposium Papers, Comiled by Era. Kamarasu, Sahitya Akademi, New Delhi, 2017, Rs.120/-

© சாகித்திய அகாதெமி

முதல் பதிப்பு: 2017

தலைமை அலுவலகம்:

சாகித்திய அகாதெமி, 'ரவீந்திர பவன்,' 35, பெரோஸ் ஷா சாலை, புது தில்லி - 110 001.

விற்பனை அலுவலகம்:

'ஸ்வாதி,' மந்திர் சாலை, புது தில்லி - 110 001.

மண்டல அலுவலகங்கள்:

மத்தியக் கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக் கட்டடம், டாக்டர் அம்பேத்கர் வீதி, பெங்களூரு - 560 001.

4, டி.எல். கான் சாலை, கொல்கத்தா - 700 025.

172, மும்பை மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை, தாதர், மும்பை - 400 014.

சென்னை அலுவலகம்:

குணா பில்டிங்ஸ், 443, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.

ISBN-978-93-86771-23-0

Rs. 120.00

Visit our Website at http://www.sahitya-akademi.gov.in

Laser Execution: **vsn - Image Digital**, *Chennai - 17.*

Design: PSS Rao - Spectrum Graphics Studio - Chennai - 17.

Printed at: Imperial Graphics, Chennai - 1.

பொருளடக்கம்

1.	பேராசிரியர். பல்துறை வித்தகர் –ந. கடிகாசலம்	9
2.	இல்லறநெறியும் தமிழ்க்காதலும் -பேரா. ந. வேலுசாமி	17
3.	பேரா. ந. சுப்புரெட்டியாரும் இலக்கியக் கல்வியும் -இரா. காமராசு	27
4.	கல்வியாளர் இயக்கத்தில் ந. சுப்புரெட்டியாரின் ஆளுமை -இரா. சம்பத்	36
5.	ந. சுப்புரெட்டியாரின் அருட்பா ஆய்வுத் தடம் - இரா. குறிஞ்சிவேந்தன்	48
6.	ந. சுப்புரெட்டியார் பார்வையில் கவிதை -முனை. பொ. திராவிடமணி	59
7.	வைணவ உரைவளமும் ந. சுப்புரெட்டியாரும் -முனை. தி. நெல்லையப்பன்	86
8.	ந. சுப்புரெட்டியாரின் இலக்கிய வகைமைச் சிந்தனைகள் -முனை. சு. செல்வகுமாரன்	112
9.	ந. சுப்புரெட்டியாரின் கவிதையாக்க நுட்பக்கூறுகள் பாட்டுத்திறன் நூலை முன்வைத்து -முனை. க. மைதிலி	125

10. ந. சுப்புரெட்டியாரின் கல்வி உளவியல் நோக்கு 132
-முனை. க. செல்வி

11. பேரா. ந. சுப்புரெட்டியாரின் பெண் தெய்வ ஆளுமை 137
-முனை. ச. வனிதா

12. டாக்டர் ந. சுப்புரெட்டியாரின் படைப்புகளில் சமுதாய நோக்கு *-முனை. வ. சிவகுமார்* 151

13. பேரா. ந. சுப்புரெட்டியாரின் பார்வையில் 'பெரியார் சிந்தனைகள்' *–ந. பிரகாஷ்* 68

14. பேரா. ந. சுப்புரெட்டியார் புலப்படுத்தும் தொல்காப்பியக் கொள்கை *– த. தாமரைச்செல்வன்* 77

முனை. ந. சுப்புரெட்டியாரின் வாழ்க்கை வரலாறு 157
–முனைவர் சு. இராமலிங்கம்

– – – –

நன்றியுரை

தமிழ் வளர்ச்சிக்கு அரிய கொடையினை வழங்கிய பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்பு உரையரங்கினை 22-07-2016 அன்று திருச்சி சீதாலெட்சுமி இராமசுவாமி கல்லூரியில் சாகித்திய அகாதெமி நிகழ்த்தியது.

சாகித்திய அகாதெமி தமிழ்மொழி ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் கிருஷ்ணசாமி நாச்சிமுத்து தலைமை வகித்தார். பொறுப்பு அலுவலர் முனைவர் அ.சு. இளங்கோவன் வரவேற்றார். கல்லூரி முதல்வர் முனைவர் எம். ஜெயந்தி அழகியதொரு வாழ்த்துரை வழங்கினார். கல்லூரிச் செயலாளர் திரு. ஆர். பஞ் சாபகேசன் வாழ்த்துச் செய்தி தந்தார். பேராசிரியர் இரா. காமராசு அறிமுகவுரையும், தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் கே. செல்வி நன்றியுரையும் வழங்கினர். அறிஞர்கள் ந. வேலுசாமி, இரா. சம்பத், என். கடிகாசலம், பொ. திராவிடமணி ஆகியோர் கருத்துரை வழங்கினர். தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் க. பாஸ்கரன் நிறைவுரையாற்றினார்.

உரையரங்கப் பொழிவுகளுடன் பேராசிரியரின் தமிழ்ப்பணி குறித்து மேலும் சில கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம் பெறுகின்றன. பேராசிரியரின் உரையரங்கினை நடத்திட இடமளித்து இணைந்து உதவிட்ட திருச்சி சீதாலெட்சுமி இராமசுவாமி கல்லூரிச் செயலர், முதல்வர், தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் பேராசிரியர்களுக்கு மனம் நிறைந்த நன்றி.

பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியாரின் நூற்றாண்டு விழாவினை மிகச் சிறப்பாக ஆண்டு முழுவதும் பல்வேறு நிகழ்வுகளுடன் நடத்திக் காட்டியவர் அவரது திருமகன் முனைவர் சு. இராமலிங்கம், இந் நிகழ்வுக்கும் உதவிட்டார். அமெரிக்காவில் வாழும் பெருமகன் டாக்டர் சு. இராமகிருஷ்ணன் அவர்களுக்கும் நன்றிகள்.

சாகித்திய அகாதெமி செயலர் டாக்டர் சீனிவாசராவ், ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் கிருஷ்ணசாமி நாச்சிமுத்து, பொறுப்பு அலுவலர் அ.சு. இளங்கோவன், பதிப்புப் பிரிவு பொறுப்பாளர் சிந்தாலப்புடி சீனிவாஸ், திரு. சந்திரசேகர ராஜு மற்றும் அலுவலக நண்பர்களுக்கு நன்றிகள். கட்டுரையாளர்களுக்கும், மெய்ப்புத் திருத்தம் செய்த பேராசிரியர் பொ. திராவிடமணி, முனைவர் இரெ. சுதாகர் வடிவேல் மற்றும் அழகான முறையில் அச்சிட்டு உதவிட்ட (Page-Layout) ***'இமேஜ் டிஜிட்டல்'*** *சென்னை-17, (வலங்கைமான்) திரு. வி.எஸ். நாராயணன் அவர்களுக்கும் அன்பும் நன்றிகளும்.*

இரா. காமராசு
தொகுப்பாசிரியர்
செ.பே: 94435 89189
E.Mail: kamarasuera70@gmail.com

1. “பேராசிரியர்: பல்துறை வித்தகர்”

ந. கடிகாசலம்

“திருநீறு ஒளிரும் நெற்றி
தீந்தமிழ் மணக்கும் செவ்வாய்
திருமால் பரவும் நெஞ்சம்
சேர்ந்தாரைத் தாங்கும் அன்பு
உருவாகத் தோன்றும் செம்மல்
உயர் சுப்புரெட்டி யாராம்” (த. பெரியாண்டவன்)

முன்னுரை

பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் தமிழாசிரியர்; எனினும் பல துறைகளில் தோய்ந்து, நூல்களைப் படைத்தவர். அறிவியல் பட்டம் பெற்றவர், தமிழில் அறிவியல் கருத்துக்களைத் தருவதில் முன்னோடியாகத் திகழ்ந்தவர். அன்னாரின் பன்முக ஆளுமையை - அன்னார் பல்துறை வித்தகர் - என்பதை இக்கட்டுரை வெளிப்படுத்த முனைகிறது.

அறிவியல்

இளந்தலைமுறை, பாமர மக்கள், கல்வி கற்றோர் எனப் பல்வேறு வகைப்பட்டோர்க்கும் ஏற்ற வகையில் அறிவியல் நூல்களைப் படைத்தளித்த பெருமை பேராசிரியர்க்கு உண்டு. **இளைஞர் தொலைக்காட்சி, இளைஞர் வானொலி, ராக்கெட்டுகள், தொலை உலகச் செலவு** எனும் நூல்கள், இளைஞர்களுக்கென்றே எழுதப்பட்டவை எனலாம். விண்வெளிப் பயணம் குறித்து, அறுபதுகளில் நூல் எழுதியவர் பேராசிரியர். வானொலி, தொலைக் காட்சி ஆகியவற்றை, எளிய நடையில் எழுதி, அறிவியல் கருத்துக் களைத் தமிழில் தருவதற்கு முன்னோடியாக விளங்கினார்.

அணுவைப் பற்றிய அரிய கருத்துக்களை, உயர்கல்வி பெறாதவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் எழுதப்பெற்ற

நூல்தான் அணுவின் ஆக்கம். "உயரிய விஞ்ஞானக் கருத்துக்களைத் தமிழில் சொல்ல முடியுமா? இதற்கு விடையளிக்கும் முறையில் திரு. சுப்பு ரெட்டியார் '**அணுவின் ஆக்கம்**' என்ற நூலை எழுதி முடித்திருக்கிறார்" என்கிறார் சி. சுப்பிரமணியம்.

Nuclear Physics எனும் நூலை, **அணுக்கரு பௌதிகம்** என மொழிபெயர்த்து, சிறந்த மொழிபெயர்ப்புக்கான விருது பெற்றவர் பேராசிரியர். ராஜாஜி அவர்களின் பாராட்டுரை இது: "*I can understand the difficulties of a translator of scientific books and I tend my congratulations to Prof. N. Subhu Reddiar on his having won the prize for the best translation of Heisnberg's* **Nuclear Physics**."

இல்லற நெறி என்பது பேராசிரியரின் சிறந்த படைப்புகளில் ஒன்றாகும். கடித உத்தியைக் கையாண்டு இந்நூலைப் படைத்திருக் கிறார். வேலனுக்கு வேங்கடத்தான் எழுதும் கடிதங்கள் வாயிலாக, இல்லற நெறியைப் பல கோணங்களிலிருந்து வாசகர்களுக்கு விளக்கி யிருக்கிறார். இளந்தம்பதியினர் தவறாது படிக்க வேண்டிய நூல் இது என்று பரிந்துரைக்கலாம். தமிழில் இதுபோன்ற நூலை எழுதுவதற்கு அறிவியல் அறிவும், துணிவும், உழைப்பும் தேவை என்பதற்கு இந்நூல் எடுத்துக்காட்டாகிறது.

நமது உடல் என்பது பேராசிரியரின் குறிப்பிடத்தால் மற்றொரு நூலாகும். **அம்புலிப் பயணம், அறிவியல் தமிழ், அறிவியல் விருந்து, தமிழில் அறிவியல் செல்வம், வாழையடி வாழை, தமிழில் அறிவியல் அன்று - இன்றும்** என மேலும் அறிவியல் தொடர்பான சில நூல்களைப் பேராசிரியர் படைத்திருக்கிறார். அறிவியல் தமிழுக்கு அவர் ஆற்றிய தொண்டு அளப்பரியது.

கல்வியியல்

அறிவியலுக்கு அடுத்தபடி, கல்வியியலுக்கும் பேராசிரியர் ஆற்றிய தொண்டு மிகவும் பாராட்டுக்குரியது. **கல்வி உளவியல்** எனும் நூலானது, தற்காலக் கல்வியியல் கொள்கைகளையும் பழங்காலக் கொள்கைகளையும் ஒப்பிட்டுக் காண முயல்கிறது. 'இத்தகைய நூல்கள் தமிழ்நாட்டிற்கு மிக மிகத் தேவையாகும்' என்று G.R. தாமோதரன் பாராட்டியிருக்கிறார். இறவாத புகழுடைய புது நூல்கள் இயற்ற வேண்டும் எனும் மகாகவி பாரதியின் அறைகூவலுக்கு விடை தருவதாக அமைகிறது **உளவியல் கோட்பாடுகள்** எனும் நூல்.

பயிற்றுவித்தல் துறைக்குப் பேராசிரியர் அளித்த பங்களிப்பு காலங்கடந்தும் போற்றத்தக்கது. **தமிழ் பயிற்றும் முறை** எனும், ஒரு காலத்தில் தமிழ் நாட்டின் நூலகங்களை அலங்கரித்த பெருமை பெற்ற நூலாகும். தமிழைப் பயிற்றுவிக்க ஒரு நூலா என்று ஏளனம் பேராசிரியர்களின் வாயை அடைத்த நூல் இது. இத்தகைய நூல் தமிழில் இல்லையே என்று ஏங்கியோரின் ஏக்கத்தை நீக்கியது இந்நூல். ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும், பயிற்சிப் பள்ளிகளிலும் பயிற்சி பெறும் மாணாக்கர்களுக்குப் பெரிதும் பயன்படுவது இந்நூல் - அன்று முதல் இன்றுவரை.

இதுபோன்றே, **அறிவியல் பயிற்றும் முறை, கவிதை பயிற்றும் முறை** ஆகிய சிறந்த நூல்களையும் பேராசிரியர் எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது.

திருத்தலப் பயணம்

நாம் திருக்கோயிலுக்குச் சென்று வருவதுண்டு. ஓரிரு நாளில் அதை மறந்து விடுவதுமுண்டு. ஆனால், பேராசிரியர் சற்றே மாறுபட்டவர். திருத்தலப் பயணம் பற்றிய குறிப்புகளை வைத்து, நூலாக்குவது அவர்தம் வாடிக்கை. இவ்வகையில், **சோழநாட்டுத் திருப்பதிகள்** (2 பகுதி), **மலைநாட்டுத் திருப்பதிகள், தொண்டை நாட்டுத் திருப்பதிகள், பாண்டி நாட்டுத் திருப்பதிகள், வடநாட்டுத் திருப்பதிகள்** எனும் தலைப்புகளில், திருத்தலப் பயண நூல்களை அவர் எழுதி வெளியிட்டிருப்பது அரிய பணியாகும். "ஆசிரியரின் பிடிக்குள் அடங்காத படிப்பு, பக்தியென்ற சூரிய காந்தக் கல்லில் புகுந்து, ஒருமையும் பயனும் பெற்றுவிட்டது" என்று மனம் மிகுந்த பாராட்டுகிறார் எஸ். மஹாராஜன். "திருப்பதிகளின் பெருமைகளை எடுத்து விளக்கியிருக்கும் தன்மை, நன்மையே அறியாமல் அத்திருத்தலங் களுக்குச் சென்று பார்க்க வேண்டுமென்ற அவாவினை நம்மிடம் எழும்புகிறது" என்கிறார் நீதியரசர் பி.ஆர். கோகுல கிருஷ்ணன்.

முதுமையில் அமெரிக்கப் பயணம் மேற்கொள்ளும் வாய்ப்பு கிடைக்கப்பெற்ற பேராசிரியர், தம் பயண அனுபவங்களை **என் அமெரிக்கப் பயணம்** எனும் நூலாக்கித் தமிழகத்துக்கு அளித்திருக் கிறார். அன்னார் கண்ட அமெரிக்காவை நாமும் காண முடிகிறது நூலின் வாயிலாக.

தன் வரலாறு

*ஒருவர் தம் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்வுகளைப் பின்னாளில் அசைபோடுவதற்குத் தன் வரலாறு பெரிதும் உதவுகிறது. அவ்வகையில் பேராசிரியரின் வாழ்வில் நிகழ்ந்த பல்வேறு நிகழ்வுகளை - **மலரும் நினைவுகள், நீங்காத நினைவுகள்** (2 பகுதி) **நினைவுக் குமிழிகள்** (4 பகுதி) என நூல்களாக வடித்திருக்கிறார்.*

*"தம்மை மிகவும் பாதித்தவர்களைக் கூடப் "பாதகர்கள்" என்று கூறத் துணியாத அவரது தருமநெறி தகைமை மிகுந்த" என்று மதிப்பீடு செய்கிறார் இராம. வீரப்பன், **நீங்காத் நினைவுகள்** I நூலுக்கு அளித்துள்ள அணிந்துரையில், பேராசிரியரோடு தோழமை பூண்டவர்கள், துணைபுரிந்தவர்கள், தொல்லை கொடுத்தவர்கள் எனப் பலவகை மாந்தர் தம் குணச் சித்திரங்களை இந்நூலில் வடித்திருக்கிறார். மனிதரின் சிறப்பு, குறை ஆகியவற்றை எழுத்தில் வடிக்கும்போது எவ்வாறு நாகரிகமான முறையில் எடுத்துரைக்க வேண்டும் என்பதற்கு இந்நூல் சான்றாக அமைகிறது எனலாம்.*

*தம் வாழ்க்கைப் பயணத்தை அசை போட்டபோது எழுந்த நூல்தான் **நினைவுக் குமிழிகள்**. நிகழ்வுகளை மறவாமல் நினைவு கூர்ந்து எழுதியதன் விளைவாக, இந்நூல் 4 தொகுதியாக விரிவடைந்தது. 'சமூக வரலாற்று விளக்க நூல் இது' என்று பாராட்டுகிறார் சிலம்பொலி சு. செல்லப்பன். எதிர்நீச்சல் போட்ட பேராசிரியரின் வாழ்க்கையை மிக அருமையாக எடுத்தோதுகிறது இந் நூல், சோம்பலைச் சாம்பலாக்கி உழைத்த பேராசிரியரின் செயல்பாடு, இளைஞர்களுக்கு வழிகாட்டியாக, கலங்கரை விளக்கமாக அமைகிறது என்பதில் ஐயமில்லை. **மலரும் நினைவுகள்** எனும் மற்றுமொரு நூல், 'வெறும் வரலாற்றுப் பெட்டமாக இராமல், இலக்கிய மேற்கோளுடன் இனிய காவியமாக விளங்குகிறது' என்று அறிஞர் பாராட்டுவர்.*

வரலாறு

பட்டினத்தடிகள், ராமலிங்க அடிகள், தாயுமானவர், தமிழ்க் கடல் இராய. சொ. முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் ஆகியோரின் வரலாற்றை அருமையாகத் தந்திட்ட பெருமை பேராசிரியருக்கு உண்டு. சாகித்திய அகாதெமியின் தமிழ் இலக்கியச் சிற்பிகள் வரிசை, இதற்கு அடிப்படையாக அமைந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. இவ்வரலாற்று நூல்கள் கற்கண்டு போல இனிப்பவை

என்று துணிந்து கூறலாம்.

ராமலிங்க அடிகள் எனும் தலைப்பிலான நூலை வெளியிட்ட பேராசிரியருக்குச் சைவ உலகமும் சன்மார்க்க உலகமும் பெரிதும் கடப்பாடு உடையன என்று புகழாரம் சூட்டப்பெற்றுள்ளது.

பட்டினத்தடிகள் பெண்பாலரை இத்துணை இழித்துப் பேசலாமா? என்று வினா எழுப்பி, பட்டினத்தாரின் வாழ்க்கையை அலசி ஆராய்கிறார் பேராசிரியர், எளிய இனிய அமிழ் நடையில் அமைந்துள்ள இந்நூல், ஆய்வு நோக்கிலும் சிறப்பாக அமைந் துள்ளது.

தமிழ்க்கடல் இராய, சொ., முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விஸ்வநாதம் ஆகியோரை முழுமையாக அறிந்து கொள்ள பேராசிரியரின் நூல்கள் துணைநிற்கின்றன.

மொழிபெயர்ப்பு

இலக்கியம், அறிவியல், கல்வியியல், உளவியல் எனப் பல்வேறு துறைகளில் நூல்களைப் படைத்த பேராசிரியர் ரெட்டியார் சில புகழ்பெற்ற மொழிபெயர்ப்பு நூல்களையும் நமக்களித்திருக்கிறார். சாகித்திய அகாதெமியின் வெளியீடாக வெளிவந்த **வேமனர், சி.ஆர். ரெட்டி** ஆகிய நூல்கள், அன்னாரின் எளிய மொழிபெயர்பு நடைக்கு எடுத்துக்காட்டுகின்றன. ஆந்திராவில் பணிபுரிந்த காரணத்தாலும், தெலுங்கு மொழியை அறிந்தவர் என்பதாலும் தமிழாக்கத்தில் அவர் சிறக்கிறார்.

அணுக்கரு பௌதிகம், மானிட உடல், யுனெஸ்கோ அறிவியல் பயிற்றும் மூலமுதல் நூல் ஆகியவை பேராசிரியரின் சிறப்பான மொழிப்பெயர்ப்பின் விளைவாகும். அடிப்படையில் அறிவியலை நன்கறிந்தவர் என்பதால், அறிவியல் நூல்களை வெகு சிறப்பாகத் தமிழாக்கம் செய்து பரிசு பெற்றிருக்கிறார். ஆங்கிலப் புலமையும் மிக்கவர் என்பதால், மொழிபெயர்ப்பு எளிமையாக மட்டுமின்றி, மிகச் சிறப்பாகவும் அமைவதைக் காண முடிகிறது.

ஆங்கிலத்தில்

தமிழில் மட்டுமின்றி ஆங்கிலத்திலும் நூல் எழுதியவர் பேராசிரியர். அண்ணாரின் முனைவர் பட்ட ஆய்வேடான The Religion and Philosophy of NAALAYIRAM with special reference to NA-

MALVAR அன்னாரின் ஆங்கிலப் புலமை, வைணவத்தில் தோய்ந்த பண்பு, ஆராய்ச்சித் திறன் ஆகியவற்றுக்குச் சான்றாக அமைகிறது. திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழக வெளியீடான இந்நூல், நாலாயிரத்துக்கு மட்டுமல்ல நம்மாழ்வாருக்கும் வைணவ சமயத்துக்கும் பெருமை சேர்க்கும் நூலாக மிளிர்கின்றது.

ஆங்கிலத்திலும் பல்வேறு தலைப்புகளில் அவ்வப்போது கட்டுரை எழுதுவது வழக்கம். அவற்றில் சில கட்டுரைகள் தொகுத்து, Collected Papers எனும் தலைப்பில் நூலாக வெளியிட்டிருக்கிறார், 'Prof. Subbu Reddiar is a man of many parts' என்று இந்நூலுக்கு அளித்த அணிந்துரையில், K.R. சீனிவாச ஐயங்கார் பாராட்டி மகிழ்கிறார். பேராசிரியரின் பன்முக ஆளுமையை இரத்தினச் சுருக்கமாக எழுதியிருக்கும் நூல் இதுவாகும்.

சமயம்

சைவம், வைணவம் ஆகிய இரு சமயங்கள் பற்றி மிக அதிக எண்ணிக்கையிலான நூல்களைப் படைத்தவர் பேராசிரியர்; சைவ மரபில் வந்த அவர், சைவம் பற்றி **சைவ சித்தாந்தம் - ஓர் அறிமுகம், சைவ சமய விளக்கு, சைவமும் தமிழும்** எனும் தலைசிறந்த நூல்களை வழங்கியிருக்கிறார். தமிழுக்கான சைவத்தின் பங்களிப்பு குறித்து அவர் விரிவாக ஆராய்ந்திருக்கிறார். சித்தர்களைப் பற்றி மிகச் சிறப்பா ஆராய்சி செய்வது குறிப்பிடத்தக்கது.

சைவ சமயக் குறவர்களான ஞானசம்பந்தர், மாணிக்க வாசகர், நாவுக்கரசர் பற்றியும் எளிய நடையில் நூல்களைத் தந்திருக்கிறார். நாயன்மார்களின் வரலாற்றைக் கூறும்போது திருமாலைப் பற்றிய கருத்துகளை தொகுப்பு படுத்திக் காட்டுவது பேராசிரியரின் தனித் தன்மையாகும். **மூவர் தேவாரம், புதிய பார்வை** என்பது, தேவாரம் குறித்த பேராசிரியரின் புத்தாராய்ச்சியை நாம் காண உதவுகிறது.

வைணவம் தொடர்பாகவும் பேராசிரியர் பல சிறந்த நூல் களைப் படைத்திருக்கிறார். **வைணவச் செல்வம், வைணவ உரைவளம், வைணவமும் தமிழும்** ஆகிய ஆழ்வார்களின் பாசுரங்களை ஆழ்ந்து அனுபவிப்பதற்கு **வைணவ உரைவளம்** போன்று வேறு நூல் இல்லை எனலாம். 'தேனும் கன்னலும் கலந்த சுவை நிறைந்த பாலைப் போன்றது இந்நூல்' என்று பாராட்டப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. வைணவம் பற்றிய ஒரு முழு நூலாக, கலைக்களஞ் சியமாக **வைணவச் செல்வம்** நூல் அமைகிறது. பேராசிரியரின்

கடும் உழைப்புக்கு எடுத்துக்காட்டு இந்நூல்.

பரகாலன் பைந்தமிழ், சடகோபன் பைந்தமிழ் விட்டுச்சித்தன் விரித்த தமிழ், ஆழ்வார்களின் ஆரா அமுது ஆகிய நூல்களும், அர்த்த பஞ்சகம், கலியன் குரல், நலவித சம்பந்தம், வடவேங்கடமும் திருவேங்கடமும், தமிழிலக்கியமும் ஆகிய நூல்களும் வைணவத் துடன் தொடர்புடைய நூல்களாக அமைகின்றன. அர்த்த பஞ்ச ஞானத்தை அடைவதற்கான வழிகள், அப்பயனை அடைய வொட்டாமல் தடுக்கும் இடையூறு நூல்கள் ஆகியவற்றை ஆழ்வார் களின் பக்திப் பாசுரங்கள் வழிநின்று, தெளிவான மேற்கோள்களுடன் பேராசிரியர் இயற்றியிருக்கிறார். இது, வைணவத்துக்கும் தமிழுக்கும் அவர் அளித்த பங்களிப்பாகும்.

ஆராய்ச்சி

ஆராய்ச்சியின் பயன் பாமர மக்களுக்காக இருக்க வேண்டும் என்பது பேராசிரியரின் நோக்கமாகும். எனவே, கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி, பரணியில் பொழிவுகள், முத்தொள்ளாயிர விளக்கம், பண்பாட்டு நோக்கில் கம்பன் காவியம், அண்ணல் அநுமன் எனும் நூல்களை எளிய தமிழ் நடையில் தந்திருக்கிறார். பகுத்தறிவுத் தந்தை எனப் போற்றப்படும் தந்தை பெரியார் சிந்தனைகள் எனும் நூலின் வழி, அன்னாரின் சிந்தனை ஊற்று மூலத்தை அருமையாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

இலக்கியத் திறனாய்வு

திறனாய்வு எனும் துறையில், ஒரு படைப்பு வெளிவந்த உடனே அதை மதிப்பீடு செய்து நூலாக்கும் புரட்சியை உருவாக்கியவர் பேராசிரியர், கவிஞர் வாலியின் அவதார புருஷன் - ஒரு மதிப்பீடு, கவிஞர் வாலியின் பாண்டவர் பூமி - ஒரு மதிப்பீடு எனும் இரு நூல்களும், புதுமைப் பாதையில் அவர் நடைபோட்டதற்கு எடுத்துக்காட்டுக்களாகும். நூல் 272 பக்கம்; மதிப்பீடு 352 பக்கம் என்பதால் இத்திறனாய்வு மதிப்பீட்டு நூல் பொருத்தமும் தகுதியும் உடையதாகவே அமைந்துள்ளது என்கிறார் மு. மு. இஸ்மாயில். 'கவிஞர் வாலி 'தமிழ் வியாசர்' என்று கருதும் அளவுக்கு உயர்ந்து விடுகிறார் எனும் பேராசிரியரின் மதிப்பீடு உண்மையே.

பாவேந்தரின் பாட்டுத் திறன், கண்ணன் பாட்டுத்திறன், புதுவைக் கவிஞர் - ஒரு கண்ணோட்டம் பாண்டியன் பரிசு - ஒரு

மதிப்பீடு, பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு, வாழும் கவிஞர்கள் - 2 தொகுதி ஆகிய நூல்களும் அவரின் திறனாய்வுக்கு ஆதாரமாக விளங்குகின்றன.

தமிழ் இலக்கியம்

இலக்கியத் துறைக்குப் பேராசிரியரின் பங்களிப்பு அளப்பரியது. **அகத்திணைக் கொள்கைகள், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, தமிழ் இலக்கியங்களில் அறம், நீதி, முறைமை** ஆகிய நூல்கள் காலங்கடந்தும் நிலைத்து நிற்கும் தகுதி பெற்றவை. **கவிஞன் உள்ளம்** என்பது பேராசிரியரின் முதல் நூலாகும். **திருக்குறள் தெளிவு** எனும் நூல், மு.வ.வின் திருக்குறள் தெளிவுரை போல் புகழ் பெற வாய்ப்புண்டு.

நிறைவுரை

பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் பல்துறை வித்தகர் என்பதை இக்கட்டுரை ஆணித்தரமாக நிறுவுகிறது. அன்னாரின் பன்முக ஆளுமையை, அவரின் 135 நூல்களும் எடுத்துக்காட்டி நிற்கின்றன. அறிவியல், இலக்கியம், சமயம், தத்துவம் ஆகியவற்றின் கலவை பேராசிரியர் சுப்பு ரெட்டியார் என்றால் மிகையல்ல.

☯

2. இல்லற நெறியும் தமிழ்க்காதலும்

-பேரா. முனைவர் ந. வேலுசாமி

ஒப்பியல் முறை:

ஆராய்ச்சி நெறிமுறைகளில் ஒன்று ஒப்பியல் நெறி. ஒரு மொழியில் உள்ள ஒத்த கருத்துடைய இரு கருத்துக்களையோ, நூல்களையோ அவை வழங்கும் பாடு பொருட்களின் அடிப்படையில் ஒப்பிட்டாய்வதும் அல்லது வெவ்வேறு மொழிகளில் காணப்படும் ஒத்த கருத்துக்களைக் கொண்ட இரண்டு நூல்களை ஒப்பிட்டும் உறழ்ந்தும் ஆய்வு செய்வதும் ஒப்பியல் ஆய்வு முறை என்பர்.

இந்த முறையில் ஆங்கிலத்தில் போன்றே தமிழிலும் ஆய்வு நூல்கள் பல வந்துள்ளன என்பது நம் ஆரோக்கியமான ஆய்வுச் சூழலைக் காட்டுகிறது. இதே அடிப்படையில்தான் தமிழறிஞர்கள் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்களும் டாக்டர் வ.சுப. மாணிக்கனார் அவர்களும் முறையே இல்லற நெறி, தமிழ்க்காதல் ஆகிய நூல்களைத் தமிழ்கூறு நல்லுலகிற்குப் படைத்தளித்துள்ளார். இந்த இரு நூல்களும் மனித வாழ்க்கையின் பிறவிப்பலனான காதல் உண்மையைக் கழறுகின்றன. எத்தகைய காதல்?

> "காதல் அவர் இலர் ஆக நீ நோவது
> பேதைமை வாழி என் நெஞ்சு" (1242)

என்ற திருவள்ளுவர் தெளிவுபடுத்திய காதல்!

> "காதல் காதல் காதல்...!"

என்ற மகாகவி பாரதியார் மும்முறை முழங்கிய காதல்!

திருவி.க. நெறி:

டாக்டர் வ.சுப. மாணிக்கனார்,' டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் ஆகிய இருவரும் மன்பதையின் இன்றியமையா உணர்வாகிய காதலை ஏன் கருத்தியலாக எடுத்தாண்டவர்கள்? தன்னுணர்வா?

தன்னார்வமா? தற்கிளர்ச்சியா? எனும் போது மேற்காணும் மூன்று வினாக்களுக்குமே ஆம் என்ற மறுமொழியைத் தெரிவிப்பதில் பிழையில்லை, இவற்றிற்கும் அப்பாற்பட்டு ஒரு புறத்தூண்டல் இருந்தது. அதுதான் தமிழ்த்தென்றல் திரு.வி.க.வின் பெண்ணின் பெருமை என்ற நூல் அமைந்திருத்தலைப் புறக்கணிக்க இயலாது.

டாக்டர் வ.சுப.மாவின் தமிழ்க் காதல்

சென்னைப் பல்கலைக்கழகத்தின் டாக்டர் பட்ட ஆய்வுக்கு வரையப்பட்ட ஆய்வேடு இது. இதுவே 1957இல் தமிழ்க்காதலாக வெளிப்பட்டது. ஏறத்தாழ 400 பக்கங்கள் கொண்ட தமிழ்க் காதல். அகத்திணை ஆராய்ச்சி, அகத்திணைப் பாகுபாடு அகத்திணைத் தோற்றம் அகத்திணைக் குறிக்கோள், அகத்திணைப்பாட்டு அகத்திணைப் புலவர்கள், அகத்திணைக் கல்வி என்னும் ஏழு இயல்களோடு இயல்கிறது.

மூதறிஞர் செம்மல் மாணிக்கனாரின் நுண்மான் நுழைபுலம் இந்நூல் எங்கும் காணக்கிடக்கிறது. தமிழண்ணல், இரா. சாரங்க பாணி போன்ற பெருமக்கள் தமிழ்க்காதலைச் சிலாகித்து அணிந்துரைகளை அளித்துள்ளார்கள். கற்றாரைக் கற்றாரே காமுறுவர் அன்றோ!

தமிழ்க்காதலை அக ஆய்வின் விடியல் என்றால் மிகையில்லை. சங்க இலக்கியத்தின் மாண்பை அனைவருக்கும் காட்டிய கடற்கரை யின் கலங்கரை விளக்கம் என்று துணிந்து கூற வைக்கிறது.

சங்கப் பாக்களை எழுத்தெண்ணிப்படித்தாய்ந்து, 238 பாக்கள் அகம் பற்றியது என்றும், அவற்றை 378 புலவர்கள் யாத்துள்ளனர் என்னும் புள்ளிவிவரம் தந்துள்ளார். அடிக்கணக்கு அடிப்படையில் இந்தக் கவிஞர்கள் அகத்திணைப் பாடல்களைப் பாடவில்லை. இது அவற்றைத் தொகுத்தோரின் தொகுப்பு நெறிக்கணக்கு என்று கூறியதோடு முதல், கரு, உரிப் பொருள்களை பாடல்களில் இடம் பெற்ற வகைமையை அடிப்படையாகக் கொண்டே, குறுந்தொகை, நற்றிணை, நெடுந்தொகை என்று தொகுக்கப்பட்டுள்ளன எனத் தெளிவுபடுத்தினர். மேலும் சங்க அகப்பாடல்களில் களவுப் பாடல்கள் 882, கற்புப் பாடல்கள் 966. களவுமட்டும் பாடிய புலவோர் 145. கற்பைப் பற்றி மட்டும் பாடியவர்கள் 233.

அன்பின் ஐந்திணையைப் போல கைக்கிளையும், பெருந்திணையும் விரித்துப்பாடும் இயல்புக்குரியவை அன்று.

சங்க இலக்கியம் முழுமையிலும் கைக்கிளைக்குக் கலித்தொகையில் மட்டும் 4 பாடல்கள் கிடைத்துள்ளன. கலித்தொகையில்தான் பெருந்திணைக்கும் 10 பாடல்கள் இருக்கின்றன. இவற்றிலும் ஆண்பாலுக்கு 4, பெண்பாலுக்கு 6.

தமிழ் மூதறிஞர் மாணிக்கனார்தான் கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் இருந்த மாசுகளை நீக்கினார். எப்படி? கைக்கிளை என்பது குறுங்கரு, சிறிய உறவு என்பனவே பொருள் என்றார். ஒரு தலைக்காமம் என்னும் இழிந்த பொருள் கொண்டதன்று என்றார். ஒரு சிறிய பொழுதுக்குக் காதலைச் சுட்டும் ஒரு மனநிலை.

பெருந்திணை என்பது பொருந்தாக்காமம்; வலிந்தபுணர்ச்சி. இழிநிலை உடையது என்றே இது காறும் விளக்கம் கூறப்பட்டு வந்தது. இப்படி இருந்தால் அகத்திணை கண்ட தமிழினம் அகத்திணை ஏழிற்குள் இதை அடக்கியிருக்குமா? என்ற அறிவார்ந்த வினாவைக் கொடுத்துள்ளார். இவற்றிற்குப் புதுவிளக்கம் தந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

துப்பறியும் புதினம் போல் இந்நூல் தொடர்ந்து படிக்கத் தூண்டுகிறது என்கிறது தமிழண்ணல் அவர்களின் குறிப்பு. அகத்திணை ஆய்வில் ஈடுபட்டிருந்த தமிழ் மூதறிஞர் தமிழர் பண்பாட்டையும் மறக்கவில்லை. இது எப்படி புலனாகிறது?

திருமணத்தின் போது ஒரு பெண்ணை முதல் நாள் சந்திரனுக்கும் இரண்டாம் நாள் கந்தர்வனுக்கும் மூன்றாம் நாள் அக்கினிக்கும் அளிப்பார்களாம். இம்மூன்று தெய்வங்களுடனும் அப்பெண் உடலுறவு கொள்வாளாம். நான்காம் நாள்தான் அங்கியம் கடவுள் மணமகனுக்கு அவளைத்தர, அவன் அவளுடன் இன்பம் துய்ப்பானாம். திருமணம் முடிந்து மூன்று நாட்களும் மூன்றுபேரிடம் இன்பம் அனுபவிக்கத் தன் மனைவியைத் தந்ததால் மனக்குறை ஏற்படும் அன்றோ! அது நான்காம் நாள் தீர்வதுதான் 'நெஞ்சுதளை அவிழ்ந்த' புணர்ச்சியார். இது மறைவழக்கமாம்.

தமிழர் கண்ட கற்பியல் இதுவா? தமிழ் இனத்தின் நாகரிக ஏடான தொல்காப்பியத்துக்கு இது சரியான உரையா? இக்கருத்தெல்லாம் தமிழ்நெறி அல்ல அகற்ற வேண்டியவை எனச் சாடுகிறார் வ.சுப. மா. காதல் உள்ளப்பற்றையும் காமம் உடற்பற்றையும் குறிக்கும். எங்கே தனித்திருந்தாலும், பிரிந்திருந்தாலும் இளந்தலை மக்களை இயற்கை உயிர் இணைகள் (பறவை, விலங்கு இணைகள்) சும்மா விடுவதில்லை அஃறிணைப் பிணையல்களைக் காணும் போது,

அவற்றின் புணரொலிகளைக் கேட்கும் போது இளம் உள்ளங்கள் பாலுணர்வைப் பற்றி எண்ணத் தவறுவதில்லை.

இத்தகைய அரிய கருத்தோட்டங்களால் பின்னிப் பிணைந்து கிடக்கிறது தமிழ்க் காதல். ஐந்திணையில் மடல் ஏறுவதற்கும் பெருந்திணையில் மடல் ஏறுவதற்கும் வேறுபாடு உண்டு. ஐந்திணையில் வாயளவில் சொல்லுவான். பெருந்திணையில் மடல் மேல் ஏறியே காட்டுவான் தலைவன் என்கிறார், தொல்காப்பிய நூற்பா 61இன் துணையோடு மணந்த குமரியை மணவாக்குமரியினின்றும் வேறுபடுத்திக் காட்டும் நோக்கமே கரணத்திற்குக் காரணம் என்பர். காற்சிலம்பைக் கழற்றுவதும் கூந்தலில் மலர் சூடுவதும் கரணங்களே! பெருந்திணைக்கு இலக்கியம் செய்த பெருமை புலவர் நல்லந்துவனாருக்கே உண்டு என்பது இந்த அறிஞரின் அரிய கண்டுபிடிப்பு. சிறுபாம்புக் குட்டி ஒன்று காட்டானையை வருத்தியது போன்று தலைவியின் மெல்லுறுப்புகள் என்னைத் தாக்கின (குறுந். 119) என்று கதறுகிறான் தலைவன்.

காதலியின் மார்புக்கு இடையே விரும்பி வீழ்வது போல் ஆனேற்றின் கூறிய இரு கொம்புகளுக்கு இடையே வீழ்பவன்தான் விலையின்றி தூயமகளைப் பெறுவான் என்பது ஆய்க்குல மடந்தை யின் அறிவிப்பு. அகத்திணை ஒரு பாலியல் கல்விப் பொருண்மை கொண்டது. இல்லறம் புகுவார்க்கும் இல்லறம் புகுந்தார்க்கும் காதற்கலையை நேர்படக் கற்பிப்பது அகத்திணையின் குறிக்கோள் என்றது நோக்கத்தக்கது.

குன்றம்பூதனார் 'காதற்காமம்' என்ற ஒரு புதிய தொடரை உருவாக்கித் தந்துள்ளார். 'ஆடவன் தன் காமத்தை வெளிப்படச் சொல்லுவான் பெண் அதை நாணத்தாலும் புலப்படுத்தமாட்டாள். அகத்திணையில் இருவரும் தலைவன், தலைவி என்று பெயர் பெற்றிருந்தாலும் அகத்திணைத் தலைமை பெண்ணுக்கே உரியது. அகத்திணை ஒரு பெண்ணிலக்கியம் அது ஒரு கற்பிலக்கியம் மேலும் பாலிலக்கியம் என்பார் வ.சுப. மா.

அகத்திணையில் பேரழுகை, பேரச்சம், பெருமருட்கை என்பன போன்ற மாற்றுச் சுவைகளுக்கு இடமில்லை. எமன் வரவுக்கு இடம் கொடாத இன்சுவை இலக்கியம் அகத்திணை மாந்தர் அனைவரும் நீடுவாழ்தலன்றிச் சாவுறுதல் இலர்- இழவு புகா ஓர் இலக்கியம் அகத்திணை எனலாம். அகத்திணைக் கல்வி எனும் பாலியல் கல்வியைத் தொல்காப்பியத்தாலும் சங்க இலக்கியத்தாலும்,

திருக்குறளாலும் அன்றி வேறு எவ்வகையானும் பெறுவதற்கில்லை என அறுதியிட்டு உரைத்துள்ளார் வ.சுப. மாணிக்கனார்.

"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும்"
என்பார் தொல்காப்பியர் (3)

டாக்டர் ந. சுப்பு ரெட்டியாரின் இல்லற நெறி:

நூற்றாண்டு விழா நாயகர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் கடல்போல் பரந்துபட்ட தம் பல்துறைப் புலமையால் 135 நூல்களை எழுதிக் குவித்துவிட்டுச் சென்றுள்ளார் அவரது விழாவுக்குரிய நூறாண்டுகளுக்கு மேல் 35 நூல்களை எழுதியுள்ளார்.

ந. சுப்புரெட்டியார் அவர்கள் 1957இல் தனது 41ஆம் அகவையில் அறிவியல் பயிற்றும் முறை என்ற நூலை எழுதியுள்ளார். பிறகு 1964இல் 48ஆம் வயதில் 'இல்லற நெறி' என்ற நூலை எழுதினார். அது அவரது அறிவியல் நூல்களில் ஒன்று. மற்ற அறிவியல் நூல்கள்,

நமது உடல்	- 1971
வாழையடி வாழை	- 1984
தமிழில் அறிவியல் - அன்றும் இன்றும்	- 1990

என்பவனவாகும். இந்த நேரத்தில் தமிழ்கற்கும் மாணவர்கள் எல்லா அறிவும் பெற்றவர்களாக விளங்க வேண்டும் என்ற பேராசை யோடும் தொலைநோக்குப் பார்வையோடும் எழுதியிருப்பது குறிப்பிடத் தக்க தாகும்.

நூன் முகமாக இந்நூலாசிரியர் குறிப்பிடுவது - ஒவ்வொரு வருடைய வாழ்க்கையிலும் பிறப்பு, திருமணம், சிறப்பு ஆகிய மூன்று நிகழ்ச்சிகளும் அவரது வாழ்வின் முற்பகுதி, நடுப்பகுதி, பிற்பகுதி களில் நடைபெறும் நிகழ்ச்சிகள் ஆகும் என்பதாகும்.

திருமணம் ஒவ்வொரு குடிமகனுக்கும் சிறந்த பயிற்சிப் பள்ளியாக அமைகின்றது. திருமணத்திற்குப் பிறகு ஆண்-பெண் சேர்க்கையின் மூலம் துன்ப இருளிற்கட்டுண்டு கிடக்கும் உயிர்களுக்கு ஆண்டவன் உடலை ஈந்து இவ்வுலக வாழ்வைத் தருகிறார்.

இல்லற நெறி என்ற இந்நூல் மணவாழ்வில் புகும் மணமக்கள் அறிந்துகொள்ள வேண்டிய அடிப்படைச் செய்திகள் எல்லாவற்றையும்

ஐம்பது கடிதங்களில் (வேலனுக்கு வேங்கடத்தானின் கடிதங்கள்) பதிவு செய்துள்ளது.

மீண்டும் நாம் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளோம். இது அறிவியல் நூல் இன்னும் தெளிவாகச் சொன்னால் **'காதல் அறிவியல் நூல்.'** உடலில் எவ்வுறுப்பிற்கு ஊறு நேரினும் சிகிச்சை செய்துகொள்ள இயலும். எவ்வுறுப்பை இழந்தாலும் உயிர் வாழ இயலும். ஆனால் குறிக்கு ஊறு நேர்ந்தால் அதற்கு எவ்வித மருத்துவமும் இல்லை. மருத்துவம் செய்தாலும் குணமாகாது. ஊறுடன் உயிர் வாழ்தலும் இயலா. இந்த நுட்பத்தை உணர்ந்து தமிழ் மக்கள் அந்த உறுப்புக்கு **'உயிர்நிலை'** எனப்பெயர் தந்து போற்றினார்கள்.

நமது நாட்டுப் பழமை என்னும் 'உயிர்' இக்கால மேல்தட்டுப் புதுமை என்னும் உடல்தாங்கும் முறையில் தமிழில் நூல் பல யாத்தல் காலத்துக்கு இயைந்த தொண்டாகும். அத்தகைய நூல்களின் இன்றியமையாமையைச் சொல்லவும் வேண்டுமோ 'பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை' நூலின் முன்னுரையில் திரு.வி.க. எழுதியதைச் சுட்டிக் காட்டி திரு.விக.வின் குறிப்பே தன்னை இந்நூலை எழுதத் தூண்டியது என்பது ந. சுப்புரெட்டியார் அவர்களின் குறிப்பாகும் இந்த நூலில் உள்ளவை 50 கடிதங்கள், 55 படங்கள் ஆகும். பத்து இயல்களால் இல்லற நெறி இயன்றுள்ளது.

இயல் ஒன்றின் தலைப்பு மணப்பொருத்தம் இதில் திருமணம் வளர்ந்த கதையும், கலவி புரியும் ஆற்றல் பற்றியும், இனப்பெருக்கம், பொருத்தம் பற்றியும் சிறப்பாகக் கூறப்படுகிறது. மரபு வழிப் பண்புகள் இறங்கும் முறையும் உறவினர்களிடையே திருமணம் புரிந்து கொள்ளுதல் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது.

அறிவியல் அடிப்படையில் திருமணம்: ஆண் உறுப்புக்கள் என்பது இரண்டாம் இயல். இதில் இனப்பெருக்கத்தில் ஆணின் பங்கு, விந்து பாய்மம், விந்தணுக்கள் வரும் வழி விந்துப்பைகள் பற்றிய விளக்கங்களைப் பார்க்க முடிகிறது. இதிலேயே பெண் உறுப்புக்கள் என்ற பகுதியில் இனப்பெருக்கத்தில் பெண்ணின் பங்கு, யோனிக் குழல், கருப்பை, சூற்பைகள் பற்றிய விளக்கங்கள் தரப்பட்டுள்ளது. மாதவிடாயும், முட்டை பக்குவம் அடைதலும் முட்டை கருவுறுதலும், கருப்பையின் செயலும், மாதவிடாயின் போது கவனம் யோனி, லிங்கம் கன்னிச் சவ்வு, கொங்கைகள் பற்றிய குறிப்புகள் தெளிவு படுத்தப்பட்டுள்ளன.

மூன்றாவது இயல் இனப்பெருக்கம் என்பது இதில் பால் அறிமுறை இனப்பெருக்கம், பால் வேற்றுமையில்லா இனப்பெருக்கம், விந்து பாய்ச்சுதல், விந்தணுக்கள் கருப்பையை அடைதல், கருவுறுதல் ஆகியன விளக்கம் பெற்றுள்ளன மற்றும் கர்ப்ப கால அடையாளங்கள் மருத்துவர் சோதனைகள், யோகிக்கர்ப்பம், கருச்சிதைவு, குறைமாதப் பிரசவம், பின் மாதங்களில் குருதிப்போக்கு பிரசவத்தில் மூன்று நிலைகள் பிரசவ வேதனையின்றி குழந்தை பிறத்தல் (சிசேரியன்), ஆயுதப் பிரசவம், ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள், இரட்டைக் குழந்தைகள் குழந்தைகளின் பால் என்ன என ஆகியன ஆராயப்பட்டுள்ளன.

இயல் நான்கு இன்றைய இன்றியமையாத் தேவையான குடும்பக் கட்டுப்பாடு பற்றிய விளக்கங்கள் குறிப்பாக இயற்கைக் கட்டுப்பாடு பரக்கப் பேசப் பட்டுள்ளன.

இயல் ஐந்தில் மக்கட்பேறு விவரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக ஆண், பெண் மலட்டுத் தன்மைகள் பற்றியும், விந்தணு உற்பத்தி ஆகாமைக்குரிய காரணங்கள் ஆராயப்பட்டுள்ளன. நவீன முறை களில் மகப் பேறடைதல், காலத்திற்கு முன் குழந்தை பிறத்தல், இறந்து பிறத்தல் கருச்சிதைவு அதற்குச் சட்டபூர்வமான அங்கீகாரம் என்பன பற்றியெல்லாம் விவரிக்கிறார் ஆசிரியர்.

ஆறாம் இயல் திருமணக்கலையைப் பற்றித் தெளிவுறுத்துகிறது. இணை விழைச்சின் போது உடல் முழுவதையும் பற்றியுள்ள விசையைப் பற்றி விளக்குகிறார்.

'மெய்யில் தீரா மேவரு காமம்' (அகம். 28) என்ற கபிலர் கூற்றை நினைத்திடச் செய்கிறார். மேலும் மலரினும் மெல்லது காமம், காமத்துக் காழில் கனி, கள்ளினும் காமம் இனிது என்றவாறு விளக்கிச் சொல்லும் திருவள்ளுவர் விளக்கத்தையும் உடன்நினைத்து மகிழ வைக்கிறார்.

பால் பொருத்தக்கேடுகள், ஏழாம் இயலில் விளக்கப்பட்டுள்ளன. விரைவாக விந்து வெளிப்படுதல் தூய பாலுறவைத் தலைகீழாகப் புரட்டிப்போடும் முட்டி மைதுனம் ஒரு பாற் புணர்ச்சி இயல்புகள் விவரிக்கப்பட்டுள்ளன.

எட்டாவது இயலில் திருமண வாழ்வில் உடல் நலம் பற்றித் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நோயற்ற வாழ்வு, திருமண வயது, விவசாய நாடுகளில் இளமை மணம் அதிகம் நிகழும்

சூழல் குழந்தைகளின் எண்ணிக்கை, திருமணத்திற்கு முன்னர் உறவுகள் பற்றியெல்லாம் ஓர் எச்சரிக்கையாகவே ஒரு மருத்துவர் நிலையிலிருந்து எடுத்துரைத்துள்ளார்.

ஒன்பதாம் இயல், மகிழ்வுடைய இயல்வாழ்க்கை பற்றியது. இதில் தமிழரின் மணவகைப்பாடுகள், ஆரியரின் எண்வகை மணங்கள், காந்தருவ மணம், திருமணத்தின் நன்மைகள், ஆளுமைக் கூறுகள் பண்பாட்டுப் பொருத்தப்பாடு மாமனார், மாமியார் தொல்லைகள் பொருளாதாரம் தரும் மாற்றங்கள் ஆகியன அலசப்பட்டுள்ளன.

பத்தாம் இயல் மங்கல வாழ்த்தாக நிறைவுறுகிறது. மணமக்கள் அன்பு வடிவம் பெறுதல், உடல், மனம், அறிவு ஆகிய ஒரே நேர்கோட்டிற்கு வருதல் ஒழுங்கான இல்லறம் அமைதல், பெண்ணின் பெருமை துலக்கமுறல் ஆகியன விளக்கப் பெற்றுள்ளன.

ஐநூற்றுத் தொன்னூற்று ஒன்பது பக்கங்களைக் கொண்ட 'இல்லறநெறி' மானிட வாழ்க்கை நல்லற நெறியில் செல்ல வழிகாட்டும் ஓர் மக்கட் சமுதாய நூல்-அறிவியல் நூல் - உடற்கூறு நூல். 'அரிது அரிது மானிடறாய்ப்பிறத்தல் அரிது' என்கிறோம் அந்த மானிடம் நூறாண்டு வாழ வேண்டுமல்லவா? அதற்கு இத்தகைய ஒப்பனை அற்ற நேரடி அறிவுரை நூல்களும் தேவையன்றோ? இந்தத் தேவையை நிறைவு செய்வது தான் ந. சுப்பு ரெட்டியார் அவர்களின் இல்லற நெறி.

அன்றைய (1964) இந்தியத் துணைக் கல்வி அமைச்சராக விளங்கிய டாக்டர் சௌந்திரம் ராமச்சந்திரன் அவர்கள் இந்த நூலுக்கு வழங்கிய முன்னுரையில் "இல்லறத்தை வெற்றியுடன் நடத்த மனோதத்துவ ரீதியில் அதிகம் ஆலோசனை கொடுப்பது மிகவும் அவசியம். தமிழ் நாட்டு மக்களுக்கு விஞ்ஞான அறிவு குறைவெனக் கருதியதன் காரணமாக ஆசிரியர் இந்நூலை எழுதியிருக்கிறார். ஆகவே அவருடைய இந்த முயற்சி தமிழ் மக்களுக்கு அதுவும் இளந்தம்பதிகளுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும் என்பதில் ஐயம் இல்லை" என எழுதியிருப்பது நூலாசிரியரின் பேராற்றலை வெளிப்படுத்தப் போதுமானது.

ஒப்பியல் நெறியில் தமிழ்க்காதலும் இல்லற நெறியும்

வளர்ந்து ஓரளவு நிலைகொண்டுள்ளது ஒப்பியல் நெறிமுறை ஆய்வு. வெவ்வேறு சமுதாயக்களங்களில் கவிஞர்கள் படைக்கும் இலக்கியங்களை ஒப்பிட்டு அவர்களின் கருத்தொற்றுமை கற்பனை

ஒற்றுமை, உணர்வொற்றுமை ஆகியவற்றையும் அவர்களின் தனிச் சிறப்புக்களையும் காட்டுவது இதன் பணி என்றவாறு குறிப்பிட்டுச் செல்வார். திருமதி ராதா தியாகராஜன் இந்த அடிப்படை கொண்டு நோக்கும்போது தமிழ்க்காதலும், இல்லற நெறியும் 'மானுட இன்பம்' என்ற ஒரே இலக்கை நோக்கித்தான் செல்கின்றன என்பது போதறும் வேடிக்கை பேசி, வீண்பொழுது போக்கும் மனிதரின் கண்களுக்குப் புலப்படாத பொருளை வேண்டுரைக்க கவிஞர் மில்டல் விரும்பி,

See and tell of things invisible to mortal sight

என்று பாடியதையும், பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன் என்று பாரதியார் பாடியதையும் அறிஞர் ந. சுப்பு ரெட்டியார் தந்த இல்லற நெறியோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அப்போது விளங்கும் இந்த நூலின் மாண்பு.

இங்கு விவாதத்திற்கு எடுத்துக்கொண்ட இரண்டு நூல்களும் உயர்ந்த நம்பிக்கையுடன் இனிதே முடிவதை (Optimistics End) நோக்கு மின்?

மேலும், தமிழ்க்காதல் பேசும் அகத்திணைப் பாக்கள் அனைத்தும் 'புனைவியற்' பணியாளர்களின் பாடல்களா? காதல், வீர உணர்ச்சிமிக்கப் பாடல்களை (Romantic Poetry) என்றால் ஆம் என்று சொல்வதில் யாருக்கென்ன தடை?

'Romance' என்ற பெயருக்கு 'highly imaginative tale of adventure and chvalry' என்ற பொருள் அதுவே பெயர்உரிச் சொல்லாகவும், அடைமொழியாகவும் (adjective) வரும்போது (Romantic) என வடிவம் பெறுகிறது.

டாக்டர் எ.எ.மணவாளன் தன் திறனாய்வு நூலில் 'Is Akam poetry Romantic? என்று கேட்டு விடை தந்திருப்பது ஈண்டு நோக்கத் தக்கது.

Romantic Poetry is being loosely understand to by concering itself with such human love in the main.

Again the chief forte of aspect of Akam love is the sexual union and all the other aspects treated in it whether people it or attend on it.

இனி, சங்க அக இலக்கியங்கள் எல்லாம் உளவியல் சார்ந்தவை என்பதை டாக்டர் மணவாளன் அவர்கள் மேலும் துலங்கச்

செய்கிறார்.

'Romanticism can be defined only in terms of pure Psychology. Any other formula alters or limits arbitrarily its very essence' என்பது அவர் துணிவு.

டாக்டர் மு.வ. அவர்கள் சங்க இலக்கியம் மற்றும் திருக்குறள் பற்றி வழங்கிய விளக்கங்கள் மற்றும் திருக்குறள் பற்றி வழங்கிய விளக்கங்கள் தமிழர்களின் இலக்கிய தாகத்திற்குச் சரியான குளிர்ந்த நீராக விளக்குகிறது என்பதும் டாக்டர் மணவாளன் அவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழர்களின் உள வளத்திற்குத் தமிழ்க் காதலும் உடல் வளத்திற்கு இல்லற நெறியும் இரு சுடர்களாக விளங்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றைக் கற்று வாழ்க்கையைத் தொடங்கினால் மானிட வாழ்க்கைப் பயனை ஒவ்வொருவரும் அடைவது உறுதி என்பது போதறும்.

இந்த இருபெரும் மூதறிஞர்களில் ஒருவருக்கு (ந. சுப்பு ரெட்டியார்) இந்த ஆண்டு நூற்றாண்டு நிறைகிறது. இன்னொருவருக்கு (வ.சு.ப. மாணிக்கம்) அடுத்த ஆண்டு (2017இல்) நிறைவுறுகிறது என்பது மற்றும் ஓர் மகிழ்வான தகவலாகும்,

பார்வை நூல்கள்

1. பாரதியும் மில்டனும் - எம். சோலையன்
முதல் பதிப்பு டிசம்பர் 1985
செல்வி பதிப்பகம், காரைக்குடி - 623 001.

2. Mutual Flames - A. A. Manavalan,
(Essays in Comparative Literature: Tamil & English)
First December - 1977
Tamil Puthakalayam,
576, Pycrofts Road,
Madras - 600 005.

☯

3

பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரும் இலக்கியக் கல்வியும்

-இரா. காமராசு

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் (27-08-1916 - 01-05-2006) தமிழின் குறிப்பிடத்தக்க அறிஞர். பள்ளி ஆசிரியராக வாழ்வைத் தொடங்கிப் பல்கலைக்கழகப் பேராசிரியராக உயர்ந்தவர். பேச்சும், எழுத்துமாக தன் வாழ்நாளெல்லாம் தமிழுக்காக உழைத்தவர். தான் வாழ்ந்த தொன்னூறு ஆண்டுகளில் நூற்று முப்பத்து ஐந்து நூல்களை தமிழுலகிற்குத் தந்தவர். தமிழ் மொழியை, இலக்கியத்தை கல்விப் புலத்தில் வளர்த்தெடுத்தப் பெருமகனார்.

இவர் ஆன்மீகத்திலும், அறவியலிலும், அறிவியலிலும், வாழ்வியலிலும் மூழ்கி முத்தெடுத்தவர். பக்கச் சார்பின்றி கல்விப் பணி செய்தவர். பட்டினத்தாரைப் பற்றியும் எழுதியுள்ளார். பெரியாரைப் பற்றியும் எழுதியுள்ளார். அறிவியல் தமிழ் பற்றியும் எழுதியுள்ளார். இல்லற நெறியைப் பற்றி எழுதியவர், அண்ணல் அநுமன் பற்றியும் எழுதியுள்ளார். சைவ, வைணவங்களை எழுதியவர், சித்தர்களையும் எழுதியுள்ளார். இவை முரண்கள் அல்ல. தன் விருப்பு வெறுப்புக்களை தான் சார்ந்த பணியில் தலைகாட்டாமல் அவர் பார்த்துக் கொண்டார். ஆய்வில் நடுநிலை முக்கியம். சுப்புரெட்டியார் தன் ஆய்வுகளில் இதனைத் தொடர்ந்து ஒழுகி வந்தார் என்றால் மிகை இல்லை.

தோற்றப் பின்புலம்

விஜயநகரப் பேரரசை நிறுவிய ஹரிஹரர், புக்கர் என்னும் இரட்டையர் வழி வந்தவர்கள் "ரெட்டியார்." பின்னர் இது மருவி "ரெட்டியார்" ஆயிற்று என்பர். இவர்கள் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் வாழ்ந்தனர். ஒரு குழுவினர் கொல்லிமலை, பச்சை மலைகளுக்கு இடைப்பட்ட பகுதிகளில் குடியேறினர். காட்டை

அழித்து, நிலங்களாக்கி, விவசாயம் செய்து பெரு நிலக்கிழார்களாக வளர்ந்தனர். இவர்கள் வசித்த ஊர்களே செழிப்பை உணர்த்துபவை. துறையூர், கோட்டாத்தூர், கீரம்பூர், சிக்கத்தம்பூர், மாராடி, சோபனபுரம், வைரிசெட்டிப் பாளையம், பச்சப் பெருமாள் பட்டி, ரெட்டியார் பட்டி என, இப் பகுதிகளில் வாழ்ந்தவர்கள் பல அறச் செயல்களில் நாட்டம் கொண்டனர். இந்தப் பின்புலத்திலிருந்து உருவானவர் தான் சுப்பு ரெட்டியார்.

கோட்டாத்தூரில் எளிய குடும்பத்தில் பிறந்தார். மூன்று வயதிலேயே தந்தையை இழந்தார். நிலத்தை விற்றுப் படித்தார். வறுமையிலும் செம்மையாகக் கற்றார். ஆசிரியப் பயிற்சி பெற்றார்.

பணிகள்

துறையூர் ஜமீன்தார் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியராக ஒன்பதாண்டுகள் பணி. காரைக்குடி அழகப்பச் செட்டியார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பத்தாண்டுகள் பணி. பின்னர் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் பதினேழாண்டுகள் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர் பணி. ஏறக்குறைய முப்பத்தாறு ஆண்டுகள் கற்பித்தல் பணி. தொடர்ந்து பல்கலைக்கழகங்களில் தகைசால் பேராசிரியராக ஆராய்ச்சிப் பணிகள்ஆற்றினார்.

குடும்பத்தில் அயல்மொழிப் (தெலுங்கு) பின்புலம் உள்ள பேராசிரியர் சுப்பு ரெட்டியார், தமிழ் மீது தீராப் பற்றுக் கொண்டவராக விளங்கினார். அவர் தன் முப்பத்துமூன்றாம் வயதில் "கவிஞன் உள்ளம்" என்னும் நூலினைப் படைத்தார். தொடர்ந்து இறக்கும் வரை எழுதி வந்தார். பலரின் நூல்களைப் பதிப்பிக்கவும் செய்தார். கற்பிக்கும் முறைகள் பற்றி ஐந்து நூல்கள்; அறிவியல் குறித்து பதினான்கு நூல்கள்; இலக்கியம் மற்றும் சமய விளக்க நூல்கள் பதினேழு; சான்றோர் வாழ்க்கைத் தொடர்பான நூல்கள் பன்னிரெண்டு; தன் வரலாறு கூறும் ஐந்து நூல்கள் என அவரின் படைப்புப் பங்களிப்புகள் விரியும்.

பண்பு நலன்கள்

சுப்புரெட்டியார் மாணவர்களிடம் மிகுந்த அக்கறை கொண்டு விளங்கினார். உரிய வகையில் ஆற்றுப்படுத்துவார். பல நல்ல பண்புகளின் உறைவிடமாக அவர் விளங்கினார். அவரின் நூல்கள் சிலவற்றில் முகப்பில் தமிழ்ச்சான்றோர் பலர் சிறப்புப் பாயிரம்

எழுதியுள்ளார். இவற்றில் அவரின் பன்முக ஆளுமையும், குண நலன்களும் வெளிப்படும்.

பேராசிரியர் உருவத்தை த. பெரியாண்டவன்,

"திருநீறு ஒளிரும் நெற்றி
தீந்தமிழ் மணக்கும் செவ்வாய்
திருமால் பரவும் நெஞ்சம்
சேர்ந்தாரைத் தாங்கும் அன்பு
உருவாகத் தோன்றும் செம்மல்
உயர் சுப்பு ரெட்டியாராம்"

எனக் காட்சிப்படுத்துவார். அவரை நேரில் பார்த்தவர்கள் இதை உணர்வர்.

சுறுசுறுப்புக்கும் உழைப்புக்கும் உற்சாகத்திற்கும் அடையாள மாக விளங்கியவர் அவர் என்பதை அர. சிங்காரவடிவேலன்,

"சுப்புரெட்டி யாரென்று பெயர் சொன்னாலே
சுறுசுறுப்பும் பேருழைப்பும் துள்ளு மாமே!"

எனப் பாடுகிறார்.

பேராசிரியர் தமிழ்த் தொண்டை க. பெருமாள்,

"அருந்தமிழ்ப் புலமை மிக்கவர்
ஆங்கில மொழியில் வல்லார்
இருமொழியின்? கண்ணும் நூல்கள்
இயற்றிடும் ஏற்றம் உள்ளார்"

எனச் சித்தரிப்பார்.

பேராசிரியர் க. வெள்ளைவாரணார், சுப்பு ரெட்டியாரின் பண்புள்ளத்தை இப்படி படம் பிடிப்பார்,

"பெருமை சிறுமை கருதாது
பேரன் புடனே யாவரொடும்
நெருங்கிப் பழகும் நீர்மையினான்
கருமை விரவா நெஞ்சத்தான்
கற்றோர் தமக்கே தன்பணியை
உரிமை செய்யும் உவப்புடையான்
உயிரோ ரன்ன கேண்மையினான்"

கவிஞர் செளந்தரா கைலாசம், பேராசிரியரின் பண்முக ஆற்றலை,

"அறிவியலை அவரறிவார்; இலக்கியத்தை
ஆராயும் வகையறிவார்; வலிமை கொள்ள
உறுதுணையாய் யாவர்க்கும் உதவுகின்ற
உளவியலும் தெளிவுறுவார் நாட்டில் உள்ள
சிறுவர்களை இளைஞர்களைப் பயிற்றுவிக்கும்
திறனறிந்து செயல்புரிவார்; இவற்றின்மேலாய்
இறையுணர்வில் தமையிழந்த பெரியோர் வாழ்வை
எழிலமுதத் தமிழ்மொழியில் தருவார்! வாழி!"

ஆசிரியரின் ஆசிரியர்

பள்ளி ஆசிரியராகப் பணியைத் தொடங்கியவர், கல்வியியல் கல்லூரியில் கற்பித்தலைத் தொடர்ந்தார். கற்பித்தல் முறைகளும், உளவியல் அணுகுமுறைகளும் தமிழுக்குப் புதிது. பெரும்பாலும் ஆங்கில நூல்கள்தான் குருகுலம் தொடங்கி திண்ணைப் பள்ளி வரைப் பண்டைத் தமிழ்க் கல்வி மரபு ஒன்றுண்டு. நவீனக்கல்வி ஆங்கிலக் கல்வி முறையின் வித்து, மிஷினரிகளும், பின்னர் அரசும் கல்விக் கூடங்கள் தொடங்குகின்றன.

ஆசிரியர் பயிற்சி, ஆசிரியர் கல்வி என்பவை கல்விப் புலத்தில் வருமுன்னர், எழுத்தறிவு பெற்ற யாவரும் "ஆசிரியராகும்" நிலையுமிருந்தது. எண்ணும், எழுத்தும் தானே அப்போது கல்வி? பின்னர் தொடங்கி வளர்ந்த கல்விச் சாலைகளுக்கு "முறையான" ஆசிரியர்கள் தேவைப்பட்டனர். பயிற்சி நிலையங்கள் உருவாகின. கல்வியியல் பயிற்றுமுறைகள், உளவியல் நூல்கள் தேவைப்பட்டன. இந்நிலையில் காலம் அறிந்து கூவிய சேவலாக, ந. சுப்புரெட்டியார் உருவானார். தமிழ் பயிற்றும் முறை, கவிதை பயிற்றும் முறை, அறிவியல் பயிற்றும் முறை, கல்வி உளவியல் கோட்பாடுகள், யுனெஸ்கோ அறிவியல் பயிற்றும் மூல முதல் நூல் போன்ற நூல்களைப் படைத்தார். இவை முதல் நூல்கள் அல்ல. ஆங்கில நூல்களை வைத்துக் கொண்டு, மாணவர் நோக்கில் ஆசிரிய மாணவர்களுக்காக உருவாக்கப்பட்டப் பாடநூல்கள் எனக் கருதத் தக்கவை.

சுப்புரெட்டியாரின் பெரும்பாலான நூல்கள் மாணவர்களுக்காக எழுதப்பட்டவைதான். குறிப்பிட்டப் பொருளை எடுத்துக் கொண்டு எளிமையாக விளக்கிச் சொல்வது இவரின் இயல்பு. அதுவும்

பண்டைத் தமிழ்க் கல்வியின் தொடர்ச்சியாக நவீனக் கல்விமுறை அறிமுகமாகும் போது மாணவர்களுக்கான குறிப்புகளாக (Notes), வழிகாட்டியாக (Guide) பல நூல்கள் தேவைப்பட்டன. பின்னர் இவை மலினப்பட்டன என்பது வேறு.

இலக்கியம் படைப்பது பற்றி தொல்காப்பியம் பேசுகிறது. இலக்கியத்தை விளங்கிக் கொள்ள, ஆய்வு செய்ய தமிழில் எதுவும் முன்நூல்கள் இல்லை. தமிழில் இலக்கியத் திறனாய்வு அறிமுகம் ஆகும்போது, திருமணம் செல்வகேசவராய முதலியார், அ.ச. ஞாசம்பந்தன், மு. வரதராசனார், மறைமலையடிகள் போன்றோர் இலக்கியம் குறித்தும், இலக்கியப் பார்வைகள் குறித்தும் எழுதினார். இதன் தொடர் பயணியாக சுப்பு ரெட்டியாரும் கவிஞன் உள்ளம், கவிதையநுபவம், பாட்டுத்திறன் போன்ற நூல்களையும் இலக்கிய வகையின் வளர்சிகளும் இக்கால இலக்கியங்களும் முதலான நூல்களையும் எழுதுகிறார். ஆசிரியர்களுக்கான நூல்கள் பலவற்றைப் படைத்ததனால் இவரை ஆசிரியர்களின் ஆசிரியர் என்பது பொருந்தம்.

தமிழ் பயிற்றும் முறை

தமிழ் பயிற்றும் முறை முதல் முதலில் 1957இல் வெளிவந்தது. நோக்கங்கள், பாடத் திட்டங்களும் பயிற்று முறைகளும், மொழித் திறன்களும் அறைகளும், ஆசிரியர் செயலாற்றும் வழிகள் ஆகிய நான்கு பகுப்புகளில் பதினேழு இயல்களில் ஏறக்குறைய 570 பக்கங்களில் இந்நூல் அமைந்துள்ளது. கற்றல், கற்பித்தல் குறித்த முழுமையான கூறுகள் இதில் இடம் பெற்றுள்ளன. பேராசிரியர் தமிழ் இலக்கண - இலக்கியங்களை முறையாகக் கற்றவராதலால் தமிழ் மொழியின் தனித்தன்மைகளைக் கற்பித்தல் குறித்துப் பகுதிகள் சிறப்பாக அமைகின்றன. இந்நூல் எழுந்தக் காரணத்தைப் பேராசிரியர்,

"நீண்ட நாட்களாகவே நவீன முறையில் தமிழ் கற்பிப்பதைப் பற்றி ஒரு நூல் எழுதி வெளியிட எண்ணியிருந்தேன். ஒன்பது ஆண்டுகள் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராக இருந்த பொழுது நேரில் கவனித்த பல்வேறு அனுபவங்களைக் கொண்டும், எட்டு ஆண்டுகள் பி.டி. மாணாக்கர்கட்குத் தமிழ் கற்பிப்பதைப் பற்றிப் போதித்து வந்த அனுபவத்தைக் கொண்டும் இந்நூல் எழுதப் பெற்றுள்ளது. எழுதி முடிக்க இரண்டாண்டுகள் ஆயின இந்நூல் குறிப்பிட்டுள்ள பல கருத்துக்களையும் நன்கு சிந்தித்து நடைமுறையில் செயலுக்குக் கொண்டு வந்தால் மாணாக்கர்களிடம்

தமிழ்மொழியறிவு நன்முறையில் அமைவது உறுதி என்று எண்ணுகிறேன். நம்பிக்கையும் கொள்ளுகின்றேன். முறைகளையும் கூறுவது எளிது அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வந்து வெற்றி காண்பது மொழிகற்பிக்கும் ஆசிரியர்கள் மேற்கொள்ளும் முயற்சியை யும், அவர்களின் திறனையும், ஈடுபாட்டையும் பொறுத்துள்ளது" என்பார்.

இந் நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள மேனாள் கல்வி அமைச்சர் தி.சு.அவினாசிலிங்கம் இந்நூலின் பெருமதியை அழகாகப் பதிவு செய்கின்றார்.

"கல்வித் துறையில் பாட போதனையின் தரம் உயர வேண்டு மென்பது அனைவருடைய விருப்பம். நமது உயர்நிலைப் பள்ளி களில் பாடபோதனை தமிழில் அமைந்திருக்கின்றது. ஆனால், இந்தப் பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சியும் பாடமும் ஆங்கிலத்தில் அளிக்கப்படுகின்றன. பின்னர் அவர்கள் பள்ளிகளில் மேற்கொள்ளவிருக்கும் பணிகளில் அவர்கள் பெற்ற அறிவும் பயிற்சியும் முற்றிலும் பயன்படாமல் போகின்றன. எனவே, முதலில் ஆசிரியர் கல்லூரிகளில் பாடங்கள் தமிழில் சொல்லித் தரப்படவேண்டியது மிகவும் அவசியம். இதற்குத் தேவையான புத்தகங்கள் தமிழில் இல்லையே என்று சிலர் கூறுகின்றார்கள். இந்தக் குறையை நீக்க பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் முன் வந்திருப்பது பாராட்டத்தக்கது." இந்தப் பின்புலத்தில் பார்க்கும் பொழுது இந்நூலின் அருமை தெரியும்.

கல்வி உளவியல் கோட்பாடுகள்

தமிழ் பயிற்று முறைகள் போன்றே கல்வி உளவியல் கோட்பாடுகளும் மாணவர்க்கும் ஆசிரியர்க்கும் நல்பயன் நல்குவதாக அமைந்துள்ளது. இது ஆசிரியர், மாணவர் ஆகிய தொடர்புடைய இருவரைக் கடந்தும் பெற்றோர் - பொதுமக்கள் ஆகியோருக்கும் வழிகாட்டுவதாக அமைந்துள்ளது. குழந்தை உளவியல், பிராய்டு உளவியல், பால்சார் கல்வி ஆகியன பற்றிய பகுதிகள் சிறப்பானவை. இந்நூல் தமிழில் வெளிவந்த முன்னோடி கோட்பாடு நூலாக, ஆசிரியப் பயிற்சியாளர்களுக்கு பாடநூலாக விளங்கும் தன்மையது. "குழந்தையை நன்றாக ஆராய்க, குழந்தையை அறிவது எளிதல்ல. குழந்தையைக் கவனி, இயற்கையோடு இசைந்து நட." என்பன போன்ற ரூசோவின் சிந்தனைகளை அடியொற்றி இந்நூல் அமைந்துள்ளது.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள பேராசிரியர் கே. ஆர். மாணிக்கம்,

இந்நூல் தமிழிலும் உளவியலிலும் பெற்றுள்ள ஒருங்கிணைந்த புலமையும், பள்ளியிலும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் கற்பித்த அனுபவமும் இந்நூலை நன்முறையில் யாத்தத்திற்குப் பெருந்துணை புரிந்துள்ளன. இத்தனைக்கும் மேலாக பேராசிரியர் ரெட்டியாரின் ஆற்றொழுக்கான எளிய தமிழ் நடையும், ஆங்காங்கே பொருத்த மாகக் காட்டப்பெற்றுள்ள அநுபவ எடுத்துக்காட்டுகளும் இந்நூல் தரத்தை மேலும் உயர்த்துகின்றன" எனச் சுட்டுவது பொருத்துமானது.

இலக்கியக் கல்வி

தமிழில் இலக்கியக் கல்வி குறித்த அக்கறை மிகக் குறைவு. பண்டைய இலக்கியங்களைக் கற்றலும், கற்பித்தலும் மரபார்ந்த நிலையில் ஆழமாக வெளிப்பட்டன. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் சரிதத்தில் உ.வே. சாமிநாதையர் அக்கால கல்விமுறை, ஆசிரியர் நிலை ஆகியவற்றைச் சுட்டிச் செல்வார். நவீனக் கல்வியின் தொடக்கத்தில் இலக்கியங்களைக் கற்பிப்பது என்பது விளக்கம் கூறுதலாகவே அமைந்தது. சுப்புரெட்டியார் ஓரளவு இந்தக் குறையை நீக்குகிறார். இவரின் பெரும்பாலான நூல்கள் இலக்கியத்தை எப்படி அணுகுவது, வாசிப்பது, உணர்வது என்பதன் விளக்கமாகவே அமைகின்றன. அது தொல்காப்பியமானாலும், சங்கக் கவிதைகளானாலும், காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள், இக்கால இலக்கியங்கள் என எல்லாவற்றைப் பற்றியும் இவர் நூல்கள் படைத்தார். இவை ஆராய்ச்சி, திறனாய்வு நூல்கள் என்பதையும் தாண்டி "இலக்கியக் கல்வியாக" மாணவர்களுக்கு - குறிப்பு நூல்களாகப் பயன் விளைவிப்பவை. காலம் முழுவதும் ஆசிரியராகப் பணி செய்தவர் - வகுப்பறையில் மாணவர்களுக்குப் பாடம் சொல்வது போலவே தன் நூல்களை உருவாக்கியதில் வியப்பில்லை.

தமிழ் மொழி, இலக்கிய வளர்ச்சிக்குத் தங்களை அர்ப்பணித் தவர்கள் பலர். மரபையும், நவீனத்தையும் இணைத்து முன்சொல்ல வேண்டியச் சூழலை சிலர் உருவாக்கினர். ஏடுகளை அச்சு ஏற்றுதல், உரை எழுதுதல், ரசனை முறையில் விவரனை செய்தல் என்பவை தொடக்கநிலை முயற்சிகள்.

தமிழ்க் கல்விப் புல உருவாக்கம் அடுத்து நிகழ்ந்தது மரபிலக்கண, இலக்கியங்கள் புதுநெறியில் கற்கவும், கற்பிக்கவுமாக பல எடுகோள்கள் நடந்தன. அதுவரை அறியப்படாத இலக்கியங்களில் அறிமுகம் பரவலாக்கம் பெற்றது. ரசனை என்பதைத் தாண்டி பல்துறைப் பலகனியாக பண்டைய இலக்கியங்கள் திறப்பு செய்யப்பட்டன. பாடசாலையில் பட்டங்கள் நோக்கி நகர்ந்த ஆரம்பக் காலத் தமிழ்க் கல்விக்கு ஏராளமான இலக்கிய விளக்குநர்கள் தேவைப்பட்டார்கள். இதன் தொடர்ச்சியில் ஆய்வுகள் பலவும் முகிழ்ந்தன. நூல்கள் பல்கிப் பெருகின. தமிழ் அறிவு மரபின் நீட்சி நவீன மயமானது இந்நிலையில் தான்.

இத்தகுதமிழ் இலக்கண - இலக்கியப் பாய்ச்சலின் விளைவு களில் ஒன்றாக பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் பங்களிப்பு அமைகின்றது.

பேராசிரியர் இலக்கியத்தை ஒருவித ரசனை அடிப்படையிலேயே நோக்கினார். கவிதை குறித்து பேராசிரியர், "ஒரே பொருள் பற்றிச் சிறந்த கவிதையும் தோன்றலாம். மிக மட்டமான செய்யுளும் தோன்றலாம். தாழ்ந்த பொருள் பற்றித் தாழ்ந்த கவிதையும் தோற்றக் கூடும்" என்பார். மேலும், "பொருளின் பெருமைக்கும் சிறுமைக்கும் ஏற்ப கவிதையின் பெருமையும், சிறுமையும் என்று கூறுதல் முற்றும் பொருந்தாது. கவிதை சிறப்பது அதனைப் படைக்கும் கவிஞரின் அனுபவத்தினைப் பொறுத்து வருவது, அவன் அனுபவத்தைக் கூறும் முறையையும் பொறுத்தது" என்கிறார். இவை அனுபவ மொழிகள், கவிதையை, கவிஞனைப் பற்றிய அவரின் பார்வைகள்.

பேராசிரியர் எழுத்துக்கள் எளிமையானவை. உரிய இடங்களில் மேற்கோள்கள் தருவார். பொருத்தமானக் கருத்துக்களைத் தொகுத்துத் தருவார். செய்யுள் அடிகளைக் கொண்டு, கொடுத்து லாவகமாகப் பயன்படுத்துவார். இனிமையும், நயமுமிக்க ஒரு வித நடையழகு அவருக்கு அமைந்தது. சற்றே நீளும் தன்மை வாசகனைச் சோர்வடையச் செய்தாலும், தான் எடுத்துக் கொண்ட கருத்தை விளக்கிச் சொல்வதில் அவருக்குள்ளப் பொறுப்புணர்ச்சி பாராட்டத் தக்கது.

தமிழில் பேச்சும் எழுத்துமாக நீண்ட காலம் தொழிற்பட்டவர். எவ்வித அரசியல், அதிகாரப் பின்புலமுமின்றி சொந்த உழைப்பில்,

முயற்சியில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டவர். தமிழ்நாட்டு எல்லை கடந்தும் தமிழை வளர்த்திட முனைந்தவர். தனக்கென மாணவர் பரம்பரை ஒன்னை உருவாக்கி வளர்த்தவர். சாப்பாட்டிற்கு "உப்பு" மாதிரி தமிழுக்கு "சுப்பு" எனும் அளவுக்கு அறிஞர்களால் கொண்டாடப்பட்டவர். இலக்கியக் கல்வி தமிழில் வளம் பெற அவர் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

☯

4

கல்வியாளர் இயக்கத்தில் ந. சுப்புரெட்டியாரின் ஆளுமை

-இரா. சம்பத்

பன்முகச் செயற்பாடுகள் கொண்டிருந்த முனைவர் ந. சுப்புரெட்டியார் என்னும் கல்விப்புல ஆளுமையைப் புரிந்துகொள்ள அவர்கள் இயற்றிய நூல்களும் கட்டுரைகளும் செயற்பாடுகளும் பெருந்துணை புரிவதாகும். சுப்புரெட்டியார் கிட்டத்தட்ட ஐம்பதாண்டு காலமாகக் கல்வி உலகில் தனது ஆளுமையைச் செலுத்தி வந்தவர். அவரின் கல்விப் புல ஆளுமையை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

கல்விப் படிப்பும் பணியும்

சுப்புரெட்டியார் அறிவியல் துறையில் இளங்கலைப் பட்டமும் ஆசிரியப் பயிற்சியில் எல்.டி. பட்டமும் பெற்றவர். பின்பு வித்துவான் பட்டமும் பெற்றார். இதனைத் தொடர்ந்து தமிழ் இலக்கியத்தில் இளங்கலைப்பட்டமும் முதுகலைப் பட்டமும் பெற்றார். நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வாரின் தத்துவத்தை ஆய்வு செய்து டாக்டர் பட்டமும் (பி.எச்.டி) பெற்றார். இவ்வாறு தன் வாழ்நாள் முழுவதும் தன் படிப்பின் மூலம் தகுதிப்படுத்திக் கொண்டுள்ளார்.

ந. சுப்புரெட்டியார் அவர்கள் துறையூர் உயர்நிலைப்பள்ளி முதல் தலைமையாசிரியராக தனது கல்வி வாழ்வைத் தொடங்கினார். இப்பள்ளி வாழ்க்கை 1941ஆம் ஆண்டு முதல் 1940ஆம் ஆண்டு முடிய ஒன்பதாண்டுகள் தொடர்ந்தது. அதன் பின்பு காரைக்குடி அழகப்பா ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் முதல் தமிழ்ப் பேராசிரியராக 1950ஆம் ஆண்டு முதல் 1960ஆம் ஆண்டு வரை பத்தாண்டுகளாக பணியாற்றினார்.

கல்வித்துறையில் பாடத்திட்டமும் பாடம் கற்பிக்கும் முறையின் தரம் உயர வேண்டும் என்பது சுப்புரெட்டியாரின் விருப்பமாக இருந்தது. மேலும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பாடங்களைக் கற்பிக்கும் ஆங்கில மொழியை மாற்றித் தமிழ் மொழியில் கற்பிக்க வேண்டும் என்பதும் சுப்புரெட்டியாரின் விருப்பமாக இருந்தது.

எனவே ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் பாடங்கள் தமிழ் மொழியில் பயிற்றுவிக்க வேண்டியது மிகவும் அவசியம். இதற்குத் தேவையான நூல்கள் தமிழ்மொழியில் இல்லையே என்று சிலர் கூறுகின்றார்கள். இந்தக் குறைபாட்டை நீக்கும் முகமாக ந. சுப்புரெட்டியார் தமிழ்ப் பயிற்றும் முறை என்னும் பெரிய அளவிலான நூலைத் தமிழ் மொழியில் எழுதி 1957ஆம் ஆண்டு வெளியிட்டார்.

அழகப்பா ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் மிகச் சிறப்பாகப் பணியாற்றிய ந. சுப்புரெட்டியாரின் திறமை அவர் எழுதிய கட்டுரைகள், இயற்றிய நூல்களை மூலம் கல்வி உலகிற்குத் தெரியவந்தது. இதனைத் தொடர்ந்து ந. சுப்புரெட்டியார் அவர்கள் திருவேங்கடவன் பல்கலைக்கழக முதல் தமிழ்த்துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் 1960ஆம் ஆண்டு தேர்வு செய்யப்பட்டார். இப்பல்கலைக்கழகத்தில் 1960ஆம் ஆண்டு முதல் 1977ஆம் ஆண்டு முடிய பதினேழு ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றினார்.

இக்காலகட்டத்தில் முத்தொள்ளாயிர விளக்கம், திருவேங்கடமும் இலக்கியமும் காலமும் கவிஞர்களும் ஆகிய இலக்கிய நூல்களையும் மலைநாட்டுத் திருப்பதிகள், வடநாட்டுத் திருப்பதிகள். முத்நெறித் போன்ற சமயம் சார்ந்த நூல்களையும் அகத்திணைக் கொள்கைகள். புதுக்கவிதை, போக்கும் நோக்கும், பாரதியின் கண்ணன் பாட்டுத்திறன் போன்ற திறனாய்வு நூல்களையும் கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வாரின் தத்துவம் போன்ற திருவேங்கடப் பல்கலைக்கழகம் தமிழ்த்துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் பணியாற்றி ஓய்வு பெற்ற பின்னர் 1978 பிப்ரவரி முதல் 1979ஆம் ஆண்டு ஜூன் முடிய பதினைந்து மாதங்கள் களஞ்சியத் தலைமைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றியவர்.

சுப்புரெட்டியார் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியராக வாழ்வைத் தொடங்கிப் படிப்படியாக தமிழ்த்துறைத் தலைவராக விளங்கிப் பின்பு கலைக்களஞ்சியத் தலைமைப் பேராசிரியராக உயர்ந்தவர். அரை நூற்றாண்டுக் காலமாகக் கல்வி உலகில் சிறந்து நின்றவர். பல துறைப் பயிற்சி மிக்கவர்.

இயற்றிய நூல்கள்

அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் 1950ஆம் ஆண்டு முதல் 1960ஆம் ஆண்டு முடிய பத்தாண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகப்

பணியாற்றினார். இக்காலகட்டத்தில் தமிழ்ப் பயிற்று முறை சார்ந்த பல நூல்களை இயற்றியுள்ளார்.

தமிழ் பயிற்றும் முறை, கவிதை பயிற்றும் முறை அறிவியல் பயிற்றும் முறை, கல்வி உளவியல், யுனெஸ்கோ, அறிவியல் பயிற்றும் மூலமுதல் நூல் ஆகிய ஐந்து நூல்களை இயற்றியுள்ளார். இந் நூல்களுள் தமிழ் பயிற்று முறை என்னும் நூல் ஓர் அரிய நூலாகும். இந்நூல் பற்றி நூலாசிரியர் கூறும் பின்வரும் கருத்து. நூலின் இன்றியமைமையை விளக்கும்.

நீண்ட நாட்களாகவே நவீன முறையில் தமிழ் கற்பிப்பதைப் பற்றி ஒரு நூல் எழுதி வெளியிட எண்ணியிருந்தேன். ஒன்பது ஆண்டுகள் உயர்நிலைப்பள்ளியில் தலைமையாசிரியனாக இருந்த பொழுது நேரில் கவனித்த பல்வேறு அநுபவங்களைக் கொண்டும் எட்டு ஆண்டுகள் பி.டி. மாணாக்கர்களுக்குத் தமிழ் கற்பிப்பதைப் பற்றிப் போதித்துவந்த அனுபவத்தைக் கொண்டும் இந்நூல் எழுதப் பெற்றுள்ளது. எழுதி முடிக்க இரண்டாண்டுகள் ஆயின. இந்நூலில் குறிப்பிட்டுள்ள பலகருத்துக்களையும் நன்கு சிந்தித்து நடைமுறையில் செயலுக்குக் கொண்டு வந்தால் மாணாக்கர்களிடம் தமிழ் மொழி அறிவு நன்முறையில் அமைவது உறுதி என்று எண்ணுகின்றேன்.

இலக்கியம்

திருவேங்கடம் பல்கலைக்கழகம் தமிழ்த்துறையில் பேராசிரியராகவும் தமிழ்த்துறைத் தலைவராகவும் பதினேழு ஆண்டுகள் பணியாற்றினார். அக்காலகட்டத்தில் கவிஞர் உள்ளம் காலமும் கவிஞர்களும், காதல் ஓவியங்கள் அறிவுக்கு விருந்து. முத்தொள்ளாயிர விளக்கம், பரணிப்பொழிவுகள், கம்பனில் மக்கள் குரல், திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும், மேகானி, குரஜாட அப்பாராவ் ஆகிய இருபது நூல்களை இயற்றியுள்ளார்.

சமயம் என்னும் பிரிவில் மலைநாட்டுத் திருப்பதிகள் தொண்டை நாட்டுத் திருப்பதிகள், பாண்டி நாட்டுத் திருப்பதிகள், வடநாட்டுத் திருப்பதிகள், சோழநாட்டுத் திருப்பதிகள் முதல் தொகுதி, இரண்டாம் தொகுதி, சில நோக்கில் நாலாயிரம், முத்தி நெறி ஆகிய எட்டு நூல்கள் இயற்றியுள்ளார்.

அறிவியல்

ந. சுப்புரெட்டியார் அறிவியல் துறையில் இளங்கலைப் பட்டம் பெற்றவர் என்பதால் அறிவியல் துறையில் பதின்மூன்று நூல்கள் இயற்றியுள்ளார். மானிட உடல், அணுவின் ஆக்கம், ராக்கெட்டுகள், அம்புலிப் பயணம், அதிசயமின்னணு ஆகியன குறிப்பிடத்தக்க அறிவியல் நூல்களாகும்.

திறனாய்வும் ஆராய்ச்சியும்

Criticism என்றும் ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான மொழி பெயர்ப்புத் தமிழ்ச் சொல்திறனாய்வு என்பதாகும் Research என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொல்லாக வழங்கப்படுவது ஆராய்ச்சி என்பதாகும். இந்த இரண்டு சொற்களும் வெவ்வேறு பொருண்மையை உடையது. ஆனால் தமிழ்ச் சூழலில் ஒரே பொருண்மையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. திறனாய்வு முறை என்பது மேலைநாட்டுச் சிந்தனை மரபில் உருவான ஒன்று என்பதே இதற்குக் காரணம் ஆகும். திறனாய்வு மதிப்பீட்டுப் பண்பை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆராய்ச்சி மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டதன்று இந்த நுட்பமான கருத்தினை பேரா. ந. சுப்புரெட்டியார் புரிந்து கொண்டு தாம் இயற்றிய நூல்களை திறனாய்வு முறைக்கு உட்பட்ட நூல்கள் ஒருவகையாகவும் ஆராய்ச்சி முறைக்கு உட்பட்ட நூல்கள் மற்றொரு வகையாகவும் பாகுபடுத்தியிருக்கின்றார். பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் இன்றைய தமிழ் ஆராய்ச்சி சூழலில் கவனிக்கப்படவேண்டிய ஒன்று.

ஆராய்ச்சி முறை

கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வாரின் தத்துவம், கலையும் அறிவியலும், Collected Papers of Prof. N. Subbu Reddiar ஆகிய நான்கு நூல்களும் ஆராய்ச்சி முறையில் எழுதப்பட்டதாகும்.

திறனாய்வு முறை மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்ட ஒன்றாகும். இம்முறையில் கவிதையனுபவமும் தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, கம்பன் படைத்த சிறுபாத்திரங்கள், அகத்திணைக் கொள்கைகள், புதுக்கவிதை நோக்கும் போக்கும். பாரதியின் கண்ணன் பாட்டுத்திறன் ஆகிய ஆறு நூல்களில் ந. சுப்புரெட்டியார் இயற்றியிருக்கின்றார். இவற்றுள் திணை

இலக்கியத்தைப் பற்றி அமைந்துள்ள அகத்திணைக் கொள்கைகள் என்னும் நூலைப்பற்றியும் புதுக்கவிதையைப் பற்றிய புதுக்கவிதை நோக்கும் போக்கும் என்னும் திறனாய்வு நூலைப் பற்றியும் இங்கு காணலாம்.

அகத்திணைக் கொள்கைகள்

சங்க இலக்கியம் திணைப்பாகுபாடுகளின் மேல் எழுந்தனவாக இருத்தலால், இவ்விலக்கியத்தை திணை இலக்கியம் அல்லது நில இலக்கியம் என்றும் அழைக்கலாம். சங்க இலக்கிய காலம் கி.மு. 250 முதல் கி.பி. 200 வரையில் என கருதப்படுகிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகை நிலங்களாக மக்களின் வாழ்விடங்கள் பகுக்கப்பட்டிருந்தன. அகம், புறம் பிரிப்பு வாழ்க்கை நிலையில் காணப்பட்டது. ஐவகை நிலஞ்சார்ந்த அன்பின் ஐந்திணையோடு கைக்கிளை பெருந்திணை சேர எழுதிணைகளாக அகமும் அவற்றிக்கு இயைபாக ஏழு புறத்திணைகளும் கூறுப்பட்டன.

அந்தந்த மக்களின் நிலச் சூழல்களுக்கேற்ற தொழிலும் அரசியலமைப்பும் பொருளாதார வளமும் ஆண் பெண் இயல்பும் காதலும் போரும் கலையார்வமும் கல்வியும் தத்துவங்களும் சங்கக் கவிஞர்களால் திறம்படப் பாடப்பெற்றன.

அகப்பாடல்

உலகம் மொழிகளனைத்திலுமுள்ள இலக்கியங்களிலெல்லாம் காதல் என்னும் பாடுபொருள் இன்றியமையாது இருப்பினும் தமிழ்மொழியில் அது திணை, கூற்று, துறை, கைகோள் என்ற வரையறையில் ஒரு நெறிப்பட்டு அமைந்திருத்தல் தனித்தன்மை உடையதாகும். காதல் பற்றிய இலக்கியம் அகப்பொருள் என்ற பெயரைப் பெற்றது. அகப்பொருள் என்றால் தமிழ், தமிழ் என்றால் அகப்பொருள் என்று பேசும் அளவுக்குச் சிறப்பினையும் பெற்றுத் திகழ்வது தமிழ்மொழி.

சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரை அகப் பொருள் கூறுகளமைந்த இலக்கியம் பெருகி இருந்த இத்தகைய இலக்கியத்திற்கு இலக்கணமும் அமைந்து அதனைக் கட்டுக்கோப்பாக வைத்திருத்தலும் அந்த இலக்கிய வகைமையின் பெருமையை மேலும் உயர்த்துகிறது. எனவே இத்தகு பொதுமை வாய்ந்த அகஇலக்கியத்தின் கொள்கைகள் அனைத்தும் அடங்கிய ஒரு

தனிநூல் முழு நூலாக எழுதவேண்டும் என்ற நீண்ட நாள் விருப்பம் ந. சுப்புரெட்டியாருக்கு இருந்தது. இவ்விருப்பத்தின் விளைவாக இயற்றப்பட்ட நூலே அகத்திணைக் கொள்கைகள் என்பதாகும். இந்நூல் இயற்றியதன் பின்னணியை ந. சுப்புரெட்டியார் நூல் முகத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

அக இலக்கியத்தின் கொள்கைகள் எல்லாம் அடங்கிய ஒரு தனி நூல் முழு நூலாக எழுதவேண்டுமென்ற என் நீண்ட நாள் அவா திருப்பதியில் நிறைவேறியது. பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டலாகிய ஏழுமலையான் எழுந்தருளியிருக்கும் திருத்தலத்தில் அவன் திருவடிவாரத்தில் நிறுவப் பெற்றுள்ள பல்கலைக்கழகத்தில் அவனருளால் பணியாற்றிய போது அவனருளாலேயே தமிழ்த் துறையை நிறுவும் பேறும் அத்துறையின் தலைமையை ஏற்று அதனைச் செவ்வனே நடத்தும் பேறும் பெற்றபோது தமிழ் முதுகலை பயிலும் மாணவர்களுக்கு அகவிலக்கியம் கற்பிக்கும் பொறுப்பினை யானே வலிந்து மேற்கொண்டேன். கிட்டத்தட்டப் பத்தாண்டுகள் இப்பணி தொடர்ந்து நடைபெற்றது. வாரந்தோறும் நடைபெற்ற கருத்தரங்குகளில் இந்த இலக்கியத்தின் கிட்டதட்ட எல்லாப் பகுதிகளும் மாணாக்கர்கள், ஆசிரியர்கள் இவர்களுடன் கலந்து ஆயப்பெற்றன. ஆய்வில் பிறந்தது, ஒளியும் தோன்றியது. ஓரளவு தெளிவும் ஏற்பட்டது. இந்த முயற்சியின் விளைவாக எழுந்ததே "அகத்திணைக் கொள்கைகள்" என்ற இந்நூல்.

சங்கக் கவிதைகள் இயற்கை வழி அமைந்த இயல்பு நெறி மாறாத படைப்புகள். கருத்தை தெளிவும் சுவையும் படப் பாடுதல், எதுகை மோனை அலங்காரங்களைத் தவிர்த்தல், எதையும் இயல்பு குன்றாமல் கூறுதல் என்ற பண்புகளை சங்க இலக்கியம் கொண்டிருந்தது. நிலம், பொழுது, கரு, உரி என்பவற்றின் அடியொட்டி எழுந்தவைதான் சங்க இலக்கியம் பாட்டைத் தொடங்கிய புலவன் பஞ்சபூதங்களின் சேர்க்கையினால் தோன்றிய இந்நிலவுலகத்தே என்று தான் தொடங்கினான்.

மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புவதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரு மென்றாங்
கைம்பெரும் பூதத் தியற்கை போல (புறம். 2)

என்று பஞ்ச பூதத்தின் இயற்கையை அழுத்தமாக நம்பியவன்.

வாழ்வியல் உண்மைகள் ஒருவனை ஒருவன் விளித்துக் கூறும் நீதிகளாகவே அமைந்துள்ளன. இப்படி வாழ்வதே இயற்கை என்று இயல்பு நெறிகள் பலவற்றைச் சங்கப் பாடல்கள் கூறுகின்றன. மனித நிலையாமை, வாழ்ந்து போனோர் இயல்பு, மக்கள் கடமை, அரசு நெறிகள் ஆகியன முறையே பாடப்பட்டன.

நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே யுணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரோ (புறம். 18)

என மனித வாழ்நெறி பாடப்பட்டது.

எது கொடுமை எது கூறத்தக்கது என்று சமூகம் நினைக்கிறதோ அதை மனம் நினைத்தவாறே தடையற்றும் புலப்படுத்தி விடுதல் சங்கப் புறப்பாடல் அகப்பாடல் இரண்டிலும் காணப்படுகிறது. சிந்தனைகளை ஒளிக்காது வெளியிடும் மனப்பாங்கு ஓரளவிற்கு சங்கப் புலவனுக்கு இருந்திருக்கிறது.

அகப்பாடல்

தலைவனைப் பிரிந்த தலைவி, தலைவன் வருகைக்காக தலைவி காத்திருக்கின்றாள். அப்பொழுது தலைவியின் முக வாட்டத்தைக் கண்ட தோழி தலைவியைப் பார்த்து வினவ, அதற்குப் பதில் சொல்வதாகப் பின்வரும் பாடல் அமைகிறது.

கன்றும் உண்ணாது கலத்தினும் படாது
நல்லான் தீம்பால் நிலத்துக் காங்கு
எனக்கும் ஆகாது என்னைக்கும் உதவாது (குறுந். 27)

என்று பசுவின்பால் கன்றும் உண்ணாது கலத்திலும் படாமல் நிலத்தில் வீழ்கின்றது என இயல்பான உவமையிற் கூறுவதைக் காண முடிகின்றது. முல்லை நில வாழ்க்கைச் செய்தி இங்கு வருகின்றது.

யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல் நீர் போல
அன்பு நெஞ்சம் தாம் கலந்தனவே (குறுந். 40)

ஓர் ஆணும் ஒரு பெண்ணும் ஒருவரையொருவர் கண்டனர். சிறிது நேரம் உரையாடி மகிழ்ந்திருந்தனர். தலைவன் பிரிவானோ என்ற அச்சம் தலைவிக்கு ஏற்பட்டது. தலைவியிடம் இக்குறிப்பு வேறுபாடு கண்ட தலைவன் ஆறுதல் மொழி பேசுகின்றான். இதனை விளக்குவதாக மேற்கூறிய குறுந்தொகைப் பாடல் அமைகின்றது.

புதுக்கவிதையில் நடப்பியல்

உலகவாழ்வின் எதார்த்தங்களையே புதுக்கவிதை பாடு பொருளாக்கி வருகிறது. புதிய உள்ளடக்கங்களை மரபிற்குள் இயல்பாகவும் முழுமையாகவும் பாட இயலவில்லை என்பதனால் தான் புதுக்கவிதை மரபிலிருந்து விடுபட்டது எனலாம். நடப்பியலை முழுமையாக பாட எழுந்ததே புதிய கவிதை.

என்னைச் சுற்றிலும் பயம்
இருளாய் அப்பியிருக்கிறது
என் உடைமைகள் என்னெதிரில்
எரிந்து கொண்டிருக்கின்றன
எனக்கு நேசமான தாய்மொழியும்
என் பெயருமே என் எதிரியாகி
என்னைத் துரத்துகின்றன விடாமல்

(ஆர். ராஜகோபாலன் 1986: 3)

என்ற கவிதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஓர் அச்ச நடப்பை அவலத்தோடு சித்தரிக்கிறது. எல்லாவற்றையும் இழந்து கொண்டிருக்கும் இலங்கைத் தமிழனின் சோகத்தை இது எதார்த்த மாக வெளிப்படுத்தியிருக்கிறது. நிலையாமையைக் கூறும் நிகழ்வின் விவரிப்பாக இது அமைகிறது.

தன்னைச் சிறுமைப்படுத்திப் பேசும் பெண்ணை நோக்கி உனக்கு இரக்கமில்லையா பேசாதே என்று பாடுகிறான் ஒரு புதுக் கவிஞன்.

பறவைகளைத் தாக்கும்
கற்களைப் போல உன்
நிதானமற்ற வார்த்தைகள் என்னைக்
காயப்படுத்துகின்றன (இரா. மதிவாணன் 1980: 30)

என்ற அடிகளில் வரும் உவமையும் இயல்பு மீறாத மெய்மையால் செய்திக்கு உயிர்தரும் அணிநலனாய் அமைந்திருக்கிறது.

வாழ்வியல் உண்மை

இன்னொருவன் வழி காட்டித்தான் நடந்தாக வேண்டும் என்ற கட்டாயம் யாருக்கும் இல்லை. தன்னைத் தானே உணர்ந்து ஒருவழி படைத்துக் கொள்ளும் ஆற்றல் மனிதனுக்கு உண்டு. ஒரு வகையில் மனித நடையும் குழந்தை நடைபோல் தான்.

காலிருக்கும்
பிள்ளையெல்லாம்
நடந்து தீரும்
நடைவண்டிக்காக
நடை
காத்திருக்கா (கல்யாண்ஜி 1981: 48)

என்ற கவிதையில் வாழ்வியல் உண்மை கூறும் மெய்ம்மையாக எழுந்திருக்கிறது. குழந்தைக்கு மட்டுமில்லாமல் மனிதர் அனைவருக்கும் கூறப்பட்ட நடப்பியல் மெய்ம்மை இது.

நவயுகக் காதல்

எல்லோராலும் அதிகம் பேசப்பட்ட புதுக்கவிதைகளுள் இக் கவிதையும் ஒன்று.

உனக்கும் எனக்கும்
ஒரே ஊர்
வாசுதேவ நல்லூர்
நீயும் நானும்
ஒரே மதம்
திருநெல்வேலிச்
சைவப்பிள்ளைமார்
வகுப்புங் கூட
உன்றன் தந்தையும்
என்றன் தந்தையும்
சொந்தக் காரர்கள்
மைத்துனன் மார்கள்
எனவே
செம்புலப்பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே (மீரா 1980: 48)

இந்தக் கவிதை நம் சாதிய சமூகத்தைப் பற்றிய ஆய்வாக இருக்கிறது. சொத்துரிமை பற்றியும் இன்றைய இளைய தலை முறையைப் பற்றியத் திறனாய்வாகவும் இருக்கிறது. தனித்த திறனாய்வாக இல்லாமல் இந்தக் கூறுகள் வாழ்க்கையோடு பொருத்திக் காட்டுவதால் இது கவிதையாகின்றது. "காதல்" போன்ற தனிமனித உணர்ச்சியில் கூட இன்றைய சமூகப் பொருளாதார நிலைமைகள் தலையிட்டுத் தடம் மாறிவிடுகின்றன. இந்தக் கவிதை மாமன் மகளைச் சொத்துக்காக மணந்து கொள்ளும் இன்றைய இளைஞர்களின் மனநிலையைக் காட்டுவதன் மூலம் நம் சாதிய அமைப்பை திருமண முறையை உணர்வுகளைப் பொருளாதாரக் காரணங்களுக்காகச் சாகடித்து விடும் இளைஞர்களைத் தோலுரித்துக் காட்டுகின்றது.

தனிமனிதத்துவ அடிப்படையில் இன்றைய மனிதனின் காதல், இழப்பு, இரக்கம், சீற்றம், விரக்தி, இயலாமை குழப்பம், மலர்ச்சி போன்ற பல்வேறு உணர்வுகளையும் இன்றைய புதுக்கவிதைகள் தம் கவிதைகளில் வெளிப்படுத்துவதைக் காணலாம். இங்ஙனம் தனிமனிதத்துவத்திற்குக் கைகொடுத்து உதவியவர்கள் எஸ்ரா பவுண்டு, டி.எஸ்.எலியட் ஆகியோர் இவர்களையே புதுக்கவிஞர்கள் வழிகாட்டிகளாக ஏற்கின்றனர் என்று வானமாமலை கூறும் கருத்தினை சுப்புரெட்டியார் ஏற்கவில்லை.

இக்கருத்து முற்றிலும் ஒப்புக்கொள்ள இயலாததொன்று தனிமனிதத்துவ உணர்வுகள் இன்றி வாழ்க்கை இல்லை. அவநம்பிக்கைதான் நம்பிக்கைக்கு மனிதனை நடத்திச் செல்கிறது. ஆற்றாமையிலிருந்தான் புதிய ஆற்றல் ஊற்றுகள் தோன்றுகின்றன. எனவே தனிமனிதத்துவ அடிப்படையில் வெளிப்படுத்தப் பெறும் இன்றைய உணர்வு ஒவ்வாதது என்று நாம் புறக்கணிக்க இயலாது. எல்லாவற்றையும் சமதர்ம மெய்மையியலின் கீழ்க் கொண்டு வருவ தென்பது இயலாத ஒன்று.

அகத்திணைக் கொள்கைகள் என்னும் நூல் அகத்திணைத் தோற்றம், களவியல், களவியல் மரபுகள், கற்பியல், கற்பியல் மரபுகள். கைக்கிளை, பெருந்திணை அகத்திணை மாந்தர், அகப்பாடல் நோக்கியல், அகத்திணைச் சிறப்பியல் ஆகிய உட்தலைப்புக்களைக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

அகத்திணைப் பாடல்களின் பொதுப்பண்புகள்

அகத்திணை இலக்கியத்தில் இடம் பெறும் மாந்தர்கள் பற்றிய குறிப்பினைத் தொல்காப்பியர்,

மக்கள் நுதலிய அகனைந்திணையும்
சுட்டி ஒருவர்ப் பெயர் கொளப் பெறாஅர்

என்ற நூற்பாவால் தருவர். இதுபற்றி ந. சுப்புரெட்டியார் கூறுவது,

1. பல்வேறு வாழ்வு நிலையுடைய மக்கள் குறிப்பிட்ட ஒரு காதல் நிலையில் எவ்வெவ்வாறெல்லாம் நினைப்பர், சொல்லுவர், செய்வர் என்ற உணர்வுத் திறங்களையே அகத்திணை சுட்டி உரைக் கின்றது என்பது உணர்ந்து தெளிய வேண்டிய ஒன்றாகும்.

2. அகப்பாடல்களில் முதல், கரு, உரி என்ற மூன்று பொருள் களும் வரும் என்பதை நாம் அறிவோம்.

புதுக்கவிதையைப் பற்றியப் பார்வை

புதுக்கவிதை யாப்புக்கும் உட்பட்டது. இன்று வெளி வந்திருக்கும் நூல்களிலும், தொகுப்புகளிலும், நாள், வார, பிறை, மாத இதழ்களிலும், சிறப்பு மலர்களிலும் புகழ் பெற்ற புதுக் கவிஞர்களால் எழுதப்பெற்ற கவிதைகளை உற்றுநோக்கி ஆய்ந்தால் அவை ஏதோ ஒருவகை யாப்பில் அமைந்திருப்பதைக் கண்டு மகிழலாம். புதுக்கவிஞர்கட்கு யாப்பே தெரியாது என்று மரபுக் கவிஞர்களும் மரபுக் கவிஞர்கட்கு யாப்பு மட்டிலும் தான் தெரியும் என்று புதுக்கவிஞர்களும் கேலியாகக் கிண்டல் செய்து வருவது மேம்போக்கான பார்வை என்றுதான் கருத வேண்டும். தமிழ் கவிஞர் களின் பிடிவாத இயல்பும், புதுக்கவிஞர்களின் புரட்சி நோக்கமும் பொருள் பொதிந்தனவாகத் தோன்றுவதில்லை. இந்த நோக்கில் பிடிவாதத்திற்கும் புரட்சிக்கும் இடையில் சிக்கிக் கொண்டு தவிப்பது தமிழ்க் கவிதைதான். கோப்பைத் தளர்த்துகின்றது. இரண்டும் கவிதை இழப்பையே விளைவிக்கின்றன.

மரபுக் கவிஞர்களின் படைப்புகளில் பெரும்பாலானவை செய்யுள் அல்லது பாடலைச் சார்ந்தவை. புதுக்கவிஞர்களின் படைப்புகளில் பல கவிதையைச் சார்ந்தவை. ஒரு மொழியோ ஒரு காலமோ இலக்கியச் சிறப்பு மிக்கதாக ஆக வேண்டும் என்றதால் அந்த மொழியிலோ காலத்திலோ தான் நிறையத் தோன்ற வேண்டும்.

செய்யுள், பாடல், கவிதை என்ற பாவகை மூன்றிலும் தலை சிறந்தது கவிதை தான். இன்றைய நிலையின் வறண்ட செய்யுட்களும், சிறிதளவு பசுமை நிறைந்த பாடல்களும், கட்டுக் குலைந்த கவிதைகளுமே மிகுதியாக வெளிவருகின்றன. கவிதையாகத் தப்பிப் பிழைப்பவை பாடல்களே. கவிதை வளமே இன்றைய இலக்கியச் சிறப்புக்கு மிகுதியும் வேண்டப்பெறுவது.

மரபுக் கவிஞர்கள் புதுக்கவிஞர்கள் என்ற இரு சாராரும் உருவம், உள்ளடக்கம் என்னும் இரண்டிலும் சமமான கவனம் செலுத்துவதில்லை. மரபுக் கவிஞரின் கவனம் உருவத்தையே அதிகமாகச் சார்ந்து நிற்கின்றது. புதுக்கவிஞரின் கவனம் உள்ளடக்கத்தை அதிகமாகச் சார்ந்து நிற்கின்றது. மரபுக் கவிஞரின் கவனம் உள்ளடக்கத்தை நோக்கிச் செல்லாத காரணத்தால் உள்ளடக்கத்தில் புதுமையும் இறுக்கமும் இல்லாமல் வறட்சியே இவர்கள் படைப்பில் தென்படுகின்றது. புதுக்கவிஞரின் கவனம் உருவத்தை அவாவி நிற்காத காரணத்தால், இவர்கள் படைப்பின் உருவத்தில் சுட்டுக் கோப்பே இல்லாமல் தளர்ச்சியே காணப் பெறுகின்றது. இக்குறைகள் நீங்க வேண்டுமாயின் இரு சாராரும் உருவம், உள்ளடக்கம் ஆகிய இரண்டிலும் சமமான கவனத்தைச் செலுத்துதல் வேண்டும். மரபுக் கவிஞர் உருவத்தைக் கவனிக்கின்ற அளவு உள்ளடக்கத்தையும் புதுக்கவிஞர் உள்ளடக்கத்தைக் கவனிக்கின்ற அளவு உருவத்தையும் கவனிக்க வேண்டும் என்று சுப்புரெட்டியார் இக்காலத் தமிழ்க் கவிதை மரபு பற்றிக் குறிப்பிடுவது அவரது நுண்மான் நுழைபுலத்தைக் காட்டுவதாக அமைகிறது. பேரா. ந. சுப்புரெட்டியார் மரபின் வேரில் கால் ஊன்றிக் கொண்டுப் புதுமையை வரவேற்பவராக இருக்கின்றார். எனவே சங்கக் கவிதை மரபைப் போற்றும் ரெட்டியார் மரபிலிருந்து விடுபட்ட புதுக்கவிதையையும் ஏற்றுக்கொள்கிறார். இருபதாம் நூற்றாண்டு கல்வியாளர் இயக்கத்தில் ந. சுப்புரெட்டியாரின் ஆளுமை வியக்கத்தக்கதாக இருக்கிறது.

☯

5

ந. சுப்புரெட்டியாரின் அருட்பா ஆய்வுத்தடம்

-இரா. குறிஞ்சிவேந்தன்

இலக்கியத்தை அழகியல் அடிப்படையில் அணுகிய இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே, அதைத் திறனாய்வு நோக்கிலும் விவரிக்கும் பார்வையை அறிமுகப்படுத்திய தமிழ் ஆளுமைகளும் உண்டு. அவர்களில் பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் பங்களிப்பு தனித்துவத்துடன் மிளிர்ந்திடும் ஆற்றல் கொண்டது. பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் இலக்கியத்தேடலும், அதில் தோய்ந்து வெளிப்பட்ட படைப்புகளும் தமிழில் நிலைத்த இடத்தைப் பெற்றுள்ளன.

சங்க இலக்கியம் தொடங்கி, திருக்குறள், பக்தி இலக்கியப் பனுவல்கள், சிற்றிலக்கியங்கள், அகராதிகள் என நீளும் அவரது ஆய்வுலகம் கவிஞர் வாலியின் பாண்டவர்பூமி வரை இடையறாது சுழன்ற வரலாற்றுடையது- பரந்து விரிந்தியங்கும் அவரின் பல்திற ஆய்வுகளில், இராமலிங்க அடிகள் குறித்த நூலாராய்ச்சி, தமிழ்த் திறனாய்வுலகில் புதிய உயரங்களைத் தொட்டுக் காட்டியுள்ளன. அருட்பிரகாச வள்ளலார் என்று போற்றப்படும் இராமலிங்க அடிகளின் 'திருவருட்பா' திருமுறைகளில் வேர்களாகப் பரவிய பேராசிரியரின் திறனாய்வுக்களம் நுட்பமான செய்திகள் பலவற்றைப் புறவுலகின் பார்வைக்குத் தந்துள்ளது.

தேடலின் பின்புலம்

ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் இச்சமூகத்தில் வாழ்ந்த பெருந்துறவியும், சீர்திருத்தவாதியுமான அருட்பிரகாச வள்ளலார் பற்றிய பேராசிரியர் சுப்புரெட்டியாரின் ஆய்வு, பத்தி மேலீட்டின் தாக்கமோ, சார்புத்தன்மையோ அற்ற தடத்தில் பயணித் துள்ளதற்கு இந்நூல் சாட்சியமாக உள்ளது.

இராமலிங்க அடிகளாரின் சன்மார்க்க இயக்கம் குறித்து வெவ்வேறு வினாக்களை எழுப்பி, அத்தேடலில் பல புதிய தரிசனங்களைப் பேராசிரியரின் நூல் மீட்டெடுத்துத் தந்துள்ளது. திருவருட்பா ஆய்வின் வழி வள்ளலாரின் கோட்பாடுகளையும் ஆன்மிகத்தையும் உணர்ந்திட்ட பேராசிரியர், அந்த அனுபவத்தை, "சாதிப்பிணக்கு, சமூக வேற்றுமைகளைக் களைந்து புதிய பாதையைக் காட்டவல்லவை அருட்பா பாடல்கள். மனநிறைவு, அமைதி ஆகிய வற்றைத் தரும் அனுபவமாகவும் விரிந்திடும் பாடல்களால் எனக்கு நேர்ந்த உள்மனமாற்றத்தை இச்சமூகமும் பெறவேண்டும்" என்று குறிப்பிடுகின்றார்.

இராமலிங்க அடிகளாரின் பாடல்கள், உரைநடைச் செய்திகள் உள்ளிட்ட அனைத்து எழுத்துக்களும் அவருடைய சொந்த அனுபவங்களின் வெளிப்பாடே. இறைவனிடம் நேரடியாகப் பேசும் வகையிலான அவரின் அனுபவங்கள் உருக்கம் கொண்ட பாடல்களாக வடிவெடுத்தன. அந்த அனுபவங்களைத் துல்லியமான சான்று களோடு சுப்புரெட்டியாரின் நூல் அடையாளப் படுத்துகின்றது. மேலும் தமிழிலக்கியம், சமயவுலகம் ஆகிய இரண்டிலும் வள்ளலார் செய்த பெரும் மாற்றங்களை மிக விரிவாக அவர் வெளிச்சமிட்டுக் காட்டுவது "இராமலிங்க அடிகள்" நூலின் தனித்துவமாக இருக் கின்றது.

வினாக்களின் தளம்

இராமலிங்க அடிகள் பற்றிய நூலை முற்றிலும் மாறுபட்ட கோணத்தில் சுப்புரெட்டியார் உருவாக்கம் செய்துள்ளார். அடிகளாரைப் பற்றிய அடுக்கடுக்காகத் தோன்றிய வினாக்களையும் மறைக்காமல் பதிவு செய்து அதற்கான விடைகளைத் தேடிப் பதிவு செய்யும் முறைமையை இந்நூலில் அவர் கையாண்டுள்ளார். அவ்வினாக்கள் சுப்புரெட்டியாரிடமிருந்து பிறந்தவையாக மட்டு மின்றி, எல்லாக் காலத்திலும் கேட்கப்படும் கேள்விகளாகவும், அதற்கான விடைகளைத் தன் சிந்தனைத்திறனாலேயே கண்டெடுத்து மனிதச் சமூகத்திற்கு அவர் தந்துச் சென்றுள்ளார். குறிப்பாக, இராமலிங்க சுவாமிகள் யார்? அவருடைய கொள்கைகள் என்பது அடிப்படையில் என்னென்ன? அக்கோட்பாடுகளை நடைமுறைப்படுத்த அவர் மேற்கொண்ட முயற்சிகள் யாவை? அவற்றில் முழுமையாகச் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் யாவை? திருஅருட்பாவின் ஒவ்வொரு

திருமுறையிலும் அவர் உட்பொதிந்து வைத்துள்ள மூலச் செய்திகள் என்னென்ன?

இத்தகைய வினாக்களை உள்ளீடாகக் கொண்டு அதன் மேற்தளத்தில், தன்னுடைய ஆய்வை சுப்புரெட்டியார் கட்டுமானம் செய்துள்ளார். இவ்வினாத் தேடலுக்கான விடைகளையும் சான்று களோடுக் கண்டெடுத்து அவற்றை ஏறத்தாழ 340 பக்கங்களுக்கு மேல் விரிந்திருக்கும் நூலில் பொருத்திக் காட்டியுள்ளார். திறனாய்வுக் கலையில் புதியதொரு உத்தியாக ந. சுப்புரெட்டியாரின் இப்படைப் பாக்கம் அமைந்துள்ளதென்றால் அது மிகையன்று.

பரம்பொருளும் அடிகளும்

வள்ளல் பெருமானாரின் பக்தியனுபவமும் அதன் வெளிப்பாடான அருட்பாக்களும் இறைவனிடம் நேரடியாகப் பேசும் அனுபவங்களாக அமைந்திருக்கின்றன. அவருடைய பக்திப் பெருக்கு விண்ணப்பங்களாக எல்லையில்லாப் பரம்பொருளிடத்திலே அடிகளால் வைக்கப்பட்டுள்ளது. அவற்றை 1. சிறு விண்ணப்பம், 2. பெரு விண்ணப்பம், 3. ஞான விண்ணப்பம், 4. சங்க விண்ணப்பம் என நான்கு விண்ணப்பங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன.

தன்னுடைய ஒவ்வொரு அசைவையும் மறைப்பின்றி நேரடியாக இறைவனிடம் பதிவு செய்வதாக வள்ளலாரின் விண்ணப்பப் பாடல்கள் தோற்றமளிக்கின்றன. மருதூரில் பிறந்து, பொன்னேரிக்குக் குடிபெயர்ந்து மீண்டும் சென்னைக்கு வந்து வாழும் நாட்களை அவர் குறிப்பிடுகின்றார். சென்னைப் பட்டினத்தில்தான் வள்ளலாரின் கோட்பாடுகள், சிந்தனைகள் வெளியுலகம் அறியப்பெறுகின்றன. ஆனால் அச்சென்னைப்பட்டினத்தை விட்டு வெளியேற அவர் முடிவெடுத்து, அதை இறைவனிடம் பதிவு செய்கின்றார்.

"தேட்டிலே மிகுந்த சென்னையில் இருந்தால் 'சிறுகுறும் என்றுளம் பயந்தே / நாட்டிலே சிறிய ஊர்ப் புறங்களிலே / நண்ணினேன் ஊர்ப்புறம் அடுத்த / காட்டிலே பருக்கைக் கல்லிலே புன்செய்க் / களத்திலே திரிந்துற்ற இளைப்பை / ஏட்டிலே எழுத முடியுமோ இவைகள் / எந்தைநீ அறிந்தது தானே" என்று பிள்ளைப் பெருவிண்ணப்பத்தில் பாடி வைத்திருப்பதை சுப்புரெட்டியார் எடுத்துக் காட்டுகின்றார். சென்னைப்பட்டினம் தொடங்கி வடலூர் மற்றும் மேட்டுக்குப்பம் வரையிலான அவரின் வாழ்வியல் பணிகளை எழுசீர்விருத்தப்பாவில் ஒட்டுமொத்தமாக உள்ளடக்கிக் குறிப்பிட்டு

விடுகின்றது இப்பாடல். சுத்த சமரச சன்மார்க்கக் கோட்பாட்டை அடைவதற்குத் தடையாகச் சென்னை வாழ்க்கை அமைந்துவிடும் என்று வள்ளலார் கருதியதாக சுப்புரெட்டியார் குறிப்பு தந்துச் செல்கின்றார்.

மக்களிடையே காட்சி அளித்துக் கொண்டிருந்த காலம் முழுவதும் 'இறைமை' பற்றிய துல்லியமானப் புரிதலையும் தெளிவினையும் விளக்கும் பணியினை வள்ளலார் தொடர்ந்து மேற்கொண்டிருந்தார். இதை நுட்பமாக சுப்புரெட்டியார் தொட்டுக் காட்டியுள்ளார். அம்பலத்தாடும் இறைவனை நெஞ்சகத்தில் பூரணமாக நிறைத்தால் நினைத்த அனைத்துச் செயல்களும் ஈடேறும் என்று குறிப்பிடும் அடிகளார், அது தன் மீது ஆணை! என்று சத்தியம் செய்கின்றார்.

"எல்லாம் செயல்கூடும் என்ஆணை அம்பலத்தே
எல்லாம்வல் லான்தனையே ஏத்து"

என்று குறள்வெண்பாவாக என்றிதைப் பாடியுள்ளார். இக்குறள் வெண்பா அடிகளின் வாயில் பிறந்தது முதல் இன்றுவரை சன்மார்க்கிகளின் மந்திரமொழியாக இருந்து வருகின்றதென சுப்புரெட்டியார் குறிப்பிடுகின்றார். (ப. 20) சன்மார்க்கிகளின் இச்செயலுக்கு எடுத்துக்காட்டாக,

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப

என்னும் தொல்காப்பியச் செய்யுளியல் நூற்பாவைக் கொண்டு வந்து வள்ளலாரின் ஆணையில் பொருத்திடும் அற்புதத்தை நூலில் செய்துள்ளார். இவ்வாறு ஆணையிட்டுக் கருத்துரைத்த ஆன்மிக ஆளுமைகள், திருஞானசம்பந்தரும் இராமலிங்க அடிகளாரும் மட்டுமே என்பதையும் பதிவு செய்துள்ளார். எல்லையில்லாப் பரம்பொருள் மற்றும் மனிதச் சமூகம் என்னும் இருமுனைகளின் இடையே வள்ளலாரின் பாடல்கள் இணைப்பாகச் செயல்படுவதை வாய்ப்பு நேரும் தருணங்களில் எல்லாம் சுப்புரெட்டியார் சுட்டி யிருப்பதை அவரின் நூல் உணர்த்துகின்றது.

சன்மார்க்க சங்கம் - குறிப்புகள்

இராமலிங்க அடிகளாரின் கொள்கை விளக்கங்களின் வெளிப்பாடான சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தின் தோற்றம்

வளர்ச்சி குறித்த அனைத்துச் செய்திகளையும் முழுமையாகத் தேடிப் பதிவு செய்வதில் சுப்புரெட்டியார் வெற்றி பெற்றுள்ளார். 1865ஆம் ஆண்டில் இச்சங்கத்தைத் தோற்றுவித்த போது வள்ளல் பெருமானார் வைத்த பெயர், "சமரச வேத சன்மார்க்க சங்கம்" என்பதையும், சுத்த சன்மார்க்கத்தின் கொள்கைகள் தெளிவாக வடிவமைக்கப்பட்டு அன்பர்களுக்கு அளிக்கப்பட்டதையும் அவர் குறிப்பிடுகின்றார்.

கடவுள் ஒருவரே என்னும் ஏகத்துவம், உண்மை அன்புடன் ஒளிவடிவ வழிபாடு, உயிர்பலி மற்றும் புலால் மறுத்தல், எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணல், புராண சாத்திரங்களால் முடிவான ஆன்மிகப் பாதைக்கு வழிகாட்டவியலாமை என அடிகளார் அளித்த சன்மார்க்கக் கொள்கைகளைச் சுப்புரெட்டியார் எளிய சொற்களால் விளக்கியுள்ளார். மேலும் தன்னுடைய இனிய தமிழால், "ஏழையின் பசிதீர்த்தலாகிய ஜீவகாருண்யமே பேரின்ப வீட்டின் திறவுகோல்" என்று குறிப்பிட்டுக் காட்டுவதும் அழகியல் நுட்பத்துடன் வெளிப் பட்டுள்ளது.

சமரச சுத்த சன்மார்க்கத்தின் கொள்கையானது, உருவ வழிபாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் வள்ளலார் அத்தத்துவத்தைக் கண்மூடித்தனமாகப் பிறரிடம் திணிக்காமல், மிகுந்த பண்பாட்டுடனும் நாகரிகத்துடனும் அணுகிய முறைமை யைச் சுப்புரெட்டியார் மிக நேர்த்தியாகப் பதிவு செய்துள்ள தன்மையைக் காணமுடிகின்றது. கி.பி. 1867ஆம் ஆண்டில் பிரம்ம சமாஜத்தாருடனான ஆன்மிகவாதம் ஒன்றில் உருவ-அருவ வழிபாட்டு முறையை வள்ளலார் நேரடியாகா விவாதிக்கும் சூழல் ஏற்படுகின்றது. உருவவழிபாடு அறவே கூடாது என்னும் பிரம்ம சமாஜத்தாரை வள்ளல் பெருமானார் மறுத்துப் பேசுகின்றார். அதற்காக அவர் வைக்கும் சிந்தனைகள் நம்மை வியப்பிலாழ்த்து கின்றன. அவர், "உருவ வழிபாடும் அருவ வழிபாடும் அவ்வப் பக்குவர்க்கு உரியவை; உருவ வழிபாடு முதற்படி; அருவ வழிபாடு முடிவான படி அருவ வழிபாடு."

எல்லாராலும் செய்ய இயலாது. அதற்குப் பெரும் பக்குவம் வேண்டும். உருவ வழிபாடு எல்லாராலும் செய்ய இயலும். உருவ வழிபாட்டிலிருந்தே அருவ வழிபாட்டுக்குரிய பக்குவத்தைப் பெறுதல் சாமானியர்க்குரிய சாதன முறை. உருவவழிபாடு இகழ்ச்சிக்குரியதன்று (பக். 28) என்று விளக்கமாகக் கூறுகின்றார். இக்கருத்தைத் தேடியெடுத்து சுப்புரெட்டியார் தன் நூலில்

ஆவணப்படுத்தியுள்ளார்.

உருவ வழிபாட்டிலிருந்து அருவ வழிபாட்டிற்கு அன்பர்களை இராமலிங்க அடிகள் அழைத்துச் சென்ற வகையையும் சுப்பு ரெட்டியார் மற்றொரு இடத்தில் பதிவாக்கியுள்ளார். உபதேசக் கூற்றாக அடிகளின் சொற்களில் அக்கருத்து நூலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. "தியானம் செய்ய வேண்டுமானால் ஏதாவது ஓர் உருவத்தைத் தியானிக்க வேண்டும். நிஷ்களமாக இருக்கப்படாது. உருவமாக இருக்கவேண்டும். அவருவமாகத் தியாயனிக்கப்படாது. பின் உருவம் கரைந்து அருவமாகும்." ஒரு குருவின் நிலையிலிருந்து அன்பர்களை வழிநடத்தும் பெரும் பக்குவநிலை அடிகளாரிடத்துப் பொதிந்திருந்தமையைக் காட்டுவதாக இக்கருத்தை நம்மால் உள்வாங்கிக் கொள்ள இயல்கின்றது.

மேலும் ஆன்மிகத்தில் அடுத்தவர் உள்ளத்தின் இயல்பறிந்து நடந்து கொள்ளும் நயத்தக்க நாகரிகத்தை அடிகள் கொண்டிருந்ததையும் இதுபோன்ற சம்பவங்கள் உணர்த்துகின்றன. எவ்லாவற்றிற்கும் மேலாக, சமரச சுத்த சன்மார்க்கக் கொள்கையினை எவ்வளவு மென்மையாகச் சமூகத்தின் முன் அவர் வைத்திருக்கின்றாரென்ற செய்தியையும் சுப்புரெட்டியார் நூலின் வழி அறியலாகின்றது.

அடிகளின் படைப்பில் பழமொழிகள்

பதினெண்கீழ்க்கணக்கு நூல் வரிசையில் ஒன்றான "பழமொழி நானூறு" படைப்பில் ஒவ்வொரு வெண்பாவின் ஈற்றடியிலும் பழமொழி ஒன்றைப் பாடியதைப் போன்று, வள்ளலாரும் தன் பாடல்களில் பழமொழிகளைப் பின்னிப் பாடல் அமைத்த விதத்தினை, "இராமலிங்க அடிகள்" நூல் குறிப்பிட்டுள்ளது. இரண்டாம் திருமுறையில் திருவொற்றியூரில் கோயில் கொண்டுள்ள இறைவனைப் பாடும் பதிகத்தில் ஏறத்தாழ பத்து பாடல்களில் அடிகள் பழமொழிகளை உள்ளடக்கியுள்ளார். எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தத்தால் ஆன இப்பாடல்களில் சொல்லப்பட்ட பழமொழிகள் மிகவும் அற்புதமானவை.

"முதல் இ லாமல்ஊ தியம்பெற விழையும்
மூடன் என்னநின் மொய்கழல் பதமேத்
துதல்இ லாதுநின் அருள்பெற விழைந்தேன்
துட்ட னேன்அருட் சுகம்பெறு வேனோ"

என்னும் விருத்தத்தின் முதலடியிலேயே "முதல் இலார்க்கு ஊதியம் இல்லை" என்னும் பழமொழியைக் கூறிய அடிகள், மற்றொரு பாடலில், "நீர் சொரிந்து விளக்கினை எரிக்க முடியுமா?" என்னும் பழமொழியினை,

"நீர்சொ ரிந்தொளி விளக்கெரிப் பவன்போல்
நித்தம் நின்னிடை நேசம்வைத் திடுவான்
பார்சொ ரிந்திடும் பவநெறி முயன்றேன்"

என்னும் பாடலில் கேள்வியாக வைத்துப் பாடியுள்ளார். (ஆனால் இக்கருத்து உலகமாந்தர்க்குப் பொருந்துமே அன்றி, அடிகளுக்குப் பொருந்தாது என்பதைப் புலப்படுத்துதலைப் போல நீர் சொரிந்து அவர் ஏற்றிய விளக்கு எரிந்த அற்புதம் நிகழ்ந்தது) பழந்தமிழ் இலக்கியத்தடத்தில் இருந்த உத்திகளை மீட்டுருவாக்கம் செய்து மறுபடியும் காலனித்துவக் காலத்தமிழில் கொண்டு வந்து சேர்க்கும் பல முயற்சிகளை வள்ளலார் மேற்கொண்டார். அதில் பழமொழிகளை உட்பொதிந்துப் பாடுவதும் ஒன்று. அடிகள் இங்ஙனம் இலக்கியத்திற்குச் செழுமையூட்டியமையை சுப்புரெட்டியார் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

சிற்றிலக்கிய மரபு

பத்தொன்பதாம் நூற்றாண்டில், முற்றிலும் புதிய திசை நோக்கித் தமிழ் இலக்கியம் பயணிக்கத் தொடங்கியதென்றால் அதற்கான முன்னோடி, இராமலிங்க அடிகளே. இலக்கியமரபில் வழுவாமல் அவர் பாடிய வடிவங்களையும் முயற்சிகளையும் தான் பின்னாளில் சுப்புரமணிய பாரதியார், பாரதிதாசன் உள்ளிட்ட கவிதாப்பரம்பரை மேலெடுத்துச் சென்றது. அவ்வகையில் வள்ளலார் பயன்படுத்திய சிற்றிலக்கிய வகைகளைச் சுப்புரெட்டியார் மிகப் பரவலாக எடுத்துக்காட்டியுள்ளார்.

இறைமையை ஆணாகவும், உருகும் உள்ளத்தையும் பெண்ணாகவும் கருதி, அகத்துறை மரபில் நின்று பாடிய பக்தி இலக்கிய அனுபவவரிசையில் வள்ளலாரும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியுள்ளார். ஆன்மாவை இறைமையில் கலந்திடும் அவருடைய இணையில்லா அனுபவம், அகத்துறைப்பாடல்களாக உருவெடுத்தன. அவ்வெளிப்பாடுக்காகச் சிற்றிலக்கிய வடிவங்களான குறவஞ்சி, தூது, கும்மி, சிந்து, கண்ணி, மாலை போன்றவற்றை மிக விரிவான தளத்தில் அவர் கையாண்டார்.

அம்பலத்தில் ஆடுகின்றார் பாங்கிமா ரே அவர்
ஆட்டங்கண்டு நாட்டங் கொண்டேன் பாங்கிமா ரே
ஆடுகின்ற சேவடிமேல் பாங்கிமா ரேமிக
ஆசைகொண்டு வாடுகின்றேன் பாங்கிமா ரே

என்று மேலிடும் பக்தியை அகவுணர்வாகச் சித்திரித்து மெய்யுருகும் அடிகளின் இலக்கிய நெஞ்சை "இராமலிங்க அடிகள்" நூல் விளக்கமாகக் காட்டுகின்றது. உள்ளத்தின் ஆழத்திலிருந்து பெருகி வரும் பக்திவெள்ளத்தை அகத்துறையில் உருகிப் பாடுவதை வள்ளலார் கைக்கொண்டிருந்தார் என்பதற்கு ஆறாம் திருமுறையில் அமைந்துள்ள 217 பாடல்கள் சான்றாகும். குறிப்பாக, 'சிந்து' வடிவத்தில் பாடிய தன்மையையும் சுப்புரெட்டியார் குறிப்பிட்டுணர்த்தியுள்ளார்.

மேலும் 'மாலை' வடிவத்தைப் பயன்படுத்தி எண்ணற்ற பாடல்களை அடிகள் பாடியுள்ளார். ஐந்தாம் திருமுறையில் மட்டும் 12 மாலைகளில் அவருடைய பக்திச்சாரம் பூரணமாகப் புலப்பட்டுள்ளது. 'அன்புமாலை,' 'அருட்பிரகாசமாலை,' 'பிரசாத மாலை' என்று தொடரும் மாலைகளின் வரிசை உயர்ந்த பக்தியூற்றின் சுவையைத் தன்னகத்தே கொண்டிருப்பதை ரெட்டியாரின் ஆய்வுகள் விரிவாகப் பேசுகின்றன. அதன் உச்சமாக, வள்ளலார் பாடிய 'அபராத மன்னிப்பு மாலை' பதிகம் இறைமையிடம் மானிடவுள்ளம் கொண்டிருக்கும் தொடர்பு இழைகளை மேன்மையுடன் எடுத்துக் காட்டுவதையும் அவர் தொட்டுக் காட்டியுள்ளார்.

அறிந்தறிந்து அடைந்த ஞானம்

வள்ளலாரின் ஆன்மிக படிநிலைகள் குறித்த சித்திரத்தைச் சுப்புரெட்டியாரின் ஆய்வு அழகுற வனைந்துக் காட்டியுள்ளது. இறைக்கொள்கையையும், இறைவனையும் உள்ளுணர்ந்த பக்குவம், அதை வெளிக்காட்டிய அனுபவம் ஆகியவற்றை இணைத்து நம்மால் அடிகளின் ஞானப் பாதையை விளக்கமாக உணர்ந்துகொள்ள முடியும். இவ்வுண்மைகளை எடுத்துக்காட்டுக்களுடன் 'இராமலிங்க அடிகள்' நூல் சுட்டிக்காட்டுகின்றது.

இறைவனைக் குறிக்க, 'சதுரன், கள்வன், தேவனை, தயாளன்" எனப் பல சொற்களைக் கையாளும் வள்ளல்பெருமான், 'மகாதேவ மாலை' என்னும் பதிகத்தில் இறைவனைத் 'தேவே' என்று அழைத்து நிறைவுறும் 100 பாடல்களைப் பாடியுள்ளதையும் சுப்புரெட்டியார் எடுத்துக்காட்டியுள்ளார். இறைவன் சோதி மயமாக விளங்கும்

ஞானத்தை அடைவதற்குப் பல படிநிலைகளை வள்ளலார் கடந்திருப்பதை அவரின் பாடல்கள் உணர்த்துகின்றன. அக்கடந்துச் செல்லும் அனுபவம், ஒவ்வொரு கட்டமாக நகர்தலை, அவர் ராமனைப் பாடும் "திருமகள் எம்பெருமாட்டி மகிழும் வண்ணச் செழுங்கனியே" விருத்தமும், "பாண்டவர் தூதனாகப் பலித்தருள் பரனே போற்றி" என்று கண்ணனைப் போற்றும் பாடலும், ஏழுகிணறு பகுதியில் கோயில் கொண்டுள்ள 'ரேணுகை" என்னும் பெண்தெய்வத்தின் மீது பாடிய பாடலும் சாட்சியம் கூறுகின்றன. ஞானத்தை அடையும் வள்ளலாரின் கனிவான ஆன்மநேயத்தில் பல அனுபவங்கள் கரைந்து வருகின்றன. அதுவே பூரணத்தை அவருக்குள் பொலியச் செய்யவும் வழிவகுக்கின்றது. குறிப்பாக, தன் மேலுள்ள குறைகளை இறைவனிடத்தில் பட்டியலிட்டுச் சொல்லும் பாடல்கள் நம் மனத்தைத் திகைக்கச் செய்கின்றன.

"பொய்யுரைக்க வென்றால் புடையெழுவேன் அன்றியொரு
மெய்யுரைக்க வென்னும் விழைந்ததிலை - வையகத்தில்
பொல்லா விரதத்தைப் போற்றியுவந் துண்பதல்லால்
கொல்லா விரதத்தைக் கொண்டதிலை - அல்லாதார்
வன்புகழைக் கேட்கமனங் கொண்ட தல்லாமல்
நின்புகழைக் கேட்க நினைந்ததிலை"

(விண்ணப்பக் கலிவெண்பா)

தன்னைப் பற்றிய சுயவிமர்சனமாகவும் மதிப்பீடாகவும் அவர் பேசிக் கொண்டே செல்லும் இக்கண்ணிகள் தெளிந்த அவரின் உள்ளத்தைப் புறவுலகிற்கு அடையாளம் காட்டுகின்றன. தன்னையறியும் தவத்தை அடிகள் கொண்டிருந்ததை வெளிக் காட்டும் இவ்வகைப் பாடல்களைச் சான்றாக வைத்துக் கொண்டு, சுப்புரெட்டியார் தன் ஆய்வை மேற்கொள்கிறார். இராமலிங்க அடிகளார் என்னும் ஆன்மிக ஆளுமையின் பன்முகத் தோற்றத்தை அவரின் ஆய்வுக்களங்கள் முழுமையாக உலகிற்கு இனங்காட்டுவதாக அமைந்துள்ளன.

அடிகளாரின் முகத்தில் எப்போதும் துயரத்தின் சாயல் இருந்ததைக் காணமுடிந்தது. அதற்கு இரு காரணங்கள் இருந்தன வென்று சுப்புரெட்டியார் குறிப்பிடுகின்றார். ஒன்று, இறைவன் தனக்கு இன்றும் முற்றிலும் அருள் செய்யவில்லையே என்ற கவலை. இரண்டாவது, எவ்வளவோ சொல்லியும் தம் உபதேசங்களை மக்கள் செவிமடுத்துக் கடைப்பிடிக்கவில்லையே என்ற வருத்தம்.

இக்கவலையும் வருத்தமும் உந்திட, தன் தவச்சாலையில் அருந்தவம் ஆற்றினாரென்று அவர் குறிப்பிடுகின்றார். இறையருளை நோக்கிய இலக்கை நோக்கியே இராமலிங்க அடிகளின் தெய்வீக வாழ்வு எப்போதும் படிந்திருந்ததை மிகத் துல்லியமாகச் சுப்புரெட்டியாரின் ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது.

சுப்புரெட்டியாரின் மனத்துணிவு

பொதுவாக ஆன்மிகம் பற்றிய ஆய்வுகளில், 'உண்மை,' 'குறைபாடுகள்' ஆகியவற்றைச் சொல்வதற்கு முழுமையான சுதந்திரம் இருப்பதில்லை. சமயம் தொடர்பான ஆய்வாக இருப்பதாலும், அவ்வாறு புலப்படுத்தும் உண்மைகள் சமூகத்தில் எவரையேனும் காயப்படுத்துமோ என்ற காரணத்தால், சில செய்திகளை வெளிக்காட்டாமலேயே ஆய்வுகள் கடந்து விடுவதுண்டு. ஆனால் சுப்புரெட்டியாரின் ஆய்வுப்பார்வை எந்த வகையான சமரசத்திற்கும் தன்னை ஆட்படுத்திக் கொள்ளவில்லை. உலகம் போற்றும் அருளாளராகிய அடிகளின் எழுத்தில் பதிந்துள்ள செய்திகளையும் துணிவுடன் மறுத்துப் பேசுகின்றார்.

சுட்டளைக் கலித்துறை என்னும் பாவகையில் அடிகள் பாடிய 'புன்மை நினைந்திரங்கல்' பகுதியில் பெண்மையைக் குறைத்துப் பேசும் இடங்கள் இருப்பதாக சுப்புரெட்டியார் சில பாடல்களைக் குறிப்பிடு கின்றார்.

"கண்ணைக் காட்டி இருமுலை காட்டிமோ
கத்தைக் காட்டி அகந்தைக் கொண்டேஅழி
மண்ணைக் காட்டிடும் மாய வனிதைமார்
மாலைப் போக்கிநின் காலைப் பணிவனோ"

(புன்மை நினைந்திரங்கல்- 8)

போன்ற பாடல்களில் அமைந்துள்ள பொருண்மையைச் சுட்டிக் காட்டி, அடிகளாரை எந்தப் பெண்ணும் மயக்க முயன்றிராத சூழலில், அடிகளாரும் சிற்றிற்பத்தை அறவே ஒதுக்கித் தள்ளிய நிலையில் இங்ஙனம் பாடியிருத்தலைத் தவிர்த்திருக்கலாமென்று கருத்துரைத்துள்ளார். மேலும் இயற்கையின் சுழற்சியில் உயிர்கள் தோன்றிடச் செய்திடும் வகையில் தான் அழகு, உடலிச்சை ஆகியவை அமைந்து இருந்திருக்கிறதென்னும் காரணங்களைக் குறிப்பிட்டு, சுப்புரெட்டியாரின் எழுதுகோல் பெண்மைக்கு

ஆதரவாகப் பல கருத்துக்களை அடுக்காகப் பதிவு செய்துள்ளது. புன்மை நினைந்திரங்கல் பகுதியை மேற்கோள் காட்டி வெளிப் படுத்தப்பட்டுள்ள கருத்துக்கள், அடிகளின் ஆன்மிகத்தை எள்ளள வும் குறைத்து மதிப்பிடாமல், அதே வேளையில் இப்பார்வை தவிர்க்கப்பட்டிருக்கலாமோ என்னும் சிந்தனையையும் ஒருசேர ஊனமின்றி வெளிப்படுத்துகின்றது. ஆராய்ச்சி நெறிமுறைகளில் எவ்விதச் சறுக்கலுமின்றித் தொடரும் சுப்புரெட்டியாரின் இத்துணிவு ஆய்வுலகிற்குப் பல செய்திகளை முன் வைக்கின்றது.

நிறைவாக...

இருபதாம் நூற்றாண்டின் சிறந்த அறிஞர் பெருமக்களில் பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் பங்கு தனித்துவம் வாய்ந்தது. பழந்தமிழ் இலக்கியம் முதல் தற்காலப் படைப்புகள் வரை வீச்சுடன் நீளும் தகைமையை அவரின் படைப்புகள், திறனாய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. அவருடைய எழுத்துக்களில், இராமலிங்க அடிகள் பற்றிய நூல் ஒரு எல்லைக்கல் என்பது மெய். தமிழ்ச் சமய வரலாற்றின் நெடும் பயணத்தில் ஒரு சுழலையும், அதிர்வையும் உருவாக்கிய மகத்தான ஆளுமையாக வள்ளலாரை இனம் காண இந்நூல் ஒரு வழிகாட்டியாக உதவுகின்றது.

எவ்விதச் சார்புமின்றி, அசலத் தன்மையோடுக் காணப்படும் ஆய்வாக, 'இராமலிங்க அடிகள்' தோற்றம் தருகின்றது. மொழி, இலக்கியம், இதழியல் தொண்டு, பக்தி என நீளும் அடிகளாரின் பன்முகத்தரிசனத்தை முழுமையாக வெளிக்கொணர்ந்திட்ட தரமான ஆய்வு முன்னோடி; பேராசிரியர் ந. சுப்புரெட்டியார். இவ்வுண்மையை வரலாற்றில் அழுத்தமாகவும் ஆழமாகவும் பதித்திட உறுதுணையாக நிற்கும் படைப்பு, 'இராமலிங்க அடிகள்.'

☯

6

ந. சுப்புரெட்டியார் பார்வையில் கவிதை

-முனைவர் பொ.திராவிடமணி

தமிழ் மொழிக்கும் தமிழ் மக்களுக்கும் தொண்டாற்றியவர்களில் குறிப்பிடத்தக்கவர் ந. சுப்புரெட்டியார். பல்துறையில் புலமை சான்றவரக விளங்கிய இவர் 130க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். இலக்கியம், இலக்கணம், அறிவியல், சமயம், தத்துவம், உளவியல், திறனாய்வு எனப் பல்துறைசார்ந்த நூல்களை வெளியிட்டுள்ளார். மொழிபெயர்ப்பு நூல்களையும் வெளியிட்டுள்ளார். தொல்காப்பியம் தொடங்கி தற்கால கவிதை வரை இவர் தொடாத பகுதியே இல்லை எனலாம். தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, கவிஞன் உள்ளம், காலமும் கவிஞர்களும், காதல் ஓவியங்கள், அறிவுக்கு விருந்து, தமிழ் இலக்கியத்தில் அறம், நீதி, முறைமை, இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியமும், அறிவியல் தமிழ், அறிவியல் நோக்கில் இலக்கியம் சமயம் தத்துவம் போன்ற பல நூல்களைத் தந்துள்ளார். சாகித்திய அகாதெமி இவரது மூன்று நூல்களை மொழிபெயர்த்துள்ளது குறிப்பிடத்தக்கது. பல்துறை சார்ந்த இலக்கியங்களை ஆய்வு செய்துள்ள ந. சுப்புரெட்டியாரின் பார்வையில், கவிதை என்பது என்ன? அது எவ்வாறு இருக்கவேண்டும், படைப்பாளனின் பங்கு என்ன? வாசகனின் பங்களிப்பு எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை முன்வைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

இலக்கியக் கலைகளில் முதன்மையாகத் திகழ்வது கவிதை. சொற்களின் சேர்க்கை, மொழியின் இனிமை, நடையின் அழகு ஓசையின் நயம், சொல்லும் திறன், உணர்ச்சியின் வெளிப்பாடு, படிப்பவரை மயங்க வைக்கும் ஆற்றல் இவற்றால் வாசகன் மனதில் நீக்கமற நிறைந்து தனக்கென ஓர் இடத்தைப் பெற்றிருப்பது. கவிதை குறித்து பாரதி குறிப்பிடுகையில்,

"சொல்புதிது, பொருள்புதிது, வளம்புதிது
சொற் புதிது, சோதி மிக்க
நவகவிதை எந்நாளும் அழியாத
மா கவிதை"

என்கிறார். கவிமணியோ,

"உள்ளத்துள்ளது கவிதை இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் உண்மை
தெரிந்துரைப்பது கவிதை"

என்கிறார். அக்கவிதை என்பது படித்து இன்புறத்தக்கது. ஆனால் அவ்வின்பம் எவ்வாறிருந்தது என்று கேட்பின் இவ்வாறிருந்தது என்று பதிலுரைக்க இயலாது. ஊட்டிக்குச் சுற்றுலா சென்றவனிடம் சுற்றுலா எப்படியிருந்தது என்று கேட்டால் அவன் நன்றாக இருந்தது என்று பதிலுரைப்பான். அப்பதில் சடங்கு சார்ந்த பதில். உண்மையில் அவன் பெற்ற இன்பத்தை வார்த்தைகளால் உரைக்க இயலாது. ஏனெனில் அது உணர்வால் உய்த்துணரும் இன்பம். அவ்வனுபவத்தைப் பெற்றவரால்தான் அதை உணரமுடியும். இவை போன்று அனுபவத்தால் உணரும் தன்மையன மனித வாழ்க்கையில் பல உள்ளன. திருமூலர் குறிப்பிடுவார்,

"முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத்தாய்தன் மணாளனொடு ஆடிய
சுகத்தைச் சொல்லென்றால் சொல்லுமா றெங்கனே"

(திருமந்திரம் - 2944)

என்பார். அவ்வகையில் கவிதை அனுபவமும் ஒன்று. கவிதையைப் படித்து இன்புறலாமேயன்றி அவ்வனுபவத்தைச் சொற்களால் வரையறைப்படுத்திக் கூறவியலாது. கவிதையில் இத்தகைய இன்பம் மேலோங்கிக் கிடைக்க உறுதுணையாக இருப்பவை உணர்ச்சி, கற்பனை, சொல்வளம், கருத்து போன்றவையாகும். இத்தகைய அம்சங்கள் சேரும்பொழுதுதான் சொற்களின் கோவை இன்சுவையுடையதாக மாறுகிறது. இக்கருத்தை சுப்புரெட்டியார் பல்வேறு சான்றுகளின் மூலம் அறிவிக்கு விருந்து' என்னும் நூலில் பதிவு செய்துள்ளார். கவிதையின் மூலம் பெறும் அனுபவம் என்பது உணர்வின் பாற்பட்டது. அதனைச் சொற்களால் முழுமையாக சுவைபடக் கூற முடியாது என்பதை சுப்புரெட்டியார்,

பாவின் நயமெல்லாம் யானும்
பகர வல்லேனோ?
ஆவின் பாற்சுவையை நாழி
அளந்து காட்டிடுமோ?

என்ற கவிமணியின் கூற்றினை எடுத்துக்காட்டிக் கூறியுள்ளார். கவிதையில் பெறும் அனுபவத்தை முழுமையாகக் கூறுமுடியா விட்டாலும் கவிதை அனுபவத்தில் திளைத்தவர்கள் கூறியவற்றை எடுத்துரைத்துள்ளார். திருவாசகத்தைப் படித்து இன்புற்று அதில் உள்ளம் கலந்த இராமலிங்க அடிகளார்,

"வான்கலந்த மாணிக்க வாசக! நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனிதீஞ் சுவைகலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"

என்று அதன் சுவையைச் சொல்ல முயன்றுள்ளார் என்கிறார். மேலும், அவர் கவிமணியும் பாரதியின் பாடல்களில் உள்ளம் கலந்ததை,

"கண்ணன் காதலன் 'எனக்கொரு
களிய முதமடா'
விண்ண முதமுமே - அதனை
வெல்ல மாட்டாதடா"

என்று அதன் சுவையைக் கூறமுற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். சுப்புரெட்டியார் கவிதையை அனுபவிப்பதில் இருவகை உண்டு என்கிறார். ஒன்று கவிதை இன்னது என்று ஓரளவு அறிந்து கொண்டு சுவைப்பது என்றும் மற்றொன்று அதனை அறியாமலேயே சுவைப்பது என்றும் குறிப்பிட்டுள்ளார். அதாவது ஒரு கவிதையைப் படிக்கும் ஒருவர் அக்கவிதையின் பொருள் புரிந்து, அக்கவிதையில் உள்ள கற்பனையில் கலந்து, சந்தநயங்களில் மகிழ்ந்து, அக்கவிதைதரும் உணர்ச்சியில் சங்கமித்தால் அதனால் கிடைக்கும் இன்பம் அளவிடற்கரியது இது ஒரு வகை. பொருள் புரியாமல் கவிதையைச் சுவைப்பது என்பது சொற்களின் சந்த நயத்தில் மட்டும் திளைப்பது போன்றதாகும். இவ்வின்பத்தைவிட முன்னயது கவிதையைப் படிப்பவர்குப் பன்மடங்கு இன்பத்தைத் தருவதாகும்.

உணர்ச்சி

உணர்ச்சி கவிதையில் மிகமிக இன்றியமையாததாகும். உணர்ச்சியற்ற கவிதை வெற்றெனத் தொடுக்கப்பட்ட சொற்களின் சேர்க்கையாக இருக்குமேயன்றி ஒரு சிறந்த கவிதையாக இருக்காது. கவிதையில் உணர்ச்சியின் முக்கியத்துவம் குறித்து வின்செஸ்டர் குறிப்பிடுகையில் "உணர்ச்சியே இலக்கியத்தின் இன்றியமையாத

உறுப்பாகும். சிறந்த இலக்கியத்தில் அதுவே பயனாகவும், ஏனையவற்றில் அது இடைப்பட்ட ஒன்றாகவும் இருக்கும். வேறு பயனை விளைவிக்க இவ்வுணர்ச்சி கருவியாக்கப்படுவதும் உண்டு" (அ.ச. ஞானசம்பந்தன், இலக்கியக் கலை ப-12) என்கிறார்.

சுப்புரெட்டியார் கவிதையின் உயிர்போன்ற பகுதி அதில் பொதிந்துள்ள உணர்ச்சி என்கிறார், உணர்ச்சியற்ற கவிதை வெற்றெனத் தொடுக்கப்பெற்ற ஒரு சொற்கோவையாகத்தான் இருக்கும் என்கிறார். அதைப்போல ஒரு கவிதையைப் படிக்கும் வாசகனும் உணர்ச்சியுடையவனாக இருந்து, கவிஞனின் மன நிலையைப் பெற்று அக்கவிதையை அனுபவித்துப் படிக்கும் பொழுது அதனால் கிடைக்கும் இன்பம் பன்மடங்காக இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார். அதாவது ஒரு கவிதையைப் படிப்பவன் அந்தக் கவிதையைப் படைத்தவனின் மனநிலையிலிருந்து அதனைப் படிக்க வேண்டும். அப்பொழுதுதான் அக்கவிதை தரும் சுவையை ஓரளவேனும் பெறமுடியும் என்று குறிப்பிடுகிறார். பக்திச் சுவை மிகுந்துள்ள திருவாசகத்தை படித்தால் ஏற்படும் நிலையைச் சிவப்பிரகாச அடிகள்,

"திருவா சகம்இங் கொருங்கால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியின் சுரந்துநீர் பாய
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை ஒலகில் அற்றையர் இலரே"

(நால்வர் நான்மணி -4)

என்று எடுத்துரைப்பதனால் இதனை அறியலாம் (அறிவுக்கு விருந்து, ப- 57) என்றும் எடுத்துரைத்துள்ளார்.

கற்பனை

கவிதைக்கு எந்த அளவு உணர்ச்சி முக்கியமோ அதே அளவுக்கு கற்பனையும் மிகமிக இன்றியமையாதது. "கற்பனை இல்லையாயின் உணர்ச்சிகளைத் தூண்ட இயலாதலின் அதுவும் இலக்கியத்தின் தலையாய உறுப்பாகும்" என்கிறார் வின்செஸ்டர். (அ.ச. ஞானசம்பந்தன், இலக்கியக் கலை ப-12) கற்பனை என்பது புலன்கள் நேரடியாக ஒரு பொருளை அனுபவிக்காத போதும் அப்பொருளை நினைவிற் கொண்டுவரும் ஒருவகை உத்தி எனலாம்.

"ஏதோ ஒரு வகையான உண்மையை அடிப்படையாகக் கொண்டு செஞ்சொற்களால் உள்ளங் கவரும் முறையில் உயர்ந்த கவிதையை உண்டாக்குபவனே கவிஞன்" (அறிவுக்கு விருந்து ப-60) என்று குறிப்பிடும் சுப்புரெட்டியார், அக்கவிஞனால் உருவாக்கப் படும் கவிதைகளில் கற்பனை என்பது மிக மிக இன்றியமையாதது என்கிறார். மேலும் அவர் இயற்கையைப் பாடும் ஒரு கவிஞன், தான் காணும் காட்சிகள் அனைத்தையும் தன் கவிதையில் பாடுவதில்லை. சிலவற்றை கூட்டியும், சிலவற்றை விலக்கியும் பாடுகிறான். அப்பொழுதுதான் அவன் படைக்கும் கவிதைக் கலைப்பண்புடன் அழியா வாழ்வு பெறும் என்கிறார்.

சங்கப் புலவர் அம்மூவனாரின் பாடலைச் சான்று காட்டும் அவர் "அம்மூவனார் கடற்கரையருகே உள்ள நாவல் மரத்தருகில் பலவற்றைக் காண்கிறார். கருநிற நாவற் பழங்கள் மரத்தின் கீழே உதிர்ந்து கிடக்கின்றன. மரத்தருகே கருநிற வண்டுகள் அங்குமிங்கும் பறந்து செல்கின்றன. நிலத்தில் விழும் பழங்களை நண்டுகள் ஓடிச் சென்று தின்கின்றன. நாரைகள் அற்றம் பார்த்திருந்து நண்டுகளைப் பற்றி உண்கின்றன. இக்காட்சிகள் அனைத்தையும் இன்னும் பலவற்றையும் கவிஞர் காண்கிறார். ஆனால் அவற்றுள் சிலவற்றை மட்டிலுமே தேர்ந்தெடுத்துத் தம் உள்ளம் விளையுமாறு ஒரு கற்பனை நாடகம் நடத்துகின்றார்" என்கிறார். (அறிவுக்கு விருந்து. ப- 60)

"பொங்குதிரை பொருத வார்மணல் அடைகரைப்
புன்கால் நாவல் பொதிப்புற இருங்கனி
கிளைசெத்து மொய்த்த தும்பி பழஞ்செத்துப்
புல்கால் அலவன்கொண்டகோட் கூர்ந்து
கோள்ளா நரம்பின் இமிரும் பூசல்
இரைசேர் நாரை எய்தி விடுக்கும்
துறைகெழு மாந்தை அன்ன" (நற்- 35)

இப்பாடலில் நீர்வாழ் நண்டு ஒரு நாவற் பழத்தைப் பற்றி இழுத்துச் செல்கின்றது. அருகே பறந்துகொண்டிருக்கும் வண்டுகள் அக்கனியைத் தம் இனமாகிய ஒரு வண்டு என நினைத்து அதனை நண்டின் பிடியிலிருந்து விடுவிக்கக் கருதி அதனைச் சூழ்ந்து பேரிரைச்சலுடன் பறக்கின்றன. இவ்விரைச்சல் அருகில் உணவினை நாடி அற்றம் பார்த்திருக்கும் நாரையின் செவியிற் கேட்கின்றது. அது உடனே வந்து நண்டினைப் பற்றச் செல்கிறது. நாரையின் வருகையை உணர்ந்த நண்டு நாவற்கனியைவிட்டு ஓடிவிடுகின்றது.

இப்பாடல் மூலம் சுப்புரெட்டியார் அளவான கற்பனையால் ஒரு கலைபடைப்பு எவ்வாறு உருவாகின்றது என்பதைத் தெளிவுபடுத்தி யுள்ளார்.

சொல்வளம்

ஒரு சொல்லைக் காதால் கேட்டவுடன் அவ்வொலி நம் காதின்வழி நுழைந்து மனதுக்குள் ஒரு காட்சியைத் தோற்று விக்கிறது. அக்காட்சியே சொல்குறிக்கும் பொருளாகும். கடல், மலை, ஆறு என்றவுடன் உள்ளத்தில் அதனை கொண்டுவந்து காட்சிப்படுத்தும் சக்கி சொற்களுக்கே உண்டு. அச்சொற்கள் நல்ல கவிஞனின் கவிதைகளில் வந்து வசப்படும். "எங்கே சொற்கள் தமக்குரிய பொருட் செறிவோடும், எண்ணத்தைத் தோற்றுவிக்கும் சக்கியோடும் காணப்படுவது போன்ற காட்சியை மனத்துள் தோற்றுவிக்கின்றனவோ, அங்கே கவிதைக் கலையைக் காண்கிறோம்" (இலக்கியக்கலை ப- 214) என்கிறார் அ.ச. ஞானசம்பந்தன். கவிதையில் ஏற்ற சொற்கள் ஏற்ற இடத்தில் சரியாக அமையும் பொழுதுதான் இனிய ஓசை பிறக்கும். அவ்வோசை படிப்போர்க்கு அக்கவிதையை உள்ளத்தில் இருத்தி இன்பம் பயக்கும். அதனால்தான் கவிதைக்கு எதுகை, மோனை, சந்தம் போன்றவையும் முக்கியத்துவம் வாய்ந்த தாகத் திகழ்கிறது.

கவிதைகளில் சொற்களின் பயன்பாடு குறிப்பிடத்தக்கது. இதைப் பற்றி குறிப்பிடுகையில் சுப்புரெட்டியார் "கவிதைகளில் இடத்திற் கேற்பச் செய்யுளின் நடைக்கேற்பச் சொற்கள் யாதொரு தட்டுதடையுமின்றி விரைந்து வந்து உதவும் நிலையே சொல்வளம்" (diction) (அறிவுக்கு விருந்து. ப- 61) என்கிறார். மேலும் அவர் "பண்டைய இலக்கியங்களில் நிறம்பப் பயிற்சியும் தன் காலத்து வழங்கும் மொழிபற்றிய மிக்க ஆழ்ந்த அநுபவமும் தன் ஆன்மாவுடன் ஒன்றிக் கலந்துவிட்ட தமிழ் உணர்ச்சியும் இருக்கும் கவிஞனுக்குத்தான் சொற்களின் உயிர்த் தத்துவம் நன்கு புலப்படும். இத்தகைய கவிஞனிடம் தான் அவன் நினைத்தவுடன் வேண்டும்பொழுது சொற்கள் அவனது மனக்கண்முன் தோன்றி நம்மைத் தாமே அளித்து ஏவல்கேட்டு நிற்கும்" (அறிவுக்கு விருந்து. ப-62) என்று குறிப்பிட்டுள்ளார். இத்தகைய உயர்நிலையைக் கம்பனிடமும், பாரதியிடமும் காணலாம் என்கிறார். கம்பனின் பாடலில் சொற்கள் வந்து விழுந்த பாங்கு படித்து இன்புறத்தக்கது.

"நீரிடை உறங்கும் சங்கம் நிழலிடை உறங்கும் மேதி
தாரிடை உறங்கும் வண்டு தாமரை உறங்கும் செய்யாள்
தூரிடை உறங்கும் ஆமை துறையிடை உறங்கும் இப்பி
போரிடை உறங்கும் அன்னம் பொழிலிடை உறங்கும் தோகை"

(கம்பன் நாட்டுப்படலம்)

அதாவது, சங்குகள் தண்ணீரில் வாழுகின்றன. எருமைகள் நிழலில் உறங்குகின்றன. திருமகள் தாமரையில் உறைகின்றாள். இச்சொற்களை வாக்கியங்களாக உரைநடையில் பயன்படுத்துவதை விட கவிஞன் கவிதையில் பயன்படுத்தும் போது அச்சொற்கள் ஆற்றலுடையதாக மாறுகிறது. இப்பாடலில் கம்பனின் கவிபுனையும் ஆற்றலால் சொற்கள் ஆளுமை பெற்று மிளிர்வதைக் காண முடிகிறது. அதேபோல், கண்ணன் பாட்டில் மனம் செலுத்திய பாரதி கண்ணனைக் குழந்தையாகப் பாவித்துப் பாடியபாடல் சொற்சுவையில் விஞ்சி நிற்பது.

"பிள்ளைக்கனியமுதே கண்ணம்மா
பேசும்பொற் சித்திரமே
அள்ளி யணைத்திடவே என்முன்னே
ஆடி வரும்தேனே" (பாரதி - கண்ணம்மா என் குழந்தை)

இப்பாடலில் குறைவான சொற்களும் ஒலிகளும் வந்து உயர்ந்து நிற்பதைக் காணலாம்.

மேலும், அணிகளும் கவிதைகளை அழகு செய்வதுடன் கவிதை அனுபவத்திற்குத் துணை செய்கின்றன. உவமை, உருவகம், உயர்வு நவிற்சி, வேற்றுப்பொருள் வைப்பு, தற்குறிப்பேற்றம் போன்ற அணிகள் மிகவும் குறிப்பிடத்தக்கவை என்று கூறும் சுப்புரெட்டியார் ஒரு பொருளை உள்ளது உள்ளபடி கூறுவதைவிட அழகாகச் சொல்வது கேட்போருக்கு இன்பம் பயக்கும் என்கிறார். மேலும் எதுகை மோனைத் தொடை வகைகளும் எண்வகை சுவைகளும் பாடல்களின் ஒலிநயத்தை மிகுவிப்பதுடன் சுவையையும் மிகுவிக்கும் என்கிறார். சீவகசிந்தாமணியில் திருத்தக்கதேவர் முற்றுருவகத்தைப் பயன்படுத்தி கவிபுனைந்திருக்கும் விதம் படித்து சுவைத்து இன்புறத் தக்கது.

காந்தருவதத்தையை மணக்க நடந்த போட்டியில் சீவகன் வெற்றி பெறுகிறான். இதனால் பொறாமை கொண்ட மன்னர்கள் அவனைப் போருக்கு அழைத்தனர். சீவகன் போருக்கு ஆயத்தமானனான். இதனை,

"தாழிருந் தடக்கையும் மருப்புந் தம்பியர்
தோழர்தன் தாள்களாகச் சொரியு மும்மதம்
ஆழ்கடற் சுற்றமா அழன்று சீவக
ஏழுயர் போதகம் இனத்தொ டேற்றதே"

(சீவகசிந்தாமணி - 71)

இப்பாடலில் சீவகனையும் யானையையும் ஒற்றாகவே கருதும் நிலையைக் காணமுடிகிறது. கற்பனையுடன் கவிதையைப் படிக்கும் பொழுது சீவகனுடைய ஏனைய இயல்புகள் மறைந்து விடுகின்றன. யானையினுடைய மற்ற பண்புகளும் மறைந்து விடுகின்றன. செருக்கு, ஆண்மை, கம்பீரம் மட்டுமே வெளிப்படுகின்றன.

கவிதையில் அறம்

ஒரு படைப்பாளன் ஒரு படைப்பை உருவாக்க முக்கியக் காரணம் அவன் அக்கவிதையின் மூலம் இச்சமூகத்திற்கு ஏதேனும் ஒரு கருத்தைச் சொல்ல முற்படுவதுதான். எனவே கருத்தில்லாக் கவிதை வெறும் ஒலிக்கோர்வையாகத் தான் இருக்கும். எந்த படைப்பாளனும் வெறும் ஒலிக்கோர்வையை மட்டும் உருவாக்க நினைப்பதில்லை. தமிழ் கவிதைகளைப் பொறுத்தவரை சங்க காலம் தொட்டு இன்று வரை ஏதேனும் ஒரு அறக்கருத்தை முன்வைத்தே பாடப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. "இவ்வுலக வாழ்க்கை நீதியை அடிப்படையாகக் கொண்டது. கவிஞர்கள் எல்லோரும் இவ்வுண்மையை நன்றாக உணர்ந்துதான் தமது கவிதைகளில் நீதி பற்றிய கருத்துக்களைப் பொதிந்து வைத்துள்ளனர். தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தமட்டிலும் தமிழ்க் கவிஞர்கள் வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதே இலக்கியத்தின் நோக்கம் என்ற கொள்கை உடையவர்களாக இருந்தனர்." (அறிவுக்கு விருந்து ப-91) என்று சுப்புரெட்டியார் குறிப்பிட்டுள்ளார். மேலும், "மேலை நாட்டினர் படிக்கும் போது இன்பத்தைத் தரும் பாடல்களை ஒரு பகுதியாகவும், ஒழுக்கம் கற்பிக்கும் பாடல்களை மற்றொரு பகுதியாகவும் படைத்துள்ளனர். அத்தகையப் பாகுபாட்டைத் தமிழ் கவிதைகளில் காண்பது அரிது என்கிறார். அவ்வகையில் பழமொழி, ஆசாரக்கோவை, திரிகடுகம், நான்மணிக்கடிகை போன்ற நூல்களைக் குறிப்பிடலாம். ஏனெனில் அவை வெறும் நீதிகளையும் கொள்கைளையும் கொண்டுள்ள பெட்டகங்கள் என்று கூறலாமே யன்றி உள்ளத்தைத் தொடும் சிறந்த கவிதைகள் என்று கூறமுடியாது

என்றும் அவர் சுட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

பெரும்பாலான தமிழ்க் கவிதைகள் இன்பம் தருவதுடன் உள்ளத்தைப் பண்படுத்துவதாகவும் உள்ளன என்பது சுப்பு ரெட்டியார் கருத்து. பேரிலக்கியங்களிலிருந்து சிற்றிலக்கியங்கள் வரை இப்பண்பு ஊடுருவி இருப்பதை எளிதில் அறியமுடியும் என்று கூறும் அவர், திருக்குறளை அப்பட்டியலில் சேர்க்க மறுக்கிறார். அவர் திருக்குறளை வெறும் நீதி நூல் என்று கூறுவது பொறுத்தமற்றது என்று கூறுகிறார்.

"நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாளது உணர்வார்ப் பெறின்" (குறள் 339)

என்றும்,

"அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை" (குறள் - 659)

இக்குறள்களில் பொருள் ஆழமும் அதே நேரத்தில் கவிதைக்குரிய இயல்பு சிறிதும் மாறாமல் இருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார். "நூலில் உள்ள குறட்பாக்கள் அனைத்தும் நீதியை உணர்த்துவதுடன் கவிதைக்குரிய எல்லா இயல்புகளுடனும் சிறந்து பொலிகின்றன. கற்பனை, அநுபவம், உணர்ச்சி ஆகியவற்றில் அவை தோய்ந்து நிற்பதால் அவை உயர்ந்த கவிதை நிலையைப் பெற்றுத் திகழ்கின்றன. படிப்போர் வாழ்க்கையைச் செம்மைப் படுத்தும் ஆற்றலையும் பெற்று விளங்குகின்றன" (அறிவுக்கு விருந்து ப- 93). இவை போன்று தமிழ் இலக்கியங்களில் உள்ள அக இலக்கியங்களும் புற இலக்கியங்களும் கவியின்பத்தைப் பெற்றிருப்பதுடன் அறக்கருத்துக்களையும் தன்னிடத்தில் பெற்று சிறந்து விளங்குகின்றன என்பதையும் பல்வேறு சான்றுகள் மூலம் எடுத்துக்காட்டியுள்ளார்.

இவ்வாறு கவிதை என்பது உணர்ச்சி, கற்பனை, சொல்வளம், உவமை, உருவகம், அணி, எதுகை, மோனை மற்றும் கருத்து போன்றவற்றைப் பெற்றிருக்கும்பொழுது அக்கவிதையைப் படிக்கும் பொழுது பெறும் அனுபவமே தனி என்பதை சுப்புரெட்டியார் கருத்தின்வழி அறிய முடிகிறது.

☯

7

பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் பார்வையில் "பெரியார் சிந்தனைகள்"

-ந. பிரகாஷ்

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் 1916ல் பிறந்தவர். தமிழில் குறிப்பிடத்தக்க மூதறிஞர். இவர் தனது பணியினை பள்ளி ஆசிரியராகத் தொடர்ந்து பேராசிரியர் வரை உயர்ந்தவர். சித்தாந்தத்திலும், சிந்தனைகளிலும் மற்றும் பல்வேறு தளங்களில் திகழ்ந்தவர் என்று நம்மால் பறைசாற்ற முடியும். மக்களால் அறியப்பட்ட அறிஞர்களில் இவரும் ஒருவரே என்பது மிகை அல்ல. தம் வாழ்வினை தமிழுக்காக அர்ப்பணித்த ஒரு தவப்புதல்வன். இவர் கடவுள் பற்றுடையவர்களையும் எழுதியுள்ளார். கடவுள் பற்றற்றவர்களையும் எழுதியுள்ளார். இதற்கு முழுமையான சான்று இவரே. இவர் வைணவத்தில் மூழ்கி முத்தெடுத்தவர். இவர் கடவுள் மறுப்பாளரான பெரியார் பற்றி உரையாற்றியும், அவரின் கொள்கையினை ஏற்றவராகவும் விளங்கியுள்ளார். அக்கொள்கையில் உதித்து உரையாற்றி நூலாக வெளிவந்தவை "தந்தை பெரியார் சிந்தனைகள்."

பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் "தந்தை பெரியார் சிந்தைகள்" என்னும் நூல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் இவர் உரையாற்றி நூலாக உருவாக்கம் பெற்றதாகும். சென்னைப் பல்கலைக்கழக, அண்ணா பொதுவாழ்வியல் மையத்தில் உருவாக்கப் பட்டுள்ள பேராசிரியர் சி.அ. பெருமாள் அவர்களின் அறக் கட்டளைச் சொற்பொழிவாக (2001) தந்தைப் பெரியாரைப் பற்றி அரியதொரு ஆய்வுப் பேருரை நிகழ்த்தினார். அவர் ஆற்றிய மூன்று சொற்பொழிவுகளைத் தொகுத்து "தந்தை பெரியார் சிந்தனைகள்" என்னும் நூலை உருவாக்கியுள்ளார். இந்நூலை முன் வைத்து இக்கட்டுரை அமையப் பெற்றிருக்கிறது.

செயற்கரிய செய்வார் பெரியர்

பெரியார் பல துறைகளில் கால்பதித்தவர். அவரின் கொள்கைகளை ஏற்றும், தர்க்கம் புரிந்தும், பின்பற்றியும் தமிழ்ச் சமூகம் நடைபயின்று வருகிறது. செய்ய முடியாதனவற்றைச் செய்து காட்டியவர் பெரியார்.

"செயற்கரிய செய்வார் பெரியார் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்" (குறள். 26)

என்ற குறள் செய்வதற்கு அரியதானவற்றைச் செய்பவர் பெரியோர் என்று படைத்த பெரியோர் பெரியார் ஒருவரே. பெரியாரையும் ஆய்வு செய்த பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரும் பெரியோர்.

பெரியார் - ந. சுப்புரெட்டியார் நட்பு

பெரியாருடன், சுப்புரெட்டியாருக்கு ஏற்பட்ட நட்பினைக் கூறும்முன், பெரியாரைப்பற்றி அறிமுகத்தினைக் கூறலாம். இலக்கண நூற்பாபோல் பாவேந்தர் பாரதிதாசனின் அறிமுகம் இது!

"அவர்தாம் பெரியார்
அன்பு மக்கள் கடலின் மீதில்
அறிவுத் தேக்கம் தங்கத் தேரில்
மக்கள் நெஞ்சில் மலிவுப் பதிப்பு
வஞ்சகர்க்கோர் கொடிய நெருப்பு
மிக்க பண்பின் குடியிருப்பு
விடுதலைப்பெரும் படையின் தொகுப்பு!
தில்லி எலிக்கு வான்பருந்து
தெற்குத் தினவின் படைமருந்து
கல்லாருக்கும் கலைவிருந்து
கற்றவர்க்கும் வண்ணச்சிந்து!
சுரண்டுகின்ற வடக்கருக்குச்
சூள்அறுக்கும் பனங்கருக்கு
மருண்டு வாழும் தமிழருக்கு
வாழவைக்கும் அருட்பெருக்கு!
தொண்டு செய்த பழுத்தபழம்;
தூய தாடி மார்பில் விழும்;
மண்டைச் சுரப்பை உலகு தொழும்;
மனக் குகையில் சிறுத்தை எழும்!
தமிழர் தவம் கொடுத்த நன்கொடை
தன்மானம் பாயும் தலை மேடை"

பாவின் சொல், சொற்றொடரின் பொருள் "பொரி மத்தாப்பு" போல் சீறி எழுவதைக் கண்டு மகிழலாம் அந்த ஒளியில் தந்தை பெரியாரின் உருவத்தை, மானசீகமாகவும் காணலாம். (ப. 3)

நட்பு என்பது வயது பாராமல் வருவது. நற்சிந்தனையாளரிடம் வருவது. எந்த எதிர்பார்ப்புமின்றி வருவது. இவற்றின் மூலம் ஏற்பட்ட நட்புதான் இவ்விரு ஆளுமைகள். முதன் முதலில் சுப்புரெட்டியாரை ஈர்த்தது பெரியாரின் பேச்சு. இவர் கல்லூரியில் படித்த காலத்தில், சொற்பொழிவுகளைக் கேட்டபோது, பெரியார்மீது அளவற்ற ஈர்ப்பு ஏற்பட்டது. பின்னர் பெரியார், இதழ்களில் எழுதியுள்ள கட்டுரைகளைப் படிக்கலானார். பெரியாருடன் நெருங்கிப் பழகும்போது சுப்புரெட்டியார் தலைமையாசிரியராக இருந்தார். அப்பொழுது இவருடைய வயது 28; பெரியாரின் வயது 65. இந்த காலகட்டத்தில் தான் ஏற்பட்டன இவர்களின் முதல் சந்திப்பும் நட்பும்.

"நான் நெருக்கமாகப் பழகினவரையில், என் அறிமுகம் இது. கல்லூரியில் படித்த காலத்தில் (1934-39) அவருடைய சொற்பொழிவைக் கேட்டேன்; குடியரசு, விடுதலை இதழ்களில் வந்த அவருடைய கட்டுரைகளைப் படித்து அநுபவித்தேன்; நேரில் பேசியது இல்லை. துறையூரில் என் முயற்சியால் தொடங்கப் பெற்ற உயர்நிலைப் பள்ளியில் முதல் தலைமையாசிரியராக இருந்த காலத்தில் அவரிடம் நெருங்கிப் பழகினேன். தேவாங்கர் தெரு மக்கள் எல்லாம் சுயமரியாதைக் கட்சியினர்; அவர்களின் முக்கியமானவர் அரங்கசாமி செட்டியார்; அவர் வீட்டில் தான். அய்யா அவர்கள் தங்குவதுண்டு. ஆண்டிற்கு ஆறு, ஏழு முறை அய்யா அவர்கள் கட்சி வேலைக்காகவும், திருமணம் முதலியவை நடத்தவும் வருவதுண்டு. பள்ளி விஷயமாகவும், சொந்த விஷயமாகவும், பல்வேறு உதவிகளையும் ஆலோசனைகளை யும் அய்யா அவர்களிடம் பெற்றதுண்டு. அவை காரணமாக நெருங்கிய பழக்கம்." (பக். 3-4) என்று பேராசிரியர் ந. சு. கூறுகிறார்.

சுப்புரெட்டியார் ஏழை மாணவர்களுக்கு உதவும் வகையில் தன் வாழ்வில் முக்கிய நோக்கமாகக் கொண்டார் பேராசிரியர் நசு. இந்த மாணவர்களுக்கு எவ்வகையில் உதவமுடியும் என்பதை பெரியார் அறிவுரைப்படி, செயல்பட்டார். அதில் வெற்றியும் கண்டார். பெரியாரின் சிந்தனைகளின் படி செயல்பட்டால் வாழ்வில் அனைத்து நிலைகளிலும் முன்னேற்றம் அடையமுடியும் என்பது

இவரின் ஆழமான கருத்தாகும். சுப்புரெட்டியார் ஒரு தத்துவவாதி. பெரியாரின் தத்துவார்த்தச் சிந்தனைகளைக் கொண்டு செயல் பட்டார் என்பது இதற்குச் சான்று.

பெரியார் பெரியாரே

சுப்புரெட்டியார் பெரியாரின் பண்புநலன்களைக் குறித்தும், அவரின் கொள்கை, கோட்பாடுகள், சித்தாந்தங்கள் இவற்றை வியக்கிறார். பெரியாரின் செயல்பாடுகளில் அனைவரையும் சிந்திக்கத் தூண்டிய ஒன்று. அவர் வாழ்வில் நிகழ்ந்த அனைவரையும் புரட்சிகரமாக ஈர்த்த செருப்பால் தாக்கப்பட்ட வரலாறு அனைவரும் அறிந்த உண்மையே. பெரியாருக்கு நிகர் பெரியாரே!

தந்தை பெரியாரைப் பார்த்து, "செருப்பு உங்கள் மீது பட்டும் கோபம் வரவில்லையே ஏன்?" என்று கேட்டேன். அதற்கவர் 'தம்பி, பொதுத் தொண்டில் இருப்பவர்கட்கு இது போன்றவை அடிக்கடி நிகழக்கூடியவை. படித்தவனாக இருந்தால் கூட்டத்தில் மறுத்துப் பேசுவான்; அல்லது செய்தித்தாளில் மறுப்பு தெரிவிப்பான். இவன் படிக்காத முட்டாள். இவன் தன் எதிர்ப்பைச் செருப்புமூலம் காட்டினான். இதில் கோபப்படுவதற்கு என்ன இருக்கின்றது?' என்று அமைதியாகக் கூறினார் 'பெரியார், பெரியாரே' என்பது என் அறியா மதிக்குத் தெளிவாயிற்று என்று கூறுகிறார் பேராசிரியர் நசு.

இறைமறுப்புக் கொள்கை

பெரியார் என்றாலே அனைவருக்கும் நினைவில் வருவது கடவுள் மறுப்புக் கொள்கை. "மூட நம்பிக்கையின் மூலம் - கடவுள்" என்பது அவரின் வாதமாக அமைகின்றது. கடவுள் நம்பிக்கையின் பெயரால் மனிதன் முட்டாளாகிறான். இறையின் பற்றால் அவன் சிந்தனைகள் அனைத்தும் புதைக்கப்படுகின்றன. மனிதனை இழிவு படுத்துவது மதம், சாத்திரம், புராணம் இவற்றின் மூலமாக மனிதன் செயல்படுவதால், அவன் சிந்தனையில் ஆட்படுவதில்லை. கடவுள் நம்பிக்கையில் செயல்படும் போது, அதை ஒழிக்க வேண்டும் என்பது அவரின் தீவிர செயல்பாடுகளே. இதனைப் பல மேடைகளில் பேசியும், எழுதியும் வந்துள்ளார். பெரியாரின் மூன்று முக்கிய கோட்பாடுகள் 1. மூடநம்பிக்கை ஒழியவேண்டும், 2. அறிவுக்குச் சுதந்திரமும் விடுதலையும் ஏற்பட்டு அது வளர்ச்சி பெற வேண்டும். 3. சுயமரியாதை உணர்ச்சி ஏற்பட வேண்டும் என்பவையாகும்.

இறைமறுப்புக் கொள்கை அவரது பேச்சாகவும் அமைகின்றது மூச்சாகவும் இருந்து வந்தது. அவர் தம் வாழ்நாளெல்லாம் இறை மறுப்புக் கொள்கையை நிலைநிறுத்துவதற்காக ஆயிரக்கணக்கான கூட்டங்களில் பேசிவந்தார் குடியரசு இதழ்களில் "சித்திர புத்திரன்" என்ற புனைபெயரில் நூற்றுக்கணக்கான கட்டுரைகள் எழுதிவந்தார்." (ப. 7) என்று பேராசிரியர் ந.சு. கூறுகிறார்.

தந்தை பெரியார் சிந்தனைகள் என்னும் நூல், மூன்று தலைப்புகளை உள்ளடக்கியது. அவை, 1. கடவுள், சமயம்பற்றிய சிந்தனைகள், 2. சமூகம் பற்றிய சிந்தனைகள், 3. மொழி பற்றிய சிந்தனைகள் என்பவையாகும். இம் மூன்று தலைப்பினுள்ளும் அரிய பல தகவல்களையும் சிந்தனைகளையும் கூறியுள்ளார்.

கடவுள், சமயம் பற்றிய சிந்தனைகள்

கடவுள், சமயம் பற்றிய சிந்தனைகளில் சைவம், சிவக்குருமார்கள், சைவம் - பதி, சொரூப இலக்கணம், தடித்தநிலையில் சில, இறைவனின் திருமேனி, நவந்தரு பேதம், கணபதி, முருகன், பிறப்பு, சரவணபவன், பார்ப்பனர், வைணவம், திருமேனிகள் - ஐந்து நிலைகள், தேசிகர் கருத்து, சங்கரபாணி, திவ்வியகவி, உருவ வழிபாட்டுக்கு எதிர்ப்பு, சித்தர்கள், நாவுக்கரசர் போன்ற பொருண்மைகளில் கடவுள் பற்றிய நம்பிக்கையினை கூறியுள்ளார். பிறகு தந்தை பெரியார் என்று தொடங்கி கடவுள் இல்லை என்பது வரை பெரியார் கூறியுள்ள காரணங்களையும், சிந்தனைகளையும் கொண்டு விளக்குகிறார் பேராசிரியர் ந.சு.

மேலும், கடவுள் மறுப்பு, கடவுள் ஒழிப்பு, சமயம், மதக் கோடுகள், மதவாதிகளின் கொடுமை, மத ஒழிப்பு, பெரியார் - ராமாநுஜர், பெரியாருக்கு வீடுபேறு என்று மிகவும் கூர்மையோடு கூறுகிறார்.

கடவுள் உண்டா? இல்லையா? என்ற விவாதத்திற்கு ஏற்ற விடையிடை, இவரின் சிந்தனைகளின் மூலம் அறியலாம். கடவுள் இல்லை என்பதற்கு பல காரணங்களை பெரியார் முன்னெடுத் துள்ளார் என்பதை பேராசிரியர் ந. சு. ஆராய்ந்துள்ளார்.

பெரியார் சிந்தனைகளில், முதலிடம் வகிப்பது கடவுள் மறுப்புக் கொள்கை. தந்தை பெரியார் என்றாலே கடவுள் மறுப்புக் கொள்கை உடையவர் என்றுதான் இன்றும் தமிழுலகம் எண்ணிக்

கொண்டுள்ளது. அவரின் கடவுள் மறுப்புக் கொள்கைகளின் பின்னணியில் அமைந்த அடிப்படைக் காரணங்களை மிக விரிவாகத் தெளிவுபடுத்தியுள்ளார் பேராசிரியர் ந.சு.

"தமிழனை முட்டாளாக ஆக்குவது கடவுள்; அதை ஒழிப்பது தான் எங்கள் வேலை. தமிழனை இழிவுபடுத்துவது சாத்திரம், மதம், புராணம்; அவற்றை ஒழிப்பதும் நெருப்பிலிட்டுக் கொளுத்துவதும் தான் எங்கள் வேலை." (ப. 41)

மனிதனை இழிவுபடுத்துவதற்கும், பகுத்தறிவற்ற தன்மைக்கும் கடவுள் நம்பிக்கை காரணமாக அமைவதால், அதை ஒழித்துக்கட்ட வேண்டும்; கடவுள் மேல் எங்களுக்கு எவ்வித கோபமும் இல்லை" என்ற வரிகளின் மூலம் பெரியாரின் கடவுள் மறுப்புக்கொள்கையின் பின்னணியில் மனித சமுதாயத்தின் உயர்வுதான் அடிப்படையாக அமைந்துள்ளது என கூறுகிறார், ந.சு.

மேலும், "மதமே மனிதனுடைய சுயமரியாதைக்கு விரோதி. மதமே மனிதனுடைய சுதந்திரத்திற்கு விரோதி. மதமே மனிதனுடைய அறிவு வளர்ச்சிக்கு விரோதி. மதமே கொடுங்கோலாட்சிக்கு உற்ற துணை. மதமே முதலாளிவர்க்கத்துக்குக் காவல். இச்சிந்தனை வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் காட்டிவிடுகின்றது மதக் கோட்பாடுகளை." (ப. 45) என்றும்,

"இன்று மதமானது ஒருவரையொருவர் ஏய்க்கவே பயன்படுத்தப் பெறுகின்றதே அல்லாமல், தொல்லையில்லாதிருக்க நிம்மதியான வாழ்வு வாழ உதவுவதாக இல்லை. போலி வாழ்க்கைக்காரருக்குத் திரையாகவே மதமும் பக்தியும் உதவுகின்றன." (பக். 45-46) போன்ற பெரியாரின் சிந்தனைகளை தம் நூலில் ஆழமாகக் கூறுகிறார் பேராசிரியர் ந.சு.

மதம் தான் மனிதனின் அனைத்து செயல்பாடுகளுக்கும், கோட்பாடுகளுக்கும் தடையாக அமைகின்றன. இதனைத்தான் "மக்கள் முன்னேற்றத்தில் மதம் வந்து தடை செய்தால் அஃது எந்த மதமாயிருந்தாலும் ஒழித்துதான் ஆகவேண்டும். உன்னைப் பறையனாயப் படைத்தார்; அவனைப் பார்ப்பனனாய்ப் படைத்தார்; என்னைச் சூத்திரனாய்ப் படைத்தார் என்று கடவுள் மேல் பழி போட்டு கடவுள் பெயரால் நடக்கும் கொடுமைகள் ஒழிக்கப்பட வேண்டும் என்றால் கடவுள் ஒழிக்கப்பட வேண்டும்." (ப. 49) என்று தந்தை பெரியாரின் சிந்தனையை மிகத் தெளிவாக ஆணித்தரமாக

விளக்குகிறார் பேராசிரியர் ந.சு.

கடவுள் பற்றிய நம்பிக்கை, கடவுள் எல்லாம் வல்லவர், கடவுளர்களின் உருவங்கள், திருக்கோயில்கள், கடவுள் மறுப்பு, கடவுள் ஒழிப்பு ஆகியவையும், சமயம் என்பதில் சமயம் பற்றியும், சமயக் கோட்பாடுகள், சமயவாதிகள் கொடுமை, சமய ஒழிப்பு பற்றிய சிந்தனைகளும் பெரியாரின் பின்புலத்தில் இருந்து மிகத் தெளிவாகக் கூறுகிறார்.

சமூகம் பற்றிய சிந்தனைகள்

சமூகம் பற்றிய சிந்தனைகளில் மனிதனைப் பற்றியும், சமூகத்தோடு எவ்வாறு இணைந்து வாழ்கிறான் போன்றவையும் முன்வைக்கப்படுகின்றன. இதில் மனிதன் என்ற ஜீவப்பிராணி, கூட்டு வாழ்க்கை, ஜாதி ஒழிப்பு, ஆட்சிமுறை, திருமணம், காதல் மணம், கலப்பு மணம், சீர்திருத்தத் திருமணம், மறுமணம், விதவை மணம், குழந்தை மணம், ஜாதிக் கொள்கை, ஜாதி பற்றிய பெயர்கள், ஜாதி தாழ்த்தப்பட்டோர், ஜாதித் தொழில், பார்ப்பனர் போன்ற சமூகச் சிந்தனைகளும்,கோட்பாட்டு நெறிகளையும் உள்ளடக்கியவையாகும். பெரியாரின் சமூகச் சிந்தனைகளை மிகவும் ஆராய்ந்து கூறியுள்ளார் பேராசிரியர் ந. சு.

தன் வாழ்நாள் முழுவதும் சமூகப்பணிக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் பெரியார். மேலும், தன்னைப் பற்றி நான் ஒரு நர்த்திகன் அல்லன். தாராள எண்ணமுடையோன், நான் ஒரு தேசியவாதியும் அல்லன் தேசாபிமானியும் அல்லன்; ஆனால் தீவிர ஜீவாதார எண்ணமுடையவன். எனக்குச் சாதி என்பதோ, சாதி என்பதன் பெயரால் கற்பிக்கப்பெறும் உயர்வு தாழ்வுகளோ இல்லை. அத்தகைய எண்ணத்தையே நான் எதிர்ப்பவன்; ஆதரிப்பவன் அல்லன்." (பக். 55-56) என்று பெரியாரின் உள்ளத்தில் கூறிய ஊற்றினைத் தெளிவாக பேராசிரியர் ந.சு. எடுத்துக்காட்டியுள்ளார்.

மேலும், நாட்டில் எப்படிப்பட்ட ஆட்சிமுறை இருக்க வேண்டும்; திருமணம் எப்படி அமையவேண்டும்; திருமணத்திலுள்ள சமூக இழிவுக் கொடுமைகள் ஒழியவேண்டும்; சாதிக்கொள்ளை எவ்வாறு தகர்த்தெறியவேண்டும்; சாதி ஒழிய வேண்டும்; தீண்டாமை ஒழிய வேண்டும்; மதுவிலக்கு வேண்டும் என்று பல்வேறு தளங்களில் நின்று, பெரியாரின் சிந்தனைகளோடும், சில தலைவர்களின் சிந்தனை களோடும், மிகவும் விரிவாக ஆய்வு செய்துள்ளார் பேராசிரியர் ந.சு.

மொழி பற்றிய சிந்தனைகள்

மொழி பற்றிய சிந்தனைகள் என்னும் பகுதியில், மொழியின் தோற்றம், தமிழ் ஈடுபாடு, மொழி ஆராய்ச்சி, மொழி பற்றிய சிந்தனைகள், மொழி வழிக் கல்வி, சாதிப் பெயர்கள், இந்தி எதிர்ப்பு, எழுத்துச் சீர்திருத்தம், தமிழ்ப் புலவர்கள், இலக்கியம், பெரியார் பற்றிய அறிஞர் கருத்துக்கள் என பல்வேறு தளங்களில் விரிவாக ஆராய்ந்துள்ளார் பேராசிரியர் ந.சு.

தமிழ் மொழியின் மீது பெரியார் கொண்ட எண்ணங்களைக் கூறுகிறார்.

"நான் தமிழுக்குத் தொண்டு செய்வது தமிழுக்காக என்று அல்ல. தாய் மொழி பாதுகாத்தல் ஒவ்வொருவருடைய கடனுமாகும். நம் தமிழ்மொழி மட்டிலுமல்லாமல் எல்லா வனப்புகளும் கொண்ட சிறந்த மொழி" (ப. 129) என்ற பெரியாரின் சிந்தனைகளையும், "இந்தியைப் பொது மொழியாக்குவதால் நாட்டிற்கு இல்லை. அதனால் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்குத் தடை உண்டாகும்; தமிழ் மொழியின் வளர்ச்சியும் குன்றும்." (ப. 137) என்று இந்தி எதிர்ப்பு பற்றி தனது குடியரசு இதழில் வெளிப்படுத்தியுள்ளார் என்பதை பேராசிரியர் மிக ஆணித்தரமாக விளக்குகிறார்.

தீண்டாமை, சாதி ஒழிப்பு, வருணாசிரம தர்மம் போன்றவற்றைப் பற்றி பெரியாரின் கருத்துக்களைக் கூறும் நூலாசிரியர், மிகவும் தெளிந்த பார்வையோடு அவற்றை விளக்குகிறார். நம் நாட்டில் சாதி என்று எடுத்துக்கொண்டால், பார்ப்பான், சூத்திரன் என்கிற இரண்டுதான்; செட்டி, முதலி, பறையன், நாவிதன், வண்ணான் என்பவன் எல்லாம் அவனவன் செய்கிற தொழிலால் பிரிந்திருந்தவனே தவிர - பிரிக்கப் பெற்றவனே தவிர - மற்றபடி அவர்களுக்குள் எந்த பேதமும் இல்லை. (ப. 85) "உத்தியோகத்தினால் ஒருவன் மேல் சாதியானால், கீழ்ச் சாதிக்காரனுக்கும் மேல் சாதியான் பெற்றிருக்கும் அளவுப்படியே உத்தியோகம் கொடுத்துக் கீழ்ச்சாதித் தன்மையை ஒழி என்கிறேன். தகுதியால் ஒருவன் மேல்சாதியானால், மேல்சாதியான் பெற்றிருக்கும் தகுதி முறையைக் கீழ்ச்சாதியானும் பெறும் அளவுக்குத் தகுதியைக் கொடுத்துக் கீழ்ச்சாதித் தன்மையை ஒழி என்றுதான் நான் கூறு கிறேன்" (பக். 85-86). என்று பல கருத்துக்களைப் பேராசிரியர் விளக்கியுள்ளார்.

தந்தை பெரியாரின் சிந்தனைகள் முழுவதையும், அப்படியே எழுதுவதாக இருந்தால் பல்லாயிரம் பக்கங்களாக நீளும் என்பதாலேயே நூலாசிரியர் பெரியார் சிந்தனைகளின் சாரங்களை மட்டும், அவற்றின் அசல் தன்மை மாறாமல் தெள்ளத் தெளிவாக விளக்கியுள்ளார் என இரா. தாண்டவன் கூறியுள்ளார்.

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் நுண்மான் நுழைபுலம் மிக்கவர். அறிவுத் தெளிவும், ஆழ்ந்த நுட்பமும் கொண்டவர். தமிழ், ஆங்கிலம் என பல ஆராய்ச்சிகள் செய்துள்ளார். இவர் மிகச் சிறந்த சிந்தனைவாதி. பெரியாரின் சிந்தனைகளை உள்வாங்கி, சிறந்த முறையில் ஆய்வு செய்து எளியமுறையில் விளக்கியுள்ளார். பல நூல்களை, தமிழுலகத்திற்கு அளித்துள்ளார். பெரியாரைப்போல் இவரும் தமிழுலகத்தில் என்றும் நீங்க இடம்பெற்றவர். இவருடைய நூல்கள் உளவியல், இலக்கியம், சமயம் தத்துவம், திறனாய்வு, வரலாறு, அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நூல்கள் என குறிப்பிடத் தக்கவையாகும். இனிமை, எளிமை, தெளிவு இவர் தம் நூல்களின் தனிச்சிறப்பாகும்.

☯

8

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் புலப்படுத்தும் தொல்காப்பியக் கொள்கை

-த. தாமரைச்செல்வன்

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் (1916-2006) தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறிந்த தமிழறிஞர். இலக்கியம், அறிவியல், சமயம், தத்துவம், உளவியல், திறனாய்வு, ஆராய்ச்சி என பல தளங்களில் இயங்கியவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் நிரம்ப பல ஆய்வுக்கட்டுரைகளை வழங்கிய சான்றான்மை மிக்க ஆளுமை. பள்ளித் தலைமை ஆசிரியராகத் தன் வாழ்வைத் தொடங்கிய சுப்புரெட்டியார், காரைக்குடி அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியர், துறைத்தலைவராகவும் பதினேழு ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றார். ஓய்வுக்குப் பின்னர் பதிப்பாசிரியர், மதிப்பியல் பேராசிரியர், தகைஞர், சென்னைப் பல்கலைக்கழக தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மரபுவழிப் பண்பாட்டு நிறுவனத்தின் இயக்குநர் எனப் பணிகள் தொடர்ந்தன. மேலும் தமிழுக்கு இவர் செய்த அரும்பணிகளைப் போற்றிச் சிறப்பிக்கின்ற வகையில் சென்னைப் பல்கலைக்கழகம், தமிழ் இலக்கியத்துறையில் "வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியராக" நியமித்தது.

சுப்புரெட்டியார் தமிழ் மொழிக்கென்றே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். புத்தகங்களோடு தவவாழ்வுப் புரிந்தவர். "என்பது அகவையைத் தாண்டி நிற்கும் அடியேன் இளமைக் காலம் முதல் இன்று வரை புத்தகங்களையே கட்டிக் கொண்டு அழுது காலங்கழிப்பவன்" என்று தன்னைப் பற்றிக் குறிப்பிட்டுக் கொள்வார்.

அகத்திணைக் கொள்கைகள், புதுக்கவிதை - போக்கும் நோக்கும், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, வைணவமும் தமிழும், வைணவச் செல்வம் (2 பகுதிகள்), அறிவியல் விருந்து, கல்வி உளவியல்

கோட்பாடுகள் முதலான 135 அறிய பெரிய நூல்களைத் தமிழுலகிற்கு எழுதியளித்து அருங்கொடையாளர் சுப்புரெட்டியார். இவரைப் பற்றி சீனிவாசம்பிள்ளை என்பார், சுப்புரெட்டியார் புக் (Book) ரெட்டியார் என்று பெயரிட்டுச் சிறப்பித்திருப்பது நினைவு கூறவேண்டிய ஒன்று எனலாம்.

தானாற்றும் சொற்பொழிவுகளுக்கான முன் தயாரிப்பில் ஈடுபடும்போது சிந்தையில் உதித்த விஷயங்களுக்கு எழுத்து வடிவம் கொடுப்பதும், அதனை யாவரும் படித்து இன்புறும் வகையில் அச்சில் ஏற்றி நூலாக வழங்கும் விற்பண்ணராகவும் திகழ்நதவர்.

"தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை" என்னும் நூலின் வழி பேராசிரியர் சுப்புரெட்டியார் புலப்படுத்துகின்ற தொல்காப்பியக் கொள்கைகள் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை - அறிமுகம்

தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை என்னும் இந்நூலில் 34 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. நூலானது தொல்காப்பியர் வகுத்த பொருளதிகாரம் பற்றி மிக விரிவாக பேசுகிறது. முப்பொருள் பாகுபாடு, ஐந்திணை (நிலம்), திணைகளின் ஒழுகலாறுகள், திணைமாந்தர்கள், அகம் - புறத் திணைகள், திருமண முறைகள், இலக்கிய வளர்ச்சி, மெய்பாடு முதலானவைகள் இதில் வலித்து பேசப்படுகிறது.

தொல்காப்பியத் தோற்றப் பின்னனி

"ஒல்காப் பெரும்புகழ்" தொல்காப்பியத்திற்கு சிறப்பு பாயிரம் பாடிய பனம்பாரனார் தமிழ்கூறும் நல்லுலகமாக வடவேங்கடத்தையும் தென்குமரியையும் தமிழ்நாட்டின் எல்லைப் பகுதிகளாகக் குறிக்கின்றார். அக்காலத்தில் தமிழர்கள் பரந்துபட்ட நிலப்பரப்பைக் கொண்டு வாழ்ந்திருக்கின்றனர் என்பதற்குச் சிறப்புப் பாயிரம் சான்று காட்டி நிற்கிறது. பனம்பாரனார் குமரியையும் வேங்கடத்தையும் வெறுமனே தமிழ் நாட்டின் எல்லைப் பகுதியாக மட்டும் குறிப்பிடவில்லை. அதில் அரசியல் உள்நோக்கத்தோடு கூறப்பெற்றிருக்கிறது என்பதை புரிந்துகொள்ளலாம்.

தமிழகத்தில் மூன்று கடல்கோள்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை வரலாற்றாசிரியர்கள் நமக்குப் புலப்படுத்துகின்றனர். இதில் மூன்று கடல்கோள்களில் முதலாவது கடல்கோளே குமரி நாட்டின்

பெரும்பகுதியை விழுங்கியது. இக்காலகட்டத்தில் வாழ்ந்தவர் தொல்காப்பியர். தமிழ் மக்களுக்கு முத்தமிழும் அறியும் வாய்க்கப் பெற்றதால் அனைத்து நூல்களும் கடல்கோளால் அழிந்தன. மக்களுக்கு இயற்றமிழ் இலக்கண நூல் ஒன்று தோன்றுவது இன்றியமையாதாக இருந்தது. இக்காலகட்டத்தில் தொல்காப்பியர் ஆற்றிய மொழிப்பணியே இன்று தமிழ் மொழியின் கண் எனப் போற்றப்படும் தொல்காப்பியத்தை உருவாக்கினார் (ப.3), என பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் குறிப்பிடுகிறார்.

நூலின் அறங்கேற்றமானது அதங்கோட்டாசான் முன்னிலையில் நடைபெறுகிறது. பின்னர், தமிழ்நாட்டு அறிஞர்கள் பலர் கற்றும், தமிழ் மக்கள் தங்களுக்கு உரிய இலக்கண நூலாக ஏற்றுக் கொள்கின்றனர். பிற்பாடு தொல்காப்பியமே தமிழ்மொழியின் சட்டமாகத் திகழ்ந்திருக்கிறது என்பதை சுப்புரெட்டியார்,

"கூறிய குன்றினு முதனூல் கூட்டித்
தோமின் றுணாதல் தொல்காப்பின்றன்
ஆணையில் தமிழறிந்தோருக்கு கடனே" (ப. 9)

என்ற பாடலின் மூலம் விளக்குகிறார்.

இவ்வாறாக இயற்றப் பெற்றிருக்கும் தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்று பிரிவுகளும், அதிகாரத்திற்கு முறையே ஒன்பது இயல்களைக் கொண்டும் அமைக்கப்பெற்றுள்ளது. இந்நூல் எழுத்து, சொல், பொருள் என்று மூன்றுடன் நின்றுவிடாமல் யாப்பு, அணி இலக்கணங்களையும் பேசுகிறது.

பொருள் பாகுபாடு

தொல்காப்பியப் பொருளதிகாரம் புராதன தமிழ்ச் சூழலையும் தமிழர்களின் பழக்கவழக்கங்களையும் சித்திரங்களாக நமக்குத் தருகிறது எனலாம். தமிழர்கள் பொருளை அகம் என்றும் புறம் என்றும் பகுத்து அவ்விரண்டு பிரிவினுள் குறிக்கோள் பொருள்களான அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கினையும் அடக்குவர். இன்பம் அகம் சார்ந்ததாகவும், ஏனைய அறம், பொருள், வீடு ஆகிய மூன்றும் புறப்பொருள் சார்ந்ததாகும்.

முப்பொருள்

வடமொழியில் தத்துவங்களாக பதி - பசு - பாசம் என்பதை கொள்கின்றனர். தமிழ் மரபில் மெய்யியல் என்ற பெயரில் வழங்கிய இதனை இறை, உயிர், தளை என்று தமிழ் மொழியில் வழங்கப் படுகின்றன.

உலகில் வழங்கப்பெறும் பொருள்களை தமிழர்கள் முப்பொருளாகப் பாகுபடுத்தி வைத்திருக்கின்றனர். அவைகள், முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பனவாகும். முதற் பொருள் நிலம் என்றும், காலம் என்றும் கொள்ளப்பட்டிருக்கின்றன. தமிழர்கள் நிலத்தை நான்கு பிரிவாகப் பிரித்திருக்கின்றனர். அப்பிரிவுக்கு முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்று பெயரிட்டு வழங்கிவந்தனர். தொல்காப்பியர் இதனை, காடுறை உலகம், மைவரை உலகம், தீம்புனல் உலகம், பெரும்புனல் உலகம் என்று குறிப்பிடுகின்றார். ஐந்தாவதாக பாலை என்ற ஒரு நிலம் உண்டு. இதனைத் தொல்காப்பியர் தனி நிலமாகக் குறிப்பிடவில்லை. என்றாலும் சிலப்பதிகாரம் போன்ற தமிழ் நூல்கள் குறிக்கின்றன.

முதற்பொருளின் பிறிதொரு பகுதியான காலம் இரண்டாகப் பிரிக்கப்படுகின்றன. அதை பெரும்பொழுது என்றும், சிறுபொழுது என்றும் அழைத்தனர். பெரும்பொழுதாவது ஓராண்டின் ஆறு பிரிவாகும். அவை, கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பவையாகும். சிறுபொழுது என்பது ஒரு நாளின் ஆறு பிரிவாகும். அவை முறையே வைகறை, விடியல், ஏற்பாடு, நண்பகல், யாமம் என்றும் வழங்குவர்.

முதற்பொருளிலிருந்து தோன்றுவது கருப்பொருள் ஆகும். அது இடத்திலும் காலத்திலும் தோன்றுகிறது. தெய்வம், மக்கள், விலங்கு, உணவு, தொழில், மரம், பூ, யாழ் முதலான பதினான்கு பொருள்களின் கூட்டாகும். இவைகள் ஒவ்வொரு திணைகளுக்கும் ஏற்ப மாறுபடுவதைக் காணலாம். கருப்பொருளில் சுட்டப் பெற்றுள்ள மக்கள் எனும் பொருளுக்கு மட்டுமே இங்கு உரிப்பொருள் கட்டமைக்கப் பட்டிருப்பது தனிச் சிறப்பாகும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை முதலான ஐவகை திணைகளின் ஒழுக்கலாறுகளை குறிக்கின்றது. அவை முறையே, புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்ற நிமித்தங்களால் ஆகிறது.

ஐந்திணைகளில் வரக்கூடிய மாந்தர்களில் வேறுபாடு காண முடிகிறது. திணை ஒழுக்கத்தின் தலைமக்களாக உயர்ந்த குடியைச் சேர்ந்தவர்களே முன்னிறுத்தப் படுகின்றனர் என்பது கவனிக்கத் தக்க ஒன்று.

தொல்காப்பியரின் அகக்கொள்கை

தொல்காப்பியர் தமிழின் அகக்கொள்கையை களவு - கற்பு என்று வகுக்கிறார். அதோடு களவொழுக்கத்தில் முன்னிறுத்தப்படும் பாத்திரங்களாக தலைவன், தலைவியை அமைக்கின்றார். அவர் களுக்கான வாயில்களாக பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, விறலி முதலான பன்னிருவர்கள் காட்டப்படுகின்றனர். கற்பு வாழ்வின் வரைவுகடாதலின் தோற்றுவாயாக அலர், அம்பல் எனும் நிகழ்வு அமைகின்றது. களவு வாழ்க்கையில் ஏற்பட்ட அலர் காரணமாக தலைவி, தலைவனை உடன் அழைத்துச் செல்லும் நிகழ்வை உடன் போக்கு என்று குறிக்கின்றார்.

களவும் கற்பும்

ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் ஒன்றுபட்ட உள்ளத்தோடு புணர்ந்து கொள்வதைக் குறிப்பது களவு ஆகும். இக் களவு அன்பொடு புணர்ந்தால் அதனைக் "காமக்கூட்டம்" என்றும் வழங்கும் நிலையைக் காண்கிறோம்.

தமிழர்களுக்கு என்று தனியே களவு முறை இருந்திருக்கிறது என நூலாசிரியர் நிறுவுகிறார். தொல்காப்பியர் தமிழ் மக்ளின் களவுப் புணர்ச்சியை ஆரியர்களின் காந்தருவமாகக் கூறியதாலும் தமிழ் மக்களுக்கு எனத் தனியே களவு முறை இருக்கிறது என வலித்துக் கூறுகிறார்.

"ஆரிய மணமாகிய காந்தருவத்திற்கும் தமிழரின் களவு மணத்திற்கும் உள்ள வேற்றுமையை தமிழியல் வழக்கமெனச் சிறப்பித்து உரைக்கப்பெறும் களவொழுக்கத்தின் தூய்மையினையும், ஆரிய அரசன் பிரகதத்தனுக்கு அறிவிக்கும் நோக்கத்துடன் கபிலரின் குறிஞ்சிப்பாட்டும் எழுந்தது. இது தலைவியின் வேற்றுமை கண்டு வருந்திய செவிலிக்குப் பாங்கி அறத்தொடு நிற்கும் விகற்பத்தை அற்புதமாகக் கூறுவதாகும். சமயக் கணக்கர் மதிவழி கூறாது, உலகியல் கூறிப் "பொருள் இது" என்ற திருவள்ளுவரின் இன்பப்பாலும், தமிழர் மணமுறைப்படி அமைந்துள்ளதை ஊன்றி நோக்குவார்க்கும்

புலனாகும்." (ப. 69) என்று நூலாசிரியர் சுட்டிக்காட்டுவது இங்ஙணம் நோக்கத்தக்கதாகும்.

கற்பு எனப்படுவது ஒத்த அன்புடைய ஆண் - பெண் இருவர் பெற்றோர் கொடுப்ப உலகத்தார் அறிய மணந்து வாழும் மனை வாழ்க்கையைக் குறிப்பதாகும். களவொழுக்கத்தின் அன்பின் வெற்றியே கற்பு வாழ்க்கை எனலாம்.

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே"

என்பார் தொல்காப்பியர். எனவே, ஒருவரையொருவர் பிரியாது வாழ்தற்குரிய உள்ளத்துறுதியை மற்றவர்கள் அறியும் வண்ணம் தலைவன் திருமணச் சடங்குடன் தலைவியை மணந்துகொள்ளுதல் மனவாழ்க்கைக்கு இன்றியமையாத நிகழ்ச்சியாக அமைகின்றது. மேலும் களவு காலத்தில் நடப்பது போன்றே இவ்வொழுக்கத்திலும் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியிற் கூட்டம் என நான்கு கட்டங்களில் பார்ப்பன், பாங்கன், தோழி, செவிலி முதலான 12 வாயில்கள் வழியாக உரையாடல் நிகழ்த்தப் பெருகின்றன.

தலைவன் - தலைவியின் பண்பு நலன்கள்

தலைவன் என்பவன் கல்வி, அறிவு ஒழுக்கங்களால் சிறந்தவனாக காட்டப்பெறுகிறான். தலைமகன் - மயன் என்னும் சொல் நல்ல செயல்களின் ஊடாக எல்லா உயர்நிலைகளும் வாய்க்கப் பெற்ற பெருந்தகையை மட்டும் குறிப்பிடும். இவ்வாறான சிறப்புடனும் நல்ல மதிப்புடனும் விளங்கும் ஒருவனுக்கே தலை எனும் அடைமொழி பொருந்தும் என்று புரிந்துகொள்ளலாம். உயர்குடியில் பிறந்தவர்களுக்கு மட்டுமே வாய்க்கப்பெற்றது எனலாம். ஏனையோர் தலைமகள் என்னும் சிறப்பைப் பெற முடியாத நிலையையும், இருக்கமான பிடியில் பழந்தமிழ்நாடு இருந்திருக்கிறது என்பதை புரிந்துகொள்ளமுடிகிறது.

தலைவி / தலைமகள் குணங்களாக அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பனவற்றைக் கொள்கின்றனர். இவை தலைவியை பல துன்பங்களுக்கும், நெருக்கடிகளுக்குள்ளும் ஆட்படுவதை உணரலாம். இதனை,

"தலைமகள் கற்பு நெறியில் ஒழுகிக் கணவனைப் பிரிந்திருக்கும் காலங்களில் மக்கள், சுற்றமும் முதலானவர் களைப் பாதுகாக்கும் கடமையிலிருந்து தவறாள். அன்றியும் களவு நெறியில் ஒழுகும் போது தந்தையர், தாயார் முதலியவர்களின் கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடக்க வேண்டியவள். தலைவன் தரும் பலவிதத் துன்பங்களையும் பொறுத்திருக்கும் குணமுடையவள்." (பக். 57-58)

என்று பாலின சமத்துவத்தை குழித்தோண்டிப் புதைக்கும் செயல் எனலாம். மேலும் பெருந்திணை குறித்து நூலாசிரியர் குறிப்பிடும் செய்தியை இங்கு கூறுவது பொருத்தமாக இருக்கும்.

திருமண முறைகள்

கற்பொழுக்கத்தைச் சிறப்பிக்கும் வகையில் திருமணம் அமைகிறது. தொல்காப்பியர் திருமணம் என்பதை "கரணம்" என்ற சொல்லில் குறிக்கின்றார். அந்நாளில் திருமணம் நாளும் பொழுதும் பார்த்து நடத்துவதை அறிந்துகொள்ளலாம், திருமணத்திற்கு முதல் நாள் மாலைகள், பழவகைகள், இனிப்பு வகைகள், வாசனைப் பொருட்கள் என்று இல்ல விழக்கோலத்துடன் காட்சித் தருகின்றன பிறகு திருமணம் பெற்றோர், உறவினர்கள், பெரியோர், ஊரார் என கடவுளை நினைத்து ஐயர் முன்னின்று நடத்துவதாகக் குறிப்பிடப் படுகிறது.

இவ்வாறாக நடைபெறக் கூடிய திருமண நிகழ்ச்சி உழவர்கள் ஓய்வெடுக்கும் பொருட்டும், பொருளாதார நிலை மேம்படும் காலத்திலும் நடைபெற்று வந்திருக்கின்றன என்பது புலனாகிறது. மேலும், திருமணத்திற்குப் பின்னர் தலைவன் - தலைவி காதல் வாழ்வில் சில நிலைகளில் பிரியநேரிடுகிறது. அவை, ஓதல், காவல், தூதுச்செல்லல், வேந்தர்க்காகப் பிரிவது, பொருள்வயின் பிரிவு, பரத்தையற் ஆகிய காரண காரியங்களுக்காக வேண்டி பிரியவேண்டிய சூழல் ஏற்படுகிறது.

புறப்பொருள் கொள்கை

புறப்பொருளானது பெரும்பாலும் அறம், பொருள் சார்ந்த விஷயங்களைப் பற்றி நிகழக்கூடியதாகும். அகவொழுக்கத்தைப் போன்று புறத்திற்கும் திணை வகுக்கப்பட்டுள்ளது. அதோடு துறை என்பதும் அமைத்து தரப்பட்டிருக்கிறது. தொல்காப்பியர்

புறத்திணைகளாக வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் முதலான ஏழையும் குறிப்பிடுகிறார். தொல்காப்பியர் அகத்திணைகளாகச் சுட்டிய கைக்கிளை, பெருந்திணையை புறப் பொருள் வெண்பாமாலை நூலாசிரியர் புறத்திணையாக கொள்வது இங்ஙனம் நோக்கத்தக்கதாகும். மேலும், அகத்திணைகள் ஒவ்வொன்றும் புறத்திணைகள் அதன் புறனாக (குறிஞ்சி x வெட்சி, முல்லை x வஞ்சி, மருதம் x உழிஞை, நெய்தல் x தும்பை, பாலை x வாகை, கைக்கிளை x பாடாண், பெருந்திணை x காஞ்சி) அமைந்துள்ளன.

அகவாழ்வுக்குத் துணை நிற்கும் கல்வி, பொருள், அரசியல் முதலானவை புறத்திணையில் இடம் பெறுகின்றன. தொல்காப்பியர் சுட்டும் புறத்திணைகள் யாவும் புராதன காலக்கட்டத்தில் தமிழ் நாட்டில் வழங்கி வந்த போர் முறைகள், வீரம், வெற்றிக் கொண்டாட்டங்கள் பல நிலைகளிலும், அரசியல், கொடை, புகழ், நிலையாமை முதலானவற்றை சில இடங்களில் மட்டும் குறிக்கப்பெறுவதைக் காணலாம். பண்டைத் தமிழர்களின் போர் முறைகள் யாவும் பெரும்பாலும் தற்காப்பு முறையில்தான் போர் நடைபெற்றதாக அறியமுடிகின்றது. மேலும், போர்கள் தேர்படை, யானைப்படை, குதிரைப்படை, கால்ாட்படை என்ற நான்கு வகைப் படைகளுடன் அறம் சார்ந்து அதனை மீறாத நிலையையும் சுட்டிக் காட்ட வேண்டி இருக்கிறது.

இலக்கியக் கொள்கை

பண்டையக் காலத்துத் தமிழறிஞர்கள் தாம் அறிந்த கருத்துக்களைச் செய்யுட்களிலேயே பொதிந்து வைத்தனர். இதனை நன்கு அறிந்த தொல்காப்பியர் செய்யுட்குரிய இலக்கணத்தைத் தமது நூலில் தொகுத்துரைக்கின்றார். இந்நூலில் கூறப்பெறும் செய்திகள் தொன்று தொட்டு வந்த தமிழர்களின் வாழ்க்கையிலிருந்து பெறப் பட்ட உலகியல் வழக்கங்கள் என்றும், இந்த உலகியல் செய்திகளே நாளடைவில் புலவர்களால் செய்யுள் வழக்காகச் சிறப்பிக்கப் பெற்றன என்றும், இதனை ஆசிரியரே.

"உயர்ந்தோர் கிளவி வழக்கொடு புணர்தலின்
வழக்குவழிப் படுதல் செய்யுட்குக் கடனே."

என்றும்,

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்.

என்றும் கூறுதலால் இந்த இலக்கணம் வாழ்க்கையோடு பொருந்தியே உண்டாயிற்று என்று அறிகின்றோம்.

மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி, தொடை, திணை, கைகோள், வண்ணம், வனப்பு, பண்ணத்தி, பா முதலான செய்யுள் உறுப்புகள் முப்பத்தி இரண்டும் தமிழ் கவிதை இயல் குறித்து பேசுகின்றன. மேலும், வனப்பு என்னும் தலைப்பின் கீழ் கூறப்படும் அம்மை, அழகு முதலானவை உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளான - காப்பியக் கொள்கையைப் பேசுகிறது.

இடைக்காலங்களில் தனி இலக்கிய வகைமைகளாக எழுந்த தூது, உலா, முதலானவைகளின் தோற்றுவாயாகவும் அமைகிறது.

தொல்காப்பியத்தை பல நிலைநின்று நோக்கும் நூலாசிரியர், தொல்காப்பியரின் அகப் - புறக் கொள்கைகளையும், பண்டைய தமிழரின் வாழ்வையும், அக்கால இலக்கிய வளர்ச்சி நிலைகளையும் விரிவாக ஆராய்ந்துள்ளார். வடமொழி நூலார் வகுத்த இலக்கண நெறியில் இருந்து தனித்து, தொல்காப்பியர் தமிழ் மொழிக்கென்று இலக்கண, இலக்கிய, பண்பாட்டு, வாழ்வியல், மொழிக்கொள்கை என வகுத்துத் தந்திருக்கிறார். பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் தொல்காப்பியக் கொள்கைகளை விளக்கும் முகத்தான் தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை எனும் நூலை ஆக்கித் தந்திருக்கிறார்.

☯

9

வைணவ உரைவளமும் ந.சுப்புரெட்டியாரும்

-முனைவர் தி. நெல்லையப்பன்

இந்து சமயங்களின் தொன்மையும் தூய்மையும் சைவ வைணவங்களுக்கு உண்டு. சைவத்தால் அரண் சூழ்ந்தும் வைணவத்தால் அரண் சூழ்ந்தும் மக்கள் இதிகாசப் புராணங்களில் தங்களைத் தகவமைத்துக் கொண்டனர். நம்பிக்கையின் ஈர்ப்பு இரு சமயங்களிலும் நின்று நிலைபெற்றுள்ளன. இலக்கிய ஆக்கத்தில் இதிகாசங்களும் புராணங்களும் மக்களுக்குக் கதைச் சொல்லிகளாக விளங்கின என்பதை மறுதலிக்கவியலாது. மறுபுறம் சைவ வைணவத்தை வீழ்ச்சியுறச் செய்த முயற்சிகள் நடந்தன. சமணம் பௌத்த சமயங்களின் எழுச்சியும் வளர்ச்சியும் சைவ, வைணவ சமயங்களை எதிர்க்கத் தலைப்பட்டன. அவற்றை முறியடிக்கும் முயற்சியில் சைவத்தில் நாயன்மார்கள் பன்னிரு திருமுறைகளை உருவாக்கினர். வைணவத்தில் ஆழ்வார்கள் நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் இயற்றினர். இவ்விரு இயக்கத்தினரால் மீண்டும் சைவ, வைணவ சமயங்கள் தமிழகத்தில் தழைத்தன. 'சைவத்தில் பாடல்கள் மிகுதி வைணவத்தில் உரைகள் மிகுதி' என்னும் தொடர் நாடெங்கும் ஒலிக்கத் தொடங்கியது. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திற்கு எழுந்த உரைகளை வியாக்கியானங்கள் என்றனர். நாலாயிரத் திவ்யப்பிரபந்தம் முதலாயிரம், பெரிய திருமொழி, திருவாய்மொழி, இயற்பா என்னும் பகுதிகளாகப் பகுக்கப்பெற்று உரைகள் எழுதப்பட்டுள்ளன. அந்த வகையில் நாதமுனிகள்தான் வைணவ உரையாசிரியர்களின் முன்னோடியாவார். உய்யக் கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார், பெரிய நம்பிகள், திருமாலையாண்டான், ஆறாயிரப் படி ராமானுஜரின் சீடர் திருக்குருக்கைப் பிரான் பிள்ளான், ஒன்பதாயிரப்படி நஞ்சீயர், பன்னீராயிரப்படி வாதிகேசரி அழகிய மணவாள ஜீயர், இருபத்து நாலாயிரப்படி பெரியவாச்சான் பிள்ளை, முப்பத்தாயிரப்படி,

வடக்குத் திருவீதிப் பிள்ளை, அப்பிள்ளை போன்றோர் உரைகள் எண்ணத்தக்கன. இவற்றைத் தொகுத்துப் பார்த்து பேராசிரியர் நசுப்புரெட்டியார் வைணவ உரைவளம் என்ற நூலைப் படைத்துள்ளார். அதன் நோக்கத் தன்மையை இன்று காணலாம்.

வைணவ உரைவளம் நூலுக்கு உழுவலன்பன் ராமானுஜன் என்பவர் அணிந்துரை நல்கியுள்ளார். ஆசிரியர் ந.சுப்புரெட்டியார் வைணவ உரைகள் என்னும் கடலில் மூழ்கி முத்தெடுத்து வந்து அவற்றில் தாம் கண்டவற்றை ஐதிகம், இதிகாசம், சம்வாதம் என்ற மூவகையில் அடக்கி ஆழ்வார் பாசுரங்களுடன் இயைபுபடுத்திக் காட்டுகிறார்.

நூல் முகத்தில் வில்லிபுத்தூராழ்வார் பாடலை எடுத்துக் காட்டித் தொடங்கி ஏற்புரை ஒன்றும் தந்துள்ளார். நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தின் சிறப்பை எடுத்துரைக்கும் ரெட்டியார் இதனுள் நிகழும் திருப்பாசுரங்கள் ஒவ்வொன்றும் செவிக்கினிய செஞ் சொல்லாகியது; சொற்சுவை பொருட்சுவைகளிற் சிறந்தது என்று குறிப்பிட்டுள்ளார். இதில் இடம்பெறும் உரைநயம் குறித்த பதிவு எண்ணத்தக்கது.

உரைகளின் நயம்

நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வாரால் அருளிச் செய்யப்பெற்றது போன்று வியாக்கியானங்களும் இறைவனுடைய திருவள்ளுவருக்கு முற்றும் இலக்காய் ஆழ்வார்களின் பேராருளுக்கும் பாத்திர பூதர்களாய் வடமொழி தென்மொழி ஆகிய இரு மொழிகளிலும் பேரறிவு படைத்தவர்களாய் இருந்த பெருமக்களால் அருளிச் செய்யப்பட்டவையாதலின், திவ்வியப்பிரபந்தம் போன்றே வியாக்கியானங்களும் அருமை பெருமைகளையுடையன. இவ்வியாக்கியானங்கள் மணிப்பிரவாள நடையில் அமைந்தவை; சுவாநுபவத்தோடு செய்யப் பெற்றவையாதலின் களிப்போர்க்கும் சுவாநுபவத்தை விளைவிக்கக் கூடியவை.

இந்த உரைகளுள் ஈட்டின் நடையழகு தனிச்சிறப்பு வாய்ந்தது; பொருளுணர்வோடு பயிலப் பயிலப் பேரின்பம் பயப்பது; சொல்லாற்றல் பொருளாறல்கள் அமைந்தது; சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் என்னும் வனப்பு வாய்ந்தது; கூறப்புகும் பொருளை விளக்குவதற்குக் காட்டப்பெறும் மேற்கோள் பொருள்கட்குப் பொருள் கூறும் முறை எத்தகையோரும் வியக்கத்தக்கது; பதச்சாரம்

கூறுவதில் ஈட்டாசிரியர்க்கு ஒத்தாரும் மிக்காரும் இத்தமிழ் நாட்டில் இலர்; ஒரு பதிகத்தோடு மற்றொரு பதிகத்திற்கும், ஒரு பாசுரத்தோடு மற்றொரு பாசுரத்திற்கும் உள்ள பொருள் தொடர்பைக் கூறிச் செல்லும் பாங்கு வேறெவ்வுரையிலும் காண்டலரிது. இவ்வியாக்கியானங்களின்றேல் திவ்விய பிரபந்தத்தின் பொருள் சிறப்பினையெல்லாம் அறிந்து கூறவல்லார் ஒருவரும் இலர்.

இந்த வியாக்கியானங்களில் காணப்பெறும் ஐதிகங்கள், இதிகாசங்கள், சம்வாதங்கள் முதலியன கற்போருக்குக் களிப்பினை நல்கும் பெருவிருந்தாய் இருக்கும். இது கருதியே இவை இந்நூலில் தொகுக்கப்பெற்று விளக்கமும் பொருந்தக் காட்டப்பெறுகின்றன.

ஐதிகங்கள்: இந்த நூலில் ஐதிகங்கள், இதிகாசங்கள், சம்வாதங்கள் தொகுத்துக் காட்டப்பெற்றுள்ளன. ஐதிகம் என்பது, சம்பிரதாயம் அடியாக வந்த ஒரு வார்த்தை; அதாவது முன் நடந்ததைத் தெரிவிப்பது. எ.கா: முற்காலத்தில் அம்மங்கி அம்மாள் என்ற ஓர் ஆசிரியர் நோயால் வருந்தியிருக்க, நஞ்சீயரும் நம்பிள்ளையும் அவரைக் கண்டு நலம் விசாரிக்க எழுந்தருளியிருந்தனர்; அப்போது அவர் மிகவும் கிலேசப்படுவதைக் கண்டு நஞ்சீயர் சுாமின்! தேவரீர் சாமானிய மனிதரன்றே; எவ்வளவோ பகவத் பாகவத கைங்கரியங்கள் பண்ணியிருக்கிறீர்; குணாநுபவத்தாலல்லது போது போக்கி யறியீர்; இப்படியிருப்ப உம்மையும் மற்றவர்களைப் போலே இப்படிக் கஷ்டப்படுத்துகின்றானே (இறைவன்) என்றாராம். அதற்கு அவர், "நீயாள, வளையாள மாட்டோமே' என்றன்றோ கலியன்பாசுரம்? எம்பெருமானுக்கு வாழ்க்கைப்பட்டால் கிலேசப்பட்டுத்தானே இருக்க வேண்டும்?" என்றாராம். பிறகு வெளியில் எழுந்தருளின பின் நஞ்சீயர் நம்பிள்ளையை நோக்கி 'பார்த்தீரா இவருடைய எண்ணத்தை? என்ன பாசுரம் எடுத்துக்காட்டியுள்ளார்!" என்று அருளிச் செய்து மகிழ்ந்தாராம். (பாசுரம்- 47 காண்க). முன் நடந்ததைப் பின்னர் சொல்வதால் இஃது ஐதிகம். இந்த ஐதிகம் ரஸோக்தியாகவும், வெளிப்படுவதுண்டு. (பாசுரம்-36 காண்க). இது பாசுரப் பொருளுக்கேற்ப அமையுமாறு சொல்லப்பெறும்.

இதிகாசம்: என்பது, ஒரு வரலாறு, அல்லது கதைபோல் வருவது. தேனுகன் ஆவி போயுகுமாறு கண்ணன் புரிந்த தீரச் செயலும் (பாசுரம்-90), 'புகர் உருவாகி முனிந்தவனைப் புகழ் வீட' என்பதற்குப் பௌண்ட்ரக வாசுதேவன் வரலாறு காட்டப்

பெறுவதும் (பாசுரம்-31), 'நின்கோயில் சீய்த்து என்பதற்குத் திருக்கண்ண மங்கையாண்டான் வாழ்க்கையில் நடைபெற்ற நிகழ்ச்சி காட்டப்பெறுவதும் (பாசுரம்- 230), திருக்கடல் மல்லை ஞானப்பிரானைப் பற்றிய செய்தி விளக்கப் பெறுவதுமானவை யாவும் இதிகாசத்தைச் சேர்ந்தவையாகும். இவையும் பாசுரத்தில் வரும் வரலாற்றுக் குறிப்பை விளக்குவனவாக அமையும்.

சம்வாதம்: என்பது, சம்பாஷணை; உரையாடல், எடு: 'வீவின்றி நின்றவர்' என்ற தொடரை விளக்குவதற்கு நம்பிள்ளை நஞ் சீயரிடையே நடைபெற்றதைப் போன்றது. அதாவது, "அர்ச்சுனன் தான் எம்பெருமானைப் பெற்றானோ? இல்லையோ?" என்று நம்பிள்ளை நஞ்சியரைக் கேட்க, அதற்கு அவர் அளித்த மறுமொழி: "அர்ச்சுனன் பெற்றானோ? இல்லையோ? என்ற விசாரம் உமக்கு எதற்காக? யார் யார் பெற்றார்கள்? என்று அவர்களையெல்லாம் ஆராய்ந்து பார்த்தா நாம் பற்ற வேண்டும்? எம்பெருமானுடைய அருளிச் செயல் என்று இவ்வளவே கொண்டு நாம் பற்ற வேண்டுமேயொழிய, பெற்றவர்களைப் பார்த்தன்று காணும். குளிர்ந்த தண்ணீர் கண்டால் அது குடித்து விடாய் தீர்க்கின்றோம்; இது குடித்து யார் யார் தாக விடாய் தீர்த்தார்கள்? என்று விசாரித்துப் பார்த்தா பருகுகின்றோம்? இல்லையே" என்று அருளிச் செய்தாராம். இத்தகைய சம்வாதங்களும் பாசுரத்தின் பொருளுக்குப் புதிய ஒளி காட்டுவனவாக இருக்கும்.

சரீர சரீரிபாவனை: வைணவ தத்துவத்தின் உயிராய கருத்துகளில் இது மிகவும் முக்கியமானது. எம்பெருமானார் கோஷ்டியிலே உபயவேதாந்தக் கிரந்தங்கள் காலட்சேபம் நடந்து கொண்டிருக்கும்பொழுது "ஆன்மாவுக்கு ஞான ஆனந்தங்களும் அடிமையும் நிரூபகமாகச் சொல்லப்பெறுகின்றனவே, இவற்றுள் அந்தரங்கமான நிரூபகம் எது? என்று திருவோலக்கத்தில் ஓர் ஆராய்ச்சி நடந்தது. எம்பெருமானாருக்கு இதுதான் உட்பொருள் என்று நன்கு தெரிந்திருந்தாலும் இதனை ஆசாரியர் மூலம் வெளியிட வேண்டும் எனக் கருதி கூரத்தாழ்வானைத் திருக்கோஷ்டியூருக்கு அனுப்பி நம்பியிடமிருந்து இதன் பொருளைத் தெரிந்து வருமாறு பணித்தார். ஆழ்வானும் ஆறு மாதங்கள் சேவித்திருந்து கிடைத்தற்கரிய இந்த நிதியைப் பெற்று வந்தார். அதாவது 'அடியேன் உள்ளான் உடல் உள்ளான்' (திருவாய் 8, 8:2) என்பதன் பொருளைத் தெரிந்து வந்தார். 'அடியேன் செய்யும் விண்ணப்பமே' (திருவிருத். 1) 'அடியேன் சிறியஞானத்தன்' (1, 5:7), 'ஒருவன் அடியேன் உள்ளானே' (8, 8:1) இந்த

இடத்திலெல்லாம் வெறும் ஆன்மா செயற்பட முடியாதாகையால், அது தேகவிசிஷ்டனான ஆன்மாவையே குறிக்கும்.

வேட்டார்க்கு இனிது ஆயின் அல்லது
நீர்க்கு இனிது என்று
உண்பவோ நீருண் பவர்'

என்ற கலிப்பா (கலி- 62) அடிகளில் வரும் தலைவன் கூற்றோடும் வைத்து இஃது எண்ணத்தகும். ஆனால் 'அடியேன் உள்ளான் உடல் உள்ளான்' என்ற இவ்விடத்தில் மாத்திரம் 'அடியேன்' என்பதற்கு வெறும் ஆன்மாவே பொருளாக வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. எம்பெருமான் ஜீவான்மாவையும் உடல் பொருளையும் உட்பிரவேசித்திருப்பவன் என்பது பொருளாயிற்று 'ஆன்மா' என்பதும் 'அடியேன்' என்பதும் பரியாயமாயிற்று என்பது தேறின பொருள். சரீர-சரீரி பாவனை' இதனால் விளக்கப்படுகின்றது (பாசுரம்-223 காண்க).

அகப்பொருள் தத்துவம்: ஆழ்வார் பாசுரங்களில் அமைந்த அகப்பொருள் பாசுரங்கட்கு உரையாசிரியர்கள் சமயச் சார்பு பற்றிய அற்புதமான தத்துவ விளக்கங்கள் அருளியுள்ளனர். ஆழ்வார்கள் குறிப்பாக நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் தாமான தன்மையை விட்டும் பிராட்டியாருடைய தன்மையை ஏறிட்டுக் கொண்டும் வேற்று வாயாலே பேசி அநுபவிக்கும் திறம் தோழிப் பாசுரம், தாய்ப் பாசுரம், மகள் பாசுரம் என்று மூன்று வகையாக வடிவெடுக்கும் முறை பாசுரம்-37இல் திருமந்திரத்தின் அடிப்படையில் விளக்கப்பெற்றுள்ளது. தோழிப் பாசுரத்தின் தத்துவ விளக்கம் பாசுரம் -161லும், தாய்ப்பாசுரத்தின் தத்துவ விளக்கம் பாசுரம்-191லும், மகள் பாசுரத்தின் தத்துவ விளக்கம் பாசுரம்-78லும் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு ஏறிட்டுக் கொண்டு பேசும் காரணமும் தெளிவாக்கப் பெற்றுள்ளது. மேலும் தூது பற்றிய தத்துவம் பாசுரம்-183லும், மடலூர்தல் பற்றிய கருத்து பாசுரம்-170லும் விளக்கம் பெற்றுள்ளன.

பாசுரங்களின் பிரிவினை: பராசரபட்டர் என்ற சமயப் பேரறிஞர் தாம் அருளியுள்ள திருவாய் மொழித் தனியனில்,

வான்திகழும் சோலை
மதிளரங்கர் வண்புகழ்மேல்
ஆண்ட தமிழ்மறைகள்
ஆயிரமும்

என்று சொல்லியிருப்பதனால் திருவாய்மொழி ஆயிரமும் திருவரங்கநாதன் மீதாகும் என்று ஏற்படுகின்றது. இந்த ஐதிகம் எப்படிப் பொருந்தும்? திருவாய்மொழி ஆயிரத்தில் பலபல திவ்விய தேசங்களன்றோ அனுபவிக்கப் பெற்றுள்ளன? அவற்றுள் 'கங்குலும் பகலும்' (7.2) என்ற திருவாய்மொழியொன்றே அரங்கநாதன் விஷயமாகக் காணப்படா நிற்க, பட்டர் ஆயிரமும் அரங்கநாதன் மீதாவது ஆகும் என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? என்று முன்பே சிலர் கேட்டார்களாம். அதற்கு மறுமொழி பகர்ந்தவர்கள் 'கங்குலும் பகலும்' என்ற பதிகத்தின் முடிவில் 'முகில் வண்ணன் அடிமேல் சொன்னசொல் மாலை ஆயிரத்திப்பத்தும்' என் கையாலே திருவாய்மொழி ஆயிரமும் அரங்கநாதன் திருவடிகளுக்கே சமர்ப்பிக்கப் பெற்றது; அதிலிருந்து சில திவ்விய தேசங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது; ஆனது பற்றியே 'திருவேங்கடத்துக் கிவைபத்தும்' (திருவாய் 6, 10:11) என்றும், 'இவை பத்தும் திருக்குறுங்குடி அதன் மேல்' (ஷெ 5, 5:11) என்றும் ஆழ்வாரே அருளிச் செய்துள்ளார்" என்றார்களாம். இப்படியிருக்கும் போது இந்த ஐதிகம் அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டியதாகின்றது (பாசுரம்-241 காண்க).

எம்பெருமான் சிலவற்றுடன் ஒப்பு: உரையாசிரியர்கள் எம்பெருமானை யானை, நீர், மேகம், ரத்தினம், நிதி ஆகியவற்றுடன் ஒப்பிட்டு விளக்கியுள்ளார். இவை மிகவும் அற்புதமாக உள்ளத்தைத் தொடும் விளக்கங்களாக அமைந்துள்ளன. இவை முறையே பாசுரங்கள் 58, 86, 104, 195 ஆகியவற்றில் விளக்கம் பெறுகின்றன.

சம்பிரதாயப் பெயர்கள்: வைணவ உரையில் சில பெரியோர்களின் இயற்பெயர்கள் சம்பிரதாயமாக மாறி வழங்கப்பெறும். அநுமன் 'சிறிய திருவடி'யென்றும், கருடன் 'பெரிய திருவடி' என்றும், ஆதிசேஷன் 'அணந்தாழ்வான்' என்றும், இலக்குவன் 'இளைய பெருமாள்' என்றும், வீடணன் 'விபீஷணன்' என்றும், சுக்கிரீவன் 'மகாராசர்' என்றும், ஜடாயு 'பெரிய உடையார்' என்றும், திருமலை 'திருமலையாழ்வார்' என்றும், ஆழ்வார் திருநகரியின் திருக்கோயிலிலுள்ள புளிய மரம் 'திருப்புளியாழ்வார்' என்றும், ராமன் 'பெருமாள்' என்றும், ஆளவந்தார் 'பெரிய முதலியார்' என்றும் சம்பிரதாயப் பெயர்களுடன் வைணவர்களின் திருவுள்ளத்தில் இடம்பெறுவர். இங்ஙனமே, கூரத்தாழ்வான் 'ஆழ்வான்' என்றும், கிடாம்பி ஆச்சான் 'ஆச்சான்' என்றும், திருக்குருகைப் பிரான் பிள்ளான் 'பிள்ளான்' என்றும், குருகைக் காவலப்பன் 'அப்பன்' என்றும், முதலியாண்டான்

'ஆண்டான்' என்றும் சுருக்கமான பெயர்களால் வழங்கப் பெறுவர்.

எம்பெருமானின் திருக்கழல்கள்: வைணவத் திருத்தலங்களில் திருவரங்கம் கோயில் என்றும், காஞ்சி பெருமாள்கோயில் என்றும், திருவேங்கடம் திருமலை என்றும் சம்பிரதாயமாக வழங்கப்பெற்று வருகின்றன. நம்மாழ்வாரின் முதற் பிரபந்தமாகிய திருவிருத்தத்தில் திருவரங்கம், திருவெஃகா, திருவேங்கடம் என்ற மூன்று திருப்பதி களின் பெயர்கள் மட்டிலும் வருவதால் (28, 26, 31) இச்சிறப்புப் பெயர்கள் பெற்றதாகப் பெரியோர் பணிப்பர். திருவரங்கம் அழகிய மணவாளனின் திருவடி திருப்பெலிந்த சேவடி (பெரியாழ், திரு. 5, 4:7) என்றும், கச்சி நகர் தேவப் பெருமாளுடைய திருவடி 'துயரறு சுடரடி' (திருவாய் 1, 1:1) என்றும், திருவேங்கடமுடையானின் திருவடி 'பூவார் கழல்கள்' (திருவாய் 6, 10:4) என்றும் சம்பிரதாயத் திருநாமங் களாகப் பெரியோர் பணிப்பர் (பாசுரம்-200) காண்க.

இங்ஙனமே, சரணாகதிக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் ஏழுமலையான் திருவாய் மொழியில் (6, 10:10) 'நிகரில் புகழாய்' என்பதால் வாத்சல்யமும், 'உலகம் மூன்று உடையாய்' என்பதால் சுவாமித்துவமும், 'என்னை ஆள்வானே' என்பதனால் சௌசீல்யமும், 'நிகரில் அமரர் முனிக் கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே' என்பதால் சௌலப்பியமும் தெளிவாப் பெரியோர் பணிப்பர் (பாசுரம்-202 காண்க).

தமிழின் ஏற்றம்: கீதையைக் காட்டிலும் திருவாய்மொழி உயர்ந்தது என்பதற்கு ஓர் ஐதிகம் காட்டுவர் ஈட்டாசிரியர். கீதையைக் கற்றான் ஒருவன் காலை நேரத்தில் ஒரு சபைக்குச் சென்றால் பலருமாக நாழி அரிசியைக் கொடுத்து நம்ப மாட்டாமையாலே 'புறத்திண்ணையிலே கிட' என்பார்கள் என்றும், திருவாய்மொழியைக் கற்ற ஒரு விண்ணப்பம் செய்வான் சென்றால், 'சர்வேசுவரன் அகப்படப் புறப்பட்டு எதிர்கொண்டு அகம் ஒழித்துக் கொடுத்து அமுதுபடியும் எடுத்துவிட்டு உபசரிப்பார்கள்' என்றும் நம்பி திருவழுதி நாடுதாசர் கூறுவாராம் (பாசுரம்-250 காண்க). இதனால் வடமொழியைக் காட்டிலும் தமிழுக்கு ஏற்றம் உண்டு என்பதாகக் கருதுபவர் உரையாசிரியர்கள் என்று கொள்ளலாம்

ஈசுவரன் திருமேனி: கருடனுடைய உடலாய் நிற்கும் வேதத்தின் பொருளாய் நிற்பவன், இவன் திருமேனியில் ஜீவன், ரத்தினங்களுள் சிறந்த கௌஸ்துபமாகவும், மூலப் பிரகிருதி ஸ்ரீவத்ஸம் என்னும்

மறுவாகவும், மான் என்னும் தத்துவம், கௌமோதகி என்னும் கதையாகவும் ஞானம் நந்தகம் என்னும் வாய் (கத்தி) ஆகவும், மருள் வாளின் உரையாகவும், தாமசாகங்காரம் சார்ங்கம் என்னும் வில்லாகவும், சாத்விகாகங்காரம் பாஞ்ச சன்னியம் என்னும் சாங்காகவும், மனம் சுதர்சனம் என்னும் சக்கரமாகவும், ஞானேந்திரியங்கள் ஐந்தும் கர்மேந்திரியங்கள் ஐந்தும் ஆகிய பத்தும் அம்புகளாகவும், தந்மாத்ரங்கள் ஐந்தும் பூதங்கள் ஐந்தும் ஆகிய இருவித பூதங்களின் வரிசையும் வனமாலையாகவும் இப்படி எல்லாத் தத்துவங்களும் எம்பெருமானுக்கு ஆயுதமாகவும் ஆபரணமாகவும் இருப்பதாகக் கருதுவது வைணவ மரபு. அதாவது எம்பெருமான் சேதநம் அசேதநம் என்னும் தத்துவங்கள் அனைத்தையும் ஆபரமாகவும் ஆயுதமாகவும் கொண்டுள்ளான்.

பகவானுடைய ஆபரணங்கள் 'திவ்யாபரண ஆழ்வார்கள், என்னும் திருநாமத்தால் வழங்கப்பெறும். உலகிலுள்ள மற்ற ஆபரணங்களுக்கில்லாத மென்மை, மணம், அழகு, ஒளி முதலியன இவ்வாபரணங்களுக்கு உண்டு. சங்கு, சக்கரம் முதலிய ஆயுதங்கள் பகவானை வெறுத்து நிற்பவர்களாகவும் தோன்றும். ஆபரணங் களுக்கு எங்ஙனம் தோற்றம், அழிவு முதலிய குற்றங்கள் இல்லையோ, அங்ஙனமே ஆயுதங்களுக்கும் இவை இல்லை. நித்திய சூரிகளே திவ்யாபரணாழ்வார்கள், திவ்வியாயுதாழ்வார்கள் எனப் பெயர் பெற்றுள்ளனர். இவை பகவானுடைய ஆயுதங்கள் என்னும் நிலைக்கேற்ப ஞானம், சக்தி முதலிய திருக்குணங்களைப் பெற்றுள்ளன.

நம்மாழ்வாரின் திருமேனி: நம்மாழ்வார்கள் பன்னிருவருள் சடகோபர் 'நம்மவர்' என்று போற்றத்தக்க பெருமை வாய்ந்து 'நம்மாழ்வார்' என்ற சிறப்புத் திருநாமத்தால் வழங்கப்பெறுகின்றார். ஏனைய ஆழ்வார்களை நம்மாழ்வாரின் ஒவ்வோர் அவயமாகவும், நம்மாழ்வாரை அவயவியாகவும் வழங்குவது மரபு. ஆழ்வாரின் திருமுடி நம்பெருமாள், பூதத்தாழ்வாரைத் தலையாகவும், பொய்கை பேயாழ்வார்களைத் திருக்கண்களாகவும், பெரியாழ்வாரைத் திருமுக மண்டலமாகவும், திருமழிசையாழ்வாரைக் கழுத்தாகவும், குலசேகராழ்வாரையும் திருப்பாணாழ்வாரையும் திருக்கைகளாகவும், தொண்டரடிப்பொடியாழ்வாரைத் திருமார்பாகவும் திருமங்கையாழ் வாரைத் திருநாபியாகவும், மதுரகவியாகவும் எம்பெருமானாரையும் திருவடிகளாகவும் பெரியோர் அருளிச் செய்வர். இவருக்கு திருமுடி யாகத் திகழ்பவர் நம்பெருமாள்.

நம்மாழ்வார் திருமால் திருவடியில் எப்போதும் விளங்கு கின்றார் என்பது வைணவ சமயக் கொள்கை. அதனால் திருமால் திருக்கோயில்களில் அப்பெருமானைச் சேவிக்கச் செல்வோரின் முடிமீது அவர் திருவடியாக வைக்கப்பெறுவதைச் 'சடகோபன் சடாரி' என்று வழங்குகின்றனர். 'சடகோபன்,' 'சடாரி' என்பன நம்மாழ்வாரின் திருப்பெயர்களாகும்.

ராமானுஜரின் திருமேனி: நம்மாழ்வாரைத் தலையாகவும், நாதமுனிகளைத் திருமுகமாயும், உய்யக் கொண்டாரைக் (புண்டரீகாட்சரைக்) கண்ணாகவும் மணக்கால் நம்பியைக் (ராம மிஸ்ராவைக்) கன்னமாயும், ஆளவந்தாரை (யாமுனாசாரியரை) மார்பிடமாகவும், பெரிய நம்பியைக் கழுத்தாயும், திருக்கச்சி நம்பியைத் திருக்கையாகவும், திருக்கோஷ்டியூர் நம்பியை ஸ்தமனமாயும், திருவரங்கப் பெருமாளரையரை வயிறாகவும், திருமாலையாண்டானை முதுகாயும், கிடாம்பியாச்சானை இடுப்பாகவும், எம்பாரை இடையாயும், பட்டரையும் நஞ் சீயரையும், புட்டகங்களாகவும், நம்பிள்ளையைத் துடையாயும், வடக்குத் திருவீதிப் பிள்ளையை முழங்கால்களாகவும், பிள்ளை லோகாசார்யரைத் திருவடியாயும், திருவாய்மொழிப் பிள்ளையைப் பாதரேகையாகவும், மணவாள மாமுனிகளைப் பாதுகையாயும், சேனாபதி ஜீயரை ஊர்த்துவ புண்டரமாகவும் (திருமண்காப்பு) கூரத்தாழ்வானைப் புரிநூலாகவும், முதலியாண்டானைத் திரிதண்ட மாயும், கிடாம்பியாச்சானைக் கமண்டலமாகவும், வடுக நம்பியைக் கல்லாடையாகவும், திருக்குருகைப் பிரான் பிள்ளானைத் தோமாலிகை யாகவும், பிள்ளையுறங்கா வில்லிதாசரை நிழலாகவும்-இங்ஙனம் ராமானுஜரைச் சர்வாசார்ய சொரூபராகக் கொள்வது மரபு.

கோயில், திருமலை, பெருமாள் கோயில்: திருவரங்கத்து அழகிய மணவாளன் ராமாவதாரக் கூறுடையவன் (தோலாத தனி வீரன் தொழுத கோயில்) என்றும், திருவேங்கடத்துத் திருவாழ்மார்பன் (சீநிவாசன்) கண்ணன் அவதாரக் கூறுடையவன் (கண்ணன் அடியினைக் காட்டும் வெற்பு) என்பதும், அத்திகிரி அருளாளன் இந்த இரண்டு அவதாரக் கூறுகளையுடையவன் என்பதும் வைணவர்களிடையே வழங்கி வரும் கருத்துகளாகும்.

திருவரங்க விமானம் ஏழு திருச்சுற்றுகளுக்கும் நடுவில் உள்ளது; பிரணவ ஆதாரமாயுள்ளது. நான்கு திருமறைகளும்

சாத்திரங்களும் தூபிகளாயுள்ளன. பரவாசுதேவர் இதிலிருந்து சேவை சாதிக்கின்றார்., 'ஓம்' என்ற பிரணவம் விமானமாகவும், 'நமோ நாராயணாய என்பதிலுள்ள ஏழு எழுத்துகள் ஏழு திருமதில்களாகவும் அமைந்துள்ளன. எட்டெழுத்து மந்திரத்தை ஆராய்பவருக்கு இறைவனின் தன்மை புலப்படுவது போல திரு அரங்கத்திற்குச் செல்பவர்கட்கும் இறைவன் நேரே புலனாவான் என்பது கருத்து.

விமானத்தின் முன் பகுதியில் நிற்பது 'காயத்திரி மண்டபம்' விஷ்ணு காயத்திரி மந்திரத்தின் அறிகுறியாக 24 தூண்களால் அமைக்கப்பெற்றது (24 தத்துவங்களின் அறிகுறியாக இருப்பனவாக வும் கருதலாம்.)

காஞ்சி வரதராசரைச் (அத்திகிரி அருளாளனைச்) சேவிக்க 24 படிகளை ஏறிச் செல்லவேண்டும். இவை 24 தத்துவங்களின் குறியீடுகள், அதாவது தந் மாத்திரைகள் 5; ஞானேந்திரியங்கள் 5; கர்மேந்திரியங்கள் 5; பூதங்கள் 5; ஆக இவை 20. இவற்றுடன் பிரகிருதி 1, மகான் 1, அகங்காரம் 1, மனம் 1 ஆக நான்கும் சேர 24 தத்துவங்களாகின்றன. இவற்றுடன் புருஷன் (ஜீவான்மா) 1, மகாபுருஷன் (பரமான்மா) 1 சேர்ந்து வைணவ தத்துவம் 26 ஆகின்றது.

திருக்கோஷ்டியூர் திருக்கோயிலின் விமானம் 'அஷ்டாங்க விமானம்' என்பது 96 அடி உயரம் உள்ளது. இதன் நிழல் தரையில் விழுவதில்லை தஞ்சைக் கோபுரத்தின் நிழல்போல, ஒன்றன் மீது ஒன்றாக மூன்று தளங்களையுடையது- மேல் தளத்தில் திசைக் கொன்றாக எட்டு விமானங்கள் உள்ளன. எட்டு விமானங்கள் திருமந்திரத்தின் எட்டெழுத்துகள் போலவும், விமானத்தின் மூன்று தளங்கள் திருமந்திரத்தின் மூன்று பதங்கள் (ஓம்+நமோ+நாராயணாய) போலவும், மூன்றெழுத்துகளுடன் கூடிய (அ+உ+ம=ஓம்) பிரணவம் போலவும் அமைந்திருப்பதாக ஐதிகம். (ந. சுப்புரெட்டியார், வைணவ உரைவளம், பா.எண். 231, பக். 8-79).

முதலாயிரத்தில் சீமாலிகன் வரலாறு:

சீமா லிகன்அவ னோடு
தோழமை கொள்ளவும் வல்லாய்
சாமா றவனைநீ யெண்ணிச்
சக்கரத் தால்தலை கொண்டாய்

ஆமா றறியும் பிரானே!
அணியரங் கத்தே கிடந்தாய்,
ஏமாற்றமென்னைத் தவிர்த்தாய்
இருவாட்சிப் பூச்சூட்ட வாராய்

(தோழமை-நட்பு; சாம் ஆறு-செத்துப் போகும் வழி; எண்ணி-ஆலோசித்து; தலைகொண்டாய்-தலையையும் அறுத்தாய்; ஆம் ஆறு-நடக்க வேண்டியவற்றை; அணி-அழகிய; என்னை ஏமாற்றம் தவிர்த்தாய்-எனக்குத் துன்பத்தைப் போக்கினவனே.)

இது பெரியாழ்வார் திருமொழியில் உள்ள ஒரு பாசுரம், ஆழ்வார் யசோதை நிலையிலிருந்துகொண்டு அவன் சொல்லியபடியே "நான் பல்வேறு மலர்களையும் வைத்துள்ளேன்; அவை செவ்வியழிவதற்கு முன்னே நீ அவற்றைச் சூட்டிக்கொள்ள வரவேண்டும்" என்று அக்கண்ணபிரானை அழைத்து இனியராகும் திருமொழியில் இருவாட்சிப்பூ சூட்டிக்கொள்ள வருமாறு அழைக்கின்றார் இப்பாசுரத்தில்.

சீமாலிகன் வரலாறு: மாலிகன் என்பான் கண்ணபிரானின் உயிர்த்தோழன். மேன்மைப் பொருளைத் தரும் 'ஸ்ரீ' என்ற சொல் 'சீ' எனத் திரிந்து வந்து 'சீமாலிகன்' என்று அவன் பெயரோடு அமைந்து கிடக்கின்றது. இவன் கண்ணபிரானிடம் பலவகையான ஆயுதப் பயிற்சிகளைப் பெற்றவன்; ஒருவர்க்கும் அஞ்சாமல் தன் முனைப்புக் கொண்டு சாதுசனங்களை இம்சித்துக் கொண்டிருந்தான். இதனைக் கண்ட கண்ணன் மிகவும் வருந்தி 'நண்பனாகிய இவனைக் கொல்வது தகாது; ஏதாவது செய்தேயாக வேண்டும்' என்று அறிவுரை வழங்கினான். அசுர இயல்புள்ள அந்த மாலிகனும் தன் வாயில் வந்தபடி பிதற்றி, "நீ எல்லா ஆயுதங்களைக் கையாளும் முறையைக் கற்பித்தாய்; திருவாழிப் பயிற்சியை மட்டிலும் கற்பித்தாய் இல்லை" என்று கண்ணன் மீது குறை கூறினான். கண்ணனும் 'இதில் பழகுவது உனக்கு முடியாது; எனக்கே அசாதாரணமானது' என்று சொல்ல, அவனும் 'என்னால் முடியாததும் ஒன்று உண்டோ? நீ அவசியம் அப்பயிற்சியைக் கற்பித்தே ஆகவேண்டும்' என நிர்ப்பந்தித்தான். கண்ணன் அவனையொழிக்க 'இதுதான் தக்க சமயம்' என்று திருஉள்ளம் கொண்டான். சக்கரப் படையை எடுத்துத் தன் ஒற்றை விரலால் சுழற்றிமேலெறிந்து கையிலேற்றிக் காட்டினான் கண்ணன். 'இஃது எனக்கு அரிதாமோ?" என்று மாலிகன் சொல்ல, 'ஆம்;

இஃது உனக்கு அரிதேயாகும்' என்று கண்ணன் வற்புறுத்திச் சொல்லவும் அதனை அவன் கேளாமல் அத்திருவாழியை வாங்கிச் சுழற்றியெறிந்துப் பிடிப்பதாக நினைத்துத் தன் கை விரலைக் கழுத்துக்கு அடுத்து வைத்துக் கொண்டு நின்றான். அப்போது அத்திருவாழி சுழன்று வருவதற்கு இடம் போதாமையால் அதன் வீச்சு இவன் கையில் பிடிபடாமல் இவன் இவன் தலையை அரிந்து விட்டது என்பது கதை இவ்வரலாறு எந்தப் புராணத்திலும் காணப் படாதது. வான்மீகி முனிவர் நான்முகன் வரத்தினால் பகவதவதார வரலாறுகளைத் தாமாகவே நேரில் கண்டது போலவே, ஆழ்வார் பெருமக்களும் தாமாகவே கண்டவற்றில் இவ்வரலாறு ஒன்று என்பதாகக் கொள்வர் பெரியோர், பெரியவாச்சான் பிள்ளையும், இத்திரு மொழியின் 6ஆம் பாசுரத்தின் வியாக்கியானத்தில் இதைத் தெளிவாக அருளிச் செய்துள்ளமை காணத்தக்கது. (ந. சுப்பு ரெட்டியார், வைணவ உரைவளம், பக். 27-29).

திருப்பாவை வியாக்கியானச் சிறப்பு:

உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்
நந்த கோபாலன் மருமகளே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடைதிறவாய்;
வந்துஎங்கும் கோழி அழைத்தனகாண் மாதவிப்
பந்தர்மேல் பல்கால் குயில்இனங்கள் கூவினகாண்
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்துஏலோர் எம்பாவாய்.

(உந்து-வென்று தள்ளப்படுகின்ற; கந்தம்-மணம்; குழல்-தலைமுடி; பந்துஆர் விரலி-பந்து பொரு; மீதிய விரலையுடையவள், மைத்துனன் - கணவன்; சீர் ஆர் -சீர்மை பொருந்திய)

இஃது ஆயச் சிறுமிகள் நப்பின்னைப் பிராட்டியை எழுப்பு கின்ற பாசுரம்; "இது எம்பெருமானார் விசேஷித்து உகந்த பாட்டு."

ராமானுஜரைத் திருப்பாவை ஜீயர் என்று பெருமையாகப் பேசுவதுண்டு. காரணம், ஆண்டாளின் திருப்பாவையின் மீது இவருக்குத் தனி ஈடுபாடு. இவர் மடாதிபதியாக இருந்தபோதும் கூட தாம் மேற்கொண்டிருந்த துறவுநெறிக்கு இணங்க, பிச்சை எடுத்துப் பசி தீர்த்துக் கொள்வார்; பிச்சை எடுக்கப் போகும்போது

திருப்பாவைப் பாசுரங்களை ஓதிக்கொண்டே செல்வார். ஒரு நாள் 'உந்து மதகளிற்றன்' என்ற மேற்குறிப்பிட்ட திருப்பாவைப் பாசுரத்தை ஓதியவண்ணம் பெரிய நம்பிகளின் திருவாசலை நெருங்கி வந்தார். அங்கு வருவதற்கு முன் பாசுரத்தில் பாதிக்கு மேல் ஓதி முடிந்தது.

பந்தார் விரலி! உன்
மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையால்
சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய்

என்று பாசுரப் பகுதி இவர் வாயினின்று மிடற்றொலியாக வந்து கொண்டிருந்தபோது இவர் நம்பிகளின் வாசலுக்கு நேரே வந்து விட்டார்.

இந்தச் சமயத்தில் இல்லத்தினுள்ளே பந்தும் கையுமாக விளையாடிக் கொண்டிருந்தாள் திருமணமாகாத அத்துழாய் என்ற பெரிய நம்பிகளின் திருமகள். கதவு தாளிடப் பெற்றிருந்தது. பந்தார் விரலி... வந்து திறவாய்' என்ற பாசுர அடிகள் காதில் விழுந்ததும் பந்தும் கையுமாக இருந்த அத்துழாய் பளிச்சென்று திருக்காப்பு நீக்கினாள். (கதவைத் திறந்தாள்) "யாரோ பாடிக்கொண்டு வருகிறாரே" என்று, 'பந்தார் விரலி' என்று பாசுரம் வருணிக்கும் அதே கோலத் தோடு மணிக்கதவம் தாள் திறந்த பெண்மணி ராமானுஜரின் திருக்கண்களுக்கு அந்தப் பாசுரத்தில் வரும் நப்பின்னைப் பிராட்டி யாகவே இலக்காயினாள்.

'மலரடி பெயர்த்து வந்து, மெல் விரல்கள் சிவப்பெய்தத் தாள் திறக்கின்றாள் நப்பின்னை!' என்ற ஆனந்தக் காட்சிக்கு ராமானுஜர் உள்ளம் திறை கொடுத்தது; அந்த வாசலில் தம் பொன்னொத்த மேனி புழுதிபடியத் தொண்டனிட்டார் அவளை நப்பின்னைப் பிராட்டியாகவே கருதி, இந்நிலையில் அத்துழாய் பரபரப்புடன் ஓடி நம்பிகளிடம், 'ஜீயர் என்னைக் கண்டதும் மூர்ச்சித்து விழுந்தார்' என்று தெரிவித்தாள். உடனே நம்பிகள் "உந்து மதகளிறு' அநுசந்தமாயிருக்கும்" என்றார். பிறகு வாசலுக்கு வந்து எம்பெருமானாரைக் கண்டு, 'வாரும் திருப்பாவை ஜீயரே, நானும் ஓதி உணர்ந்திருக்கின்றேன், இப்பாசுரத்தை; ஆனால் உம்மைப் போல் அநுபவித்ததே இல்லை' என்று இவர் பக்தியைப் பாராட்டினார்.

ஆண்டாள் தம் கால எல்லையை மாசீகத்தால் கடந்து கண்ணன் அவதரித்த காலத்துக்குச் சென்று தம்மைக் கோபியருள் ஒருத்தியாகக் கருதிக் கிருஷ்ணாநுபவம் பெறுகின்றாள். ராமானுஜரும் ஆண்டாள் பாசுரத்தை ஓதி உளங் கரைந்து அதே அநுபவத்தைப் பெறுகின்றார். இதை உளவியலார் 'ஒட்ட உணர்தல்' (Empathetic Feeling) என்று கூறுவர். இங்கு ஆண்டாளும் ராமானுஜரும் கோபியருள் ஒருத்தியாகவே ஆய்விடுகின்றனர். இருவரும் கோபியின் உணர்ச்சியைப் பெரிதும் பெறுகின்றனர். (ந. சுப்புரெட்டியார், வைணவ உரைவளம், பக். 33-35).

இவ்வாறே நாச்சியார் திருமொழி, பெருமாள் திருமொழி, திருச்சந்த விருத்தம் திருமாலை, அமலனாதிபிரான், கண்ணிநுண் சிறுதாம்பு முதலியவற்றிலிருந்து தேர்ந்தெடுத்த பாசுரங்களுக்குரிய உரைத்தன்மையை எடுத்தாண்டு வைணவ உரைச்சிறப்பைப் புலப் படுத்தியுள்ளார்.

நந்தனார் களிறு:

இது பெரிய திருமொழியில் அமைந்த பாசுரம்

வேதத்தை வேதத்த தின்சுவைப் பயனை
விழுமிய முனிவரர் விழுங்கும்
கோதிலின் கனியை நந்தனார் களிற்றைக்
குவலயத் தோர்தொழு தேத்தும்
ஆதியை அமுதை என்னை ஆளுடைய
அப்பனை ஒப்பவர் இல்லா
மாதர்கள் வாழும், மாடமா மயிலைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே

(வேதம்-வேதசொரூபியானவன்; வேதத்தின் பயன் - வேதத்தில் நுவலப் பெற்றுள்ள கருமங்களின் பலன்களைக் கொடுப்பவன்; விழுங்கும் - அநுபவிக்கும்; கோது-குற்றம்; இன்கனி-இனிமையான கனிபோன்றவன்; நந்தனார் களிறு-நந்தன் வயிற்றில் பிறந்த ஆனைக் கன்று போன்றவன்; குவலயத்தோர்-பூமியிலுள்ளோர்; ஏத்தும்-துதிக்கும்; ஆதி-ஜகத் காரண பூதன்; ஆள்-அடிமை; ஒப்பவர் ஒப்புடையவர்; கண்டேன்-சேவிக்கப் பெற்றேன்)

திருவல்லிக்கேணியை மங்களா சாசனம் செய்த திருமொழியில் உள்ள பாசுரம். "வேத சொரூபமானவனும் உபாயங்களையும் பலன்

களையும் வேதம் மூலமாகக் காட்டிக் கொடுத்தவனும் முனிவர்களுக்கு இனிய கனி போன்றிருப்பவனும், நந்தன் திருமாளிகையில் யானைக் கன்றுபோல் விளையாடியவனும், குவலயத்தோர் தொழுதேத்தும் ஜகத்காரணபூதனும், அமுதம் போன்றவனும், என்னை அடிமை கொண்டவனுமான எம்பெருமானைத் திருவல்லிக்கேணியில் சேவிக்கப் பெற்றேன்" என்கின்றார்.

நந்தகோபனுடைய திருமாளிகையில் யானைக் கன்றுபோல் விளையாடினவன். யானையானது ஒருநாள் கண்டோமென்று திருப்பதியாயிருக்க வொண்ணாதபடி நாடோறும் காணவேண்டும் என்னும் விருப்பத்தை உண்டாக்குவதும், மிக்க செருக்கையுடையதும், கைக்கு எட்டினாரை நினைத்தபோது எடுத்துக் கழுத்திலே வைத்துக் கொள்வதும், தன்மீது ஏற நினைப்பார்க்குத் தன்னைப் பணிந்து கொடுப்பதும், உதவாதாரை ஆராயாது கிழித்துப் போடுவதும், தன்னைக் கட்டுமாறு தானே கயிற்றை எடுத்துக் கொடுப்பதுமாக இருக்கும்; அவ்வாறே நாடோறும் சேவிக்கத்தக்க வடிவழகும், எப்பொழுதும் இறைவனாயிருக்கும் தன்மை தோன்றிக் கொண்டிருக்கும் செருக்கும், நித்திய சம்சாரியொருவன் தன்னைச் சரணமடைந்ததே காரணமாக அவனது குற்றங்களைக் குற்றங்களாகக் கொண்டு தன்னை அவனுக்குக் கொடுத்தால் கேட்பாரில்லாத உரிமையும், கருமம் ஞானம் முதலிய உபாயங்களால் தன்னையடைய விரும்பினவர்க்கும் தன்னைக் கொடுக்கும் சீலமும், தனது அடியார்களின் விரோதிகளை ஆராயாது அழிக்கின்ற விரோதி நிரச சுபாவமும், தன்னைக் கட்டுப்படுத்துமாறு பக்தியைத் தானே தருகின்ற ஆவலை உண்டாக்கும் தன்மையும் உடையவன் எம்பெருமான். ஆதலால் களிறு அவனுக்கு முற்றுவமையாகும் (வைணவ உரைவளம், பா.எண். 29, பக். 86-87).

தெட்ட பழம்:

பாட்டரைவே ரகலல்குல் பவளச் செவ்வாய்
பணைநெடுந்தோள் பிணைநெடுங்கண் பாலா மின்சொல்
மட்டவிழும் குழலிக்கா வானோர் காவில்
மரங்கொணர்ந்தான் அடியணைவீர், அணில்கள் தாவ
நெட்டிலைய கருங்கமுகின் செங்காய் வீழ
நீள்பலவின் தாழ்சினையில் நெருக்கு, பீனத்
தெட்டபழம் சிதைத்துமதுச் சொரியும் காழிச்
சீராம விண்ணகரே சேர்மி னீரே

(பட்டு-பட்டுச் சேலை அணிந்துள்ள; அரவுஅல்குல்-பாம்பின் படத்தையொத்த; அல்குல்-நிதம்பம்; பணை-மூங்கில்போன்று; பிணை-பெண்மான்; பாலாம்-அமுதம் போன்று; மட்டு-தேன்; வானோர்கா-தேவலோக சோலை; சூழலி-சத்தியபாமை; நெடு இலைய - நீண்ட இலைகளையுடைய; பீனம் - பருத்த; தெட்ட - கனியப் பழுத்த; சிதைந்து - நசுங்கி; மது - தேன்; சொரியும் - பொழியும்)

சீராம விண்ணகரம் பற்றிய பாசுரம், சத்தியபாமைப் பிராட்டிக்காக பாரிஜாத மரத்தைக் கொணர்ந்த பெருமான் அடியைப்பேண விருப்புடையார்க்குக் காழிச் சீராம விண்ணகரே கதி என்கிறார் ஆழ்வார்.

எம்பெருமானார் இத்திவ்வியப் பிரபந்த காலட்சேபம் நடத்தி வரும்போது இவ்விடத்திலுள்ள 'தெட்ட' என்பதற்குச் சரியான பொருள் விளங்கவில்லை என்று அருளிச் செய்து வைத்து, பின்பொருகால் திவ்வியதேச யாத்திரை எழுந்தருளும்போது இத் தலத்தின் சோலை வழியே வந்து கொண்டிருக்க, அங்கே நாவல் மரங்களின்மீது சிறு பிள்ளைகள் ஏறிப் பழம்பறியா நிற்கையில் கீழே இருந்த சில பிள்ளைகள் 'அண்ணே! தெட்ட பழமாகப் பார்த்துப் பறித்துப்போடு!' என்ன, அதனை யாத்ருச்சிகமாகக் கேட்டருளின எம்பெருமானார், 'பிள்ளாய்! தெட்ட பழமென்றால் என்ன?' என்று வினவியருள, 'கனியப் பழுத்த பழம்' என்று இப்பிள்ளைகள் சொல்ல, உடையவரும் திருவுள்ளம் உவந்து 'இது ஒரு திசைச் சொல் போலவே இருந்தது; நம்மாழ்வாரின் திருநாவாய்ப் பதிகத்திலே (திருவாய் 9, 8:1) "குறுக்கும் வகையுண்டு கொலோ?" என்றதையொக்குமிது என்றருளிச் செய்தாரென்று பெரியோர் பணிப்பர். (ந.சுப்புரெட்டியார், வைணவ உரைவளம், பா.எண். 456, பக். 124-126).

ஏழாம்பத்து:

கறவா மடநாகுதன்
　　கன்றுள்ளி னாற்போல்
மறவா தடியேன்
　　உன்னையே யழைக்கின்றேன்
நறவார் பொழில்சூழ்
　　நறையூர் நின்றநம்பி
பிறவாமை யெனைப்பணி
　　எந்தை பிரானே!

(கறவா-பால்சுரவாத; மடநாகு-இளம்பசுவை; தன் கன்று-அதன் கன்று; உள்ளினாற்போல் நினைத்துக் கத்துவதுபோல்; மறவாது-மறக்காமல்; எனை-என்னை; பிறவாமை-சம்சாரத்தில் பிறவாதபடி; பணி-செய்தருள்வாய்)

"நறையூர்ப் பெருமானே! உன்னை இடைவிடாது அநுபவிப்பதற்கு இடையூறாகவிருக்கும் சம்சார சம்பந்தத்தை நீக்குவாய்; கன்றுக்குட்டி தன் தாய்ப்பசு பால் சுரவாவிடில், அதனையே நினைத்துக் கத்துவது போலவே பேறு பெறாத அடியேன் ஓயாது உன்னையே சொல்லிக் கதறுகின்றேன்" என்கின்றார்.

ஐதிகம்: பிள்ளை யமுதனார் என்னும் ஆசிரியர் இப்பாசுரத்தின் முதலடிக்குப் பொருள் சொல்ல நினைத்து "கறவா மடநாகு கறவாத மடநாகானது; தன்கன்று உள்ளினாற்போல்" என்று பொருள் சொல்லப் பார்த்து இல்பொருள் இரண்டாம் அடியோடு சேராமையாலும் வேறு வகையாகப் பொருள் சொல்லப் புரியாமலும் சிறிது வருத்தப்பட்டார். (நாகானது தன் கன்றை நினைக்குமாப்போலே என்றால் நாகின் நிலையில் ஆழ்வாரான தம்மையும், கன்றின் நிலையில் எம்பெருமானையும் கொள்ள வேண்டி வருவதால் மிகவும் சங்கடப்பட்டார். அப்போது பட்டரிடத்தில் பொருள் கேட்ட ஒருவர் அவ்வமுதனார் கோஷ்டியில் இருக்கக் கண்டு அவரை நோக்கி, "இவ்விடத்திற்குப் பட்டர் நிர்வகிப்பது எங்ஙனே?" என்று கேட்க; 'நாகு' என்பதில் இரண்டாம் வேற்றுமை தொக்கியிருப்பதாகக் கொண்டு, கறவா மடநாகைத் தன் கன்றுள்ளினாற்போல் என்பது பட்டர் நிர்வாகம் என்றாராம். "நாகுதன்-நாகினுடைய, கன்றானது உள்ளினாற்போல- தாயையே நினைத்துக் கத்துவதுபோலே" என்றுரைப்பதும் உண்டு. நாகு-இளம் பசு. பால் சுரவாத பசுவின் நிலையில் அருள் புரியாத எம்பெருமான் கொள்ளப்பட்டான்; கத்துகின்ற கன்றின் நிலையில் தம்மை வைத்துக் கொண்டார். (ந. சுப்புரெட்டியார், வைணவ உரைவளம், பா.எண். 69, பக். 167-168).

திருவாய்மொழி:

மானேய் நோக்கி மடவாளை
    மார்பிற் கொண்டாய் மாதவா
கூனே சிதைய உண்டையில்
    நிறத்தில் தெறித்தாய் கோவிந்தா
வானார் சோதி மணிவண்ணா

மதுசூ தாநீ யருளாய்உன்
தேனே மலருந் திருப்பாதம்
சேரு மாறு வினையேனே

(மானேய் நோக்கி-மானின் பார்வை போன்ற பார்வையினையுடையளாகிய திருமகள்; கோவிந்தன்-சீராமன்; பூமியைக் காப்பவன்; கோ-பூமி; வான்-மோட்ச உலகம்; மதுசூதன் மது என்ற அரக்கனைக் கொன்றவன்)

இது நம்மாழ்வாரின் திருவாய்மொழியிலுள்ள பாசுரம், "மானின் பார்வை போன்றே பார்வையினையுடையளாகிய திருமகளை மார்பில் தரித்திருப்பதால் மாதவன் என்னும் பெயரினையுடையவனே; கூனியின் கூன்நிமிர்ந்த கோவிந்தனே! பரமபதம் நிரம்பும்படியான நிறைந்த ஒளியையுடைய நீலமணி போன்ற நிறத்தையுடையவனே! மது என்னும் அரக்கனைக் கொன்றவனே! உன்னுடைய தேன் மலர்கின்ற திருவடித் தாமரைகளை பாவியான அடியேன் சேரும்படி திருவருள் புரிவாய்" என்பது பாசுரத்தின் பொருள்.

இந்தப் பாசுரத்தில் "கூனே சதைய உண்டைவில் நிறத்தில் தெறித்தாய்" என்பதற்கு இரண்டு வரலாறுகளைக் கூறுவர் வியாக்கியாதாக்கள்.

1. **ராமாவதாரத்தில்:** வனவாசத்திற்குக் காரணமான கூனியைச் சொல்லும்போது இளமையில் சுண்டுவில் கொண்டு திரிகின்ற காலத்தில் பெருமான் லீலாரசம் அநுபவித்தார் என்பது வரலாறு. இப்போது கோவிந்தா என்பதற்குப் பூமியைக் காப்பவன் என்பது பொருள். இங்கு கூனே சிதைய - (மந்தரையின்) கூன் முன்னும் பின்னும் தள்ளுண்ணும்படியாக (நோவு அடையும்படியாக), உண்டைவில்-சுண்டு வில்லைக் கொண்டு; நிறத்தில்-மருமத்திலே; தெறித்தாய்-எய்தாய், இவ்வாறு பொருள் கொள்ள வேண்டும்.

2. **கிருஷ்ணாவதாரத்தில்:** பலராமனும் கண்ணபிரானும் வில்விழவுக்கென்ற கம்சனால் அழைக்கப்பெற்று மதுரைக்குச் செல்லுங்கால், அரசவீதியில் சந்தக் கிண்ணத்தைக் கையிலேந்தி வருகின்ற மங்கைப் பருவமுடைய கூனியைக் கண்டு "நங்காய், யாருக்கு நீ இந்த பூச்சுக்கொண்டு செல்லுகின்றாய்?" என்று கண்ணன் பரிவுடன் கேட்க, கண்ணனின் திருக்கண்களால் மனம் கவரப்பட்ட அவள், "அழகனே, நான் நைகவக்கிரை என்பவள். கம்சனுடைய வேலையாள். சந்தனம் முதலிய பூச்சுகள் சித்தம்

செய்வதற்காக நியமிக்கப் பெற்றவள்" என்றாள். கண்ணன் "எங்கள் திருமேனிக்கு ஏற்ற வெகு நேர்த்தியான இந்தப் பூச்சை எங்கட்குத் தருக" என்றவுடன் அவளுக்கு அப்படியே அன்புடன் அதனைத் தன் திருமேனியில் பூசி மகிழ்ந்தான். அந்த மகிழ்ச்சிப் பெருக்கினாலே நடுவிரலும் முன்விரலும் கொண்ட தன் நுனிக் கையினாலே அவளது மேல்வாய்க்கட்டையைப் பிடித்து தன் திருவடிகளால் அவளது கால்களை அமுக்கி இழுத்துத் தூக்கிக் கோணல் நிமிர்த்து அவளை மகளிற் சிறந்த உருவினளாக்கியருளினன் என்பது கதை.

இந்த இரண்டாவது சமாதானத்தை நம்பிள்ளை, அன்றிக்கே, தீம்பு சேருவது கிருஷ்ணனுக்கே யாகையாலே போம் பழியெல்லாம் அமணன்தலையோடே என்னுமாப்போலே அவன் தலையிலே ஏறிட்டுச் சொல்லுதல்' என்று குறிப்பிடுவர். அதாவது - 'கூனே சிதைய உண்டை நிறத்தில் தெறித்தாய்' என்று ராமபிரானுடைய சரிதையைச் சொல்லிவிட்டுக் கணக் கடலாகிப் ராமபிரான் இப்படிப் பட்ட ஒரு தீம்பு செய்ததாகச் சொல்வதற்குத் திருவுள்ளமில்லாமல்,

"பல்லாயிரம் இவ்வூரில்
பிள்ளைகள் தீம்பு செய்வார்
எல்லாம் உன்மேலன்றிப் போகாது

என்று யசோதைப் பிராட்டிவாக்கில் வைத்துப் பெரியாழ்வார் பேசுவது போல ஊரில் நடைபெறும் தீம்புகளையெல்லாம் தனக்கே கொள்ளைப் பிறந்த கண்ணபிரான் மேலே இந்தத் தீம்பையும் ஏறிட்டு விடலாமென்று ஆழ்வார் திருவுள்ளம் பற்றிப் போலும் 'கோவிந்தா' என்று கிருஷ்ணனை நினைந்து பேசுகின்றார்.

'போம்பழியெல்லாம் அமணன் தலையோடே' என்ற நம்பிள்ளை குக்தியில் அடங்கிய வரலாறு இது: கள்ளன் ஒருவன் அந்தணன் ஒருவன் வீட்டில் சுன்னமிட்டான். அந்தச் சுவர் அன்றைக்குத்தான் வைக்கப்பெற்ற ஈரச் சுவராகையால், சுவரால் அமுக்கப்பெற்று கள்ளன் மாண்டு போனான். இந்நிலையில் கள்ளனின் உறவினர் வந்து அந்தணனைப் பழிதர வேண்டுமென்று நிர்ப்பந்தித்தனர். பின்னர் இரு திறத்தாரும் அரசன்பக்கல் சென்றனர். அந்த அரசனோ அறிவற்றவன், மூர்க்கன் அவன் அந்தணனை நோக்கி, "அந்தணா, நீ ஈரச்சுவர் வைத்ததனாலன்றோ அவன் முடிந்தான். ஆகையால் நீ பழிகொடுக்க வேண்டும்" என்றான். அந்தணன், "ஐயா, இது எனக்குத் தெரியாது; சுவர் வைத்த பணியாளைக் கேட்கவேண்டும்" என்று

பதிலிறுத்தான். பின்னர்ப் பணியாளை வரவழைத்து, "நீ தானே ஈரச்சுவர் வைத்தாய்; நீ தான் பழிதர வேண்டும்" என்று சொல்ல, அவனும், "தண்ணீர் விடுகின்றவன் அதிகமாக விட்டிட்டான்; நான் இதற்குப் பொறுப்பல்லன்" எனத் தப்பித்துக் கொண்டான். பின்னர்த் தண்ணீர்விட்டவனை அழைத்து விசாரித்தபோது அவன், "குசவன் பெரும்பானையைத் தந்தான்; அதனால் நீர் அதிகமாயிற்று; நான் என்ன செய்வேன்?" என்று கூறி நழுவினான். குசவன் அழைத்து விசாரிக்கப் பெற்றான். அவனும், "என்னால் வந்ததன்று; நான் பானையைச் சிறிதாகவே செய்ய நினைத்தேன்; அதனைச் செய்து கொண்டிருந்தபோது ஒரு வேசி போகவரத் திரிந்தாள்; என் கவனம் கலைந்தது. அவளைப் பார்க்கின்ற பராக்கிலே பானை பெருத்து விட்டது. நானென்ன செய்வேன்?" என்று மறுமொழி கூறி, பிறகு தாசியை அழைத்து விசாரிக்கும்போது, அவளும், "என்னால் வந்ததன்று; வண்ணான் என் சேலையை விரைவில் தராமையாலே நான் போகவரத் திரிந்தேன்" எனப் பதில் கூறிவிட்டாள். பிறகு வண்ணான் அழைத்து விசாரிக்கப் பெற்றான். அவனும், "ஐயனே, நான் இதற்குப் பொறுப்பல்லேன்; துணிதுவைக்கும் துறையிலே கல்லின் மீது ஓர் அமணன் (திகம்பர சாமி) உட்கார்ந்திருந்தான். எவ்வளவு உரப்பியும் அவன் எழுந்து செல்லவில்லை. பிறகு அவனாகவே எழுந்து சென்ற பிறகு சேலையைத் தோய்த்துத் தரவேண்டியதாயிற்று. நான் என்ன செய்வேன்? அந்த அமணனே தாமதத்திற்குக் காரணம் ஆவான்" என்று பதிலுறுத்தான். பின்னர் அந்த அமணனைத்தேடிப் பிடித்துக் கொணர்ந்து, "நீயன்றோ இத்தனையும் செய்தாய்? நீதான் பழிகொடுக்க வேண்டும்" என்று அரசன் கட்டளையிட, அவன் மௌனியாகையாலே ஒன்றும் விடை கூறாதிருந்தான். மூட அரசன், "உண்மையில் பழி தன்னிடத்திலுள்ளதனால்தான் இவன் வாய்திறந்திலன்; இவனே குற்றவாளி" என்று தீர்மானித்து அவன் தலையை அரியக் கட்டளையிட்டான். இக்கதை அந்நியாயத்த சரித்திலுள்ளது.

அமணன் குற்றம் செய்யாதிருக்கவும் பழி அவன் தலையிலே ஏறினாப்போல கண்ணபிரான் தீம்பு செய்யாதிருந்தாலும் பிறருடைய தீம்பும் அவன் தலையில் ஏறுமென்று விநோதமாகக் காட்டப்பெற்றது. (ச. சுப்புரெட்டியார், வைணவ உரைவளம், பா. எண். 120, பக். 259-263).

உய்வு பாயமற் றின்மைதேறிக்
கண்ணன் ஒண்க ழல்கள்மேல்
செய்ய தாமரைப் பழனத்
தென்னன் குருஊர்ச் சடகோபன்
பொய்யில் பாடல் ஆயிரத்துள்
இவையும் பத்தும் வல்லார்கள்
வையம் மன்னி வீற்றிருந்து
விண்ணும் ஆள்வர் மண்ணூடே

(உய்வு உபாயம் - தரிக்க விரகு; மற்று-வேறு வழியினால்; தேறி-துணிந்து; தண் கழலகள்-அழகிய திருவடிகள்; பழனம்-நீர் நிலம்; வையம்-பூமண்டலம்; மன்னி-நெடுங்காலம் பொருந்தி; மண்ணூடே-இந்நிலத்திலேயே; விண்ணும்-பரமபதத்தையும்; ஆள்வர்-வெறுவர்)

'எம்பெருமானது சேர்க்கையால் எய்திய இன்பத்தைக் கூறும்' திருவாய்மொழியில் ஒரு பாசுரம் இது. ஆழ்வார் இதரல், "செந்தாமரை மலர்கள் நிறைந்துள்ள வயல்களால் சூழப்பட்ட தெற்குத் திசையிலேயுள்ள சிறந்த திருக்குருகூரிலே அவதரித்த சடகோபர், நன்னெறி சேர்தற்குரிய வழி வேறு இல்லாமை தெளிந்து கண்ணபிரானுடைய சிறந்த திருவடிகளின் மேலே சாத்திய பொய் இல்லாத பாசுரங்கள் ஆயிரத்துள் இவை பத்துப்பாசுரங்களையும் கற்று வல்லவர்கள் பூவலகில் பலகாலம் தங்கியிருந்து இவ்வுலகத்தில் இருந்து கொண்டே பரமபதத்தையும் ஆட்சி புரிவர்" என்கின்றார்.

'வையம் மன்னி வீற்றிருந்து' என்ற இடத்தில் "நம்மைப் போலே வாய்புகு சோறாகப் பறி கொடாதே பலகாலம் பூமியிலே ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயோடே 'நாட்டாரோடு இயல் ஒழிந்து' என்கின்றபடியே, தங்கள் வேறுபாடு தோன்ற இருக்கப் பெறுவார்கள்" என்று (நஞ்) சீயர் உருத்தோறும் அருளிச் செய்வர். பால்யத்தில் பட்டரைப் பறி கொடுத்தவர் அன்றோ இவர்?

நஞ்சீயர் பட்டர் திருவடி சம்பந்தம் பெற்றபின்பு நெடுங்காலம் பட்டரிடம் அர்த்த விஷேசங்கள் கேட்டு இன்புற வேண்டுமென்று இருந்தார்; இருக்கையில் பட்டர் திருநாட்டுக்கெழுந்தருள நேர்ந்து விட்டது. இதுவே இவர் தம் வருத்தத்திற்குக் காரணம்.

இன்னொரு குறிப்பு: பட்டர் இருபத்தெட்டு (அல்லது முப்பத்து இரண்டு) அகவையில் திருநாட்டுக்செழுந்தருளினார் என்று கிடைத்திலது; ஆராய்ந்து பார்க்குமளவில் பட்டர் ஐம்பது

அல்லது ஐம்பத்தைந்து வயது வரை எழுந்தருளியிருந்தார் என்று கூறுவதற்குச் சான்றுகள் உள்ளன. நூற்றிருபது திருநட்சத்திரம் (வயது) எழுந்தருளியிருந்த எம்பெருமானாரை நோக்குமிடத்து பட்டர் எழுந்தருளியிருந்தது மிகவும் சிறிது காலமே என்று சொல்லலாம்படி உள்ளது என்பர் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்காராச்சாரிய சுவாமிகள். (ந. சுப்புரெட்டியார், வைணவ வரலாறு, பா.எண். 156, பக். 332-333).

பண்டைநா ளாலே நின்தரு வருளும்
பங்கயத் தாள்திரு அருளும்
கொண்டு, நின் கோயில் சீய்த்துப்பல் படிகால்
குடிகுடி வழிவந்தாட் செய்யும்
தொண்டரோர்க் கருளிச் சோதிவாய் திறந்துன்
தாமரைக் கண்களால் நோக்காய்
தெண்டிரைப் பொருநல் தன்பணை சூழ்ந்த
திருப்புளிய குடிக்கிடந் தானே

(பண்டைநாள் - நெடுநாள்; புங்கயத்தாள் - பெரிய பிராட்டியார்; கோயில் சீய்த்து-திருவலகிடுதல், மெழுகுதல், கோலமிடுதல் போன்றவை செய்து; பல படிகால்-அநாதி காலமாக; குடிகுடி வழி வந்து - வமிச பரம்பரையாக; ஆட்செய்து - அடிமை செய்து; தென் திரை - தெளிந்த அலை; பொருநல் - பொருநை நதி; பணை - பண்ணை)

எல்லா உறவின் காரியமும் நமக்குக் குறைவில்லாமல் அருளுமாறு ஆழ்வார் எம்பெருமானை வேண்டுவதாக அமைந்த திருவாய்மொழியில் இஃது ஒரு பாகம். இதில் ஆழ்வார், "தெளிந்த அலைகள் பொருந்திய தாமிரபரணியையுடைய, குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த திருப்புளியக் குடி என்னும் திவ்விய தேசத்தில் சயனத் திருக்கோலம் கொண்டிருப்பவனே! உனது திருவருளையும் பெரிய பிராட்டியாரின் திருவருளையும் ஆதிகாலம் தொடங்கியே உடையோமாய்க் கொண்டு, உனது திருக்கோயிலைத் தொட்டு வமிச பரம்பரையாக வந்து அடிமை செய்கின்ற அடியவர்களாகிய எங்களுக்குத் திருவருள் செய்து, பிரகாசம் பொருந்திய திருவாயைத் திறந்து வார்த்தைகளைப் பேசி, உனது தாமரைக் கண்களால் நோக்கி அருளவேண்டும்" என்கின்றார்.

இந்தப் பாசுரத்தின் உரையில் இரண்டு ஐதீகங்கள் காட்டப் பெறுகின்றன.

ஐதிகம்-1: நின்கோயில் சீய்த்து: திவ்விய தேசங்களில் பண்ணும் கைங்கரியங்களில் தலையாயது இது. படைத்தலைச் சீய்க்கப் பெற்றால் சுடுவினைகளையலாமே" என்று மேலும் அருளிச் செய்வர். திருவலகிடுதல், மெழுகுதல், கோலமிடுதல் முதலியன செய்தலையே 'கோயில் சீய்க்கை' என வழங்குவர். இங்கே ஈட்டில் திருக்கண்ண மங்கையாண்டானின் இதிகாசம் ஒன்றுள்ளது. அஃது இது: திருக்கண்ண மங்கையாண்டான் திருக்கண்ண மங்கை என்னும் திவ்விய தேசத்திலே ஒரு மகிழ மரத்தடியிலிருந்து, சருகைத் திரு அலகிடா நிற்க, கூடவாசித்து நாத்திகனாயிருப்பான் ஒருவன் 'பகவான் உபாயம், நாம் வேறு பயன் கருதாதவர்கள், இப்போது செய்யும் இப்பணக்குப் பயன் என்ன?' என்றானாம். அப்போது திருக்கண்ண மங்கையாண்டான் திருஅலகு இட்ட இடத்தையும், திருஉலகு இடாத இடத்தையும் காட்டி, இவ்விடமும் அவ்விடமும் இருந்தபடி கண்டாயே, இங்கொரு பலம் இல்லை என்று தோற்றியிருந்ததோ?" என்று பணித்தாராம்; இங்கு அறிய வேண்டுவதாவது; நேரில் காணும் பயன் என்றும், நேரில் காணாப் பயன் என்றும் இருவகைப்படும். சந்நிதி வாசலை அலகிடுதல் முதலிய திருப்பணிகளை ஒரு பயன் கருதாது செய்வதனால் ஒரு குறையும் இல்லை; இது பயனற்றது என்று கருதுதல் வேண்டா; திருவலகிடாத இடம் கண்டுகொண்டு காண வொண்ணாததாயும், திருவலகிட்ட இடம் கண்ணாற் காண இனிதாயிருப்பதே பயன்.

ஐதிகம்- 2: தாமரைக் கண்களால் நோக்காய்: வார்த்தையிலே தோற்றாத அன்பும் நோக்கிலே அநுபவிக்கும்படி குளிர நோக்கி அருளவேண்டும். (கோயிலில் (திருவரங்கத்தில்) பிள்ளை தேவப் பெருமாள் அரையர் இப்பாசுரத்தைச் சேவிக்கையில் 'உன்தாமரைக் கண்களால் நோக்காய்' என்று ஒரு தடவை சொல்லி நிறுத்தாமல் 'நோய்காய், நோக்காய், நோக்காய் என்று பலகாலும் சொல்லிக் கொண்டிருந்தது மேலடியில் போக மாட்டாதே நின்றாராம்; அப்போது கோஷ்டியில் வீற்றிருந்த அவரது திருத்தந்தையாரான ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர் எழுந்திருந்து "பிள்ளாய்! நீ எம்பெருமான் திருவுள்ளம் புண்படும்படி இங்ஙனம் பலகாலும் சொல்லி நிர்ப்பந்திக்கலாமோ? அழகிய மிடற்றைத் தந்து, நல்ல பாசுரத்தைத் தந்து, பிள்ளைகளையும் செல்வத்தையும் தந்தருளி

யிருக்க ஒன்றும் செய்யாதாராக நினைத்து இன்னமும் 'நோக்காய், நோக்காய், நோக்காய்' என்றால் 'இஃது என்னே! மேலே பாடு' என்றாராம். (ந.சுப்புரெட்டியார், வைணவ உரைவளம், பா.எண். 231, பக். 492-495).

பின்னிணைப்பில் வைணவப் பெரியார்களின் பட்டியலை இணைத்துள்ளார். அவர்களுள் இன்றியமையாத சிலரை ஈண்டு காணலாம்.

அழகிய மணவாள ஜீயர்

நம்பிள்ளையின் சீடர், முதலிய இவர் புலவரல்லர். இவர். நம்பிள்ளையின் திருவடியில் நன்கு கற்று விரைவில் புலவரானார். தம்மைப் பரிகசித்தவர்கள் வியக்கும்படி முசலகிசலயம் என்ற ஒரு நாடகத்தையும் அப்பேருள்ள ஒரு காவியத்தையும் செய்தருளினார். இவர் சந்நியாசியாசிரமத்தை மேற்கொண்டு செய்தருளினார். இவர் சந்நியாசியாசிரமத்தை மேற்கொண்டு திருவாய்மொழிக்குப் பன்னீராயிரப்படி என்ற உரையை அருளிச் செய்தார். இது தவிர, திருவித்தத்திற்கு ஸ்வாபதேச உரை, ரகசியத்திரய விஷயமாக தத்துவ தீபம் என்ற நூல், அதற்கு உரையாக தத்துவப் பிரகாசம் என்ற நூல், ரகசியத்திரய காரிகை என்ற நூல் ஆகியவற்றைச் செய்தவர்.

பெரிய வாச்சான் பிள்ளை (ஆச்சான் பிள்ளை)

பெரியவாச்சான் பிள்ளை. இவர் நம்பிள்ளையின் சீடர். நம்பிள்ளையின் நியமனத்தினால் திருவாய்மொழிக்கு 'இருபத்து நாலாயிரப்படி' என்ற வியாக்கியானமும், மற்ற மூவாயிரத்துக்கும் வியாக்கியானமும் செய்தார். 'உரை வேந்தர்' என்ற புகழ்பெற்றவர். இவர் பிறந்த ஊர் சேங்கநல்லூர் (தஞ்சை மாவட்டம்).

ஆளவந்தார்

யாமுனாசாரியர் என்ற திருப்பெயரினர். மணக்கால் நம்பிக்குப் பின்வந்த ஆசாரியர். ஈசுவரமுனிகளின் குமாரர்; நாதமுனிகளின் பேரர். மகாபாஷ்ய பட்டரிடம் சாத்திரப்பயிற்சி பெற்றவர். மகாபாஷ்யப்பட்டருக்குப் பதிலாக இவர் தண்டிகையிற் சென்று ஆக்கியாழ்வானை வாதில் வென்றவர்; அரசமாதேவி திருவரங்கத்தம்மையாரால் 'என்னையாள் வந்தார்' என்று புகழப் பெற்று அன்று முதல் 'ஆளவந்தார்' என்று புதிய திருநாமத்தால் திகழ்ந்தவர். அரசன் வென்றவனுக்குப் பாதி ராச்சியமும் தோற்றவர்க்குப் பணி செய்தலும்

எனக் கூறிப் பந்தயத்தில் ராச்சியத்தை மாத்திரம் கொண்டு பணி செய்தலை விலக்கிக் கொண்டவர். இல்லற வாழ்க்கையை ஏற்று சொட்டை நம்பிகள், திருவங்கப் பெருமாளரையர் முதலிய குமாரர்களைப் பெற்று இன்புற்றிருந்தவர். மணக்கால் நம்பிகளிடம் ரகசியங்கள் உபதேசம் பெற்று, நாளுக்குநாள் சம்சாரத்தில் வெறுப்புற்றவர். நம்பிகள் பெரிய பெருமாளிடம் அவரை இட்டுச் சென்று 'இதுதான் நும் பிதாமகர் தேடிவைத்த மாநிதி' எனக்காட்ட, அன்றுமுதல் தம் குமாரர்களையும் நம்பிகளின் திருவடிகளிவிட்டுத் ஆச்சரியக்கச் செய்து ஆத்ம சமர்ப்பணம் செய்து சதுசுலோகி என்ற வடமொழி நூலை அருளிச் செய்து துரியாச்சிரமத்தைக் கைக்கொண்டவர். இவர்தம் சீடர்கள் பெரியநம்பி, திருக்கோஷ்டியூர் நம்பி, பெரிய திருமலை நம்பி, திருமாலையாண்டான், மாறனேர் நம்பி, திருவரங்கத்தம்மை, திருக்கச்சி நம்பி முதலியோர், 'ஆகமப் பிரமாண்யம்' 'புருஷநிர்ணயம்,' 'ஆத்மசித்தி,' 'கீதார்த்த சங்கிரகம்,' 'ஸ்ரீஸோத்திரம்,' 'சது சுலோகி' முதலிய வடமொழி நூல்கள் இவர் அருளிச் செய்தவை. ராமானுஜரின் மானச ஆசாரியர்.

திருக்குருகைப் பிரான்பிள்ளான்

இவர் பெரிய திருமலை நம்பியின் திருமகனார்; ராமானுஜரின் சீடர்; திருவாய் மொழிக்கு 'ஆறாயிரப்படி' என்னும் வியாக்கியானத்தை அருளிச் செய்தவர். பிள்ளான் என்பது இவருடைய இயற்கைப் பெயர். திருக்குருகைப்பிரான் என்பது நம்மாழ்வாரின் திருப்பெயர்; அவருடைய திருப்பெயரை, அவருடைய நினைவின்பொருட்டு தம் சீடரும் அபிமான புத்திரருமான இவருக்கு வைத்தவர் ராமானுஜர். பின்னர் 'திருக்குருகைப் பிரான் பிள்ளான்' என்றே இவர் வழங்கப்பட்டார். திருவரங்கத்தில் வாழ்ந்தவர். 74 சிம்மாசனாதிபதிகளுள் இவர் ஒருவர்.

நஞ்சீயர்

இவர் பிறப்பிடம் திருநாராயணபுரம். இவர் வேதாந்தி என்று பெயர் கொண்ட அத்வைதி. பட்டரிடம் வேதாந்த விஷயம்பற்றி வாதிட்டுத் தோற்றவர். பின்னர் பட்டரின் திருவடி சம்பந்தம் பெற்றுச் சீடரானார். ஒரு நாள் பிச்சைக்கு வந்த வைணவருக்குப் பிச்சையிட மறுத்த தேவியரை வெறுத்துத் திரவியத்தைப் பகுத்து பெண் சாதிக்கு அளித்து குருதட்சிணை கொண்டு சந்நியாசியா சிரமத்தை அடைந்து ஆசாரியரைக் காணப் போனார். 'நம் ஜீயர்'

வந்தார் பட்டர் சொல்ல, அன்றிருந்து இவருக்கு 'நஞ்சீயர்' எனப் பெயர் உண்டாயிற்று. ஸ்ரீரங்கநாதர் என்பது இவருக்குத் தாஸ்யத் திருநாமம். திருவாய் மொழிக்கு 'ஒன்பதினாயிரப்படி' என்ற வியாக்கியானம் செய்தருளினார். இதைத் தவிர, 'திருப்பாவை ஈராயிரப் படி, 'திருவந்தாதிகள்,' கண்ணிநுண் சிறுத்தாம்பு,' 'திருப் பல்லாண்டு' இவற்றிற்கு உரை கண்டவர்.

நம்பிள்ளை

நம்பூரில் திருவவதரித்தவர். வரதராசர் என்பது இவரது இயற்பெயர். நஞ்சீயரால் 'நம்பிள்ளை' எனப் பெயர் பெற்றவர். இவருக்கு வழங்கிய வேறு பெயர்கள், கலிவைரி, திருக்கலி கன்றிதாசர், லோகாசாரியார், ஸ்ரீசூக்திசாகரர் என்பவை. வடக்குத் திருவீதி பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை ஆகிய இருவரும் இவருடைய சீடர்கள். திருவாய்மொழிக்கு 'முப்பத்தாறாயிரப்படி' என்னும் வியாக்கியானத்தை அருளிச் செய்தவர். திருவாய்மொழிக்கு இருபத்து நாலாயிரப்படி என்னும் வியாக்கியானம் வரையுறுமாறு பெரியவாச்சான் பிள்ளைக்குக் கட்டளையிட்டவர்.

பராசர பட்டர்

உரைகளிலே பட்டர் என்றே சுருக்கமாக வழங்கப்பெறுபவர். திருத்தமப்பார் கூரத்தாழ்வான். சகோதரர் சீராமப்பிள்ளை. நம்பெருமாள் வரப்பிரசாத்தினாலே திருவவதரித்த இவருக்குப் பராசரபட்டர் வேதவியாச பட்டர் என்றும் திருநாமம் சாத்தினார் எம்பெருமானார். கூர்மையான அறிவுடைய இவரைப்பற்றிய குறிப்புகள் ஏராளமாக உரையில் வருகின்றன. எம்பெருமானார் கட்டளைப்படி விஷ்ணு சகஸ்ரநாமத்திற்குப் பேருரை வகுத்த பெருமகனார், திருநெடுந்தாண்டகத்தில் "மைவண்ண நறுங்குஞ்சி" (21) என்ற பாசுரத்திற்கு இவர் அருளிய வியாக்கியானம். தனிப் பெருஞ் சிறப்புடையது.

இவ்வாறு 255 பாசுரங்களுக்கு வைணவ உரைகளைத் தொகுத்து அதில் அமைந்துள்ள உரைநுட்பத்தை எடுத்துக்காட்டி வைணவ சமயத்தில் தத்துவங்களை அறியச் செய்துள்ளார். இது ஒரு தொகுப்பு முறையாக இருந்தாலும் வைணவ இலக்கிய கொள்கையாக்கங்கள் இவை என உணர்ந்து கொள்வதற்குத் துணை நல்கும் நூல். அறிஞர் ந. சுப்புரெட்டியாரின் தமிழ்ப்பணி அவர்தம் நூற்றாண்டிலும் தொடர்வது ஒன்றே அவருக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடன்.

◉

10

ந. சுப்புரெட்டியாரின் இலக்கிய வகைமைச் சிந்தனைகள்

-முனைவர் சு. செல்வகுமாரன்

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் 1916இல் பிறந்தவர். நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில் இடம்பெற்றுள்ள நம்மாழ்வார் பாடலைத் தத்துவ நோக்கில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர். இவர் பள்ளியில் தலைமை ஆசிரியர், ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் விரிவுரையாளர், திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியர் மற்றும் தலைவர், சென்னைப் பல்கலைக்கழக தெற்கு தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மரபுவழிப் பண்பாட்டு நிறுவனத்தின் இயக்குனர் என பலநிலைகளில் பணியாற்றியவர். தமிழ்க் கலைக்களஞ்சியத்தின் தலைமைப் பதிப்பாசிரியர். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழ்க காஞ்சி தத்துவ மையத்தில் தலைவராக பணியாற்றிய போது 'வைணவச் செல்வம்' எனும் ஆய்வு நூலையும் உருவாக்கிய சிறப்புக்குரியவர். மொழி, இலக்கியம், அறிவியல், பயிற்றுவித்தல், ஆராய்ச்சி உள்ளிட்டவற்றில் புலமையுடைய இவர் இவை சார்ந்து நூற்றுக்கும் மேற்பட்ட நூற்களை வெளிக் கொணர்ந்துள்ளார்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் கல்கி அறக்கட்டளை சார்பாக நடத்திய நிகழ்வில் ந. சுப்புரெட்டியார் இலக்கிய வகைமைகள் குறித்து ஆற்றிய உரையே 'இலக்கிய வகைமையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்' எனும் நூலாகும். இந்நூல் ஐந்திணை பதிப்பகத்தின் மூலமாக (1997) வெளிவந்துள்ளது. இந்நூலினை மையப்படுத்தி விவாதிப்பதாகவே இக்கட்டுரை அமைகின்றது. மேலும் அவரின் இந்நூல் வெளிவந்தது முதற்கொண்டு இன்று வரையிலுமான காலகட்டத்தில் இலக்கிய வகைமை, அவை குறித்த சிந்தனைகள் எத்தகைய வளர்ச்சியைக் கண்டுள்ளன என்பதையும் கட்டுரை ஆராய்கின்றது.

இலக்கியம் என்பது கருத்தை, நிகழ்வை, புனைவை அழகியலோடு மொழி வாயிலாக வெளிப்படுத்தி மனிதனிடத்து அறிவு, உணர்ச்சி, நெகிழ்ச்சியை ஏற்படுத்தக்கூடியன. இவ்வாறு கலைத்துவமாய் உருவாகக்கூடிய இலக்கியங்களின் வகைமைகளோ ஏராளம். அவை காலம், நிலம், படைப்பாளியின் அகப்புறச் சூழல், சமூகத் தேவைகளின் அடிப்படையில் வகை வகையாய் தோன்றி வளர்வதும், மடிவதும் காரண காரியத்துடன் நடந்தேறிக் கொண்டிருப்பதை இலக்கிய வரலாறுகளும் திறனாய்வுகளும் உணர்த்தி நிற்கின்றன.

வாழ்வும் இலக்கியமும் இரண்டறக்கலந்த ஒன்று. வாழ்வு இலக்கியத்தையும், இலக்கியம் வாழ்வையும் உருவாக்கக் கூடியன என்ற நிலையில் இலக்கிய உருவாக்கம் ஏதோ ஒரு வடிவத்தில், நோக்கத்தில் இடையறாது தம்மை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கும். இலக்கியங்களுக்கான இலக்கணத்தை வரையறை செய்யும் தொல்காப்பியர் செய்யுளியலில் இலக்கியத்தை பாட்டு உரை என்றும், அடிவரையறை உள்ளன, இல்லாதன என்பதாகவும் பிரித்து வகைப்படுத்துகிறார். அவை,

"ஆசிரியம் வஞ்சி வெண்பா கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே" (தொல்-நூற்பா - 1362)

எனவும்,

"நூலினான உரையினான
நொடியொடு புணர்ந்த பிசியினான
ஏது நுதலிய முதுமொழியான
மறைமொழி கிளந்த மந்திரத்தான
கூற்றிடை வைத்த குறிப்பினான்" (தொல் - நூற்பா - 1421)

என்பதாகவும் அமைகின்றன.

இலக்கிய வகைமை குறித்து வெளிவந்த நூல்களில் பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியம் அவர்களின் 'தமிழ் இலக்கிய வகையும் வடிவும்' என்ற நூல் மிகவும் முக்கியமானதாகும். இலக்கிய வகைமை குறித்து பேசும் அவர்,

"வகைப்பாடு அல்லது பகுப்பு, இலக்கியத்தில் மட்டுமன்றி உலகிலும், வாழ்விலும், பிற பல துறைகளிலும் காணப்படுவதாம். வேறுபாடும், பெருக்கமும் பகுப்பு வகுப்புகட்குக் காரணமாகின்றன. இனம் பிரித்துக் காணும் நிலையிலும் பலவாகப் பிரிந்தவற்றை

இயைபுபற்றி சிலவாகத் தொகுத்துப் பார்க்கும் பாங்கிலும் இவ்வகைப்பாடு அமைகின்றது. புற அமைப்பும் அகவமைப்பும் வகைப்படுத்துவதற்கு அடிப்படையாக வருகின்றன. தன்மை, இயல்பு, பண்பு, பாங்கு, பயன், உருவம், உறுப்பு என்பனவும் வகைப்பாட்டிற்குத் துணைக் காரணங்கள் ஆகின்றன." (தமிழ் இலக்கிய வகையும் வடிவும், ப.29) என்பார். மேலும்,

"இலக்கிய வகைகளை வகைப்படுத்திக்காணப் பலர் பலவிதமான முறைகளைக் கையாளுகின்றனர். தமிழ் இலக்கிய வரலாற்றாசிரியர், கால அடிப்படையில் இலக்கியத்தை அணுகி, அச்சார்புடன் வகை களைக் கண்டனர் எனலாம். சங்க இலக்கியகாலம், நீதி இலக்கிய காலம், காப்பிய காலம், பக்தி இலக்கிய காலம், சிற்றிலக்கிய காலம், உரைநடை இலக்கிய காலம், நாட்டுப்புற இயல் வகை, தற்கால வகைகள் என பலவிதமாக அணுகுகின்றனர். காலக் கண்ணோட்ட நோக்கில், முதல் இலக்கிய வகைத்தோற்றம் எனும் போக்கில் இது பொருத்தமுடையதாக அமையலாம். இவ்வாறன்றி ஓரளவு பொருளடிப்படை எனும் பெருநோக்கில், தனிப்பாடல், காப்பியம், அற இலக்கியம், பக்திப் பாடல், சாத்திர இலக்கியம், சித்தர் பாடல், சிற்றிலக்கியங்கள், நாடகம், நாவல், சிறுகதை, கட்டுரை, பயண இலக்கியம், வாழ்க்கை வரலாறு, புதுக்கவிதை எனவும் காண்பது உண்டு.

வகை மாதிரியியல் ஆய்வாளர், வேறு பல கோணப் பார்வை யுடன் வகைப்படுத்துவதும் தெரிகின்றது.

1. இலக்கிய வகைகளை (genres) இனம் பிரித்தல், தனி நிலக் கவிதை, காப்பியம், பிரபந்தம், சிறுகதை, நாவல்...

2. இயக்கங்களின் அடிப்படையில் வகை மாதிரி செய்தல், பக்தி இலக்கியம், சுயமரியாதை இயக்கம், புதுக்கவிதை இயக்கம், தனித்தமிழ் இயக்கம்...

3. நடை அல்லது உத்தி அடிப்படையில் வகை மாதிரி செய்வது, நனவோடை....

4. உரிப்பொருள் என்பதனைப் பொதுமைக் கூறாகக் கொண்டு வகைமாதிரி செய்தல், அகப்பாடல், புறப்பாடல்...

5. இலக்கியப் போக்குகள் அடிப்படையில் வகை மாதிரியியல் செவ்வியல் நெறி, புனைவு நவிற்சி, இருத்தலியம், பிராய்டியம்...

இலக்கியங்களைப்பொருள் நோக்கி சில வகையாகவும், வடிவம் நோக்கி சில வகையாகவும், புலவர் தம் மனநிலை பற்றி வேறுசில வகையாகவும் பாகுபாடு செய்யலாம்" (தமிழ் இலக்கிய வகையும் வடிவும், ப.34) என அவர் குறிப்பிடுவது இலக்கிய வகைமைப் பற்றி புரிந்து கொள்ள ஏதுவாகும்.

இலக்கியத்தை "தூய இலக்கியம் (uiral literature) சார்பு அல்லது செயற்பாட்டு இலக்கியம் (Applied literature) என்றும் வகைப்படுத்துவர். இலக்கியத்தின் இயல்புகள் யாவும் முழுமையாக இடம்பெற்றுள்ள படைப்பு இலக்கியத்தை தூய இலக்கியம் என்றும், கற்பனைக்கோ சுவையழகிற்கோ இடம் தராமல் கருத்துகளை அறிவுறுத்தும் பாங்கில் அமைந்தவற்றைச் சார்பு இலக்கியம் எனவும் சுட்டுவர்" (இலக்கியக் கலை, ப. 47) என்பர் அ.ச. ஞானசம்பந்தன். மேலும் இலக்கியத்தை அறிவு இலக்கியம் (literature of Knowledge) ஆற்றல் இலக்கியம் (Literature of Power) என திறனாய்வாளர் குவின்சி (De Quiencey) குறிப்பிடுவதும் கவனத்திற்குரியது.

சுப்புரெட்டியார் இலக்கியத்தை பேரிலக்கியம், சிற்றிலக்கியம் என பிரிவுபடுத்துகின்றார். அடிகளால் மிகுந்து பொருள்களால் சிறந்து மக்கள் வாழ்வையொட்டி அவர்கள் வாழ்வைச் செம்மைப் படுத்தி இன்பம் நல்க தோன்றியவை பேரிலக்கியங்களாகும். சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம், பெரியபுராணம் போன்றவற்றை இதற்கு சான்றாகக் கொள்ளலாம்.

மேலும் அடிகளால் குறைந்து கற்பனை மிக்குக் கடவுளர்களையும், வெற்றித் திறத்தால் நாட்டுப்பரப்பை பெருக்கிய மன்னர்களையும், கொடை வன்மையாலும், பிறவற்றாலும் புகழ் எய்திய வள்ளல்கள், வேளிர்கள் போன்ற செல்வர்களையும் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு இயற்றப் பெறும் இலக்கியங்களை சிற்றிலக்கியங்கள் என்னும் குறிப்பிடுகிறார். சிற்றிலக்கியம் 96 வகைப்படும் என்பதும் அது தற்போது முன்னூறைத் தாண்டி சென்று கொண்டிருப்பது பேராசிரியர் ச.வே.சு. குறிப்பிடுவதும் கூறுதற்குரியது.

இலக்கியம் கருத்தை பதிவு செய்யும் அடிப்படையில் நாட்டுப்புற இலக்கியம், நீதி இலக்கியம், பக்தி இலக்கியம், பேரிலக்கியம், புகலிட இலக்கியம், ஈழத்து இலக்கியம் என வகைமைப்படுத்துவதையும் மேலும் தலித் இலக்கியம், பெண்ணிய இலக்கியம், பின்னை நவீனத்துவ இலக்கியங்கள் என கோட்பாடு சார்ந்து வகைமைப்படுத்துவதும்

இங்கு கவனத்திற்குரியதாகும்.

மேற்சுட்டிய நிலையில் இலக்கிய வகைமைகள் குறித்து பலவாறாக பேசி வந்தாலும் தொல்காப்பியர் சுட்டும் இலக்கிய வகைமைகளின் விரிவினையே ரெட்டியார் பழந்தமிழ் இலக்கியப் பாடல்களை சான்றாகக் கொண்டு தமது நூலில் பெரும்பகுதியாக எடுத்துரைக்கின்றார். மேலும் புதியவகைப் பாடல்கள், புதுக் கவிதைகள், குழந்தை இலக்கியங்களையும் இன்னொரு பகுதியாக விவரிக்கின்றார். அவர் இலக்கியத்தை வகைமைப்படுத்துவதென்பது முற்றிலும் செய்யுளை அடிப்படையாகக் கொண்டே அமைந் திருப்பதும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

சிறுகதை, புதினம் எனும் புனைவுசார் கதை வகைமைகளுக் குள்ளாகவோ, நாடகம், கட்டுரை வகைமைகளுக்குள்ளாகவோ அவர் தம் ஆய்வினை இட்டுச் செல்லவில்லை. அவரது அறக்கட்டளை உரையின் கால அளவு இதனை தீர்மானித்திருக்கலாம். எனினும் இலக்கிய வகைமை குறித்து பேசவிளையும் நாம் இக்காலகட்டத்தில் தமிழிலக்கியத்தின் வகைமை எந்த எல்லையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பதை பதிவு செய்வதாகவுமே இக்கட்டுரை அமைகின்றது.

இலக்கியம் பற்றி பதிவு செய்யும் ந. சுப்புரெட்டியார் "ஒரு மொழியிலுள்ள நூல்கள் அவ்வவ் காலத்திற்கேற்ப மாறுபடுகின்றன. ஒரு நூல் தோன்றும் காலத்தில் எவை எவை நாகரீகமாகவும் அறிஞர்களின் செயல்களாகவும், வியக்கத்தக்கச் செய்திகளாகவும் கருதப் பெறுகின்றனவோ. அவைதாம் அக்காலத்தில் தோன்றும் இலக்கியங்களில் பிரதிபலிக்கும்" (இலக்கிய வகைமையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும், ப.10) என்று குறிப்பிடுகின்றார். இவ் வரையறையை சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பான இலக்கியப் புரிதல் என்ற நிலையில் நாம் ஓரளவு ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் இன்று இலக்கியத்தின் பாடுபொருள் மாறிப்போய் உள்ளது. சாதியம், பெண்ணியம், பேரிலக்கியம், புகலிட இலக்கியம் என மன வலியினை பேசக் கூடிய இலக்கியங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. மட்டுமல்லாது அவர் குறிப்பிடும் நாகரீகம், அறிஞர்களின் செயல்கள், வியக்கத்தக்க செய்திகள் என்பதற்கு எதிர்வாக உட்பண்பாடு, எதிர்பண்பாடு, எதிர்கலாச்சாரம், எதிர் அரசியல் வட்டார வாழ்வியலை பிரதிபலிக்கின்ற சான்றாக இலக்கிய ஆக்கங்களும் இன்று நிரம்ப வந்து கொண்டிருப்பதும் பதிவுக்குரியதாகும்.

'ஒலிநயமும் யாப்பும்' எனும் தலைப்பில், பாடல் இயற்றுகின்ற போது யாப்பமைப்பு மாறுபடுமாயின் குறிப்பிட்ட பாடலின் ஓசை / ஒலிநயம் எவ்வாறு மாறி விடுகின்றன என்பதையும், பாடல் அச்சுவடிவத்தில் இருப்பதற்கும் அதனை வாய்விட்டு பாடுகின்ற போது அந்த பாட்டு உணர்த்துகின்ற ஓசைநயத்தின் குறிப்பையும் கூட ஓரிடத்தில் புலப்படுத்துகின்றார். "அச்சு வடிவத்தில் காணும் பாட்டு அரையுயிரோடுதான் உள்ளது. அதைப் பாடிய கவிஞர் இப்பொழுது நம்மிடையே இல்லை. அவர் தம் பாட்டில் தம் முகக்குறிப்பையும், சைகைகளையும், இசையையும் விட்டுச் சென்றிலர். அங்ஙனம் விட்டுச் செல்லவும் இயலாது. ஆனால் ஒலிநயம், கற்பனை, மோனை, எதுகை போன்ற கூறுகளை அவற்றின் சாயல்களாக விட்டுச் சென்றுள்ளார். அவருடைய உணர்ச்சியைப் பெற வேண்டுமானால் அச்சுவடிவத்தில் காணும் அவருடைய சொற்களிலிருந்து மட்டும் பெறுதல் இயலாது. அச்சு வடிவத்தில் காணும் பாட்டு ஒளிப்பட நெகடிவ் (Photo Graphic Nagative) போன்றது. நெகடிவிலிருந்து படத்திலுள்ளவற்றைத் தெளிவாகக்காண இயலாது. படத்திலுள்ள பொருட்களின் சாயலே அதிலிருக்கும். தக்க துணைப் பொருட்களைக் கொண்டு அந்த நெகடிவிலிருந்து படத்தை அச்சிட்டால்தான் பொருள்களின் படம் தெளிவாகப் புலனாகும். அங்ஙனமே கவிதை கவிஞன் தான் விட்டுச்சென்ற சாயல்களிலிருந்து படிப்பவர் பாட்டை, யாத்தவரின் உணர்ச்சியை உண்டாக்குதல் வேண்டும்" (இலக்கிய வகைமையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும், பக். 37, 38) என்கிறார்.

தொடர்ச்சியாக கவிஞரின் உணர்ச்சி அனுபவமும், யாப்பும், ஓசைநயமும் ஒன்றிணைந்து செயல்படுவதை விவரிக்க,

"பிள்ளைக் கனியமுதே கண்ணம்மா
பேசும் பொற்சித்திரமே
அள்ளி அணைத்திடவே என் முன்னே
ஆடி வருந்தேனே"

எனும் பாரதியின் பாடலை இங்கு சான்றாகத் தருகின்றார்.

மேலும் என்னென்னப் 'பா' வகைகளை பயன்படுத்தி என்னென்ன இலக்கியங்களை அன்று புலவர்கள் இயற்றினார்கள். அதற்கான காரணம், தேவை என்ன என்பதையும் ரெட்டியார் ஆய்வுக் கண்ணோட்டத்துடன் விவரிக்கின்றார். குறிப்பாக கலிப்பாட்டு, பரிபாடல் நாட்டுப் பாடல் வடிவத்தோடு ஒட்டிக்கிடப்பதையும்,

இளங்கோவின் சிலப்பதிகாரப் பாடலில் நாட்டுப்பாடலின் வடிவங்களிருப்பதையும் சுட்டுகின்றார். மட்டுமல்லாது விருத்தப்பா காப்பியத்தின் செழுமைக்கு சிறந்தது என்பதால் திருத்தக்க தேவரும், கம்பரும் தமது காப்பியங்களில் விருத்தப்பா பயன்படுத்தியிருப்ப தையும் அடையாளப்படுத்துகின்றார். ஆக கலிப்பா, வஞ்சிப்பா உள்ளிட்ட பிறபாக்களும், பாவினங்களும் வேறுபட்ட யாப்புக் கூறுகளைக் கொண்ட இலக்கிய வடிவங்கள் என்பதை பதிவு செய்திருக் கின்றார். பிசி, முதுமொழி, அங்கதம் உள்ளிட்டவைகளை அடிவரையறை இல்லாது உருவாக்கப்பட்டுள்ள இலக்கிய வடிவங்களாக வும் வெவ்வேறு இலக்கிய வகைமைகளாக தமது நூலில் பிரித்து நோக்கு கின்றார்.

புதிய வகைப்பாடல்கள் எனும் தலைப்பில் பாரதி, வள்ளலார், கவிமணி போன்றோர்களும், சித்தர்களும் கும்மி, சிந்து போன்ற மக்களைக்கவரும் புதிய யாப்பு வகைகளைப் பயன்படுத்தி பாடல்கள் இயற்றியிருப்பதைக் குறிப்பிடுகிறார்.

"அன்னப்பால் காணாத ஏழைகட்கு நல்ல
ஆவின்பால் எங்கே கிடைக்கும், அம்மா
என்னப்பா யாம்படும் பாட்டையெல்லலாம் சென்று
யாரிடம் சொல்லி அழுவோம் அம்மா"

எனும் கவிமணியின் பாடலை இங்கு சான்றாகத் தந்திருக்கிறார்.

மாணிக்கவாசகர் மக்களின் பொழுதுபோக்கு விளையாட்டு களுக்கு உரியவைகளாக இருந்த அம்மானை, ஊசல், சாழல் பாட்டு வகைகளைப் பயன்படுத்தியிருப்பதையும், பாரதியார் தோத்திரப் பாடல்களென்றும், வேதாந்தப்பாடலென்றும், குடுகுடுப்பைக்காரன் பாடலென்றும் புதிய யாப்புமுறைகளைப் பயன்படுத்தி பாடல்களை மக்களிடம் எளிதில் போய்சேரும் வண்ணம் வழங்கியிருப்பதையும் சிறப்பித்துக் கூறுகிறார்.

புதுக்கவிதையினை (New Poetry) தனியாக விவரிக்கின்றார். புதுக் கவிதையை மு. மேத்தா, சி. மணி, வெங்கடேச ரெட்டபூபதி உள்ளிட்ட ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக கவிதை நடையில் விளக்குகின்றனர். 'யாப்புக்கிழவி' எனும் தலைப்பில் விவரிக்கும் விஜயலட்சுமி நவநீத கிருஷ்ணன்,

"அதோ வருகின்றாள் யாப்புக்கிழவி
எதுகை முதுகைப் பூட்டு வில் போலக்
கூனிக் கொண்டு
மோனை வாயால் வாழ்த்து வசை இரண்டும்
முணு முணுத்தபடி
சுரையாழ அம்மி மிதப்ப என்ற பாட்டைச்
சுறுசுறுப் பில்லாமல் அராகமாய்
பாடிக் கொண்டு
அதோ வருகின்றாள் யாப்புக் கிழவி..."

என்பதாகக் குறிப்பிட்டிருப்பதையும் பதிவு செய்துள்ளார்.

எழுத்துச் சுதந்திரம் மறுக்கப்படுகின்ற அல்லது வரையறுக்கப் படுகின்ற இக்காலகட்டத்தில் கவிமணி ஒரு கவி கவிதைக்கான பாடுபொருளாய் எதை வேண்டுமானாலும் தேர்வு செய்யலாம் என்பதை வரையறுக்கிறார். கவியின் சுதந்திரத்தை மறுக்க யாருக்கும் உரிமை இல்லை என்பதை முற்போக்காகவும், அதே நேரம் இறைவன் மீது பழியை போட்டு ஒரு கவிதையை முன்வைத்துள்ளார்.

"அலகில் சோதியான ஈசன்
அருளினாலே அமையும்
உலகில் எந்தப் பொருளும் கவிக்கு
உரிய பொருளாம் ஐயா"

மேலும் குறியீடு, படிமம், மீமெய்மையியல், நனவோடை, இருப்பியல், என உத்தி, கோட்பாடு சார்ந்த கவிதைகள் குறித்தும் சுப்புரெட்டியார் நூலில் குறிப்பிட்டுள்ளார். குழந்தை இலக்கியத்தை யும் கவிமணி மற்றும் குழ. கதிரேசனை முன்வைத்து விரிவாக பேசி யிருக்கின்றார்.

"டிக்டிக் டிக்டிக் கடிகாரம்
டிங்டாங் டிங்டாங் கடிகாரம்
சின்ன முள்ளு அம்மாவாம்
பெரிய முள்ளு அப்பாவாம்
அம்மா அப்பா இருவரையும்
அன்பாய் சுற்றும் நொடிமுள்தான்
இந்தக் குட்டிப் பாப்பாவாம்"

ந. சுப்புரெட்டியாரின் நூலினை நாம் மதிப்பீடு செய்வதாயின் காலம், கருத்து, வடிவம் என்ற நிலையில் இலக்கியவகைமை குறித்த ஒரு விரிவான எல்லையை நோக்கி அவர் தம்மை இட்டுச் செல்ல வில்லை என்பதும், யாப்பு வகையை மையப்படுத்தியும், புதியவகை பாடல்கள், புதுக்கவிதைகள், குழந்தைப் பாடல்கள் பற்றி குறிப்பிட்ட ஒரு பகுதியை மட்டுமே பதிவு செய்திருப்பது விளங்கவரும்.

மின்னிதழ், பிளாக்கர், முகநூல், வாட்ஸ்அப் போன்ற நவீன தொழில் நுட்பத்தில் இருபத்தியோராம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலக்கியம் பழகும் நாம் பல புதிய இலக்கிய வகைமைகள் குறித்தும் விரிவாக அறிய வேண்டியவர்களாக உள்ளோம்.

காலத்திற்கு காலம் சமூக நிகழ்வுகளும், சமூகத் தேவைகளும் மாறிக் கொண்டே இருப்பதால் இலக்கியங்களிலும் கருத்து, வடிவ அடிப்படையில் மிகப்பெரிய மாற்றங்கள் நிகழ்வது தவிர்க்க முடியாது போகிறது. கருத்து நிலை மற்றும் வடிவநிலை மாற்றத்திற்கு காலமும் அகப்புறச் சூழல்களும் முதன்மை காரணியாகின்றன. ஒரு படைப்பாளி தம் அனுபவத்தை இலக்கிய வயப்படுத்த விளைகிறபோது அதில் வெளிப்படுகின்ற உணர்ச்சி, அறிவு நிலைக்களன்களுக்கும் கருத்து முதற்காரணியாகி விடுகின்றது. இங்கு காலமும் கருத்தும் ஒரு இலக்கியத்தின் அகப்புற வடிவத்தை தீர்மானிக்கின்றன. பொது நிலையில் இலக்கியத்தை வகைப்படுத்திட அதன் அகப்புற வடிவங்கள் பெரிதும் துணை செய்கின்றன. அகப்புற வடிவத்திற்கு காலமும் கருத்தும் நிலைக்களனாக அமைகின்றன என்பதை நான் மீளவும் சொல்லுகின்றேன்.

"இலக்கியத்தில் புறவயமான மாறாத ஒரு வடிவம் உண்மையில் கிடையாது. ஓர் இலக்கியப் படைப்பு ஒருவருக்குக் கச்சிதமான ஒன்றாக இருக்கும், பிறிதொருவருக்கு வளவளப்பாக இருக்கும். ஒருவரை அது தைத்து ஊடுருவும். பிறிதொருவரைத் தொட்டு உதிர்ந்துவிடும். அதன் வடிவத்தை ஒருவர் அந்தரங்கமாகவே உணர முடிகிறது. அதைப்பற்றிப் புறவயமாக ஒன்றும் சொல்ல முடியாது. ஒரு இலக்கியப்படைப்பின் வடிவச்சிறப்பு இன்னது என்று எவரும் காட்டி விடமுடியாது. தன் மனப்பதிவையே சொல்ல முடியும். இன்று கூட இலக்கியம் சார்ந்த அனைத்துக் கருத்துக்களும் கோட்பாடுகளும் நிரூபணதளத்துக்கு வெளியேதான் உள்ளன. அவை கருதுகோள்கள் மட்டுமே, பொது உண்மைகள் அல்ல, தகவல்கள் கூட அல்ல." என்கிறார் ஜெயமோகன்.

சிறுகதை, நெடுங்கதை (புதினம்), நாட்டுப்புறக்கதைகள் என்று நாம் கதை இலக்கியங்களை வகைப்படுத்துகிறோம். மொழி உள்ளீடாக கதை சொல்லுகின்ற வடிவத்தைப் பெற்று அது குறுகிய கால எல்லைக்குள் முடிவடைந்து விடுகிற போது நாம் அதனைச் சிறுகதை என்கிறோம். இதே கதை வடிவம் நீண்டு செல்லுமாயின் அது நெடுங்கதை (புதினம்) ஆகின்றது. இங்கு கதையின் தொடக்கமும் முடிவும் அதன்புற வடிவத்தை தீர்மானிக்கின்றன. கதையின் நெடிய புறவடிவம் கதையை புதினமாகவும், தேவைப் பட்டால் குறும்புதினமாக வரையறை செய்துகொள்ள நம்மை அனுமதிக்கின்றது.

இங்கு ஒரு புதினத்தை குறும்புதினமா, நெடும் புதினமா என முடிவு செய்கின்றபோது அதனை பக்கவரையறை அடிப்படையில் தீர்மானிப்பதற்கான அளவுகோல் என்ன? அல்லது யார் தீர்மானிப்பார் என கேள்வி எழுமாயின் எழுத்தாளர் ஜெயமோகன் குறிப்பிடுவது போல இது ஒரு கருதுகோள் தானே தவிர முடிந்த முடிவென எதுவுமில்லை. எதுவும் இருக்கவும் முடியாது என்பது கவனத்திற்குரியது. மேலும் நாடகம், உரைநடை என ஒவ்வொன்றையும் அதன் அகப்புற வடிவங்களே நமக்கு அடையாளப்படுத்துகின்றன. ஒரு இலக்கியத்தின் உள்ளீடாய் உரையாடல் வசனம் போன்ற அம்சங்கள் தொடர்ந்து நிகழ்கிறபோது அது நாடகமாக அறியப்படுகின்றது. நாடகத்தில் கவிதை நாடகம், ஓரங்க நாடகம் எனும் வகைமைகள் இருப்பதும் இங்கு நாம் எண்ணிப் பார்க்கத்தக்கதாகும்.

மேலும் 'பா' வகைகளை (யாப்பு அமைப்பு) பின்பற்றி எழுதப்பட்டதால் சங்க இலக்கியங்களை பெரிதும் சங்கப்பாடல்கள் என்றே குறிப்பிடுகிறோம். சங்கக் கவிதை என குறிப்பிடுவதில்லை. மேலும் நாட்டுப்புறப்பாடல்கள், சித்தர் பாடல்கள், தேவாரம், நாலாயிரத் திவ்யபிரபந்தம் உள்ளிட்ட பக்திப்பாடல்களையும் நாம் பெரிதும் கவிதை என்ற சொல்லால் குறிப்பதில்லை. இப்பாடல்கள் கும்மி, சிந்து, விருத்தப்பா உள்ளிட்ட பாவகைகளையும், இசை வடிவங்களையும் தாங்கி வருவதால் இவைகளையும் நாம் பாடல்கள் என்றே சுட்டுகிறோம். யாப்பினை உடைத்து சுதந்திரமாக எழுதப் பட்டு வரும் கவிதை மொழியினையே நாம் கவிதை அல்லது புதுக் கவிதை என்று சுட்டுகிறோம். புதுக்கவிதையின் தொடர்ச்சியாக வசனக் கவிதை, ஹைக்கூ கவிதை, லிமரிக் கவிதை, லிமரைக்கூ கவிதை உள்ளிட்ட பல கவிதை வடிவங்களும் தமிழில் தோன்றியிருப்பதை

நாம் பார்க்க முடிகின்றது.

ஹைக்கூ, லிமரிக், லிமரைக்கூ என்னும் புதிய கவிதை வகைமைகள் ஒரு நிலையில் மேலை நாடுகளின் கொடை என்று கூட சொல்லலாம். ஹைக்கூ கவிதைகளைப் பொறுத்தமட்டில் பல்வேறு மொழிகளில் எழுதப்பட்டாலும் ஹைக்கூவின் தந்தை பாஷோ ஜென் தத்துவத்தை மையப்படுத்தி எழுதிய கவிதையே முதல் ஹைக்கூ கவிதைகள் நிரம்பவே முத்திரை பதிக்கின்றன. தமிழ் ஹைக்கூ, கவிதைகள் பண்பாடு, கலாச்சாரம், மனிதநேயம், இயற்கை என பல நிலைகளில் எழுதப்பட்டு வருகின்றன. நா. முத்துக்குமாரின் ஹைக்கூ ஒன்று இப்படி பேசுகின்றது.

"பிம்பங்களற்ற தனிமையில்
ஒன்றிலொன்று முகம் பார்த்தன
சலூன் கண்ணாடிகள்" (ஹக்கூ தமிழ் விக்கிப்பீடியா)

லிமரிக் ஆங்கிலத்தில் தோன்றிய ஐந்து வரிகள் கொண்ட சிறிய கவிதை வடிவம். இக் கவிதையின் ஐந்து வரிகளில் முதலாவது, இரண்டாவது ஐந்தாவது வரிகளில் ஒத்த ஓசை உடைய இயைபுத் தொடையுடன் அமைந்திருக்கும். மூன்றாவது நான்காவது வரிகளிலும் தம்முள் ஒத்த ஓசை உடைய இயைபுத் தொடைகளே வரும். ஐந்தாவது வரியாக மிகுதியும் முதல் வரியே திரும்பவும் வரும்.

"கற்பகத்தின் வெண்கழுத்திற் தாலி
கட்டுதற்கு முன்னின்றான்வாலி
அற்புதமாய் வாழ்ந்தார்கள்
ஆறுபிள்ளை பெற்றார்கள்
இப்பொழுதோ வேறு சோலி" (லிமரிக் தமிழ் விக்கிப்பீடியா)

இது மஹாகவியின் லிமரிக் கவிதைகளில் ஒன்றாகிறது.

லிமரைக்கூ என்பது மூன்று வரிகள் கொண்ட கவிதையில் முதல் வரியிலும் மூன்றாவது வரியிலும் இயைபுத் தொடையுடன் அமையும் குறும்பா ஆகும். ஆங்கில மொழியில் ஹைக்கூ மற்றும் லிமரிக் வடிவங்களையும் இணைத்து ஒரு கலப்பு இனக்குறும்பா கண்டு பிடிக்கப்பட்டது. முதன்முதலில் இதை உருவாக்கியவர் டெப்பாக்கர் என்னும் கவிஞர். இவர் தம் கலப்பு இனக்குறும்பாவுக்கு லிமரைக்கூ (லிமரிக் ஹைக்கூ) என்று பெயரிட்டார்.

லிமரைக்கூவைத் தமிழில் படைத்து சென்னிமலைக் கிளியோப்பாத்ராக்கள் என்னும் தலைப்பில் ஈரோடு தமிழன்பன் ஒரு தொகுப்பினையே வெளியிட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

"ஊதுவத்திச் சின்னம்
கட்சி வென்று கோட்டை பிடித்தும்
நாற்றம் போகலை இன்னும்" (லிமரைக்கூ தமிழ் விக்கிப்பீடியா)

என்பதாக ஒரு கவிதை அமைகின்றது.

மேலும் சுப்புரெட்டியார் குறிப்பிடாததாக பார்க்கிறபோது குஜிலி இலக்கியம், பயண இலக்கியம், வாழ்க்கை வரலாற்று இலக்கியம், புராண இலக்கியம், மொழிபெயர்ப்பு இலக்கியம், காப்பிய இலக்கியம், இதிகாச இலக்கியம் என்பதாக நாம் பல இலக்கிய வகைமைகளைப் பார்க்கிறோம்.

குஜிலி இலக்கியத்தை வெகுஜனப் பண்பாட்டு இலக்கியம், அடித்தள மக்களின் இலக்கியம், பாமர மக்களின் இலக்கியம், விளிம்பு நிலை இலக்கியம், முச்சந்தி இலக்கியம், பஜார் இலக்கியம், குஜிலி புத்தகம், பெரிய எழுத்துப் புத்தகம், காலணா புத்தகம் என்றும் ஆய்வாளர்கள் குறிப்பிடுவதாக குஜிலி இலக்கியம் பற்றி இரா. சித்தானை குறிப்பிடுகிறார். மேலும்,

"'குஜிலி' என்னும் சொல்லுக்குப் பொருள் தற்காலத்தில் வழங்கப் பட்டு வரும் பொருளன்று. சென்னை பிராட்வே பகுதியில் இருந்த குச்சிலிக் கடைத்தெருவில், பாமரர்கள் பாடுவதற்கும் படிப்பதற்கும் ரசிப்பதற்கும் பாமரர்களால் பாடப்பெற்ற, அச்சடிக்கப்பட்ட புத்தகங்கள் இந்தத் தெருவில் விற்கப்பட்டதால், இப்புத்தகங்களுக்கு 'குஜிலி' புத்தகங்கள் என்னும் பெயர் ஏற்பட்டு விட்டது.

இந்தப் புத்தகங்கள் படிக்கப் படிக்க சுவாரசியமானவை. படிக்க கையில் எடுத்தால் கீழே வைக்க மனம் வராது. செவ்வியல் இலக்கிய மரபு, பாடாத, சொல்லாத அல்லது புறக்கணித்த கருப்பொருள்களை எல்லாம் குஜிலி நூல்கள் பேசின. சமூகத்தை எந்தெந்த விஷயங்கள் அதிர்ச்சிக்கு உள்ளாக்குகின்றனவோ அவையெல்லாம் குஜிலி நூல்களின் கருப்பொருள்களாக இருந்துள்ளன. தமிழர்கள் எல்லா வற்றுக்கும் பாட்டுப் பாடுவார்கள். உட்கார்ந்தால் பாட்டு, எழுந்தால் பாட்டு, நின்றால் பாட்டு என எல்லாவற்றுக்கும் பாட்டு தான். எங்காவது ஒருவன் கொலை செய்யப்பட்டு விட்டால்

கொலைச்சிந்தும், கொள்ளையடித்துவிட்டால் திருட்டுச் சிந்தும் பாடப்பட்டுவிடும். சென்னைக்கு டிராம் வண்டி வந்தவுடன் அதற்கொரு குஜிலி, ஆகாய விமானம் வந்தவுடன் அதற்கொரு குஜிலி, மூக்குப்பொடிக்கு ஒரு குஜிலி, கள்ளுக்கடைக்கு ஒரு குஜிலி, காந்திக்கு ஒரு குஜிலி, பகத்சிங்குக்கு ஒரு குஜிலி என குஜிலி கவிஞர்கள் பாடாத பொருள்களில்லை.

குஜிலி புத்தகங்கள் கம்பராமாயணப் புத்தகம் போல தடியாக, தலைக்கு வைப்பது போல எல்லாம் இருக்காது. குறைந்தது ஐந்து பக்கம், அதிகம் போனால் பத்துப் பக்கங்கள் தான் இருக்கும். வெங்காயச் சருகு போன்ற தாளில் அச்சடிக்கப்பட்டிருக்கும். புத்தகம் முழுவதும் பாட்டுக்கள் தான். ஏதோ ஓரிரண்டு புத்தகங்களில் மட்டும் எங்கோ கொஞ்சம் போல வசனங்கள் இருக்கும். பெரும்பாலும் சிந்துப்பாடல்கள் தான்.

'பஞ்சம் கிடையாது பாண்டவள நாட்டில்' என்பது போல், எழுத்துப் பிழைகளுக்குப் பஞ்சம் இருக்காது. எழுத்துப்பிழை, தொடர்பிழை, சந்திப்பிழை என எல்லாப் பிழைகளும் இருக்கும். சந்தைகளிலும், முச்சந்திகளிலும், திருவிழாக் கூட்டங்களிலும் குஜிலி கவிஞர்கள் தப்பை அடித்துப் பாடி இந்தப் புத்தகங்களை விற்றுள்ளனர். தமிழ்ச் செவ்விலக்கிய மரபு இந்த இலக்கிய நூல்களை ஓரக் கண்கொண்டு கூட பார்க்கவில்லை. இலக்கிய வரலாற்று நூல்களும் இவற்றை அங்கீகரிக்கவில்லை" என்கிறார் சித்தானை. ஆக, ந. சுப்புரெட்டியாரை மையப்படுத்தி இலக்கிய வகைமைச் சிந்தனையை பேசியுள்ள இக்கட்டுரையானது அவர் கூறிய மற்றும், கூறாத நாம் அறிந்த அறியாத பலவாறான இலக்கிய வகைமைகளையும் இலக்கிய வகைமைக் குறித்த புரிதலையும் அறிமுகப்படுத்துவதாக அமைந்துள்ளது.

☯

11

ந. சுப்புரெட்டியாரின் கவிதையாக்க நுட்பக்கூறுகள்

(பாட்டுத்திறன் நூலை முன்வைத்து)

-முனைவர் க. மைதிலி

மானுடம் தன் மனதைக் கலை மூலமாகவே காட்டிக் கொள்கிறது. கலையிலேதான் நிறைவு பெறுகிறது. கலை, மனித உணர்வோடு ஒன்றியிருக்கிறது. கலை வழியாகவே மனிதன் தன்னை உணர்த்துகிறான். பல தளங்களையுடைய கலை வடிவங்களில் கவிதை கலையானது மொழியின் வாயிலாக உயிர் பெறுகின்றது. மொழியின் வீச்சிலே பிறந்த கவிதை மானிட சமூகத்தின் உணர் வுக்கும் உயிர்ப்புக்கும் ஒரு வெளியை அமைத்துத் தருகிறது. கவிதை ஒரு குறிப்பிட்ட ஒருவரையறைக்குட்படாது, பல விளக்கங்களை உள்ளடக்கிய பண்பையுடையதாக அமைகின்றது. கவிதை படைப்பானது சில நுணுக்கங்களைக் கொண்டு எப்பொழுதும் புத்துருப் பெற்றுத் திகழ்கிறது. எனவே கவிதையானது படைப்பாக்கத் திறனும் வளர்நிலை கூறுகளையும் கொண்ட கலைவடிவமாகக் கருதப்படுகிறது. "கவிதை என்பது அழகும் உணர்வும் பொருளும் கொண்ட ஒரு கலை. உள்ளத்துள்ளது, உணர்வாய் வடிவது அறிவுக்கு விருந்தாய் ஒரு செய்திக்குத் தூதாய் ஒரு சாதனமென வருவது. வார்த்தைகளும் மவுனங்களும் கரைந்து உருகி நிற்கும் ஒரு ஊடகமாய் இருப்பது நேற்றிலும் இன்றிலும் கால்பதித்து இன்றுக்கும் நாளைக்கும் கைபரப்பி நிற்பது. கவிதை தானாகத் தோன்றும் சுயம்பு அல்ல அதனை உருவாக்க அறிவும் உணர்வும் வேண்டும் உழைப்பும் முயற்சியும் வேண்டும் ஒரு தேவையும் நோக்கமும் வேண்டும்" எனக் கவிதையின் செய்நேர்த்தி முறையைக் குறித்து தி.சு. நடராசன் கூறும் கருத்துக் குறிப்பிடத்தக்கது. (பக். 11, கவிதையெனும் மொழி) இத்தன்மைதான கவிதை கலைப்படைப்பை ஆய்ந்து தம் வாழ்நாள் முழுவதும் தமிழ்ப்பணியாற்றிய பேராசிரியரை "கலைபயில் தெளியும்

கட்டுரை வன்மையும்" கொண்டவர் என ஔவை நடராசன் அவர்கள் பாராட்டியுள்ளார். தமிழுலகம் நன்கறிந்த பேரறிஞரான ந. சுப்புரெட்டியார், துறையூரில் ஓர் உயர்நிலைப்பள்ளியை நிறுவி அதன் தலைமையாசிரியராகத் தம் கல்விப்பணியைத் தொடங்கினார். அதன் பின் பத்தாண்டுகள் கடந்த பிறகு காரைக்குடி அழகப்பா நிறுவிய ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியில் தொடக்கம் முதல் பத்தாண்டுகள் தமிழ்த்துறைத்தலைவராகப் பணியாற்றினார். பிறகு திருப்பதியில் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையைப் புதிதாக நிறுவி, அதன் தலைவராகவும் பேராசிரியராகவும் பணியாற்றி, ஆய்வுப்பணிகளை மேற்கொண்டார் உழைப்பின் உருவமாகத் திகழும் ந. சுப்புரெட்டியார் அறிவியல் செய்திகளையும் சமயம்சார் செய்தி களையும் தம் நுண்பொருளாகக்கொண்டு படைத்தளித்துள்ளார்.

பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் ஆழ்ந்த புலமையும் தெளிவாகக் கூறும் நெறியும் கருத்தைத் தெற்றன புலப்படுத்துகின்றன. ஆங்கிலம், வடமொழி, தமிழ் ஆகிய மொழிகளில் நிலைத்து வாழ்ந்து வரும் இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்றுத்தெளிந்து அவைகளிலுள்ள கருத்துக்களை இந்நூலில் கவித் திறத்தை விளக்குவதற்கு ஆசிரியர் பயன்படுத்தியுள்ளமை அவருடைய பழந்துபட்ட ஆய்வு நெறியைப் புலப்படுத்துகின்றது. கவிதையாக்கத்திறன் பற்றிய பல்வேறு மரபு நூல்கள் தரும் கருத்துக்களையும் இணைத்துப் பிணைத்துத் தரும் பாங்குச் சிறப்புடையதாகும்.

உள்ளத்திலுள்ளவற்றை உணர்ச்சி பொங்கத் தெள்ளத் தெளிந்த சொற்களால் எடுத்துரைப்பதுதான் கவிதையாகும். "கவிதை யென்பது ஒலிநயம் அமைந்த சொற்களின் கட்டுக்கோப்பு. அஃது இன்பத்தை உண்மையுடன் இணைப்பது அறிவுக்குத் துணையாகக் கற்பனை கொண்டிருப்பது" என்ற ஜான்சனின் கருத்திற்கேற்ப ந. சுப்பு ரெட்டியார் கவிதையின் உத்திமுறை குறித்துக் கூறுவதாவது "கவிதையையாத்த கவிஞனின் உணர்ச்சியை அதைப் படிப்போரிடமும் உண்டாக்கவல்ல ஓர் அற்புதச்சாதனம் கவிதையனுபவம் அதுகூறும் பொருளில் இல்லை கூறும் முறையில் தான் உள்ளது கவிஞன்தான் பெற்ற உணர்ச்சிகளைத் தன் கவிதைகளைப் படிப்போரும் பெறவேண்டும் என்று எண்ணிச் சில யுக்தி முறைகளைக் கையாண்டு கவிதையைப் படைக்கின்றான். அந்த யுக்தி முறைகளால் உணர்ச்சியை அதில் பொதிய வைக்கிறான் கற்பனை, சொற்களின் அமைப்பு முறை, ஒலிநயம், யாப்புமுறை, அணிநலன், தொடைநயம், குறிப்புப்பொருள், சுவைகள் போன்ற

சில முறைகளை மேற்கொண்டு கவிதையைப் படைக்கிறான்" என கவிதையாக்கக் கூறுகளை வரையறைபடுத்துகின்றார். தெரிந்ததைக் கொண்டு தெரியாததை விளக்குவதே கவிதையின் அழகாகின்றது. இதனால்தான் உவமைக்கு உணர்ச்சியை அதைப் படிப்போரிடமும் உண்டாக்கவல்ல ஓர் அற்புதச் சாதனம் கவிதையனுபவம் அதுகூறும் பொருளில் இல்லை கூறும் முறையில்தான் உள்ளது கவிஞன் தான் பெற்ற உணர்ச்சிளைத் தன் கவிதைகளைப் படிப்போரும் பெறவேடும் என்று எண்ணிச் சில யுக்திமுறைகளைக் கையாண்டு கவிதையைப் படைக்கின்றான். அந்த யுக்தி முறைகளால் உணர்ச்சியை அதில் பொதிய வைக்கிறான் கற்பனை, சொற்களின் அமைப்பு முறை, ஒலிநயம், யாப்புமுறை, அணிநலன், தொடைநயம், குறிப்புப்பொருள், சுவைகள் போன்ற சில முறைகளை மேற்கொண்டு கவிதையைப் படைக்கிறான்" என கவிதையாக்கக் கூறுகளை வரையறைப்படுத்துகின்றார். தெரிந்ததைக் கொண்டு தெரியாததை விளக்குவதே கவிதையின் அழகாகின்றது. இதனால்தான் உவமைக்கு மிகுந்த முக்கியத்துவம் தருகிறார் தொல்காப்பியர். எவ்விதமான அணியைக்கொண்டு விளக்கினாலும் அது உவமையாகும். உவமை யின் மாறுபட்ட வடிவங்களைச் சுட்டத் தொல்காப்பியர் "வேறுபட வந்த உவமத் தோற்றம்" என்பார். கவிதையில் இடம்பெறும் கருத்துக் களைத் தெளிவாக்கவே உவமை வருகிறது. மொழியின் திறனில் முக்கியமான கூறுகளாக அமைவன உவ்மையாகும். மொழியிடையே மிளிரும் அதன் பண்புகள் மொழியின் அழகுணர்ச்சி இதன் மூலம் வெளிப்படுகின்றன. உவமையும் கவிதைக்கு அழகு சேர்ப்பனவாகும். பிற்கால அறிஞர்கள் வடமொழியில் அமைந்த அலங்கார இலக்கணத்தைத் தமிழில் மொழிப்பெயர்த்தனர். புத்தமித்திரர் அலங்காரங்களைக் கவிதையின் உடலென்றும் குணங்களை உயிரென்றும் கூறுவார் தண்டி தமிழ் இலக்கிய மரபை நன்கு உணர்ந்திருந்தார். தண்டிக்குப் பின்வந்த தமிழ் நூல்களில் அவர் நூலின் தாக்கத்தைக் காணலாம்.

உணர்ச்சி மிகுந்த நிலையில் நம்முடைய மனதில் அசைவு ஏற்படுகின்றது. மனித சமூகம் ஒரு வெற்றிக்குரிய நிகழ்ச்சியைக் கொண்டாடுங்கால் ஆடியும் பாடியும் மகிழ்ந்தது. நம்முடைய உடல் முழுவதும் ஆடாவிடினும் நம்முடைய வாயிலிருந்து பிறக்கும் சொற் களில் அந்த ஆடலும் பாடலும் புலப்படும். இத்தகைய உணர்வு மிகுநிலையைக் கம்பராமாயணப் பாடல் மூலம் விளக்குகிறார்

பேராசியர். ராமன் சிவதனுசை ஒடித்த செய்தியை நீலமாலை என்ற தோழி சீதையிடம் கூறு மகிழ்ச்சி கரைபுரண்டோட வருகிறாள்.

வந்தடி வணங்கிலன், வழங்கும் ஓதையள்
அந்தமில் உவகையள் ஆடிப் பாடினள் (கார்முகம்: 57)

என கம்பன் காட்டுவான். "ஒலிநயத்திற்குப் புலன்களை உள்முகமாகத் திருப்பிவிடும் ஆற்றல் உண்டு. உணர்ச்சிகள் உடம்பின் அளவில் நின்று விடுகின்றன. இந்நிலையில் உறங்குவது போன்ற அனுபவம் ஏற்படுகின்றது உறக்கத்தில் புலன்களின் இயக்கம் நின்று ஒழுங்குடன் இயங்கும் இதயத்துடிப்பு. குருதியோட்டம், மூக்கின் இயக்கம் மட்டிலும் நடைபெறுவதைப் போலவே, பாட்டின் ஒலிநயத்தில் ஈடுபட்டிருக்கும் பொழுதும் அவ்வுறுப்புகள் மட்டிலும் இயங்கிக் கொண்டுள்ளன. நம் உள்ளம் மட்டிலும் பாட்டின் ஒலிநயத்தில் திளைக்கின்றது. உறக்கத்தில் உள்ளம் இன்பம் அடைந்து ஓர் அமைதி பெறுவதைப் போலவே, பாட்டின் கற்பனையுலகத்திலும் உள்ளம் இன்புற்று அமைதியைக் காண்கின்றது" என விவரிக்கின்றார்.

ஆளுமையின் அடையாளமாகயிருப்பது மனிதனின் உணர்வு நிலை பண்பேயாகும். அவ்வுணர்வு நிலை பண்பே அனுபவிக்கும் உணர்வெழுச்சியைத் தூண்டுபவையாக அமையும். "உடலும் உள்ளமும் நன்னிலையில் உறவு கொண்டிருந்தால்தான் நல்லுணர்ச்சிகள் தோன்றி, கவிதையை அனுபவிப்பதற்குத் துணை செய்யும் உணர்ச்சி களின் திரட்சியே மேலீடான மன உணர்ச்சிகள் இவை நம்மைக் கவிதைகளைப் படிக்கத் தூண்டுபவை. உணர்ச்சிகளே மீப்பண்புகளுக்கும் காரணமாகயிருப்பவை" என ந. சுப்புரெட்டியார் கவிதையை உள்ளக் கிளர்ச்சிகள் மூலம் அனுபவிக்கும் திறனை விவரிக்கின்றார். மொழி என்பது குறியீடுகளால் ஆனது. இக்குறியீடுகள் சொற்களாக வெளிப்படு கின்றன. சொற்கள் அனைத்தும் எண்ணங்களின் கலவையாக அமைகின்றன.

வாழ்க்கையுள் புதைந்து கிடக்கும் உண்மைகளையும் உணர்வு களையும் புரிந்துகொண்டு அதனை அனுபவமாக நினைவுக்கூறும் போது கற்பனையைத் தூண்டுபவையாக அமைகின்றது. ஒரு சொல்லில் கற்பனை வளம் மிகுந்திருப்பினும் அச்சொல்லுக்குள் உள்ள தன்மையானது ஓசையாலும் பொருள் விளக்கும் இயல்பாலும் தெளிவுறுத்தப்படுகின்றது. ஒரு சொல்லுக்குள் உள்ள இவ்விரண்டு தன்மைகளும் கவிதையில்தான் விளக்கப்படுகிறது. இதனை

மொழியியலாளர் ஓசையாற்றல் என்றும் பொருளாற்றல் என்றும் கூறுவர். "கவிதையும் அதன் பொருளும் விளங்காவிடினும் அது தக்க ஓசையுடன் படிக்கப்பெற்றால் அஃது இன்ன உணர்ச்சியைக் கொண்டு எழுந்தது என்று கூறிவிடவும் முடியும். இவ்வுண்மையைப் பழந் தமிழர் நன்கு அறிந்திருந்தனர்" என பேராசிரியர் கூறியுள்ளமை நோக்கத்தக்கது.

மொழியின் விரிந்துபரந்த அமைப்பின் வரையறையில் ஒரு சொல் எங்ஙனம் அமைந்திருக்கிறதோ, எந்த இடத்தில் இயங்குகின்றதோ அதனடிப்படையில் தான் அதந் பொருளும் அதன் ஆற்றலும் அமைந்திருக்கின்றன. சொல்லுக்கும் பொருளுக்கும் உறவு ஒரு நிலையில், வரையறைக்குட்பட்டதாக இருந்தாலும், அது எப்போதும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் இருப்பதில்லை. குறுகி முடங்கிக்கிடப்பது சொல் அல்ல. சொல்லானது தனது அமைப்புக்குட்பட்ட தனது எல்லைக்குள்ளிருந்தே அது கிளைத்து வளரவும் செய்கிறது. ஆகவே 'சொல்' எப்போதும் சொற்களஞ்சியத்தைப் பெருக்கிக் கொண்டே இருக்கிறது. சொல், இருக்கும் இடத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப தனது எல்லைகளை விரிவாக்கிக்கொள்கிறது. புதிய சமிக்ஞைகளும் தொனி களும் பெற்று, சூழலுக்கு ஏற்ற அடையாளமாக மாறுகிறது.

ந. சுப்பரெட்டியாரின் கவிதைத் திறனை விளக்கும் நிலையில் கவிதையின் தன்மையையும் பெருமையையும் உணரமுடிகிறது. கவிதையை ஒரு கலையாகக் கொண்டு அனுபவிக்கும் போது அதன் ஆழத்தை உணரமுடியும் என்பது அவரது கருத்தாக அமைகிறது. உணர்ச்சியுடன் உணர்ந்த ஒரு நிகழ்ச்சியை கற்பனையாகப் படைத்துத் தன் அனுபவம் ஏற்று கம்பர் பாடிய இரங்கபாடல்.

கலையினால் திங்கள் போல
　　வளர்கின்ற காலத் தேயுன்
சிலையினால் அரியை வெல்லக்
　　காண்பதோர் தவமும் செய்தேன்
தலையிலா யாக்கை காண
　　எத்தவம் செய்தேன்? அந்தோ
நிலையிலா வாழ்வை இன்னும்
　　நினைவனோ நினைவி லாதேன்?

(ராவணன் சோகப்படலம் 47)

என்ற பாடலில் மண்டோதரி புலம்வுது போல் கம்பன் பாடியுள்ளது. அவளது துயர உணர்வைக் கற்பனையால் உணர்ந்து வெளிப்படுத்தியுள்ளான் என்று கூறுகிறார். கவிதையை அனுபவிப்பதற்குப் படிமங்களும் ஓரளவு துணை செய்கின்றன. அவ்வகையில் படிமங்களைக் கட்புலப் படிமங்கள், செவிப்புல படிமங்கள், சுவைப்புலப் படிமங்கள், நாற்றப்புலப் படிமங்கள், இயக்கப் புலப்படிமங்கள், மரபு வழிப்படிமங்கள் என்று வகைப் படுத்தியுள்ளார். இதில்,

சிறு குழந்தை விழியினிலே ஒளியாய் நின்றாள்
திருவிளக்கில் சிரிக்கின்றாள் நாரெடுத்து
நறுமலரைத் தொடுப்பளின் விரல்வளைவில்
நாடகத்தைச் செய்கின்றாள், அடடே செந்தோட்
புறத்தினிலே கலப்பையுடன் உழவன் செல்லும்
புதுநடையில் பூரித்தாள் விளைந்த நன்செய்
நிறத்தினிலே என்விழியை நிறுத்தினாள் என்
நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சி செய்தாள்

என்ற பாவேந்தர் பாடலில் கட்புலப்படிமங்களும் இயக்கநிலை உருக்காட்சிகளும் அமைந்து கவிதைக்கு முருகுணர்ச்சியை அளிப்பதாகக் கருதுகிறார்.

அழகை இயற்கையில் காண்பதுபோல் கவிதையிலும் உணரலாம். இயற்கையழகை அடிப்படையாகக் கொண்டு கவிதையைப் படைப்பாளன் படைக்கிறான். அழகியல் உணர்வு என்பது மனிதனின் படைப்பான கவிதையியல் பண்பிலும் உய்த்துணரலாம். கவிதையைப் படிக்கும்போது நம்முள் மாறுபாடு ஏற்படுகின்றது, ஓர் உயர்ந்த மனமகிழ்வைத் துய்க்கும் முறையை ஆசிரியர் அறிவியல் ரீதியாக விளக்குகின்ற பாங்குக் குறிப்பிடத்தக்கது. இவ்வனுபவமே அழகியல் சார்ந்த உள்ளுளர்வு ஆகும்.

தமிழ் கவிதையாக்க மரபில் தோன்றிய புதிய முயற்சி புதுக்கவிதை ஆகும். புதிய சமுதாயத்தின் சிந்தனை வளர்ச்சி வேகத்திற்கேற்பப் பழைய யாப்பு வடிவங்கள் ஈடுகொடுக்க முடியாமல் தயங்கி நின்றது. இந்த வடிவங்களைத் தகர்த்தெறியவும், கவிதையில் புதிய வாக்கிய அமைப்பை ஏற்கச் செய்யும் முயற்சிகள் தொடங்கி வளர்ந்தன. யாப்புக்கட்டுக்குள் அடங்காத புதுக்கவிதை உருவம் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று வரையறை செய்து காட்டல் இயலாது.

இங்ஙனம் உருவாக்கப்படும் புதுக்கவிதையின் உள்ளடக்கம் சமூகத்தி லிருந்து தான் முகிழ்கின்றது. உள்ளடக்கத்திற்குக் கிடைக்கும் கருத்தைப் படைப்பாளன் மீண்டும் சமூகத்திற்குத் தரும் போது சமூகத்தைச் சீர்ப்படுத்தும் நிலையில்தான் தருதல் வேண்டும்.

கவிதைப் படைப்பானது பல நும்பக்கூறுகளைக் கொண்டிருந்தாலும் படைப்பாக்கப் படிமங்கள் பொதுவுடைமைப் பார்வையோடு புலப்படுத்தப் பெறுவதால் மனிதவாழ்வு செம்மைப் படுத்தப்படுகிறது. மார்க்சியப் போக்கும் சமூக அறிவியல் கண்ணோட்டமும் மக்கள் அனைவரும் புதுவாழ்வைப்பெற வேண்டும் என்ற குறிக்கோளும் கொண்ட படைப்பாளர்கள் புதுக் கவிதையை ஓர் ஆயுதமாகக் கொண்டு சமூகத்தை மார்க்சிய அடிப்படையில் சீரமைக்கும் கடமையுணர்வோடு செயல்பட்டப் பாங்கை பேராசிரியர் சமூகவுணர்வோடு எடுத்துரைக்கின்றார்.

ந. சுப்புரெட்டியாரின் பாட்டுத்திறனை விளக்கும் நிலையில் கவிதையின் தன்மையையும் பெருமையையும் உணரமுடிகிறது. கவிதையை ஒரு கலையாகக் கொண்டு அனுபவிக்கும் போது அதன் ஆழத்தை உணரமுடியும் என்பது அவரது கருத்தாக அமைகிறது.

தமிழர்களின் கவிதையாக்கத்திறன் பற்றிய ஆழ்ந்த உண்மைகளை அறிந்திருந்தார் ந. சுப்புரெட்டியார் தம் நூலில் கவித்திறனை ஆராய்ந்து தெளிவிப்பதோடு கவித்திறனுக்கு அடிப்படையாக அமையும் உள்ளுணர்வு நிலைப்பாட்டை உளவியல் ரீதியில் ஆய்வுசெய்து விரித்துரைக்கின்றார். உள்ளுணர்ச்சி, குறிப்புப் பொருள், உவமை, உள்ளுறை, இறைச்சி, கற்பனை, யாப்பு என்பன பற்றியெல்லாம் விளக்கம் தருகின்ற ந. சுப்புரெட்டியார் செவ்வியல் கவிதையிலிருந்து, புதுக்கவிதையாக்கம் வரை பகுத்தாய்ந்து தமிழரின் முருகியல் உணர்வுநிலையை உடலியல், உளவியல் ரீதியில் ஆய்ந்துள்ளார்.

☯

12

ந. சுப்புரெட்டியாரின் கல்வி உளவியல் நோக்கு

-முனைவர் க. செல்வி

ஆசிரியர் என்னும் ஐந்தெழுத்து மந்திரம், மாணவர் நாளும் உச்சரிக்கும் மந்திரம். அறியாமை இருள் அகற்றும் அற்புத சூரியதேவன். அன்பு, கருணை, மனிதநேயம், பாரபட்சமின்மை இவற்றின் இருப்பிடம். மாணவ சமுதாயத்தின் ஒளிவிளக்கு. உலகில் மிகப் புனிதமான இடங்கள் இரண்டு. ஒன்று தாயின் கருவறை. மற்றொன்று வகுப்பறை. இந்தியாவின் எதிர்காலம் வகுப்பறையில் தான் நிர்ணயிக்கப்படுகின்றது.

ஆசிரியர் என்னும் சொல்லுக்கு குற்றம் களைபவர் என்று பொருள். எனவே தான் ஆசிரியரை "தான் குற்றமற்றவராக இருந்து தன்னிடம் கற்க வருபவரைக் குற்றமற்றவராக்கும்" அறப்பணியைச் செய்பவர் என்பர். பெற்றோருக்கு அடுத்த சிறப்பு ஆசிரியருக்கே. எனவே தான் மாதா, பிதா, குரு, தெய்வம் என்று முறைப்படுத்தி வைத்தனர்.

"குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம் மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகியல் அறிவோடு உயர்குணம் இணையவும்"

அமைபவர் நல்லாசிரியராவார். மேன்மையான குணமும் கருணையும் கடவுள் வழிபாடும் பல்நூல் தெளிவும் எளிதில் உணர்த்தும் வல்லமையும் மேன்மையும் உலகியல் அறிவும் உயர்ந்த குணமும் உடையவர். ஆசிரியரிடம் நல்ல ஆளுமைப்பண்புகள் இருக்க வேண்டும். நல்ல புரிதல் இருக்க வேண்டும். ஆசிரியர் - மாணவர் உறவு மகத்தானது. ஆசிரியர் செய்யும் தொழிலே தெய்வம், என் கடன் பணிசெய்தல் என்பதனை மனதில் கொள்ள வேண்டும்.

ஆசிரியர் தன்னுடைய அறிவை வளர்க்கும் கவனத்துடன் தொட்டனைத்தூறும் மணற்கேணி போலும் நவில்தோறும் புதுப்புதுக் கருத்துக்களை உலகியல் அறிவோடு துறை சார்ந்த அறிவுமிக்கவராக இருத்தல் வேண்டும். ஏனெனில் ஆசிரியர்களுக்கு இந்த சமுதாயத்தின் மீது மிகுந்த அக்கறை உண்டு. நல்ல சமுதாயத்தை தலைமுறையை உருவாக்க வேண்டும். அவர்கள் பாடம் புகட்டும் முறையில் பல உத்திகள் மாற்றங்கள் தேவை என்பது சுப்புரெட்டியாரின் எண்ணமாகும்.

சமுதாயக்கடமை

மாணவர்களின் நடத்தை, பண்பாடு, எண்ணங்கள், கொள்கைகள் பழக்கவழக்கங்கள், மனநலம், நம்பிக்கைகள், சமூக சூழ்நிலை இவற்றை உற்றுநோக்கி நல்லொழுக்கம் உள்ளவர்களாக ஆக்கவேண்டும். ஏட்டுக்கல்வி மட்டுமல்லாது நடப்பியல் கல்வியை உலகியல் சார்ந்த அறிவோடு கற்பித்தல் வேண்டும். புதிய கருத்துகளை உள்வாங்கி பசுமரத்தாணி போல் பதிய வைக்கும் செயலால் நல்வழிகாட்டியாக இணைப்புப்பாலமாக விளங்கவேண்டும். காலத்திற்கு ஒவ்வாத கூடாத பழக்கவழக்கங்களைப் போக்கி எது தேவையானதோ அதனை அவர் களுக்கு உணர்த்த வேண்டும்.

மனதைக் கவர்தல்

ஆள்பாதி ஆடைபாதி என்பது பழமொழி. ஆசிரியர்கள் தோற்றத்தால் கவர்தல். தெளிவாக நகைச்சுவையாகப் பாடம் எடுத்தல் தோழமையோடு பொறுமையோடு அன்போடு இருத்தல் நேர்மை மரியாதை பொதுநலம் அருளுள்ளத்தோடு இருத்தல் வேண்டும். தன்னலம் ஆணவம் செருக்கு இறுமாப்பு அதிகாரவெறிபோட்டி மனப்பான்மை பழிவாங்கும் குணம் மனதைப் புண்படுத்துதல் போன்ற குணங்கள் அறவே கூடாது.

ஆசிரியரும் மாணவனே

ஆசிரியர் தன் வாழ்நாள் முழுதும் படித்துக்கொண்டே இருக்க வேண்டும். கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக என்கிறது குறள். அறிதோறும் அறியாமை கண்டற்றால் என்ற குறளுக்கேற்ப வாழ்தல் வேண்டும். நாலடியார் இம்மை பயக்கும். ஈயக் குறையாது. தம்மை விளக்கும். தாம் கற்பதால் கேடில்லை. எம்மை உலகத்தும் காணோம். கல்வி போல் மம்மர் அறுக்கும்

மருந்து என்கிறது. மாணவ பருவத்தில் படித்ததைவிட மிகமிக ஆழமாக படித்து மாணவர்களின் ஐயம் தீர புகட்டவேண்டும்.

செய்யத்தகாதவை

நாகரிகம் என்ற பெயரில் ஒவ்வாத செயல்களைச் செய்வர். வகுப்பில் தலைமுடி ஆற்றுதல், மேசையின்மீது கால்களைப் போடுதல், அடிக்கடி மூக்குக்கண்ணாடியைக் கழற்றுதல், துடைத்தல், போடுதல், வகுப்பில் மூக்குப்பொடி போடுதல், சொந்த வரலாற்றை அடிக்கடி பேசுதல், கீச்சுக்குரல், மாறாத குரல், கூச்சல் போடுதல், களைத்தல் தலையைச் சொரிதல் போன்ற பழக்கவழக்கங்கள் அறவே கூடாது என்பது சுப்புரெட்டியாரின் கருத்தாகும்.

முன்மாதிரி ஆசிரியர்

பண்பிலும் அன்பிலும் நன்னடத்தையிலும் காலம் தவறாமையிலும் சுறுசுறுப்பிலும் ஆர்வத்திலும் பாடம் புகட்டும் முறையிலும் முன்மாதிரியாக இருக்கவேண்டும். பல்வேறு கருத்தரங்குகள் பனிமனை முறைகள் ஆராய்ச்சிகள் சொற்பொழிவுகள் இவற்றில் பங்கு கொள்ள வேண்டும். புத்தாக்கப் பயிற்சி, புத்தொளிப்பயிற்சி மூலம் குறைகள் களைந்து புத்துணர்வு பெற்றிருத்தல் வேண்டும். இதனை ஆசிரியரின் தன் மதிப்பீடு வகுப்பறைச் செயல்களில் மேம்பாடு பற்றி நா. சுப்புரெட்டியார் மிக அழகாக எடுத்துக்காட்டியுள்ளார்.

ஒருவருக்கு அனுபவமும் சிறந்த ஆசான் தான். அனுபவத்தில் ஆளுமை ஆதிக்கம் பணிவு விடாமுயற்சி மனநிலை எண்ணங்கள் மனப்போக்கு மீப்பண்பு நாப்பழக்கம் மனப்பழக்கம் கைப்பழக்கம் ஆகியனவற்றைக் காணல் வேண்டும். ஆசிரியர் நடத்தையே மாணவர் களுக்கு ஒரு முன்மாதிரியாக இருத்தல் வேண்டும்.

கல்வி உளவியல்

உளவியல் என்பது உயிர்களின் மனச்செயல்களை வரையறுத்துக் கூறுவது நடத்தையை எடுத்துரைப்பது. மக்களின் எண்ணங்கள் உணர்ச்சிகள் செயல்கள் ஆகியவற்றை விளங்க உரைப்பது. கல்வி உளவியல் என்பது ஆசிரியரைப்பற்றியும் மாணவர்களைப் பற்றியது மான ஒருதுறை. நல்ல ஆளுமைப்பண்புகள் உள்ள உற்சாகமுள்ள ஆசிரியர்கள் இல்லையென்றால் மாணவச் சமுதாயம் பின்னுக்கு தள்ளப் பட்டுவிடும். சிக்கலாகிக் கொண்டு வரும் இன்றைய சமுதாயத்தில் மாணவர்களின் போக்கு மிகவும் கவலைக்கிடமாகவே உள்ளது.

மாணவர்களை நல்ல மனிதர்களாக ஆக்க வேண்டிய கட்டாயம் ஆசிரியர்களுக்கு உள்ளது.

ஆசிரியர்களின் மனம் நிறைவாக இருக்கவேண்டும். அவர்களது வாழ்க்கைத்தரம் உயரவேண்டும். அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப் படவேண்டும். போதுமான ஊதியத்தை வழங்க வேண்டும். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் சமுதாயத்தில் ஆசிரியர்கள் நடமாடும் பிரம்மாக்கள்.

நவீனப் பள்ளிகளின் முன்னேற்றம் பெரும்பாலும் ஆசியர்களின் ஒத்துழைக்கும் விருப்பத்தையும் திறனையும் பொறுத்தது. பல ஆசிரியர்கள் தத்தம் பாடமே முக்கியமென்று கருதி மாணவர்களைக் கசக்கி எடுப்பதால் போதுமான ஓய்வு உறக்கமின்மையால் உடல் பாதிக்கப்பட்டு விடுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு ஆசிரியர்கள் செயல்படவேண்டும்.

ஆசிரியப்பணி பற்றிய வெளியீடுகள் பல வருகின்றன. அதில் ஒவ்வொரு ஆசிரியருக்கும் அன்றாட வேலையில் குறுக்கிடும் பல பிரச்சனைகளை ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் தம் அனுபவத்தில் கண்டு அவற்றிற்குத் தீர்வுகளும் கண்டுள்ளதைப் படிப்பதனால் அறிந்து கொள்ளலாம். வகுப்பறைப் பிரச்சனைகளைத் தீர்க்கலாம்.

அறிவுக்கண் வழங்கும் ஆசான். எழுத்தறிவித்தவன் இறைவன். மாணவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு முதற்காரணம். மிகவும் செல்வாக்குள்ள கூறு. உணர்வோட்டம் உள்ள கூறு. ஒரு நாட்டின் பெருமை அந்நாட்டின் பள்ளி கல்லூரிகளின் நிலையை ஆசிரியரின் தன்மையைப் பொறுத்தது என்கிறார் பிரௌன். எனவே தான் ஒரு மாணவனின் உடல், உள்ளம், நடத்தை இவற்றைச் சீர்த்திருத்தி சிறந்ததோர் ஆளுமைப் பண்புடன் உருவாக்குவது என்பது ஆசிரி-யரின் கையில்தான் உள்ளது.

ஒரு சமுதாயத்தின் நாட்டின் வளர்ச்சிக்குக் கல்வியே முதன்மை யானது. ஆசிரியர்கள் சாதி, சமய, அரசியல் இவற்றைக் கடந்தவர்கள். மாதாவும் பிதாவும் கொண்டு வந்து ஒப்படைக்கையில் அந்த குழந்தையிடம் அன்பை மட்டும் விதைத்தல் வேண்டும். பள்ளிகளில் குழந்தைகளிடம் தன்னம்பிக்கை உற்சாகம் குழு உணர்ச்சி ஒத்துழைப்பு வெற்றி மனப்பான்மை விட்டுக்கொடுத்தல் போன்ற நல்ல சமூகக்குணங்களை பண்புகளை வளர்க்கவேண்டும்.

அன்பு பாராட்டு பொறுமை பொறுப்பு கடமை உரிமை கண்ணியம் கட்டுப்பாடு வீர தீர செயல்களில் ஈடுபடுதல் போன்றவற்றை வளர்க்கவேண்டும். மாணவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு ஆசான் தன்னை முழுமையும் அர்ப்பணிக்க வேண்டும். மாணவர்களை உற்சாகப்படுத்தும் ஊக்கிகள் அவர்களே. அவரவர் திறமைகளைக் கண்டறிந்து மதிப்பெண் தருதல் பரிசுகள் தருதல் பாராட்டி பேசுதல் போன்றவற்றால் அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும்.

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் ஒரு சிறந்த ஆசிரியர் என்பதனால் தான் ஆசிரிய சமுதாயத்தின் மீது அவருக்கு மிகுந்த அக்கறை இருந்துள்ளது. கல்வியில் மகத்தான சாதனைகள் பெற வேண்டுமானால் மாணவர்களின் இதய சிம்மாசனத்தில் அமர வேண்டுமானால் ஆசிரியருக்கு நூலறிவு, நுண்ணறிவு, பட்டறிவு, பகுத்தறிவு, உளவியல், பொது அறிவு சகிப்புத்தன்மை, கேள்வி ஞானம் நாளும் அறிவுத்தேடல் ஆகியன தேவை என்கிறார். உலகம் என்னும் தேருக்கு உழவர்கள் அச்சாணி. அது போன்றே மாணவர் என்ற தேருக்கு ஆசிரியர் அச்சாணி. உழவர் தரும் அமுது உடலுக்கு ஆசிரியர் தரும் அமுது பகுத்தறிவுக்கு. மாணவர்களைக் கரை சேர்க்கும் அன்புத்தோணி. அறியாமைக் கடலில் மூழ்க விடாத அறிவுத் தோணி.

☯

13

பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் பெண் தெய்வ ஆளுமை

-முனைவர் ச. வனிதா

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர். நூற்றாண்டுக்குரியவர். அவர் எழுதிய ஆன்மிகமும் அறிவியலும் என்ற நூலில் வைணவத்தில் தேவி வழிபாடு, மார்கழி நோன்பின் வரலாறு, பாரதியாரின் சக்தி வழிபாடு என்பன பெண் தெய்வ ஆளுமையை அவர் எடுத்தாண்டு பெண்மைக்கு உயர்வைத் தந்துள்ளார். எனவே அவர்தம் கட்டுரையாக்கங்களால் பெண்மையின் புகழ்மை வெளிப்பட்டுள்ளமையை இக்கட்டுரை கருத்தூன்றுகின்றது. வைணவத்தில் தேவி வழிபாடு என்றாலே அது இலக்குமியைத்தான் குறிக்கும். இதனை அவர்தம் கருத்தாக்கங்களில் காணலாம்.

வைணவத்தில் தேவி என்பது இலக்குமியைக் குறிக்கும். சைவ சமயத்தினர் இறைவனை 'இம்மையப்பன்' என்று கருதுவது போலவே, வைணவ சமயத்தினர் இறைவனை 'இலக்குமி நாராயணன்' சீனிவாசன் எனக்கருதுகின்றனர். சைவத்தில் சக்தியும் சிவனும் ஒன்று பட்டிருப்பது போலவே, வைணவத்தில் இலக்குமியும் நாராயணனும் ஒன்று பட்டுள்ளனர். இரு கடவுளர்களின் பெயர்களிலும் தேவிக்கு முதலிடம் இருப்பது கருதத்தக்கது. "அகலகில்லேன் இறையும்' என்று அலர்மேல் மங்கை உறைமார்பன்" என்பது நம்மாழ்வாரின் திருவாக்கு. அலர்மேல் மங்கை-திருமகள்- 'திருமால்' என்ற பெயரில் 'திரு' முற்பகுதியாக இருப்பது காணத்தக்கது. திரு (செல்வம்) வாழ்க்கைக்கு இன்றியமையாததால் எல்லோரும் 'திரு' என்ற அடைமொழியைத் தம் பெயருடன் சேர்த்துக்கொள்ள விரும்புகின்றனர். இதனாலன்றோ திருவேங்கடத் தெம்பெருமான் 'ஸ்ரீநிவாசன்' என்றும், திருவண் பரிசாரத்து எம்பெருமான் 'திருவாழ் மார்பன்' என்றும் வழங்கப் பெறுகின்றனர். இலக்குமியைத் திரு. பெரிய பிராட்டியார், அரிப்பிரியை, ஸ்ரீ

என்றெல்லாம் வழங்குவர். வைணவ தத்துவத்தில் இறைவனும் இறைவியும் பிரிக்கப் பெறாது ஒன்றாகக் கருதப்பெற்றாலும் செயல் முறையில் அவர்களைத் தனித்தனியாகக் கருதும் மரபும் உண்டு.

இறைவன், செய்வினை (Karma) என்னும் சட்டத்தின் அடிப்படையில் இவ்வுலகை ஆட்சி புரிகின்றான்; அவனுடைய தெய்வீக வெகுளியின் முன்னர் தீவினை புரிவோர் தப்ப முடியாது. ஆயின், வினையின் துன்பம் நற்கதி விளைக்கும் தேவியின் கருணை யினால் அடக்கி ஆளப்பெறுகின்றது. தீவினை தொலைக்கப் பெற்றுத் தீவினைபுரிந்தோர் காக்கப்பெறுகின்றனர். சட்டத்தின் அடிப்படையில் ஆட்சிபுரியும் இறைவனும் அன்பின் (கருணையின்) அடிப்படையில் ஆட்சிபுரியும் இறைவியும் இணைந்து செயற் படுவதால் சட்டத்தின் அன்பும் அன்பின் சட்டமும் உயர்நிலையாக ஒன்றோடொன்று பிணைந்து தெய்வீக இயல்பாகக் காட்சி அளிக்கின்றன. நீதியின் தெய்வீகச் சட்டத்தின் மாட்சிமை அனைத்தையும் வெல்லும் இயல்புள்ள கருணையின் வலிமையுடன் என்றுமுளதாகப் பிணைந்து நிற்கின்றன என்று சொல்லி வைக்கலாம். அறநூல்கள் வினையின் ஆட்சியை வலியுறுத்துகின்றது. அறத்தின் அடிப்படையில் அமைந்த சமயம் இரண்டின் உரிமைகளையும் சீர்தூக்கிப் பொருந்தமுறச் செய்கின்றது. இதனையே வேதாந்த தேசிகரும் "ஒண்டொடியாள் திருமகளும் தானும் ஆகி" என இறைவன் 'இறைவி நிலையைக் குறிப்பிட்டார். திருமகள்-பெரிய பிராட்டியார்; தான்-இறைவன், நாராயணன்.'

தெய்வீகச் சட்டத்தில் அன்பு ஊடுருவிப் பாய்ந்து செல்வ தாகவும், அச்சட்டம் இரக்க உணர்வால் ஆட்கொள்ளப் பெறுவ தாகவும் கருதுவது வைணவ சமயம் இங்கு இலக்குமி என்றும் மலர்ந்து வரும் வாழ்வாகிய தாமரையில் வாழ்வதாக ஐதிகம்; ஆகவே அவள் தெய்வீகத்தின் இதயமாகவே அமைகின்றாள். அன்பின் வடிவமாக அமைந்து எல்லாம் வல்ல இறைவனுடனும் யாதொரு ஆற்றலுமில்லாத உயிர்களுடனும் இணக்கம் உண்டு பண்ணுகிறாள். வைணவ சமயத்தினர் இதனைப் 'புருஷகாரம்' செய்வதாகக் குறிப்பிடுவர். பெரிய பிராட்டியாரும் புருஷகார பூதையாகக் குறிப்பிடப் பெறுகின்றார். இறைவனும் இறைவியுமான இருவரோடும் மக்கட்குச் சம்பந்தம் உண்டாயிருக்கவும், இறைவனை அடையும்போது இவள் புருஷகாரமாக (தகவுரையாக வேண்டு கிறது ஏன்? என்ற வினா எழுகின்றது. அதற்கு ஸ்ரீவசன பூஷணம்

விளக்கமான விடை தருகின்றது. 'தாயாம் தன்மையால் வந்த வாத்சல்யத்தின் மிகுதியாலும், அவனைப்போல் (இறைவனைப் போல்) வன்மையும் மென்மையும் கலந்திருக்கையன்றிக்கே கேவலம் மென்மைத் தன்மையேயாய்ப் பிறர் கண் குழிவு காணமாட்டாத தன்மையளாகையாலும், தீயமன முடையவர்களையும் மருவித் தொழு மனமுடையவர்கள் ஆக்குகைக்குத் தக்க செயல்புரியும் வகையாலும் குற்றமுடையவர்களும் கூசாமல் வந்து காலிலே விழலாம்படி இருப்பாளாய், ஆண்மையால் வந்த வன்மையோடே தந்தையாம் தன்மையால் வந்த நலம் செய்யும் தன்மையுடயனாய், குற்றங்களைப் பத்துப் பத்தாகக் கணக்கிட்டுக் கொடிய தண்டனை களைச் செய்கையாலே குற்றமுடையவர்கள் முன் செல்லக் குடல் கரிக்கும்படி இருக்கும் சர்வேஸ்வரனைத் தக்க வழிகளாலே குற்றங்கள் அனைத்தையும் மறப்பித்துச் சேர்ப்பிக்கும் வளாகையாலே, பாவமே செய்து பாவிகளான இம்மக்கள் சர்வேஸ்வரனைப் பற்றுமளவில் இவள் புருஷகாரமாக வேண்டும்' என்பது, சர்வேஸ்வரனைப் பற்றுமளவில் இவள் புருஷகாரமாக வேண்டும்' என்பது, சர்வேஸ்வரன் அருளைக் காட்டிலும் இவளுடைய அருள் சிறப்புடையது. காரணம், சர்வேஸ்வரன் வேறு ஒருவரால் தடைசெய்யப் பெறாத சுவாதந்தரத்தையுடையவன்; அருள் செய்தல் தண்டனை செய்தல் என்னும் இரண்டற்கும் உரியவன்; மக்களுடைய நல்வினை தீவினைகளை நிறுத்து அறுத்து அவற்றின் பயன்களை நுகர்விப்பவன்; அவனுடைய அருள் சுவாதந்திரியத்தாலே அமுக்குண்டு கிடந்து ஒவ்வொரு நிலைகளிலே தலையெடுக்கக் கூடியதாக இருக்கும். இவளோ,

"ஆவியைசந் சனகன் பெற்ற
அன்னத்தை அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத்
திகைத்தனை போலும் செய்கை"

என்ற வாலியின் ஏளனப் பேச்சிலும் இந்த உண்மை நிழலிடுவது கண்டு மகிழத்தக்கது. ஈஸ்வரன் உயிர்களைக் காக்குங்கால் அவர்களின் அளவற்ற குற்றங்களைக் கண்டோ தன் சுவாதந்திரியத்தாலோ அவர்களைப் புறக்கணிக்கவும் கூடுமாதலின், அவ்வமயம் ஈஸ்வரனுக்கு உயிர்களிடம் கருணை பிறக்குமாறு வேண்டியதை வேண்டியாங்குச் சொல்லி 'புருஷகாரம்' செய்யும் (தகவுரை கூறும்) பிராட்டியார் அருகில் இருந்தே ஆகவேண்டும். அப்போதுதான் இறைவன் தடை

யின்றிக் காத்தல் தொழிலை மேற்கொள்ள இயலும். பிராட்டியை விரும்பாமல் பெருமாளைப் பற்றின சூர்ப்பனகை கேட்டினை அடைந்தாள்; பெருமானை ஒழியப் பிராட்டியைப் பற்றின ராவணனும் கேட்டினை அடைந்தான். இருவரையும் பற்றின வீடணன் உய்த்தான்.

பெரிய பிராட்டியார் புருஷகாரம் செய்யும்போது, இவளிடம் இரண்டு தன்மைகள் தலைகாட்டும். இதனைப் பிள்ளை உலக ஆசிரியர்,

'சேதனனை அருளாலே திருத்தும்
ஈஸ்வரனை அழகாலே திருத்தும்'

என்று அருளிச் செய்வர். மக்களை அருளாலே திருத்துகையாவது, "ஐயோ, இவனுடைய தீயவறிவு நீங்கி ஈஸ்வரனிடத்தில் ருசி உண்டாகைக்கு அடியான நல்லறிவு உண்டாக வேண்டும்" என்று அவர்கள் நிறத்தில் தான் பண்ணுகின்ற 'பங்கயத்தாள் திருவருள்' (திருவாய் 9: 1: 22) என்கின்ற மேலான அருளாலே அவர்களுடைய தீய அறிவு குலைந்து இறைவனிடத்தில் ருசியுடையனபடி செய்தல். ஈஸ்வரனை அழகாலே திருத்துகையாவது, 'ஓம் காண், போ, உனக்குப் பணியன்றோ இது?' என்று தன் உபதேசத்தை உதறினவாறே கண்களைப் புரட்டுதல், கச்சை நெகிழ்க்குதல் செய்து தன் அழகாலே அவனைப் பிச்சேற்றித் தான் சொன்னபடி செய்தல்லது நிற்க மாட்டாதபடி செய்து அங்கீகாரத்தைச் செய்வதிலே நோக்குள்ளவனாகச் செய்தல். இங்ஙனம் பிராட்டியார் பெருமானை பிச்சேற்றுவதை "வண்டார் பூமாமலர் மங்கை மணநோக்கமுண்டானே" (பெரிய திருமொழி-8:0.1) என்றருளிச் செய்வர் திருமங்கையாழ்வார். பிராட்டியின் கடைக்கண் நோக்கத்தை எம்பெருமான் பரமபோக்கியமாகக் கொண்டு அதையே தனக்கு ஜீவநாதாரமாகவும் கொள்வதால் 'மலர் மங்கை மணநோக்கம் உண்டானே' என்றார் பிராட்டியின் கடைக்கண் நோக்கை. பிராட்டியின் புருவநெறிப்புப்படியே செயற்படுபவன் என்பது குறிப்பு. பேயாழ்வாரும் பெருமான் நிலையை "மலராள் தனத்துள்ளான்" (மூன் திரு 3) என்று குறிப்பிடுவர். திருப்பாற்கடலைப் போலவே பெரிய பிராட்டியாரின் திருமுலைத்தடத்தையும் தான் தங்கும் ஓரிடமாகக் கொள்பவனாயிற்று என்கின்றார் ஆழ்வார்.

இலக்குமியின் பல திருநாமங்களிலும் ஸ்ரீ என்ற திருநாமத் திற்குச் சிறப்பு உண்டு. இந்த ஸ்ரீ என்னும் சொல்லின் வினையடி 'ச் ரீ ஞ்' என்பதாகும். இதன் பொருள் சேவித்தல் என்பது.

இஃது இருவகைப்பட்ட பொருள்களையுடையதாக இருக்கும். ஒன்று, சேவிக்கப்படுகிறாள்; மற்றொன்று, சேவிக்கிறாள் என்பது முதற் பொருளில் , 'ச்ரியதே இதஸ்ரீ' என வரும். இதனைக் கர்மணிவியுத் பத்தி என்பர். அதாவது செயப்பாட்டுவினை என்ப தாகும். இப்பொருளில் கிருபை என்ற குணம் வெளிப்படுகிறது. கிருபையாவது, பிறர் துக்கம் கண்டு பொறுக்கமாட்டாமை இரண்டாம் பொருளில் 'ச்ரயேது இதி ஸ்ரீ' என வரும். இதனை 'கர்த்தரி வியுத் பத்தி' என்பர். அதாவது செய்வினை என்பதாம். இப்பொருளில் பாரதம் திரியம், அநந்யார்ஹத்துவம் என்ற இரண்டு தன்மைகளும், வெளிப்படுகின்றன. பாரதந்திரியமாவது, பரனுக்கு வசப்பட்டிருத்தல்; தனக்கு உரியளாகாது அவனுக்கு உரியவளாக இருத்தல், அநந்யார்ஹத்துவமாவது அவனைத் தவிர ஏனையோர்க்கு உரிமைப்பட்டிராத தன்மை; அதாவது பிறருக்கு உரியளாகாது அவனுக்கு உரியளாகவிருத்தல், 'ஸ்ரீமத்' என்பதற்கு 'ஸ்ரீயோடு என்றும் சேர்ந்திருக்கிற' என்பது பொருள், ஸ்ரு-ஹிம்சாயாம்' என்ற வினையடியில் தோன்றின சொல் ஸ்ரீ என்பது. இதன் வித்யுத்பத்தி 'ஸ்ருணாதி' என்பது, இதன் பொருள் நாசப்படுத்துதல் என்பதாகும். அதாவது ஈஸ்வரனுடைய சுவாதந்திரியத்தையும் உயிர்களின் தீமனத்தையும் போக்குகின்றாள் என்றபடி, 'ஸ்ரு-விஸ்தரே' என்ற வினையடியில் தோன்றின. ஸ்ரீ என்ற சொல்லாகிய ஸ்ரீயின் வித்யுத்பத்தி 'ஸ்ருணாதி' என்பது, விரிவுபடுத்துதல் என்பது, இதன் பொருளாகும். அதாவது; ஈஸ்வரனுடைய கிருபை முதலான குணங்களையும், உயிர்களின் ருசி முதலானவற்றையும் பிரிவுபடுத்துகின்றாள் என்றபடி, 'ஸ்ரு-ஸ்வரணே' என்ற வினையடியில் தோன்றின 'ஸ்ரீ' என்ற சொல்லின் ஒரு வியுதபத்தி 'ஸ்ருணோதி' என்பது, இதன் பொருள் கேட்கின்றாள் என்பதாகும். இன்னொரு வியுத்பத்தி 'ஸ்ராவயதி' என்பது, இதன் பொருள் கேட்பிக்கின்றாள் என்பதாகும். இங்ஙனம் ஆறு பொருள்களைத் தரும் ஸ்ரீ என்பதன் சிறப்பு புலனாகும்.

ஆயினும், உயிர்களின் நலத்தில் பெரும் பங்கு பெறும் இலக்குமியின் நிலைவாதற்கிடமாக உள்ளது; இவ்வாதம் அவள் இயல்பு பற்றியதாகும். வடகலையார் அறத்திற்கும், கிருபைக்கும் சம இடம் தந்து அவள் எங்கும் நிறைந்திருப்பவள் (விபு) என்றும், உயிர்த்தத்துவ விளக்கத்தின்படி அவள் பிரியா நிலையில் இருப்பவள் என்றும், செயற்படும் நிலையில் பிரிந்த நிலையில் இருப்பவள் என்றும் கருதுவர். மலரும் மணமும் போல் ஈஸ்வரனும் ஈஸ்வரியும் ஒன்றில்

இரண்டாகவும், இரண்டில் ஒன்றாகவும் இருப்பர் என்றும் இங்ஙனம் இணைந்த நிலை முமுட்சுக்களுக்கு உயிரான நிலையாகும் என்றும் நம்புபவர்கள். தென்கலையாரோ இருமையின் கடந்த நிலையை மறுப்பர். இவர்கள் இலக்குமியைச் சீவர் நிலையில் வைத்துப் பேசுவர். ஆயினும் இருசாராரும் அவளுடைய கிருபை வீடுபேற்றிற்கு இன்றியமையாதது எனக் கொள்வதற்குத் தடை இல்லை. இணக்கத்தை உண்டு பண்ணும் இவளுடைய தெய்வீக நிலையின் காரணமாகப் பாவிக்கும் பரமனுக்கும் இடையில் தலையிட்டுப் பாவியை முக்தனாக்குகின்றாள். பரமனைக் காப்பவராக்குகிறாள். இதனால் மக்களின் வழிபாட்டுக்கு உரியவளாகிறாள். வடமொழியில் இவளை பற்றிய பல தோத்திர நூல் திருமகளின் பெருமை வேதத்தில் 'ஸ்ரீசூக்தம்,' 'மேதா சூக்தம்' இவற்றிலும், இதிகாசம் மற்றும் விஷ்ணு புராணம் போன்ற புராணங்களிலும், அஹிர்புத்ந்ய சம்ஹிதை, சனத்குமார சம்ஹிதை போன்ற பாஞ்சராத்தர சம்ஹிதைகளிலும் இலட்சுமி தந்திரத்திலும், சௌபாக்கிய இலட்சுமி உபநிடதத்திலும் விரிவாகப் பேசப்பெறுகின்றது. ஆதலால் இவள் பெருமை எல்லோருக்கும் எளிதில் கிட்டா; ஆகவே பிராட்டியின் பெருமைகள் எளியோரும் தெளிவாக அறியும் வண்ணம் ஆழ்வார்களின் பனுவல் களில் அழகாக அமைந்துள்ளன.

ஆழ்வார்களின் காலத்திற்குப் பிறகு ஆசாரியர்களுள் ஆளவந்தாரின் சதுஸ்லோகியும், பராசரபட்டரின் குணரத்ன கோசமும், கூரத்தாழ்வானின் ஸ்ரீஸ்தவமும், வேதாந்த தேசிகரின் ஸ்ரீஸ்துதியும், சங்கரபகவத் பாதாளின் கனகதாரா ஸ்தோத்திரமும் அரசாணி மாலை, வேங்கடாத்வரி சுவாமியின் இலட்சுமி சகஸ்ரம் என்ற நூலும் வடமொழியில் அமைந்த தோத்திர நூல்களாகும். ஆயினும் இனிய செந்தமிழில் திருமகள் பற்றிய தனித்தோத்திர நூல்கள் குறைவு என்றே கூறலாம். பிராட்டியைத் தென்றிசை நோக்கித் தேடப்புறப்பட்ட அனுமனுக்குச் சில அடையாளங்களைச் சொல்லியனுப்புகின்றான் ராமன். தென்மொழியாகிய தீந்தமிழில், ஆழ்வார் பாசுரங்களாகிய ஈரத் தமிழில்தான் பிராட்டியைத் தேடிப் பார்க்க வேண்டும் என்று கம்பநாடன் குறிப்பிடுவது போல் தோன்றுகின்றது. திருமகளின் பெருமையெல்லாம் பன்னிரண்டு ஆழ்வார்களின் பாசுரங்களில் ஆங்காங்குக் காணலாம் முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார் இயற்றிய திருக்கண்ணமங்கை மாலை, திருக்கச்சி பெருந்தேவித்தாயார் பதிகம், பிரபந்தவித்துவான் எதிராசரின்

பெருந்தேவித்தாயார் மாலை, திருநின்றவூர் என்னைப் பெற்ற தாயார் மாலை இராமலிங்க சுவாமிகளின் ஆறாவது திருமுறையிலுள்ள இலட்சுமி தோத்திரம் முதலிய நூல்கள், பிராட்டியின் பெருமையை நுவலும் தமிழ் நூல்களாம். ஆயினும் அபிராமி அந்தாதி போன்ற செம்பாகமான அந்தாதித் தொடையாக அமைந்த நூல்கள்போல் பிராட்டியைப் பற்றிய நூல்கள் தமிழில் இல்லை. வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் அருளிய திருமகள் அந்தாதி இக்குறையை ஒருவாறு நீக்குவதாகக் கருதலாம். இது நாடோறும் பாராயணம் செய்வதற்கும் ஏற்றது. "அகலகில்லேன் இறையும் என்று அவர் மேல் மங்கை உறைமார்பன்" என்று நம்மாழ்வார் பிராட்டி-பெருமான் சேர்த்தியைப் பேசுவர். தண்டபாணி சுவாமிகள் இக்கருத்தை 21 இடங்களில் பேசுவர் தம் திருமகள் அந்தாதியில், 'இலக்குமி' என்ற சொல்லுக்குண்டான பொருளை உணர்த்தும் வண்ணம் பல படியாகக் கூறியது இந்நூலுக்கு ஏற்றமேயாகும்.

திருமாலின் புகழுக்குத் திருமகளே காரணம் என்றால் அது மிகையன்று. நாராயணன் பரத்துவத்திற்கே திருமகள் தான் காரணம் என்பது எல்லோராலும் ஒப்ப முடிந்த முடிவு. இதனை,

> மாலன்ன தெய்வம் மற்றில்லாமை
> ஓர்ந்துஅவன் மார்பில்வைகும்
> நூலன்ன சிற்றிடைப் பாவாய்

என்ற பாடலில் எடுத்துரைக்கின்றார் சுவாமிகள். பெரிய பிராட்டியாரின் ஸ்வரூபம் பாரதந்திரியம். அவளது கேள்வன் இட்ட வழக்காகவே இருக்கும்; அசோகவனத்தில் அனுமனிடம் சீதாப்பிராட்டி,

> எல்லை நீத்த உலகங்கள் யாவும் என்
> சொல்லி னாற்சுடு வேன்; அது தூயவன்
> வில்லின் ஆற்றற்கு மாசென்று வீசினேன்

என்று கூறிய சொற்களால் அவள் பாரதந்திரியம் நன்கு புலப் படுகின்றனவன்றோ? மற்றைய தேவதைகட்கு ஆயுதங்கள் உண்டு. ஆனால் கருணையே வடிவான திருமகளுக்குப் படைக்கலன்கள் இல்லை.

வைணவர்கள் திருமகளை வழிபடு தெய்வமாகவே கொண்டுள்ளனர். அவள் மீதுள்ள பாசுரங்களைப் பாராயணமும்

செய்வர். வைணவர்களேயன்றி பிற இந்துக்களும் இவள் படத்தை இல்லத்தில் வைத்து வணங்குகின்றனர். நடுவில் கணபதியும் அவர். இருபுறமும் கலைமகளும் திருமகளும் கொண்ட படங்கள் ஒவ்வொரு வீட்டிலும் இருப்பதைக் காணலாம். இலக்குமியை எட்டு நிலையில் பிரித்து அஷ்டலட்சுமியாக வழிபடும் வழக்கமும் எழுந்துள்ளது. பிரித்து சென்னை பெசண்ட் நகரில் எழுந்துள்ள அஷ்டலட்சுமி கோயில் இதற்கு ஒரு சான்றாகும். நம்மாழ்வாரும், "வேரி மாறாத பூமேல் இருப்பாள் வினை தீர்க்குமே" என்று திருமகளைச் சிறப்பித்தமை எண்ணத்தக்கது. தேவி வழிபாட்டிற்கு இது மிகவும் அடிப்படையான கருத்தாகும். (ஆன்மிகமும் அறிவியலும், பக். 56-64, 69).

மார்கழி நோன்பின் வரலாறு

பெண்களின் விரதங்களில் பாவை நோன்பு குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியர் காலந்தொட்டு இருந்துவரும் இந்நோன்பின் வரலாற்றை பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் பதிவு செய்துள்ளார்.

இந்நோன்பைக் குறித்துப் பெருவழக்காக வழங்கப்படும் நூல்கள் ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவை என்ற பிரபந்தமும், மணிவாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருவெம்பாவை என்ற பிரபந்தமும் ஆகும். இந்நோன்பைக் குறித்த பல செய்திகள் இந்த இரண்டு பிரபந்தங்களிலிருந்தும் தெரிய வருகின்றன. இரண்டு பிரபந்தங்களையும் ஒப்பிட்டு ஆய்ந்தால் பல உண்மைகள் தெளிவாகும். இங்கு இந்த நோன்பைக் குறித்து பண்டைத் தமிழ் நூல்களிலும் பிறவற்றாலும் தெரியவரும் செய்திகளை மட்டிலும் தொகுத்துக் கூறி, நோன்பின் ஆதி வரலாற்றைத் தெரிவிப்பதே இந்தக் கட்டுரையின் முக்கிய நோக்கம் ஆகும்.

முதலாவதாக, சங்க நூல்களில் இந்த நோன்பைக் குறித்து வரும் செய்திகளைக் குறிப்போம். வையையை வருணிக்கும் பதினோராம் பரிபாடலில் இந்நோன்பைப் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. இந்நோன்பின் வரலாறுகளை உணர்த்தும் பரிபாடற்பகுதி வருமாறு:

> கனைக்கு மதிர்குரல் கார்வான நீங்கப்
> பனிப்படு பைதல் விதலைப் பருவத்து
> ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து
> மாயிருந் திங்கள் மறுநிறை யாதிரை
> விரிநூல் அந்தணர் விழவுதொடங்கப்

புரிநூல் அந்தணர் பொலங்கலம் ஏற்ப
'வெம்பா தாக வியனில வரைப்பென'
அம்பா வாடலின் ஆய்தொடிக் கன்னியர்
முனித்துறை முதல்வியர் முறைமை காட்டப்
புனிப்புலர் பாடிப் பருமணல் அருவியின்
ஊதை யூர்தர வுரைசிறை வேதியர்
நெறிதிமிர் நுடங்கழல் பேணிய சிறப்பிற்
றையன் மகளிர் ஈரணி புலர்தர
வையை நினக்கு மடைவாய்த் தன்று;
மையாடல் ஆடல் மழபுலவர் மாறெழுத்து
பொய்யாடல் ஆடும் புணர்ப்பின் அவரவர்
தீயெரிப் பாலுஞ் செறிதவமுன் பற்றியோ
தாயருகா நின்று தவத்தைந்நீ ராடுதல்
நீயுரைத்தி வையை நதி;

(பைதல்-குளிர்; விடலைப் பருவம்-முன்பனிக் காலம்; ஞாயிறு-சூரியன்; நளிமாரி-கடைசி மழைக்காலம்; பிற்குளம்-மார்கழி மாதம்; மாஇருந் திங்கள், மறுநிறை யாதிரை-பௌர்ணமியையுடைய திருவாதிரையில்; விழவு-விழா; வெம்பதாக-மழையாற் குளிர்வதாக; அம்பா-தாய்; முனித்துறை முதல்வியர்-சடங்கு அறிந்த முதிய பார்ப்பனப் பெண்கள்; பனிப்புலர்பு ஆடி-பனியையுடைய வைகறையில் நீராடி; ஊதை-வாடைக் காற்று; ஊர் தர வீச; வேதியர்-அந்தணர்; அழல்-நெருப்பு; தையல் மகளிர்-ஒப்பனையையுடைய பெண்கள்; புலர் தர-உலர்த்தி நிற்க; மழபுலவர்-இளைய பிள்ளைகள்; மாறு எழுந்து மாறாக எழுந்து; பொய் ஆடல்-காமக் குறிப்பில்லாத விளையாட்டு).

இந்த அடிகளால் கூறப்படும் பொருள்: 'கறுத்த மேகங்கள் இடிக்குங் குரல் நீங்கப் பனிமிகுதலால் குளிரால் நடுங்குதலையுடைய முன்பனிப் பருவத்தில் மார்கழி மாதத்தில் நிறைமதி நாளாகிய திருவாதிரையில் ஆகமங்களை உணர்ந்த பூசகர் தெய்வத்திற்குத் திருவிழாவைத் தொடங்கினர்; அந்தணர் பொற்கலத்தை ஏந்தினர்; 'மாநிலம் மழைவளம் பெற்றுக் குளிர்வதாக' என்று சொல்லி அம்பா வாடலைச் செய்யும் கன்னிப் பெண்கள் கூடி, முதிய அந்தண மகளிர் நோன்பு செய்யும் முறைமையைக் காட்ட, பனியையுடைய விடியற் காலத்தில் நீராடினர்; அங்ஙனம் ஆடிய பின்னர் குளிர் வாடை வீசுவதால் அம்மகளிர் உரையில் அந்தணர் வேத

மந்திரங்களால் வளர்த்த நெருப்பின் அருகில் சென்று தம் ஈர ஆடைகளை உலர்த்தினர்; அவ்வந்தணர் அந்த வேள்வித் தீயில் பெய்யும் அவியானது, வையையே! நினக்கு வாய்த்ததாக இருந்தது. மையோலை பிடித்த இளைய ஆண்மக்களின் விளையாட்டிற்கு மாறாக எழுந்து காமக் குறிப்பில்லாத விளையாட்டைச் செய்கின்ற ஆயத்தினையுடைய அக்கன்னி மகளிர் தம் புலங்களை அடக்கித் தவத்தைப் பலகாலும் செய்து தம் தாய்மாருக்கருகில் நின்று தைந் நீராடலாகிய தவத்தை நின்பாற் செய்யயப் பெற்றனர்?"

இந்தப் பரிபாடற் பகுதியால் சங்க காலத்தில் கன்னிப் பெண்கள் மார்கழி மாதத்தில் வையையில் நீராடி நோன்பு நோற்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர் என்பதை அறிகின்றோம். தாயருகே நின்று ஆடப்படுதலின் 'அம்பா வாடல்' என்று பெயர் பெற்றதாகப் பரிமேலழகர் கூறுகின்றார். ஆனால் திரு. மு. ராகவய்யங்கார் அவர்கள் இதனை மறுத்து அம்பாவாடல் என்பதற்கு 'தேவியின் பொருட்டு நிகழ்த்தப்படும் நீராட்டு' என்று பொருள் கொள்ளு கின்றார். 'தாயாருகா நின்று' என்பதற்கு, சிறுமியர் ஆதலால் அவர்கள் நீராடும்போது தாயாருகில் நின்றார்கள் என்று கொள்ள வேண்டுமென்பது அவர் கருத்து. அம்பா என்பது தேவியைக் குறிக்கும் சொல்லாகும். ஆகவே ஐயங்கார் அவர்களின் கருத்தே சிறந்ததாகத் தோன்றுகின்றது.

மார்கழி மாதத்தில் திருவாதிரையில் நீராட்டத்துடன் துவங்கும் நோன்பை மார்கழி நீராடல் என்று திருப்பாவையின் முதற்பாசுரம் குறிப்பிடுகின்றது. ஆனால் சங்க நூல்கள் யாவும் அதைத் 'தைந் நீராடல்' என்ற பெயரால் குறிப்பிடுகின்றன. ஐங்குறுநூறு என்னும் எட்டுத்தொகை நூலில் ஓரிடத்தில் இம்மார்கழி நோன்பு குறிக்கப்படு கின்றது. பரத்தை வீடு சென்று காலங்கழித்த தலைவன் ஒருவன் தன் வீடு திரும்புகின்றான்; புணர்ச்சிக் குறியோடு வருகின்றான். தோழி அவனை முதலில் சந்திக்கின்றாள். தலைவன் மார்பைப் பலர் புகழக் கேட்டாலும் எல்லை காணா வெகுளி கொள்பவள் தலைவி. அங்னமிருக்க, பரத்தையின் மயக்கத்தால் சாடிய சாந்துடன் வாடிய கோதையையும் ஏனைய புணர்ச்சிக் குறிகளையும் அவள் கண்ணால் பார்க்க நேரிட்டால் என்னாவாளோ என்று கூறுகின்றாள் தோழி.

நறுவீ ஐம்பால் மகளிர் ஆடும்
தைஇத் தண்கயம் போலப்
பலர் படிந்(து) உண்ணும்நின் பரத்தை மார்பே

(நறுவீ-நல்ல வாசனையுள்ள மலர்களை அணிந்த; ஐம்பால் மகளிர்-ஐந்து பகுதியாகக் கூந்தலைப் பிரிந்துள்ள மகளிர்; சுயம்-குளம்) என்ற பகுதியில் மாதர்கள் தைமாதத்தில் நீராடுதல் குறிக்கப் பெற்றுள்ளது. குளத்தில் நீராடுபவர் இளைஞராகவோ அன்றி முதியவராகவோ இருக்கலாம். அதுபோன்றே தலைவனைச் சேர்ந்த பரத்தையரும் பருவம் வேறுபட்ட பலர் குறிப்பால் பெறப்படுகின்றது.

நற்றிணையில் இரண்டு இடங்களில் 'தைந்நீராடல்' பற்றிய செய்தி குறிக்கப்படுகின்றது. சேட்படுக்கப்பட்டு ஆற்றானாகிய தலைவன் தோழி கேட்குமாறு தன் நெஞ்சுக்குச் சொல்லுவதாகக் கூறும் செய்யுள் ஒன்றில்,

இழையணி ஆயமொடு தகுநாண் தடைஇத்
தைஇத் திங்கட் டண்சுயம் படியும்
பெருந்தோட் குறுமகள் அல்லது
மருந்துபிறி (து) இல்லை யான்உற்ற நோய்க்கே

(அணி-அணிகலன்கள்; ஆயம்-மகளிர் கூட்டம்; சுயம்-குளம்; நோய்-காமநோய்)

என்ற பகுதியில் 'தைந்நீராடல்' குறிப்பு வருதல் காண்க. "என்னைப் பெறுமாறு தலைவி எடுத்துக் கொண்ட நோன்பின் பயனாகத் தைத்திங்களிலே தண்ணிய நீரிலாடுகின்ற பெரிய தோளையுடைய அவ்விள மகளே யானுற்ற நோய்க்கு மருந்தாக அமைந்துள்ளாள்" என்று தன் ஆற்றாமையைப் புலப்படுத்துகின்றான் தலைவன்.

பலநாள் களவில் ஒழுகிய தலைமகன் ஒருவன் தலைவியை மணந்து கொள்ள இசைகின்றான். இதைத் தோழி தலைமளிடம் அறிவிக்கின்றாள். இவன் தினை விளை காலத்திலேயே வருவதாகக் கூறிச் சென்றவன்; வம்பமாரி இடையிலே பெய்ய, தலைவி வருந்த வாராதிருந்தவன், தலைவனைத் தோழி அறிமுகம் செய்யும்.

கொடிச்சி காக்கும் அடுக்கற் பைந்தினை
முந்துவிளை பெருங்குரல் கொண்டமந்தி
கல்லாக் கடுவனொடு நல்வரையேறி
அங்கை நிறைய ஞெமிடிக் கொண்டு தன்
திரைஅணற் கொடுங்கவுள் நிறைய முக்கி
வான்பெயல் நனைந்த புறத்த நோன்பியர்
நையூண் இருக்கையில் தோன்று நாடன்

(கொடிச்சி-குறப்பெண்; அடுக்கல்-மலைப்பக்கம்; பெருங்குரல்-பெரிய கதிர்கள்; மந்தி-பெண் குரங்கு; கடுவன்-ஆண் குரங்கு; வரை-மலை; ஞெமிடி-கசக்கி; அணல்-மேவாய்; முக்கி-உண்டு)

என்ற பகுதியில் தைந்நீராடி நோன்பு நோற்கும் குறிப்பு காணப் படுகின்றது. மலைப்பக்கத்தேயுள்ள ஒரு தினைப்புனத்தைக் கொடிச்சி ஒருத்தி காவல் புரிகின்றாள். ஒரு மந்தி அப்புனத்திலுள்ள முற்றிய பெரிய கதிர்களைக் கொய்கின்றது. பின் பாயுந் தொழிலன்றிப் பிறவற்றைக் கல்லாத கடுவனுடன் ஒரு வரை மீதேறுகின்றது. அங்கு அக்கதிர்களைக் கசக்கித் தூய்மை செய்து வாயில் பெய்து கவுள் நிறைய உண்கின்றது; இந்நிலையில் வம்பமாரி பெய்ததால் நனைந்து, அம்மந்தி தைத்திங்கட் பிறப்பில் நீராடி நோன்பு முற்றியிருந்து உண்ணும் நோன்புடையாரைப் போல் காணப்படுகின்றது. அத்தகைய நாட்டையுடைய தலைவன் என்று குறிப்பிடுகின்றாள் தோழி.

'கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகையிலும்' இந்நோன்பைக் குறித்த ஒரு செய்தி காணப்படுகின்றது. களவு ஒழுக்கத்தில் ஒழுகும் தலைவன் தலைவியை இரந்து குறையுற்று ஆற்றானாய், "என்னை இவள் இவ்வாறு வருத்தினால் இவள் செய்யும் தவத்தின் பயனை அடையாள்" என்று கூறுகின்றான்.

மருளியான மருளுற இவனுற்ற தெவனென்னும்
அருளிலை இவட்கென் அயலாநிற் பழிக்குங்கால்
வையெயிற் றவர்நாப்பண் வகையணிப் பொலிந்துநீ
தையில்நீ ராடிய தவந்தலைப் படுவாயோ?

(மருள்-மயக்கம்; இவன் உற்றது - இவன் அடைந்துள்ள நோய்; நிற்பழிக்குங்கால்-நின்னைப் பழிக்கும் அளவில்; வை எயிற்று கூரிய பல் வரிசையையுடைய; அணி-கோலம்; தையில்-தைமாதத்தில்; தவந்தலை-நோன்பின் பயனை; படுவாயோ-பெறுவாயோ; பெற மாட்டாய் என்றபடி) என்பது அப்பகுதி.

பண்டைத் தமிழர்களின் நாகரிகத்தை அறிவதற்குச் சிறந்த கருவி நூலாக இலங்கும் புறநானூற்றிலும்,

தைஇத் திங்கட் டண்கயம் போலக்
கொளக்கொளக் குறைபடாக் கூழுடை வியனகர்

என்ற அடிகளில் தை மாதத்தில் மகளிர் நீராடுவதன் குறிப்பு காணப் படுகின்றது. இவ்வாறு சங்க இலக்கியங்கள் யாவற்றிலும் ஒரே

மாதிரியான குறிப்பு காணப்படுவதிலிருந்து அக்காலத்தில் ஒரே மாதிரியான வழக்கம் இருந்து வந்ததாகத் தெரிகின்றது.

மார்கழி நீராடலைத் 'தைந்நீராடல்' என்று சங்க நூல்கள் குறிப்பிதற்குரிய காரணத்தைத் திரு. மு. ராகவ ஐயங்கார் அவர்கள் நன்கு விளக்கம் செய்துள்ளார். பௌர்ணமியும் திருவாதிரையும் மார்கழி மாதம் பதினைந்தாம் நாளிலோ அதற்குப் பின்னோ ஒன்று சேர்வது இயல்பு. அமாவாசையோடு மாதங்கள் முடிவுபெறுவதை அமாந்தம் என்றும் பௌர்ணமியோடு மாதங்கள் முடிவு பெறுவதைப் பூர்ணிமாந்தம் என்றும் ஆன்றோர் வகுத்துள்ளனர். பௌர்ணமி அநேகமாக மார்கழியில் பதினைந்திலோ அல்லாத அதற்குப் பின்னரோ வரும். ஆகவே, மார்கழி பௌர்ணமிக்குப் பின் வரும் மாதம், மார்கழியின் பிற்பகுதியும் தையின் முற்பகுதியுமாகவிருக்கும். அதனால் மார்கழி நீராட்டம். தைந்நீராட்டம் என்று இருவகை யாகவும் அந்நீராடலைக் கூறலாம். ஆகவே, மார்கழியில் நிகழ்த்தப் படுவதைத் தெளிவாய் அறிந்த நிலையிலும் இந்நோன்பைத் 'தைந்நீராடல்' என்று பரிபாடல் முதலிய சங்க இலக்கியங்கள் வழங்குவதற்கு இதுவே காரணமாக இருத்தல் வேண்டும். தவிரவும், இந்நோன்பு முற்காலத்தில் பூர்ணிமாந்த முறைப்படி அனுஷ்டிக்கப் பட்டிருக்க வேண்டும் என்றும் தெரிகின்றது.

மழைபெய்து நாடு செழிக்க வேண்டுமென்று திருப்பாவையில் ஆண்டாளும் திருவெம்பாவையில் வாதவூரடிகளும் கூறியுள்ள படியே பரிபாடலிலும் 'வெம்பாதாக வியனிலை வரைப்பென' (இம் மாநிலம் மழையாற் குளிர்வதாக) என்று கன்னிப் பெண்களின் கூற்றில் வைத்து கூறப்படுவதை இவ்விடத்தில் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அன்றியும் கண்ணபிரானைத் தம் கணவராக அடைய வேண்டுமென்று திருப்பாவையிலும், சிவனடியாரைத் தம் கணவராக அடைய வேண்டுமென்று திருவெம்பாவையிலும் கன்னிப் பெண்கள் இந்நோன்பை நோற்பதாகக் கூறப்பட்டுள்ளதைப் போலவே பரிபாடலி லும், "வரைவு மலிந்த தோழி, 'கன்னிப் பருவத்துத் தைந்நீராடத் தவந்தலைப் பட்டோம்' என வையையை நோக்கித் தலைமகன் கேட்பச் சொல்லியது" என்ற துறைக் குறிப்பு ஒன்று வருகின்றது. கன்னிப் பருவத்தில் தைந்நீராடி நோன்பு நோற்ற காரணத்தால் தான் தலைவி இப்போது நல்ல கணவனைப் பெற்று விளங்குகின்றாள் என்று தலைமகன் கேட்பத் தோழி மகிழ்ந்து கூறினள் என்பது இதன் பொருளாதல் காண்க. ஆகவே, திருப்பாவை திருவெம்பாவைகளோடு

பதினோராம் பரிபாடலும் கருத்தால் பெரிதும் ஒத்து மார்கழி நோன்பின் ஆதிவரலாற்றை மிகத் தெளிவாக உணர்த்துவதை ஈண்டு நாம் அறியவேண்டும்.

தொல்காப்பியப் பொருளதிகார 461ஆம் நூற்பாவின் உரையால் திருப்பாவை, திருவெம்பாவை போன்ற பிரபந்தங்கள் 'பாவைப் பாட்டு' என்று வழங்கப்பட்டதாக அறியக்கிடக்கின்றது. யாப்பருங்கல விருத்தி இறுதிச் சூத்திர உரையில்,

> கோழியுங் கூவின குக்கில் அழைத்தன
> தாழியுள் நீலத் தடங்கணீர் போதுமினோ
> ஆழிசூழ் வையத்து அறிவன் அடியேத்தி
> கூழை நனையக் குடைந்து குளிர்புனல்
> ஊழியுண் மன்னுவோம் என்றேலோ ரெம்பாவாய்

என்ற உதாரணச் செய்யுளால், இம்மாதிரி வேறோர் பிரபந்தமும் வழங்கியமை தெரிகின்றது. 'அறிவன் அடியேத்தி' என வரும் தொடரால் அஃது அருகக் கடவுளையோ புத்தரையோ குறிப்பதாகக் கொள்ளவேண்டும். மார்கழி நோன்பை கொண்டாடுவதற்கு ஜைனர் பாராயணம் செய்யும் 'திருவெம்பாவை' என்ற பழைய பிரபந்தம் ஒன்றும் அச்சில் வெளிவந்துள்ளது. ஆனாலும், மார்கழி நோன்புக்கு அன்னோர் கூறும் வரலாறு இன்னதென்று தெரிந்துகொள்ள இயலவில்லை. இதைத்தவிர, பிற்காலத்தில தத்துவராய சுவாமிகள் பாடிய 'பாடுதுறை'யுள் சுவரூபானந்த சுவாமிகள் திருவெம்பாவை இரண்டு வேதாந்த பரமாகக் காணப்படுகின்றன. (ஆன்மிகமும் அறிவியலும் பக். 71-79).

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் எழுதாத பொருண்மைகள் இல்லை. பெண் தெய்வ ஆளுமையிலும் அவர் வென்று வெளி வந்திருக்கின்றார். நல்ல சிந்தனைகளோடு காலம் உள்ளவரை அவர் தம் கருத்துகள் இந்தச் சமுதாயத்திற்கும் பயன்படும்.

☯

14

டாக்டர் ந. சுப்புரெட்டியாரின் படைப்புகளில் சமுதாய நோக்கு

-முனைவர் வ. சிவகுமார்

வாழ்க்கை ஒரு கலை, வாழ்வினை வெற்று வாழ்வாக்காது பயனுள்ள வகையில் பெருவாழ்வாக்கும் வகையில் தம்முடைய உயர்ந்த சிந்தனைகளையும், அழகியமணி மொழிகளையும் கலை வடிவாக்கிச் சமுதாயத்திற்குப் பல நல்ல சிந்தனைகளை விதைத்துப் பல்லாயிரக் கணக்கான நெஞ்சங்களைக் கொள்ளை கொண்ட ஆளுமையாக விளங்கியவர் பேரா. ந. சுப்புரெட்டியார் ஆவார்.

இவர் ஒத்த பேராசிரியர் பலரும் மொழியை மட்டும் பேசிக் கொண்டிருந்த காலத்தில் ராக்கெட்டுகள், அதிசய மின்னணு, அம்புலிப் பயணம், தொலை உலகச் செலவு, வானொலி, தொலைக் காட்சி, தொழில்நுட்பம், நமது உடல் போன்ற மொழிக்கு அப்பாற் பட்டு நவீன அறிவியலைத் தமிழ் மொழியில் விவரித்தார்.

சமுதாய நோக்கம்

சமுதாயம் சீர்பட வேண்டும் என்ற நல்ல நோக்கமும், எண்ணமும் காலந்தோறும் படைப்பாளிகளுக்கு இருந்து கொண்டே இருக்கிறது. அந்த வகையில் இளங்கோவடிகள் நெறிப்பட்ட வாழ்க்கையை வெளிக்காட்டும் சிலப்பதிகாரம் எனும் காவியம் படைத்தார். கம்பர் தமிழ்ப் பண்பாட்டிற்கேற்ப ராமகாதை வடித்தார். மானுடம் செம்மையுற வள்ளுவன் தமிழில் உலகப் பனுவலான திருக்குறளை இயற்றினார். தாயுமானவர் உண்மை உரைத்தார். வள்ளலார் உருகி அருளொளி ஏற்றினார். மகாவீரர் இன்னா செய்யாமையை வலியுறுத்தினார். புத்தர் உயிர் இரக்கத்தை அறிவுறுத்தினார். காந்தியடிகள் இயந்திரப் பெருக்கத்தை எதிர்த்தார். டால்ஸ்டாய் ஆடம்பர வாழ்வை எதிர்த்தார்.

மார்க்ஸ்-ஏங் கேல்ஸ் மூலதனத்தை உருவாக்கினார். காலந்தோறும் சமுதாயம் மேம்பட வேண்டும் என்ற நல்ல நோக்கம் எல்லாருக்கும் இருந்திருக்கிறது. ஆகையால், தம்மால் இயன்றவரை தமது படைப்புகளின் வழி சமுதாய மேம்பாட்டிற்குப் பாடு பட்டுள்ளனர்.

அந்த வகையில் முன்னோர் வழி நின்று ந. சுப்புரெட்டியார் தமது சமகால மக்களுக்குத் தேவையான நல்லறம் சார்ந்த பல்வேறு படைப்புகளைப் பெருங்கொடையாக வழங்கியுள்ளார். இவரின் படைப்புகளில் பெரும் பகுதி சமுதாயத்திற்குப் பயன்படும்படியே அமைந்துள்ளது என்ற கருத்தாக்கத்தில் இக்கட்டுரை சில செய்திகளை விளக்க முற்பட்டுள்ளது.

மனித வாழ்வில் அறம் - நீதி

இன்றைய சமுதாயத்தில் பணம் ஆற்றலுடையதாகக் கொடுங்கோல் ஆட்சி புரிகிறது. அதனால் பலரின் வாழ்க்கையில் அமைதியும், இன்பமும் இல்லை. அதனால், ஏழைகள் வாடு கின்றார்கள்; செல்வந்தர்கள் வருந்துகிறார்கள்; கல்லாதவர் ஏங்கு கிறார்கள்; கற்றவர்களும் துன்பப்படுகிறார்கள் நிகழ்கால வாழ்க்கைப் போராட்டங்கள் எதிர்கால கவலைகள் இவை இரண்டும் உள்ள வரை சமுதாய அமைப்பில் நிலைத்த வெற்றியும் பெரு நன்மையும் கிடைத்தல் என்பது அரிதானது. ஒவ்வொருவரும் உணர்ந்து தமது எண்ணங்களைத் திருத்திக்கொள்ளவேண்டும். எண்ணம் திருந்தினால் எல்லாம் திருந்தும். எண்ணங்களைச் சீர் செய்ய இலக்கியங்களால் முடியும் என்பதை உணர்ந்த ஆசிரியர் தமிழ் இலக்கியங்களில் அறம் நீதிமுறைமை என்னும் தலைப்பில் தமிழ்ச் சமுதாயத்திற்கு தேவையான நற்கருத்துக்களை தமது சொற்பொழிவுகளின் வழி வழங்கியுள்ளார். இவை பின்னாளில் நூலாக்கம் பெற்றுள்ளது. இந்நூலில் தமிழ் இலக்கியங்களில் அறம்; தமிழ் இலக்கியங்களில் நீதி; தமிழ் இலக்கியங்களில் முறைமை எனும் மூன்று இயல்களில் சமுதாய மேம்பாட்டிற்குரிய கருத்துக்களைப் பழந்தமிழ் இலக்கியங்களின் வழி தக்க சான்றுகளோடு எடுத்துரைத் துள்ளார்.

இன்றைய வாழ்க்கை முறையைப் பொருளாதார அடிப்படையில் ஆய்ந்து பழந்தமிழ் இலக்கியங்கள் இன்றைய சூழலில் எங்ஙனம் பொருந்துகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறார் ஆசிரியர்.

அகப்பொருள்அறம் பற்றிக் கூறுமிடத்து

பாலதாணையின்

"ஒத்த கிழவனும் கிழத்தியும்காண்ப" (தொல்-களவியல்-3)

தலைவன் தலைவியை எழுவாயாக வைத்துக் காட்டும் நிலையில் முன்னதாகக் காதலித்தவர் யார் என்ற வினாவுக்கு அக்காலத்திலேயே இடம் வைக்கவில்லை என்பது சிந்திக்கக்தக்கது என்கிறார் (பக். 23).

இல்லற வாழ்விற்கும் துறவற வாழ்விற்கும் பொதுவானதாக அழுக்காறு, இன்னாச்சொல், அவா, வெகுளி என்ற நான்கினையும் விடவேண்டும் எனக்கூறும் ஆசிரியர் இக்காலத்தில் மக்களை ஏமாற்றும் சில போலித் துறவிகள் செல்வம் சேர்ப்பதையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்கின்றனர் என்று கடிந்துரைக்கின்றனர். மனம் மாசு இல்லாமல் செய்யும் அறமே சிறந்தது என்பதை வள்ளுவரின் வழி நின்று வற்புறுத்துகின்றார். உயரிய அன்பின் சிறப்பை இலக்கியங்களின் வழி விளக்கி தன்னலத்தினால் ஏற்படும் தீமைகளை எடுத்துக்கூறி தன்னலமின்றி பிற உயிர்களிடத்தில் அன்புகாட்டி வாழவேண்டும் என்று அறிவுறுத்துகிறார். விருந்தோம்பல் பற்றி கூறுமிடத்து இக்காலத்தில் விருந்து என்ற பெயரில் நடக்கக்கூடிய ஆடம்பரங்களைப் பற்றியும் உண்மையான விருந்து வழங்க இயலாத நிலையையும் எடுத்துக்கூறி விரும்தோம்பல் முழுவதுமாக மக்கள் உணர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்கிறார்.

மேலும், நீதியைப் பற்றி விளக்குமிடத்து தொடக்கத்திலேயே அறத்திற்கும் நீதிக்கும் உள்ள வேற்றுமையைத் தெளிவுப்படுத்துகிறார். நீதி நெறி வழுவாது ஆட்சி புரிந்த தமிழக வேந்தர்கள் நீதி வழங்கிய முறையும் அதன்பால் அவர்கள் கொண்டிருந்த ஊற்றத்தையும் எடுத்தியம்புகிறார். உடல் ஊனமுற்றோருக்குச் சிறப்பாக அரசுகள் செய்ய வேண்டிய கடமைகள் சாதியொழிப்பு என்ற பெயரில் நடக்கும் முறையற்ற செயல்களை ஆசிரியர் வெளிப்படையாகச் சாடுகிறார்.

கொலைத் தண்டனை தேவையா?

இக்காலத்தில் மனித உரிமை அமைப்புகளும் சில இயக்கங்களும் கொலைத்தண்டனை கூடாது என்றும் சிற்சில இடங்களில் அது தேவை என மாறுபட்ட கருத்துக்கள் நிலவும் சூழலில் இது பற்றி

ஆசிரியர் தண்டனை வழங்கும் முறைகளில் கொலைத் தண்டனையும் ஒன்று மிகப் பொல்லாத குற்றவாளிகளாக உள்ள ஒரு சிலரைக் கொலைத் தண்டனை வழங்கி ஒழித்துக்கட்டவேண்டும் என்று கருதும் போது கொல்லாமைப் பற்றி கூறும் கருத்துக்கள் நடைமுறையில் நீதி வழங்குவோருக்குப் பயன்படுவதில்லை. இவை யெல்லாம் தனிவாழ்க்கை என்னும் முறைக்கு ஓதியவை என்று கொள்ளின் குழப்பம் நேரிடாது. தனிப்பட்டவன் தன் வாழ்க்கை கெடுவதானாலும் பிறருக்குத் தீமை விளைத்ததின்றி வாழவேண்டும் என்பதே வள்ளுவர் காட்டும் அறம். ஆனால், அவனே பலரைக் காக்கும் கடமையில் உள்ளபோது பொதுவாழ்க்கை கெடுவதனாலும் பிறருக்குத் துன்பம் இழைத்தல் ஆகாது என்று கருதுவது அறியாமை. இது கடமை செய்வதில் தவறிய குற்றமும் ஆகும். ஆகவே பொது வாழ்க்கை கெடாமல் சீர்படவேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொண்டு குற்றவாளிகட்கு தண்டனை வழங்குதல் வேண்டும். அவ்வாறு தண்டிப்பது பழியும் அன்று; பாவமும் அன்று; அது தலைவனது தலையாய கடமையாகும். (தமிழ் இலக்கியங்களில் அறம் நீதி முறைமை - பக். 254) என்று துணிவுற தெரிவிக்கிறார்.

இல்லற நெறி

'இல்லறநெறி' எனும் நூலில் திருமண வாழ்வில் நுழையும் தம்பதியர் அறிந்துகொள்ள வேண்டிய மனப்பொருத்தம், இனப் பெருக்கம், மக்கட்பேறு, குடும்பக்கட்டுப்பாடு, திருமணக்கலை, மேலும் கல்வி, அறிவு, ஒழுக்கம் முதலிய அனைத்திற்கும் நிலைக்களனாக விளங்கும் உடல் பற்றிய அறிவு. மன அமைதி போன்றவற்றைப் பற்றி ஐம்பது கடிதங்களில் விவரித்துள்ளார். இளம் வயதிலேயே மனமுறிவுக்காக காத்திருக்கும் இன்றைய இளைய சமுதாயம் இது பற்றி அறிந்து கொள்வது அவசியமாகும்.

நமது உடல்

மருத்துவம் என்பது நோயுற்றவர்களுக்கு செய்யும் மாபெரும் சேவை என்ற நிலையிலிருந்து தற்பொழுது வணிகமாக மாறிவிட்ட சூழலில் ஒவ்வொருவரும் உடலோம்புதல் என்பது இன்றியமையாத ஒன்றாகும் இது பற்றி திருமூலம்,

'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
உடம்பை வளர்த்தேனே; உயிர் வளர்த்தேனே'

(திருமந்திரம்- 427)

'உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே'

(திருமந்திரம்- 725)

என்று உடலோம்பலின் இன்றியமையாமையை அந்நாளிலே தெளிவுற வலியுறுத்துகிறார். இந்த உலகில் நமது வாழ்க்கையை செவ்வனே கொண்டு செல்வதற்கு வேண்டியகருவியாக உடல் அமைந்துள்ளது. இவ்வுடலைப் பற்றி,

'உடலில் உறுதி உடையவரே
உலகில் இன்பம் உடையவராம்
இடமும் பொருளும் நோயாளிக்கு
இனிய வாழ்வு தந்திடுமோ?'

(கவிமணி - மலரும் மாலையும் - 1)

என்ற வினாவின்வழி கவிமணி உடலோம்பலின் அவசியத்தை வலியுறுத்துகிறார். இவர்களின் வழியில் ஆசிரியர் ந. சுப்புரெட்டியார் நமது உடல் (1974) எனும் நூலை தமிழ்ச் சமுதாயத்திற்கு தந்துள்ளார். இந்நூலில் பாமரரும் புரிந்துக்கொள்ளும் வகையில் எளிய தமிழில் அறிவியல் வழியில் உடற்கூறுகளின் பணி உடலின் வழி உள்ளம் இயங்குதல், உடலோம்பலின் அவசியத்தை காலத்தேவைக்கேற்ப எடுத்துரைத்துள்ளார்.

வைணவ இலக்கியங்கள்மீது ஆழ்ந்த பற்றுக்கொண்ட ஆசிரியர், பகுத்தறிவுப் பாதையை உருவாக்கி மக்கள் சாதி சமயப் பிடியிலிருந்து விடுதலைப் பெற்று ஒரு நிகராக வாழ வழிவகுத்த தந்தை பெரியாரின் சிந்தனைகளையும், தமிழ் மொழியில் உலக இலக்கியமான திருக்குறளை இயற்றிய தெய்வப்புலவர் திருவள்ளுவரின் வாழ்வியற் சிந்தனைகளையும் திருக்குறளுக்கு புதியதோர் உரையையும் காலத் தேவைக்கேற்ப எடுத்துரைத்திருப்பது சிறப்பு.

மேலும் நிகழ்காலத்தோடு சமரசம் செய்யாமல் சாதியம் மறுத்து, சமத்துவம் பேசி; பெண்மையைப் போற்றி, இந்திய விடுதலைக்காகப் பாடிய மகாகவி பாரதியாரின் கொள்கைகளை ஆசிரியர் 'பாரதியம்' எனும் நூலின் வழி விவரித்திருப்பது தனிச்சிறப்பு.

இவ்வாறாகப் பேராசிரியர் ந சுப்புரெட்டியார் தமிழ் இலக்கிய உலகிற்கு எண்ணற்ற படைப்புகளைத் தந்து தனக்கெனத் தனித்த ஒரு தடத்தை உருவாக்கியுள்ள இவருடைய படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக சமுதாயப் பயன்பாட்டை நோக்கியே பயணிக்கிறது என்பது திண்ணம்.

முனைவர் ந. சுப்புரெட்டியாரின் வாழ்க்கை வரலாறு

-முனைவர் சு. இராமலிங்கம்

பிறப்பு: தமிழ்நாட்டில் சோழவளநாடு சோறுடைத்து - என்ற பெருமை பெற்ற சோழநாட்டின் தலைநகர் இன்றைய திருச்சி மாவட்டத்தில் - தாய் திருமதி. காமாட்சி அம்மாள் ஊரான லால்குடி வட்டத்தில் உள்ள பெரகம்பியில் 27-8-1916ல் பிறந்தார். தந்தை திரு. நல்லப்பரெட்டியாரின் ஊரான முசிறி வட்டத்தில் உள்ள கோட்டாத்தூரில் வளர்ந்தார்.

படிப்பு: மூன்று வயதிலேயே தந்தையை இழந்தார். அதனால் தாய்மாமன் தயவில் - தாயின் அரவணைப்பில் - கோட்டத்தூரில் இருந்த தொடக்கப் பள்ளியில் சேர்ந்து படித்தார். துறையூர் ஜமீந்தார் நடுநிலைப் பள்ளியிலும், முசிறியில் இருந்த ஜில்லாபோர்டு உயர்நிலைப் பள்ளியிலும் படித்துத் தேர்ந்தார். பின்னர் திருச்சியில் புனித ஜோசப் கல்லூரியில் வேதியியல் பிரிவில் இளங்கலை பட்டம் பெற்றார். சென்னை, சைதாப்பேட்டையில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து L.T. பட்டத்தைப் பெற்றார். பின்னர் 1951ல் M.A. (தமிழ்), 1970 Ph.D பட்டங்கள் பெற்றார்.

பணி: 1941 முதல் 1950 வரை அவர் துறையூர் ஜமீந்தார் உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். 200 ஆக இருந்த மாணவர் எண்ணிக்கையை 1000 ஆக உயரவும், துறையூரைச் சுற்றி ஐந்து உயர்நிலைப் பள்ளிக்கூடங்கள் தொடங்கவும் காரணமாக இருந்தார்.

கல்லூரிப் பணி: கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்களின் பரிந்துரையின் பேரில் காரைக்குடி டாக்டர் அழகப்ப செட்டியார் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்த்துறையை உருவாக்கி அதன் தலைவராகவும், பேராசிரியராகவும் 1950 முதல் 1960 வரை பணியாற்றினார். தாய்மொழி தெலுங்காக இருந்தாலும் தமிழின் மீது இருந்த தணியாத ஆர்வம் காரணமாக வித்வான் இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டங்களைப் பெற்றார்.

பல்கலைக்கழகப் பணி:

1960ஆம் ஆண்டு ஆந்திர மாநிலம் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை புதிதாக உருவாக்கவும் அதன் பேராசிரியராக பணியாற்றவும் வாய்ப்பு கிடைத்தது. அழகப்பா பயிற்சிக் கல்லூரியில் கிடைத்த சம்பளத்தை விடக் குறைவு என்றாலும் முழு மனதுடன் ஏற்றுக்கொண்டார்.

இதற்கு அவர் சொன்ன காரணம்-

'முதலில் பள்ளியில் தலைமை ஆசிரியர்' பின்னர் கல்லூரியில் பேராசிரியர் - துறைத் தலைவர், இப்பொழுது பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் - துறைத் தலைவர் எனப் பள்ளி தொடங்கி பல்கலைக் கழகம் வரை எனது பணி விரிவடையக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன் என்பதுதான்.

தமிழக அரசு தமிழ் வளர்ச்சித் துறை, ஆந்திர அரசு, திருப்பதி தேவஸ்தானம், பல்கலைக்கழக மானியக்குழு ஆகியவை தலா ரூ. 15,000/- வழங்க மொத்தம் ரூ. 60,000/- நிதியத்துடன் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை திரு. ந. சுப்புரெட்டியார் அவர்கள் தலைமையில் உருவானது. அங்குதான் தமிழில் 1970ல் முனைவர் பட்டத்தையும் பெற்றார். 1977இல் ஓய்வு பெற்றபோது தமிழ் ஆய்வுத்துறையாக அது உயர்ந்திருந்தது.

அங்குள்ள தெலுங்கு பேசும் தமிழர்களுக்காக ஐந்து உயர் நிலைப்பள்ளிகளையும், நான்கு கல்லூரிகளில் தமிழ் துறைகளையும் நிறுவியவர்.

இன்றைக்குத் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை ஆய்வு வசதிகளுடன் சிறந்து விளங்குகிறது எனில், அதற்கான அடித்தளம் அமைத்து வித்திட்டவர் திரு. ந.சுப்பு ரெட்டியார் அவர்கள்தான் எனில் மிகையில்லை.

சென்னையில் பிற பணிகள்:

1978 - 79ல், சென்னைத் தமிழ் அகாதெமி வெளியிட்ட, தமிழ் அகர முதலியின் முதன்மை ஆசிரியராகப் பணியாற்றினார். 1979ல் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் 1989ல் சென்னைப் பல்கலைக்கழகம் 'எமிரைட்ஸ் பேராசிரியராகவும்' - தெற்கு, தெற்கு ஆசிய பண்பாட்டுக் கலாசார மையம் கௌரவ இயக்குனராகவும்

நியமித்து பெருமைப்படுத்தின.

சாகித்திய அகாதெமி ஆலோசனைக் குழு உறுப்பினர், தமிழக அரசு தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழு உறுப்பினர், சென்னை, மதுரை, அண்ணாமலை, பெங்களூர், மைசூர், திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகங்களின் அகாதெமிக் கவுன்சில் உறுப்பினர் எனப் பல்வேறு பதவிகளை வகித்தார்.

நேர்மையானவர், கண்டிப்பானவர் என்பதுடன் சட்ட விதிகளுக்கு மாறாக எதையும் செய்யத் துணியாதவர். பொறுப்பு களையும், கௌரவங்களையும் நாடி செல்லாதவர். மாறாக அவை அனைத்துமே இவரைத் தேடி வந்தன. இதற்கு ஓர் உதாரணம்:-

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் உருவாகக் காரணமானவர், அப்போதைய தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். தஞ்சைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக இவரை நியமிக்கப் பரிந்துரைகள் வந்திருப்பதாகவும், பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும், நம்பகமான வட்டத்திலிருந்து தகவல் வந்தது. துணை வேந்தர் என்னும் மிகப்பெரிய பதவியே தேடிவந்த போதிலும் இவர் அதை ஏற்கத் தயக்கம் காட்டியதுடன் அதற்கான விரிவான விளக்கத்தையும் அளித்தார்.

'தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பதவி ஏற்றுக் கொள்வது பெருமையான விஷயம் தான். ஆனால் தராசுத் தட்டின் முள்ளைப் போன்று உண்மையாகவும், நேர்மை யாகவும், நடுநிலையோடு செயல்படுவேன். எது சரியோ அதை மட்டுமே செய்வேன். நிர்வாகத்தில் அரசியல் தலையீடுகளை அனுமதிக்க மாட்டேன்' என்று கறாராகச் சொன்னவர். பல்வேறு காரணங்களுக்காகப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவி அவருக்கு கிடைக்காமல் போனாலும், எவ்வளவு பெரிய பதவியாக இருந்தாலும் கொள்கையை விட்டுக் கொடுக்க மாட்டார் என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை.

விருதுகள்:

தமிழக அரசின் கலை மாமணிவிருது, திருவிக. விருது, தினத்தந்தி சி.பா. ஆதித்தனார் விருது, மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் டி.லிட். பட்டம், ஆழ்வார் ஆய்வு மையத்தின் ராமானுஜர் விருது, கம்பன் கழகத்தின் பேராசிரியர் ராதாகிருஷ்ணன் விருது, ராஜா

சர் அண்ணாமலைச் செட்டியார் விருது, உலகத் திருக்குறள் மையத்தின் திருக்குறள் விருது எனப் பல விருதுகளைப் பெற்ற பெருமையுடையவர்.

நூல்கள்:

பணியிலிருந்த 36 ஆண்டுகள் மற்றும் ஓய்விற்குப் பிறகு 29 ஆண்டுகள் என இவரது தமிழ்ப்பணி 65 ஆண்டுகள் நீடித்தது. அவரது வாழ்நாளில் எழுதிக் குவித்த மொத்த நூல்களின் எண்ணிக்கை 135. அவற்றில் ஓய்விற்குப் பிறகு 1977 முதல் 2006இல் மறையும் வரை 29 ஆண்டுகளில் மட்டும் இவர் எழுதிய நூல்கள் 100க்கும் அதிகம். 2008இல் தமிழக முதல்வராக இருந்த கலைஞர் அவர்கள், ரூ. 5 லட்சம் தொகையை வழங்கி இவரது நூல்களை நாட்டுடைமை ஆக்கினார்.

அறக்கட்டளை:

ரூ. 5 லட்சம் தொகையை வைப்பு நிதியாக்கி அதன் மூலம் கிடைக்கும் வட்டியில் திரு. ந. சுப்புரெட்டியார் அவர்கள் படித்த பள்ளிகளில் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்புகளில் அதிக மதிப்பெண் எடுக்கும் முதல் மூன்று மாணவர்களுக்கு பரிசுகளாக தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

இல்வாழ்க்கை:

1936இல் செல்லபாப்பா என்ற நங்கையை இல்வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார். பன்னிரண்டு ஆண்டுகளாக குழந்தை பாக்கியம் இல்லா நிலைகண்டு உற்றார், உறவினர்களின் கோயில் குளங்களுக்கு சென்று வாருங்கள் என்ற ஆலோசனையின் படி, ராமேஸ்வரம், கன்னியாகுமரி, திருவனந்தபுரம், திருச்செந்தூர் - மதுரை - பழனி, ஸ்ரீரங்கம், திருவண்ணாமலை, திருப்பதி ஆகிய இடங்களுக்கு ஆன்மீகப் பயணம் மேற்கொண்டதன் பயனால், 1949ல் துறையூரில் ராமலிங்கம் என்ற மகனையும், 1953ல் காரைக்குடியில் ராமகிருஷ்ணன் என்ற மகனையும் பெற்று வளர்த்து படிக்க வைத்து திருமணம் செய்து அழகு பார்த்தார்.

சென்னையில் உள்ள முதல் மகன் ராமலிங்கம் அவர்களுக்கு இரண்டு மகள்களும், U.S.A.வில் உள்ள இரண்டாவது மகன் ராமகிருஷ்ணன் அவர்களுக்கு இரண்டு மகன்களும் உள்ளனர். இரண்டு மகன்களின் குழந்தைகளான பேரக் குழந்தைகளையும்

கண்டு இன்புற்றார்கள்.

10க்கும் மேற்பட்ட அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்:

பேராசிரியர் Dr. N. சுப்புரெட்டியார் - திருமதி. S. செல்லபாப்பா அம்மாள் என்ற பெயரில் கீழ்க்கண்ட பல்கலைக்கழகங்களில் தமிழ்த்துறை - ஸ்ரீ வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகம், திருப்பதி, தமிழ் இலக்கியத்துறை - சென்னை பல்கலைக்கழகம், சென்னை, சைவசித்தாந்தத் துறை - சென்னை பல்கலைக்கழகம், சென்னை, தமிழ் இலக்கணத்துறை - மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை, தமிழ்த்துறை - அழகப்பா பல்கலைக் கழகம், காரைக்குடி, மதர்தெரஸா மகளிர் பல்கலைக் கழகம், கொடைக்கானல், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி தமிழ்த்துறை - லயோலா கல்லூரி சென்னை, தமிழ்த்துறை - பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி, கம்பன் அறக்கட்டளை - காரைக்குடி அறக்கட்டளைகளை நிறுவியுள்ளார்.

சான்றோர்கள் தொடர்பு:

இந்திய கவர்னர் ஜெனரல் - சி. ராஜகோபாலாச்சாரியார்

இந்திய ஜனாதிபதி - Dr. S. ராதாகிருஷ்ணன்

இந்திய ஜனாதிபதி - R. வெங்கட்ராமன்

இந்திய ஜனாதிபதி - Dr. Dr. A.P.J. அப்துல்கலாம்

கவர்னர் Dr. வி. அனந்தசயனம் ஐய்யங்கார் - பீகார்

கவர்னர் B. கோபால் ரெட்டி - உத்தரப்பிரதேசம்

கவர்னர் Dr. சி. சுப்பிரமணியம் - மகாராஷ்டிரா

தமிழக முதல்வர்கள்:

திரு. K. காமராஜ், Dr. C.N. அண்ணாதுரை, Dr. மு. கருணாநிதி, Dr. M.G. ராமச்சந்திரன், அமைச்சர்கள் - திரு. T.S. அவினாசிலிங்கம் செட்டியார், Dr. மபொ. சிவஞானம் போன்றவர்களும், உச்சநீதிமன்ற நீதிபதிகள் - P.S. கைலாசம், S. நடராசன், V. ராமசாமி, S. ரத்னவேல் பாண்டியன், உயர்நீதிமன்ற நீதிபதிகள் - M.M. இஸ்மாயில், P.R. கோகுல்கிருஷ்ணன், N. கிருஷ்ணசாமி ரெட்டியார், Dr. மகராஜன், G. ராமானுஜம்.

லட்சுமணசாமி முதலியார் - சென்னைப் பல்கலைக்கழகம்.

மால்கம் ஆதி. சேஷையா - சென்னைப் பல்கலைக்கழகம்.

தாமோதரன் - சென்னைப் பல்கலைக்கழகம்.

அவ்வை நடராஜன், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

தொ.பொ. மீனாட்சி சுந்தரம், மதுரை பல்கலைக்கழகம், மதுரை.

ரெட்டி, ஸ்ரீ வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகம், திருப்பதி.

தமிழ் விற்பன்னர்கள்:

திரு. கி.வா. ஜகந்நாதன், திரு.வி.க., திரு. கே.ஏ.பி. விசுவநாதன், பேராசிரியர் அவ்வை துரைசாமி பிள்ளை, கம்பராமன் S.K. ராமராஜன், ராய சொக்கலிங்கம், பாவேந்தர் பாரதிதாசன், கவிஞர் வாலி, பூதூர் மு. வெங்கடசுவாமி ரெட்டியார், திரு. சோமலே, திரு. அரங்க சீனிவாசன், புலவர் K.C. குப்புசாமி ரெட்டியார்.

கல்வியாளர்கள்:

Dr. S.V. சுப்ரமணியன், Dr. சிலம்பொலி செல்லப்பன், திரு. K.R. மாணிக்கம், திருமதி, சௌந்தரா கைலாசம், Dr. A.N. பெருமாள், திருக்குறள் K. பாஸ்கரன், புலவர் ஜி. பெரியாண்டவன்.

தமிழ் பேராசிரியர்கள்:

பேரா. சி. இலக்குவனார், Dr. R.P. சேதுப்பிள்ளை, Dr. N. சஞ்சீவி, K. வெள்ளை வாரணன், P.R. புருஷோத்தம நாயுடு, கி. சீனிவாச ராகவன், Dr. கி. சிதம்பரநாதன் செட்டியார், Dr. K.P. அறவாணன், Dr. வி. சண்முகம் பிள்ளை, V. வேங்கடராஜுலு ரெட்டியார், Dr. R. நாகு.

தொழில் அதிபர்கள்:

Dr. N. மகாலிங்கம், சேர்மன் - சக்தி குரூப் - பொள்ளாச்சி

Dr. R.M. அழகப்ப ரெட்டியார் - நிறுவனர் அழகப்பா குரூப் கல்லூரி, காரைக்குடி.

திரு. R. கிருஷ்ணசாமி ரெட்டியார், சிதம்பர விலாஸ் பஸ் அதிபர், திருச்சி.

திரு. S. தியாகராஜன், சதர்ன் அலாய் பவுன்டேஷன், சென்னை.

திரு. S.S. வாசன், நிறுவனர் - ஆனந்த விகடன் குழுமம், சென்னை.

திரு. சித்பவானந்த அடிகள் - ராமகிருஷ்ண தபோவனம், திருச்சி.

தவத்திரு. குன்றக்குடி அடிகளார், தலைவர் திருவண்ணாமலை மடம், குன்றக்குடி.

முக்கிய பிரமுகர்கள்:

தந்தை E.V. ராமசாமி, நிறுவனர் திராவிடர் கழகம்.

P. ரங்கசாமி ரெட்டியார் - வகுப்புத் தோழர் - வழக்கறிஞர், திருச்சி.

R. காந்தி, மூத்த வழக்கறிஞர், சென்னை உயர்நீதி மன்றம்.

கடைசி காலத்தில்: அண்ணா நகர் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருந்தவர்.

வெளியீடுகள்:

1949ல் 33 வயதில் 'கவிஞர் உள்ளம்'

1957ல் 41 வயதில் தமிழ் பயிற்றும் முறை, 'அறிவியல் பயிற்றும் முறை,' 'கலிங்கத்துப் பரணி' - ஆராய்ச்சி.

1958ல் 42 வயதில் 'அணுவின் ஆக்கம்,' 'காலமும் கவிஞர்களும்,' 'மனித உடல்' (மொழிபெயர்ப்பு).

1961ல் 45 வயதில் கல்வி உளவியல்.

1962ல் 46 வயதில் அறிவுக்கு விருந்து, இளைஞர் வானொலி.

1963ல் 47 வயதில் அதிசய மின்னணு, தொல்காப்பியர் காட்டும் வாழ்க்கை.

1964ல் 48 வயதில் இல்லற நெறி, ராக்கெட்டுகள்.

1965ல் 49 வயதில் முத்தொள்ளாயிர விளக்கம்.

1966ல் 50 வயதில் இளைஞர் தொலைக்காட்சி, அணுக்கரு பௌதீகம் (மொழிபெயர்ப்பு).

1967ல் 51 வயதில் அறிவுக்கு விருந்து.

1969ல் 53 வயதில் அறிவியல் பயிற்றும் மூல முதல் நூல் (மொழிபெயர்ப்பு).

1971ல் 55 வயதில் மலைநாட்டு திருப்பதிகள்.

1972ல் 56 வயதில் பரணிப் பொழிவுகள்.

1973ல் 57 வயதில் அம்புலிப் பயணம்.

1974ல் 58 வயதில் நமது உடல்.

1975ல் 59 வயதில் திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்.

1976ல் 60 வயதில் தொலை உலக செலவு.

1977ல் 61 வயதில் நாலாயிர திவ்வியப் பிரபந்தம் - சிறப்பாக நம்மாழ்வார் (Ph.D. ஆராய்ச்சிக் கட்டுரை புத்தகமாக)

1978ல் 62 வயதில் கலை - அறிவியல் படிப்பு - வேமனா (சாகித்திய அகாதெமிக்காக மொழிபெயர்ப்பு).

1980ல் 64 வயதில் வடநாட்டு திருப்பதிகள்.

1981ல் 65 வயதில் சோழநாட்டு திருப்பதிகள், சி.ஆர். ரெட்டி (மொழிபெயர்ப்பு சாகித்திய அகாதெமி) புது தில்லி.

1982ல் 66 வயதில் குயில்பாட்டு - ஒரு மதிப்பீடு.

கண்ணன் பாட்டு திறன்.

பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு.

மகாத்மா காந்தியடிகள் - நெஞ்சுவிடு தூது.

1983ல் 67 வயதில் பாரதீயம் கம்பனில் மக்கள் குரல், கவிதை பயிற்றும் முறை புதுக்கவிதை - போக்கும் நோக்கும்.

1984ல் 68 வயதில் சைவ சமயவிளக்கு.

1985ல் 69 வயதில் வைணவ உரைவளம், தம்பிரான் தோழர் திருப்பதி ஸ்ரீ வெங்கடேஸ்வரா பல்கலைக்கழக வெள்ளிவிழா கட்டுரை மலர்.

1986ல் 70 வயதில் திருஞானசம்பந்தர், நாவுக்கரசர்.

1987ல் 71 வயதில் ஆழ்வார்களின் ஆரா அமுது - வீட்டு சித்தன் விரித்த தமிழ் - கண்ணன் துதி.

1988ல் 72 வயதில் தமிழ் இலக்கியங்களில் - அறம், நீதி, முறைமை நினைவுக் குமிழிகள் - பகுதி - 1, பாட்டுத்திறன் - ஆண்டாள்

பாவையும் - அழகு தமிழும் பகுதி - 1.

1989ல் 73 வயதில் கலியன் குரல், நினைவுக் குமிழிகள், பகுதி-2. நினைவுக் குமிழிகள் - பகுதி 3, மாணிக்கவாசகர், கல்வி உளவியல் கோட்பாடுகள், சடகோபன் செந்தமிழ் ஆண்டாள் பாவையும் அழகு தமிழும் - பகுதி 2.

1990ல் 74 வயதில் நினைவுக் குமிழிகள் - பகுதி 4.

தமிழில் அறிவியல் - அன்றும் இன்றும்.

1991ல் 75 வயதில் புதுவை (மை) கவிஞர் சுப்ரமணிய பாரதியார் - ஒரு கண்ணோட்டம்.

1992ல் 76 வயதில் பாவேந்தர் பாரதிதாசன் - ஒரு கண்ணோட்டம். பரகாலன் பைந்தமிழ், முருகன் துதியமுது.

1993ல் 77 வயதில் வாய்மொழியும் - வாசகமும்.

1994ல் 78 வயதில் அர்த்த பஞ்சகம், நவவித சம்பந்தம்.

1995ல் 79 வயதில் வைணவச் செல்வம்.

1996ல் 80 வயதில் பண்பாட்டு நோக்கில் - கம்பன் காவியம், எம்பிரான் சதகம்.

1997ல் 81 வயதில் இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும், கவிஞர் வாலியின் 'அவதார புருஷன்' - ஒரு மதிப்பீடு.

1998ல் 82 வயதில் வாழும் கவிஞர்கள் - 1, தமிழ் கடல் ராய - சொ.

1999ல் 83 வயதில் முத்தமிழ் காவலர் கி.ஆ. பெ. விசுவநாதன், நீங்காத நினைவுகள் - 1. நீங்காத நினைவுகள் - 2.

2001ல் 85 வயதில் பாவேந்தரின் பாட்டுத் திறன், திருக்குறள் தெளிவு, தந்தை பெரியாரின் சிந்தனைகள், சைவசித்தாந்தம் - ஓர் அறிமுகம். தாயுமானவர், சைவமும் - தமிழும். அறிவியல் நோக்கில் - இலக்கியம், சமயம், தத்துவம்.

2002ல் 86 வயதில் கவிமணியின் தமிழ்ப்பணி - ஓர் மதிப்பீடு. கவிஞர் வாலியின் பாண்டவர் பூமி - ஓர் மதிப்பீடு. பல்சுவை விருந்து - பாண்டியன் பரிசு - ஓர் மதிப்பீடு. தமிழில் அறிவியல் செல்வம்.

2003ல் 87 வயதில் அண்ணல் அனுமன், பட்டினத்தடிகள், ராமலிங்க அடிகள், மூவர்தேவாரம் - புதிய பார்வை.

2004 88 வயதில் வள்ளுவரின் வாழ்வியல் - சிந்தனைகள். என் அமெரிக்கப் பயணம். காஞ்சி பிரதிவதி பயங்கரம். அண்ணங்காச் சாரிய சுவாமிகள்.

மற்றும் கீழ்க்கண்ட நூல்கள்:

1. கவிஞன் உள்ளம், 2. காதல் ஓவியங்கள், 3. அறிவியல் தமிழ், 4. திருக்குறள் கருத்தரங்கு மலர், 5. தமிழ் இலக்கியத்தில் அறம், நீதி, முறைமை, 6. முக்திநெறி, 7. சில நோக்கில் நாலாயிரம், 8.வைணவமும் தமிழும், 9. ஆன்மீகமும் அறிவியலும், 10. வைணவ உரைவளம் (ஐதீகம், இதிகாசம், சம்வாதம்), 11. கலியன் குரல், 12.கீதைக் குறள், 13. கண்ணன் எழில்காட்டும் கவிதைப்பொழில், 14.ராமர் தோத்திரம், 15. தொண்டை நாட்டுத் திருப்பதிகள், 16.பாண்டி நாட்டுத் திருப்பதிகள், 17. சோழ நாட்டுத் திருப்பதிகள் -1, 18. சோழ நாட்டுத் திருப்பதிகள் -2, 19. தம்பிரான் தோழர், 20. பாட்டுத் திறன், 21. கம்பன் படைத்த சிறு பாத்திரங்கள், 22.அகத்திணைக் கொள்கைகள், 23. கண்ணன் பாட்டுத்திறன், 24.பாரதீயம், 25. உயிர்தந்த உத்தமன், 26. ஆழ்வார்கள் ஆரா அமுது, 27.நினைவுக் குமிழிகள் பகுதி -3, 28. நினைவுக் குமிழிகள் பகுதி - 5, 29. குரஜாட, 30. மலரும் நினைவுகள், 31. இளைஞர் வானொலி, 32. வாழையடி வாழை, 33. தமிழில் அறிவியல் - அன்றும் - இன்றும், 34.வானமண்டலக் காட்சி, 35. வைணவச் செல்வம், 36.வடவேங்கடமும் திருவேங்கடமும், 37. Studies in Arts and Sciences, 38. Collected Papers போன்ற நூல்களும் வெளியிட்டுள்ளார்கள்.

1-5-2006இல் இவரது 90வது வயதில் அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

தந்தையின் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பாக கொண்டாடுவது ஒரு மகிழ்ச்சியான நிகழ்ச்சியாகும். ஆனால் - தந்தையின் நூற்றாண்டு தொடக்கம் முதல் - நூற்றாண்டு முடியும் வரை நூறு நிகழ்வுகளை நடத்தியது - இதுவரை உலக வரலாற்றில் யாரும் செய்யாத செயலாகும். அதைவிட நூறு நிகழ்ச்சிகளாக திட்டமிட்டு செயல் பட்டு வரும் பொழுது, ராமானுஜரின் 1000 ஆம் ஆண்டு என அறிந்து, 108 நிகழ்ச்சிகளாக நடத்தி முடித்து சிறப்பு செய்துள்ளார்கள். 108 நிகழ்ச்சிகளில் - முதல் நிகழ்ச்சியாக திரு. ந.சுப்புரெட்டியார்

அவர்களின் பிறந்த ஊரான திருச்சி மாவட்டம், லால்குடி வட்டத்தில் உள்ள பெரகம்பி கிராமத்தில், பெரம்பலூரில் உள்ள தனலட்சுமி சீனிவாசன் கல்வி நிறுவனங்களின் நிறுவனர் திரு. கி. சீனிவாசன் அவர்கள் முதன்மை விருந்தினராக வந்திருந்து அரசு உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு, கட்டுரை, ஓவியம், பாட்டு, பேச்சுப்போட்டி, கோலப்போட்டி ஆகிய போட்டிகளை நடத்தி வெற்றி பெற்றவர்களுக்கு 125 சான்றிதழ்களும், பரிசுகளும் வழங்கிச் சிறப்பாக முதல் விழா கொண்டாட்டம் நடைபெற்றது- அதற்குப் பிறகு - கீழ்க்கண்டவாறு ஒவ்வொரு ஊரிலும், நகரிலும், அங்குள்ள பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகங்களிலும், பல்வேறு நிலையில் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டுள்ளது.

1. 27-8-2015 பெரகம்பி - அரசு உயர்நிலைப் பள்ளி - 125 போட்டிகள்.
2. 28-8-2015 ஆரணி - ACS மெட்ரிக் மே.நி. பள்ளி - தமிழ்க் கட்டுரைப் போட்டி.
3. 3-9-2015 கோபிச்செட்டிப்பாளையம் - டையமண்ட் ஜூப்ளி மே. நி. பள்ளி, - தமிழ்க் கட்டுரைப்போட்டி.
4. 11-9-2015 புத்தனாம்பட்டி - திருச்சி நேரு மே.நி. பள்ளி - ஆசிரியர் நாள் விழா.
5. 5-10-2015 விக்ரமசிங்கபுரம் - PLWA மே.நி.பள்ளி - தமிழ்க் கட்டுரைப் போட்டி.
6. 6-10-2015 கோயம்புத்தூர், PSGR கிருஷ்ணம்மாள் மே.நி.பள்ளி - தமிழ்க் கட்டுரைப் போட்டி.
7. 7-10-2015 மதுரை - நாடார் மே.நி.பள்ளி - தமிழ்க் கட்டுரைப் போட்டி.
8. 8-10-2015 செனாய் நகர், சென்னை - திரு.வி.க. மே.நி.பள்ளி, தமிழ்க் கட்டுரைப் போட்டி.
9. 9-10-2015 மூவானூர், திருச்சி - அரசு மே.நி.பள்ளி, தமிழ்க் கட்டுரைப் போட்டி.
10. 12-10-2015 மதுரவாயல் சென்னை, அரசு மே.நி.பள்ளி - தமிழ்க் கட்டுரைப் போட்டி.

11. 15-10-2015 கோட்டாத்தூர் திருச்சி, அரசு உ.நி.பள்ளி - டாக்டர். அப்துல் கலாம் பிறந்த நாள் விழா.

12. 15-10-2015 முசிறி - திருச்சி - அரசு ஆண்கள் மே.நி.பள்ளி - டாக்டர். அப்துல் கலாம் பிறந்த நாள் விழா.

13. 15-10-2015 துறையூர், திருச்சி - ஜமீந்தார் உ.நி.பள்ளி, - டாக்டர். அப்துல் கலாம் பிறந்த நாள் விழா.

14. 26-10-2015 திருச்சி அரசு செய்யது முத்துழா மே.நி.பள்ளி - தமிழ் கட்டுரை போட்டி

15. 27-10-2015 காரைக்குடி - ஸ்ரீ மீனாட்சி பெண்கள் மே.நி.பள்ளி - தமிழ்க் கட்டுரைப் போட்டி.

16. 27-10-2015 முசிறி - திருச்சி - அரசு ஆ.மே.நி.பள்ளி - தமிழ்க் கட்டுரைப் போட்டி.

17. 28-10-2015 லால்குடி - அ.மே.நி.பள்ளி - தமிழ்க் கட்டுரைப் போட்டி.

18. 29-10-2015 திருச்சி - காவேரி மெட்ரிக் மே.நி.பள்ளி - தமிழ்க் கட்டுரைப் போட்டி.

19. 30-10-2015 முசிறி - திருச்சி - அ.ம.மே.நி.பள்ளி - தமிழ்க் கட்டுரைப் போட்டி.

20. 5-11-2015 உடுமலைப்பேட்டை - அரசு ஆ.மே.நி.பள்ளி - தமிழ்க் கட்டுரைப் போட்டி.

21. 5-11-2015 உடுமலைப்பேட்டை- அரசு மமே.நி.பள்ளி - தமிழ்க் கட்டுரைப் போட்டி.

22. 6-11-2015 காரைக்குடி - SMSV மே.நி.பள்ளி - தமிழ்க் கட்டுரைப் போட்டி.

23. 14-11-2015 தாளக்குடி- திருச்சி அரசு உ.நி.பள்ளி - குழந்தைகள் நாள் விழா.

24. 12-12-2015 கோயம்புத்தூர் - G.R.G. மேலாண்மைப் பள்ளி - தமிழ் தாத்தா பிறந்த நாள் விழா - ஆராய்ச்சி மாணவர்களுக்குச் சிறப்புரை.

25. 17-12-2015 வைரிசெட்டிபாளையம் - SVV மே.நி.பள்ளி - தமிழ்க் கட்டுரைப் போட்டி.

26. 19-12-2015 கோயம்புத்தூர் - G.R.G. மேலாண்மைப் பள்ளி - தமிழ் தாத்தா பிறந்த நாள் விழா - குறுந்தகடு வழங்கல்.

27. 20-12-2015 சென்னை சேகர் பதிப்பகம் நூற்றாண்டு வெளியீடாக முனைவர் ந. வேலுச்சாமி அவர்கள் எழுதிய 'கிருதயுகம்' வெளியிடப்பட்டது.

28. 27-12-2015 தமிழூர் - ஆலங்குளம் - திருநெல்வேலி - உலகத் தமிழ்க் கல்வி இயக்கம் - சிறப்பு தமிழரங்கம்.

29. 1-1-2016 திருச்சி K.K. நகர் ரெட்டி நலச் சங்கம், சுப்பு ரெட்டியார் படத்துடன் கூடிய நாள்காட்டி வெளியிடப்பட்டது.

30. 6-1-2016 ஸ்ரீவில்லிபுத்தூர் - MNRD மகளிர் மே.நி.பள்ளி - ஆண்டாள் சிறப்பு.

31. 8-1-2016 வைரிசெட்டிபாளையம் - SVV மே.நி.பள்ளி - ஆண்டாள் மார்கழி.

32. 9-1-2016 திருவண்ணாமலை - காந்தி நகர் மெட்ரிக் மே.நி.பள்ளி - ஆண்டாள் மார்கழி.

33. 9-1-2016 திருவண்ணாமலை - காந்தி நகர் மெட்ரிக் மே.நி.பள்ளி - மார்கழி சிவமயம்.

34. 18-1-2016 ஏழூர்பட்டி - திருச்சி அரசு மே.நி.பள்ளி - ஆண்டாள் மார்கழி.

35. 18-1-2016 ஏழூர்பட்டி - திருச்சி அரசு மே.நி.பள்ளி - ஆண்டாள் மார்கழி.

36. 28-1-2016 முசிறி - அரசு மகளிர் மே.நி.பள்ளி - ஆண்டாள் மார்கழி.

37. 28-1-2016 கோபிச்செட்டிப்பாளையம் - PKR மகளிர் கலைக் கல்லூரி - பக்தி இலக்கியம் (கருத்தரங்கு)

38. 29-1-2016 வெரிசெட்டிப்பாளையம் - SVV மே.நி.பள்ளி - மார்கழி சிவமயம்.

39. 29-1-2016 திருநெல்வேலி - சதகத்துல்லா அப்பா கல்லூரி - பேராசிரியர் - சுப்புரெட்டியார் வாழ்வும் தொண்டும் - AIR திருநெல்வேலி ஒலிபரப்பு.

40. 3-2-2016 நெய்யூர் - குமரி - லட்சுமிபுரம் கலை அறிவியல் கல்லூரி - 100 ஆண்டு பொது ரிலேட்டிவிட்டி தியரி - சொற்பொழிவு.

41. 18-2-2016 சென்னை அருளகம் பதிப்பகம் நூற்றாண்டு வெளியீடாக முனைவர் ந. வேலுச்சாமி அவர்கள் எழுதிய 'ஊமையின் பேச்சு' வெளியீடு.

42. 19-2-2016 சென்னை Dr. எம்ஜிஆர். கல்வி ஆராய்ச்சி நிலையம் - தமிழ் தாத்தா - 162வது பிறந்தநாள் C.D. வெளியீடு.

43. 19-2-2016 சென்னை Dr. எம்.ஜி.ஆர். கல்வி ஆராய்ச்சி நிறுவனம் - தமிழ் தாத்தா 162வது பிறந்த நாள் நிகழ்வு.

44. 23-2-2016 தஞ்சாவூர் - தமிழ் பல்கலைக்கழகம் - தமிழ் தாத்தா - 162வது பிறந்த நாள் நிகழ்ச்சி.

45. 29-2-2016 கோபிச்செட்டிப்பாளையம் PKR மகளிர் கலை அறிவியல் கல்லூரி, தேசிய அறிவியல் நாள் சொற்பொழிவு - Dr. S. ராமலிங்கம்.

46. 29-2-2016 கோபிச்செட்டிப்பாளையம் - PKR மகளிர் கலை அறிவியல் கல்லூரி மேலாண்மைத் துறையில் சொற்பொழிவு Dr. S. இராமலிங்கம்.

47. 1-3-2016 சென்னை - Dr. N. சுப்புரெட்டியாரின் 'திருக்குறள் தெளிவு' நூற்றாண்டில் வெளியிடப்பட்டது. ISBN: 978-81-932327-2-9

48. 7-3-2016 திருச்சி - எதுமலையில் உள்ள பேராசிரியர் குலக் கோயிலில் 'மகா சிவராத்திரி திருவிழா.'

49. 7-3-2016 சென்னை - Dr. எம்.ஜி.ஆர். கல்வி ஆராய்ச்சி நிறுவனம் - முழு தர மேலாண்மைச் சொற்பொழிவு - Dr. S. இராமலிங்கம்.

50. 8-3-2016 கோபிச்செட்டிப்பாளையம் - PKR மகளிர் கலைக் கல்லூரி - கல்லூரியில் சிறந்த மாணவிக்கு பரிசளிப்பு விழா.

51. 8-3-2016 கோபிச்செட்டிப்பாளையம் - PKR மகளிர் கலைக் கல்லூரி - உலக மகளிர் தின விழா.

52. 8-3-2016 சென்னை Dr. எம்.ஜி.ஆர். கல்வி ஆராய்ச்சி நிலையம், பல்கலைக்கழகம், நெருப்பில்லா சமையல் போட்டி.

53. 11-3-2016 துறையூர் - ஜமீந்தார் உ.நி.பள்ளிக்கு ISO சான்றிதழ் வழங்கும் விழா.

54. 11-3-2016 சென்னை அண்ணாநகர் மேற்கு - ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி சிற்றிலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள், புத்தக வெளியீடு. ISBN: 978-81-932327-3-6

55. 11-3-2016 சென்னை அண்ணா நகர் மேற்கு, ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் ஒரு நாள் சிறப்பு தேசிய கருத்தரங்கு - 'சிற்றில்க்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்.'

56. 21-3-2016 காரைக்குடி - கம்பன் கழக 78வது ஆண்டு விழாவில் - மாணவர்களுக்கு சுப்பு ரெட்டியார் பரிசு.

57. 21-3-2016 சென்னை Dr. எம்.ஜி.ஆர். கல்வி ஆராய்ச்சி பல்கலைக்கழகம், ரெயின் - 16 கலை நிகழ்ச்சி பரிசுகள்.

58. 27-3-2016 சென்னை Dr. எம்.ஜி.ஆர். கல்வி ஆராய்ச்சி பல்கலைக்கழகம், NSS சிறப்பு முகாம் நடத்தப்பட்டது.

59. 29-3-2016 சென்னை பல்கலைக்கழகம் - பேராசிரியர் நிறுவிய அறக்கட்டளை சார்பில் சைவ மரபு - தமிழ் இலக்கியம் - திராவிடக்கருத்தியல் சொற்பொழிவு.

60. 4-4-2016 சென்னை Dr. எம்.ஜி.ஆர். கல்வி ஆராய்ச்சி பல்கலைக்கழகம், M.S. சுப்புலட்சுமி - நூற்றாண்டு விழா - இசைக் கலைஞர் குமரேஷ் சிறப்பிக்கப் பெற்றார்.

61. 4-4-2016 சென்னை Dr. எம்.ஜி.ஆர். கல்வி ஆராய்ச்சி பல்கலைக்கழகம், M.S. சுப்புலட்சுமி நூற்றாண்டு விழா - இசைக் கலைஞர் ஜோதி நாயர் பெல்லியப்பா சிறப்பிக்கப் பெற்றார்.

62. 5-4-2016 சென்னை Dr. எம்.ஜி.ஆர். கல்வி ஆராய்ச்சி பல்கலைக்கழக ரீத்தா பட்டாச்சாரியா உரை.

63. 5-4-2016 சென்னை Dr. எம்.ஜி.ஆர். கல்வி ஆரா்ய்ச்சி பல்கலைக்கழக மாணவர்களுக்கு கிளிட்டரஸி 2016 - மாணவர்கட்கு பரிசுகள்.

64. 5-4-2016 சென்னை Dr. எம்.ஜி.ஆர். கல்வி ஆராய்ச்சி பல்கலைக்கழக M.S. சுப்புலெட்சுமி நூற்றாண்டு விழா - இசைக் கலைஞர் ஸ்ரீகாந்த் ஞானசேகரன் சிறப்பிக்கப் பெற்றார்.

65. 5-4-2016 சென்னை Dr. எம்.ஜி.ஆர். கல்வி ஆராய்ச்சி பல்கலைக்கழக இசை விழாவில் மாணவர்கட்கு சிறப்புச் செய்தல்.

66. 7-4-2016 சென்னை Dr. எம்.ஜி.ஆர். கல்வி ஆராய்ச்சி பல்கலைக்கழகம் விளையாட்டு விழா - போட்டிகள் பரிசுகள்.

67. 9-4-2016 திருவீங்கோய்மலை - முசிறி, 10வது நினைவு நாள் அன்னதானம் 100 பேருக்கு வழங்கப்பட்டது.

68. 14-4-2016 எதுமலை - குலக்கோயிலில் - சித்திரைத் திருவிழா.

69. 20-4-2016 சென்னை Dr. எம்.ஜி.ஆர். கல்வி ஆராய்ச்சி பல்கலைக்கழகம் - Project Expo போட்டா போட்டி நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டன.

70. 20-4-2016 சென்னை Dr. எம்.ஜி.ஆர். கல்வி ஆராய்ச்சி பல்கலைக்கழகம், MBA மாணவர்களுக்கு 'கார்ப்பரேட் உலகு ஓர் பார்வை' - ஒரு சிறப்புப் சொற்பொழிவு.

71. 24-4-2016 எதுமலை - குலக்கோயிலில் - 100 பேருக்கு 10வது நினைவு நாள் அன்னதானம்.

72. 28-4-2016 சென்னை Dr. எம்.ஜி.ஆர். கல்வி ஆராய்ச்சி பல்கலைக்கழகம் M.Tech., B.Tech., மாணவர்களுக்கு சிறப்பு சொற்பொழிவு.

73. 1-5-2016 செங்குந்தபுரம் மாரியம்மன் கோயிலில் - 10வது நினைவு நாள் - அன்னதானம் 120 பேருக்கு.

74. 17-5-2016 முசிறி - அரசு ஆண்கள் மே.நி.பள்ளி சிறந்த மாணவர் (1070 / 1200) XII Std. 2016 தங்கப் பதக்கம்.

75. 23-5-2016 சென்னை Dr. எம்.ஜி.ஆர். கல்வி ஆராய்ச்சி பல்கலைக்கழகம் சிறந்த திட்ட அறிக்கை தயாரித்த M.C.A., M.Phil மாணவர்களுக்கு பரிசு.

76. 23-5-2016 சென்னை Dr. எம்.ஜி.ஆர். கல்வி, ஆராய்ச்சி பல்கலைக்கழகம் B.Sc., B.C.A., மாணவர்களில் சிறந்த திட்ட அறிக்கை - பரிசு வழங்கல்.

77. 23-5-2016 சென்னை Dr. எம்.ஜி.ஆர். கல்வி, ஆராய்ச்சி பல்கலைக்கழகம் M.Tech., மாணவர்களின் சிறந்த திட்ட அறிக்கைகளுக்கு பரிசுகள்.

78. 25-5-2016 கோட்டாத்தூர் - அரசு உ.நி.பள்ளி, செல்வி சந்தியாவிற்கு தங்கப்பதக்கம் X Std. 2016ல் (475 / 500).

79. 25-5-2016 துறையூர் ஜமீன்தார் உ.நி.பள்ளி - பிரசாந்திற்கு - தங்கப்பதக்கம் X Std. 2016 (476/500).

80. 25-5-2016 முசிறி - அரசு ஆண்கள் மே.நி.பள்ளி - கார்த்திகேயன், தங்கப் பதக்கம் X Std. 2016 (467/500).

81. 25-5-2016 சென்னை Dr. எம்.ஜி.ஆர். கல்வி, ஆராய்ச்சி பல்கலைக்கழகம் M.Tech (Bio Technology) மாணவர்களின் சிறந்த திட்ட அறிக்கைக்கு பரிசு.

82. சென்னை சென்னை Dr. எம்.ஜி.ஆர். கல்வி, ஆராய்ச்சி பல்கலைக்கழகம் M.Tech (ECE) மாணவர்களின் சிறந்த திட்ட அறிக்கைக்கு பரிசு.

83. 27-5-2016 சென்னை சென்னை Dr. எம்.ஜி.ஆர். கல்வி, ஆராய்ச்சி பல்கலைக்கழகம் B.Tech., (சிவில்) மாணவர்களின் சிறந்த திட்ட அறிக்கைக்கு பரிசு.

84. சென்னை சென்னை Dr. எம்.ஜி.ஆர். கல்வி, ஆராய்ச்சி பல்கலைக்கழகம் M.Tech (EEE) மாணவர்களின் சிறந்த திட்ட அறிக்கைக்கு பரிசு.

85. 28-5-2016 சென்னை சென்னை Dr. எம்.ஜி.ஆர். கல்வி, ஆராய்ச்சி பல்கலைக்கழகம், M.Tech (Mech) மாணவர்களின் சிறந்த திட்ட அறிக்கைக்குப் பரிசு.

86. 2-6-2016 சென்னை சென்னை Dr. எம்.ஜி.ஆர். கல்வி, ஆராய்ச்சி பல்கலைக்கழகம் M.B.A., மாணவர்களின் சிறந்த திட்ட அறிக்கைக்குப் பரிசுகள்.

87. 7-6-2016 முசிறி - அரசு ஆண்கள் மே.நி.பள்ளி - பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு ஆளுமைத் திறன் பயிற்சி நடத்தப் பட்டது.

88. 8-6-2016 மூவானூர் அரசு மே.நி.பள்ளி - 10ம் வகுப்பு மாணவர்களுக்கு ஆளுமைத் திறன் பயிற்சி நடத்தப்பட்டது.

89. 22-6-2016 Dr. சு. சுப்புரெட்டியார் அவர்களின் "அன்பு படையல்கள்" நூற்றாண்டு விழா வெளியீடு ISBN: 978-81-932327-5-0.

90. 23-6-2016 Dr. சு. சுப்புரெட்டியார் அவர்களின் "அணிந்துரைகள்" நூற்றாண்டு விழா வெளியீடு ISBN: 978-81-932327-6-7.

91. 24-6-2016 Dr. சு. சுப்புரெட்டியார் அவர்களின் "சிறப்புப் பாயிரப் பாமாலைகள்" நூற்றாண்டு விழா வெளியீடு ISBN: 978-81-932327-7-4.

92. 30-6-2016 சென்னை Dr. எம்.ஜி.ஆர். கல்வி ஆராய்ச்சி பல்கலைக்கழகம், சிறப்பு கருத்தரங்கம் (SPSS) நடத்தப் பட்டது.

93. 30-6-2016 முசிறி அரசு ஆண்கள் மற்றும் மகளிர் மே.நி. பள்ளியில் ஆசிரியர்களுக்கு "நோபல் - பெண்மணிகள்" என்ற தலைப்பில் போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

94. 1-7-2016 கோயம்புத்தூர் - கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி தமிழ்த்துறையில் - ந. சுப்புரெட்டியாரின் படைப்புகள் - கலையும் கருத்தியலும் என்ற பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

95. 1-7-2016 கோவை - கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி - தமிழ்த்துறை சார்பில் 'ந. சுப்புரெட்டியாரின் படைப்புகள் - கலையும் கருத்தியலும்' படைப்பு நூற்றாண்டு வெளியீடு செய்யப்பட்டது. ISBN: 978-81-932327-8-1.

96. 10-7-2016 Dr. ந. சுப்புரெட்டியார் அவர்களின் 135 புத்தகங்களில் 100 புத்தகங்கள் C.D. யாக தயார் செய்யப்பட்டு, தமிழ்நாட்டின் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளுக்கு விநியோகிக்கப்பட்டது.

97. 13-7-2016 சென்னை - சுப்பு ரெட்டியாரின் தலைசிறந்த படைப்புகள் நான்கு மட்டும் நூற்றாண்டு விழா வெளியீடு (நாலாயிரம் - நம்மாழ்வார் - வைணவச் செல்வம், தமிழ்ப் பற்று முறை கல்வியியல் கோட்பாடுகள்) ISBN: 978-81-932327-9-8.

98. 14-7-2016 'பேராசிரியரின் இலக்கியத்திறன்' நூற்றாண்டு விழா வெளியீடு (அன்புப் படையல்கள், அணிந்துரைகள் சிறப்பு பாயிரபாமாலைகள், தலைசிறந்த படைப்புகள்).

99. 15-7-2016 சென்னை Dr. எம்.ஜி.ஆர். கல்வி, ஆராய்ச்சி பல்கலைக்கழகம், தாதியர் மாணவர்கள் மூலம் "சிறப்பாய்வு: பள்ளி குழந்தைகளின் புகையிலைப் பழக்கம்."

100. 20-7-2016 மகாத்மா காந்தி - அஞ்சல் தலை தொகுப்பு - வெளியீடு.

101. 22-7-2016 திருச்சி - சீதாலட்சுமி ராமசாமி கல்லூரியில் சாகித்திய அகாதெமியின் மூலம் தேசிய அளவில் நூற்றாண்டு விழா உரையரங்கம்.

102. 26-7-2016 கல்வியியல் களம் - ஆசிரியர் மாணாக்கர்கட்கு திருக்குறள் கற்பித்தல் போட்டி நடத்தப்பட்டு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

103. 1-8-2016 சிறந்த இலக்கிய இதழ் அமுதசுரபி சிறுகதைப் போட்டி மற்றும் ஆராய்ச்சிக் கட்டுரைப் போட்டி நடத்தி பரிசுகளை வழங்கியது.

104. 8-8-2016 நூற்றாண்டு வெளியீடான, அணிந்துரைகள் என்ற நூல் முனைவர் வி. பாலச்சந்திரன், பதிவாளர், அழகப்பா பல்கலைக்கழகம் அவர்களால் வெளியிடப்பட்டது.

105. 14-8-2016 திருச்சி மாவட்டத்தில், 12ஆம் வகுப்பில் மார்ச் 2016 அரசு தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவன் செல்வன் A. ராகுல் (1178/1200) மற்றும் 10ஆம் வகுப்பில் மார்ச்சு 2016 அரசு தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற

மாணவி செல்வி T. ரோஷிணி (497/500) ஆகியோருக்கு தலா ரொக்கப் பரிசு Rs. 5,000/- வழங்கப்பட்டன.

106. 15-8-2016 நூற்றாண்டு வெளியீடான, சிறப்புப் பாயிர மாலைகள் என்ற நூல் திருமதி. சுகன்யா, தலைவி, கிராம கல்விக்குழு, கோட்டாத்தூர் அவர்களால் வெளியிடப் பட்டது.

107. 15-8-2016 நூற்றாண்டு விழாக்குழுவின் சார்பில், இந்திய நாட்டின் 70ஆம் சுதந்திர தின விழா ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் (கோவிந்தபுரம், துறையூர் வட்டம், திருச்சி மாவட்டம்) சிறப்பாக கொண்டாடப்பெற்றது.

108. 15-8-2016 இராமானுஜர் - 1000: பேராசிரியரின் 20 வைணவ நூல்கள் அடங்கிய குறுந்தகடு, திருப்பெரும்புதூர் கோயிலில் உள்ள அன்னாரது சன்னதியில் வைக்கப்பட்டு வெளியிடப் பட்டது.

நூற்றாண்டு நிறைவு விழா

2-9-2016: சென்னை, மயிலை, பெத்தாச்சி அரங்கில், முனைவர் சா. ஜெகத்ரட்சகன் தலைமையில், தமிழ் அறிஞர் பெருமக்கள் பலரும் பங்கேற்று, பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியாரின் நூற்றாண்டு விழா இனிதே நிறைவுற்றது.

☯☯

பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார்: (1916-2006)

எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று, ஆசிரியர் தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர். திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர். பல பல்கலைக்கழகங்களில் சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர். பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி, நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர். பல ஆய்வாளர்களை உருவாக்கியவர். வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர். 135 நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர். இவரின் நூற்றாண்டு உரையரங்கக் கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல்.

இரா. காமராசு: கவிதை, சிறுகதை, திறனாய்வுத் துறைகளில் பல நூல்களைப் படைத்துள்ளார். மார்க்சியச் சிந்தனையும் சமூக நீதிக் கண்ணோட்டமும் மிக்க இவர், இலக்கியக் கல்வியில் ஈடுபாடுடையவர். இலக்கிய இயக்கங்களில் தொடர்ந்து செயலாற்றி வருபவர். தற்போது தஞ்சாவூர், தமிழ்ப்பல்கலைக்கழக இலக்கியத்துறையில் பணியாற்றி வருகின்றார்.

Peraasiriyar Na. Subbureddiarin
Panmugham (Tamil)
₹ 120

ISBN : 978-93-86771-23-0